T. 823.

உ

சாமதேவரியற்றிய

# தாசரித் சாகரம்.

(முதல் பாகம்).

GOVERNMENT ORIENTAL MANUSCRIPTS LIBRARY
MAR 1919
823
MADRAS

இது

ாயணம் - நடேச சாஸ்திரிகள்

அவர்களால்

தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு,

-திரு- அ- சுப்பிரமணிய பாரதியார்

அவர்களால்

வ்விய வசன நடையில் எழுதப்பட்டு

ன்னை, கோமளேசுவரன் பேட்டை,

அம்பாவிலாச புத்தக சாலையாரால்

ச்சிதானந்த அச்சியந்திர சாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

(*All rights reserved*)

1913.

விலை ரூபாய் **1 - 4 - 0.**

# கதாசரித் சாகரம்.

## சூசிப்பத்திரம்.

முதலாவது

### கதாபீட லம்பகம் 1 - 83.


| | | |
|---|---|---|
| 1வது | தரங்கம் ... ... ... | 1 - 7 |
| 2வது | ,, ... ... | 7 - 16 |
| 3வது | ,, ... ... ... | 16 - 27 |
| 4வது | ,, ... ... | 27 - 40 |
| 5வது | ,, ... ... ... | 41 - 53 |
| 6வது | ,, ... ... | 53 - 68 |
| 7வது | ,, ... ... ... | 68 - 79 |
| 8வது | ,, ... ... | 79 - 83 |


இரண்டாவது

### கதாமுக லம்பகம் 84 - 161.


| | | |
|---|---|---|
| 1வது | தரங்கம் ... ... ... | 84 - 93 |
| 2வது | ,, ... ... | 93 - 113 |
| 3வது | ,, ... ... ... | 114 - 120 |
| 4வது | ,, ... ... | 121 - 137 |
| 5வது | ,, ... ... ... | 137 - 154 |
| 6வது | ,, ... ... | 175 - 161 |


மூன்றவது

### லவாணக லம்பகம் 162-254.


| | | |
|---|---|---|
| 1வது | தரங்கம் ... ... ... | 162 - 173 |
| 2வது | ,, ... ... | 174 - 195 |
| 4வது | ,, ... ... | 196 - 227 |
| 5வது | ,, ... ... ... | 227 - 236 |
| 6வது | ,, ... ... | 236 - 254 |

உ

செந்திலாண்டவன்

திருவடி துணை.

# கதாசரித்சாகரம்.

## 1-வது தரங்கம்.

காப்பு.

**வினாயகர். வணக்கம்.**

என்னருஞ் செல்வமே யென்றெடுத்து முத்தம்
அன்னை யுமைதர அன்பர்நல் லின்புறத்
தன்னிக ரற்றதோர் தந்தியாய் வந்தருள்
முன்னவ னடிமலர் முடியணி யாக்கொள்வாம்.

இமவான் என்னும் பெயரினையுடைய பருவதராஜன் ஒருவனிருந்தான். இவன் மகாகீர்த்தி வாய்ந்தவன். பருவதங்களுக்கெல்லாம் சக்ரவர்த்தியாக விளங்கினான். கின்னரர், கந்தருவர், வித்தியாதரர் முதலியவர்களால் வணங்கப்படும் பெருமை பெற்றவன். மூவுலகங்களையு மீன்ற உலகமாதாவாகிய பவானி தேவி இந்த இமவானுக்குப் பெண்ணாகப் பிறந்தாள். அதனால் இந்த இமவான் ஏனைய பருவதங்களை விடச் சிறப்புப் பெற்றனன்.

இமயமலைக்கு வடபால் ஓர் சிகரமுண்டு. அதனைக் கைலாய கிரி யென்று கூறுவார்கள். அந்தக் கைலாயகிரி அனேகாயிரக்கணக்கான யோசனைதூரம் விஸ்தாரமுள்ளது. அமுதம் [illegible]க் கடலைக் கடைந்தபோது மத்தாயிருந்த மந்தர மலையும் வெண்மை நிறமடையவில்லை; நான் எந்த முயற்சியையும் செய்

யாமல் இயற்கையிலேயே வெண்மைநிற மடைந் திருக்கிறே னென்று தனக்குத் தானே பெருமை பேசிக் கொள்கிறதெனக் கூறும் வண்ணம் வெண்மை நிறம் வாய்ந்திருக்கும் அது. இந்தக் கைலாயகிரியில் உலக சராசரங்களுக்குக் குருவாகிய பகவான் சங்கரன் உமாதேவியோடு வாசஞ்செய்கிறார். அந்த ஜகத்பதியை பிரமதகணங்கள், வித்தியாதரர்கள், ஸித்தர்கள் யாவரும் வணங்குகிறார்கள். அந்த மகாதேவனுடைய நீண்டசெஞ்சடை களில் வசிக்கும் சந்திரனானவன் சந்தியாகாலத்தில் சிவந்தவர்ண முடைய கிழக்கிசையிலிருக்கும் உதயகிரியின் சிகரத்தில் வசிக் கிற ஆநந்தத்தை அடைகிறான்.

பார்வதி மணாளனாகிய அந்த ஈசன் அந்தகன் என்னும் அசுரனுடைய இருதயத்தில் சூலத்தைப்(ஆயுதம்) போட்டு மூவுல கத்தவருடைய மனத்திலிருக்கும் சூலத்தைப் (சங்கடம்) பரிகரிக் கிறார். ஆச்சரியம்! தேவர்களும் அசுரர்களும் சதாசிவனுடைய பாதங்களில் சிரங்களால் வணங்குகிறார்கள். காலகாலனுடைய கால் நகங்களானது அவர்களுடைய சிரங்களிற் பூண்ட மணி களில் அடையாளமாகப் பதிகின்றன. அச்சமயம் அந்தத் தேவர்களும் அசுரர்களும் பரமசிவனுடைய அனுக்கிரகத்தால் அர்த்த சந்திரனைப் பெற்றவர்கள் போல் காணப்படுகிறார்கள்.

இப்படி யிருக்கும்போது ஒரு சமயம் பிரியநாயகியாகிய பவானி தன் பதியைத் தனியே யிருந்து அன்புடன் துதித் துச் சந்தோஷப் படுத்தினாள். அங்ஙனம் சந்தோஷமடைந்த சந்திரசேகரன் பார்வதியைத் தமது மடிமீது வைத்துக்கொண்டு "நீ விரும்புவது"என்னவென்று கேட்டார். உமாதேவியானவள், "பிரபுவே!மனோற்சாகம்தரத்தக்கதும் புதிதுமாகிய ஓர்கதையைத் தயை கூர்ந்து எனக்குக் கூறவேண்டும்." என்றனள். அதுகேட்டதும் பரமசிவன் "தேவி! பிரியமுள்ளவளே! இந்த மூவுலகங்களிலும் நடந்தது, நடக்கப்போவது, நடப்பது இவை களில் நீயறியாததெது" என்றார். பார்வதி அதுகேளாமல் மறு படியும் வற்புறுத்திக் கேட்டனள்.

பிறகு மகாதேவன் மனமகிழ்ந்து அந்த உமாதேவியின் மகிமையடங்கிய ஓர் சிறிய கதை கூறலாயினர்.

தேவி! முன்னொரு சமயம் பிரமனும் நாராயணனும் இந்தப் புவிமுழுதும் சுற்றிக்கொண்டு என்னைக் காண்பதன் பொருட்டு இமயமலைக் கருகேவந்தார்கள். அங்கே முற்பக்கத்தில் பெரிய சோதிவடிவமான லிங்கமொன்றைக் கண்டார்கள். அந்த லிங்கத்தின் அடியை ஒருவரும் முடியை யொருவருமாகக் காண விரும்பிச் சென்று இருவரும் முடிவு காணாமல் அங்கிருந்து தவமியற்றி என்னை மகிழ்வித்தார்கள். நான் அவர்கள் தவத்திற் கிரங்கித்தரிசனங்கொடுத்து வேண்டும் வரங்களைக்கேட்டுக்கொள்ளுங்களென்று கூறினேன். பிரமன் ''நீர் எனக்குப் புத்திரனாக வரவேண்டும்'' என்று கேட்டான். இங்ஙனம் பிரமதேவர் பேராசைகொண்டு வரங்கேட்டமையால் அவருக்கு இந்தப் புவியில் பூசையில்லாமற் போய்விட்டது. தேவனாகிய நாராயணனோவெனில் ''பகவானே! எப்போதும் தங்களிடத்தில் மாறாத பக்தி எனக்குண்டாக வேண்டும்'' என்று கேட்டார். ஆகையால் தான் அந்த விஷ்ணு உன் வடிவங்கொண்டு என் சரீரத்தில் பாதியாகவிருக்கிறார். நாராயணனே நீயாகிறாய்? சத்தியுடைய எனக்கு நாராயணனே சக்தி; தவிர எனக்கு முன் நீ மனைவியாகவுமிருந்திருக்கிறாய்'' என்று கூறினார் பகவான். இதைக்கேட்ட பார்வதி, ''நாதா! நான் உமக்கு முன் எவ்விதம் மனைவியாகவிருந்தேன்.'' என, பரமசிவன் ''தேவி! நீ தக்ஷப்பிரஜாபதிக்கு முன்பு பெண்ணாக வவதரித்தாய்; அவனுக்கு இன்னும் அநேக கன்னிகைகள் உண்டானார்கள். அந்தத் தக்ஷன் உன்னை எனக்கு விவாகம் செய்துகொடுத்தான். மற்றுமுள்ள கன்னிகைகளைத் தருமன் முதலியவர்களுக்கு மணம் செய்துகொடுத்தான்.

அந்தத் தக்ஷன் ஒரு சமயம் ஓர் யாகம் செய்ய யத்தனித்தான். அதற்கு அவனாலழைக்கப்பட்ட மற்ற மருகர்கள்

யாவரும் வந்திருந்தார்கள். அவன் என்னைமட்டும் அழைக்க வில்லை. அதுகண்ட நீ உன் தந்தையாகிய தக்ஷனிடம் சென்று "ஏன் என்கணவனை யழைக்கவில்லை" யெனக்கேட்டாய். தக்ஷன் "பெண்ணே! உன்கணவன் மண்டையோடுகளை மாலையாக அணிந்தவன். அவனை எப்படி யாகத்திற்கு வரவழைப்பது?" என்றான். அச்சொற்கள் உன் செவி புகுந்ததும் நீ அவைகளை விஷம்போலேற்று, "செய்! இந்தத் தக்ஷன் மகாபாபி, இவனிடம் பிறந்த இச்சரீரத்தால் பிரயோசன மென்னவிருக்கிறது?" எனச் சினந்து சரீரத்தைவிட்டாய். பிரிய நாயகியே! அப்பொழுது யானடைந்த கோபத்தால் அவனுடைய யாகத்தை அழித்தேன். பிறகு நீ கடலிலிருந்து சந்திரன் தோன்றுவதுபோல் இமயமலையிலிருந்துண்டானாய்; பார்வதி! பிறகு நீயே ஞாபகப் படுத்திக் கொள். பிறகு தவம் புரிதல் கருதி இமயமலையையுற்றேன். அப்போது உன் தந்தையாகிய இமவான் அதிதியாக வந்த எனக்குப் பணிவிடைபுரிய உன்னையனுப்பினான். பிறகுதேவர்கள் தங்களைத் துன்புறுத்திவரும் தாரகனென்னும் அசுரனை வதம்செய்வதற்குரிய ஓர்புத்திரனை என்பால் அடையவேண்டி மன்மதனையனுப்பினார்கள். அந்த மதனன் தருணம் நோக்கியிருந்து மலர்க்கணைகளை என் மீது எய்தனன். அந்த மதனனை அக்கணமே என்னுடைய நெற்றிக்கண்ணால் எரித்தேன். பின்னர் நீ அருந்தவம் புரிந்தாய்; நீ தைரியமாய்ச்செய்த அருந்தவத்திற்கு நான் கட்டுப்பட்டேன். அந்தத் தேவர்களுக்கு நன்மை புரிவது கருதியே உன்னை நான் மணந்தேன். இவ்விதம் முன்பு நீ எனக்கு மனைவியாக விருந்தாய். உனக்கு இன்னும் நான் சொல்லவேண்டுவதென்னவென்றார்" பரமசிவன்.

இதைக் கேட்டதும் தேவி மிகச் சினமடைந்து பரமசிவனை நோக்கி, "நீர் தூர்த்தனாகிறீர். நான் தங்களை யோர் கதை சொல்லும்படி பிரியமாய்க் கேட்டுக்கொண்டதற்கு என் மனத்திற்குச் சிறிதும் பிடியாத இதைத் தெரிவித்தீர். நானும் தங்களைப் பற்றிச் சிறிது தெரிந்து கொண்டிருக்கிறேன். தாங்கள் தங்கள்

* தலைமேல் கங்கையை வைத்திருப்பதை யாரறியார்? அன்றிச் சந்தியை யென்ற தேவதையை வணங்குகிறீர். தங்கள் சங்கதி தெரியாதா?'' என்று கூறிச் சினந்தாள்.

உடனே ஜகத்பதியாகிய சிவபெருமான் புன்முறுவல்செய்து தேவியை நயந்துகொண்டு ஓர் கதை சொல்லலாயினர். தேவியும் கோபந்தணிந்து நந்திகேசுவரரை நோக்கி, இங்கே ஒருவரும் பிரவேசிக்கக் கூடாதெனத் தெரிவிக்க, நந்தியெம்பெருமான்தேவியினது கட்டளையைச் சிரமேற்கொண்டு வாயிற்படியிலிருந்து காவல் புரியலானார்.

பரமசிவன் தேவி திருமுகம் நோக்கி, ''தேவி! தேவர்கள் நித்தியசுக முடையவர்கள். மானிடர்கள் எப்போதும் துக்க முடையவர்கள். ஆகையால், நான் உனக்கு வித்தியதாரர்களின் சரித்திரங்களைக் கூறுகிறேன் கேள்,'' என்று சொல்லிக்கொண்டிருக்கும் போதே கணங்களுக்குள் சிறந்தவனாகிய புஷ்பதந்தன் என்பவன் வந்தான். அவன் பரசிவானுக்கிரகத்தைப் பொருளாகக் கொண்டவன். அவன் தேவியாரும் சுவாமியுமிருந்த இடத்தில் பிரவேசிக்கும்போது நந்திகேசுவரர் செல்லவொட்டாமற் றடுத்தார். அப்போது புஷ்பதந்தன், "நந்தி என்னை அகாரணமாகத் தடுக்கிறான்; இருக்கட்டும்" எனச் சிந்தித்துத் தன் யோகபலத்தால் ஒருவரையுமறியாமல் அந்தக் கணத்திலேயே உள்ளே பிரவேசித்தான். அங்கு பினாகபாணியாகிய பரமசிவன் ஏழு வித்தியாதரர்களைப் பற்றிய ஆச்சரியமும் அபூர்வமுமான சரித்திரத்தைச் சொல்லிக் கொண்டிருந்தார். புஷ்பதந்தன் கண்டு மனமகிழ்ந்து ஓரிடத்திலிருந்து அதைக் கேட்டுக்கொண்டிருந்து வெளியேவந்து தன் வீட்டுக்குச்சென்று தன் மனைவியாகிய ஜயை யென்பவளிடம் கதையைக்கூறி மகிழ்ந்தான். தன் உடைமையையும் தன்னிடத்துள்ள இரகசியத்தை

* சிவன் சிரசில் கங்கையைத் தரித்திருப்பதாலும் சந்தியாகாலத்தில் நர்த்தனம் செய்யும்போது வணங்குவதாலும் கங்கை, சந்தி இவ்விரண்டும் ஸ்திரீகளென்கிற கருத்துப்படி தேவி இறைவனை யிகழ்ந்து பேசியதாம்.

யும் தன் மனைவிக்குத் தெரியாமல் ஒளிப்பவன் எவன்? ஒருனுவ மில்லை. ஆகவே ஜயையும் இந்த இரகசியமான கதையைக் கேட்டு மகிழ்ந்து உடனே பார்வதியாரிடம் சென்று அதைக்கானம் செய்தாள். ஸ்தரீகளிடமும் வாய்க்கட்டு ஏற்படுவதுண்டா?

தனக்கு ஈசன் அதி இரகசியமாகத் தெரிவித்த கதையை ஜயை கூறக்கேட்டதும் உமாதேவி ஆச்சரியமடைந்து பரசிவ னைப் பார்த்து "நீர் எனக்குக் கூறிய கதை அபூர்வமானதன்று ஜயையும் கூறுகிறுளே" என்று கேட்டாள். ஈசன் அதைக்கேட் டதும் சற்று ஆலோசித்து உண்மையையறிந்து "தேவி! நான் உனக்கு இக்கதையைக் கூறும்போது புஷ்பதந்தன் தன் யோக பலத்தால் உள்ளே பிரவேசித்துக் கேட்டுக்கொண்டிருந்து பிறகு தன் மனைவி ஜயைக்கும் சொல்லியிருக்கிறுன். இல்லாவிட்டால் நான் கூறிய இக்கதையை யாரறிவார்கள்?" என்று கூறி ஞர். உடனே உமாதேவி புஷ்பதந்தன் மேல் பெருங்கோபங் கொண்டு அவனை வரவழைத்து "நீ வணக்கமில்லாதவன், துஷ் டன், ஆகையால் நீ மானிடனுக்க் கடவது" என்று சாபமிட் டாள். இவனடைந்த சாபத்தைக்கேட்ட மால்லியவான் என் னும் கணத்தலைவெ ருவன் அம்பிகையிடம் அவனை மன்னிக் கும்படி வேண்ட. அந்த மால்லியவானையும் தேவி மானிடனுகும் படி சபித்தாள். பிறகு ஜயையும் இவ்விருவரும் அம்பிகையின் திருவடியிற் பணிந்து வணங்கித் தங்கள் சாபவிமோசனத்தைக் கேட்டார்கள். தேவி திருவுளமிரங்கி அவர்களைப் பார்த்து, "விந்தியமலையின் அருகே ஓர் அரண்ய மிருக்கிறது; அங்கே குபேரனுடைய சாபப்படி பிசாசுருவமடைந்த சுப்ரதீகன் என் னும் ஒரு யக்ஷன் காணபூதி என்ற பெயருடனிருக்கிறுன். ஏ புஷ்பதந்த! நீ அந்தக் காணபூதியைக்கண்டு உன் ஜன்மத்தை நினைத்து இச்சரித்திரத்தைக் கூறுவாய்; அப்போதுனக்கு இச்சாப விமோசன முண்டாம்; இந்த மால்லியவான் காணபூதியிடம் இச்சரித்திரத்தைக் கேட்கப்போகிறுன். அந்தக் காணபூதி இவ னுக்கு இக்கதை கூறியதும் சாப விமோசன மடைவான். மால்

லியவானும் அதேகணத்தில்சாபவிமோசனம்பெறுவான்." என்று கூறி மறைந்தாள். புஷ்பதந்தன் முதலிய மூவரும் மின்னல் கூட்டம்போல் அக்கணமே மறைந்தார்கள்.

பின் பின்னாட்சென்ற தன்மேல் பார்வதிதேவி பரமசிவனைப் பார்த்து, "தேவ! என்னால் சபிக்கப்பட்ட பிரமத கணங்களுட் சிறந்த அவ்விருவரும் புவியில் எங்கே பிறந்திருக்கிறார்கள்?" என்று கேட்டாள்.

இதைக்கேட்ட சந்திர மௌலியாகிய ஜகதீசன் தேவியை நோக்கி, "பிரியமுள்ளவளே! கௌசாம்பி என்னும் நகரமிருக்கிறது. அந்நகரத்தில் புஷ்பதந்தன் வரருசி என்ற பெயருடன் பிறந்திருக்கிறான். சுப்பிரதிஷ்டை என்னும் நகரத்தில் மால்லியவான் பிறந்து குணாட்டியன் என்னும் பெயருடனிருக்கிறான். தேவி இதுதான் அவர்களுடைய விருத்தாந்தம்" எனத் திருவாய்மலர்ந்தருளினார் எப்போதும், தன்னையே கதியாக நினைத்துக் கொண்டிருந்த புஷ்பதந்தன் மால்லியவான் இவ்விருவருக்கும் தான் சாபங் கொடுத்ததை உமாதேவி நினைத்து அனுதாப மடைந்தனள். பரமசிவன் தமது மனைவியை அந்தக் கைலாயமலையின் கண்ணுள்ள தாழ்வரைகளில் பயிரான கற்பகக் கொடிகாளா லமைக்கப்பட்ட லீலா கிருகங்களில் சந்தோஷிக்கச்செய்து வாசஞ்செய்தார்.

# 2-வது தரங்கம்.

மானிட சரீரமடைந்த புஷ்பதந்தன் வரருசி, காத்தியாயனன் என்ற பெயருடன் நாலா பக்கங்களிலும் சஞ்சரித்து வந்தான். வித்தைகளின் கரைகண்டனன். நந்தனிடம் மந்திரி வேலை பார்த்துவந்தான். இவன் ஒரு சமயம் வருத்தமுற்று விந்தியபருவதத்தில் வசித்துவரும் தேவியைத்தரிசிக்கக்கருதி அங்கு சென்று தவம்புரிந்து தேவியைப் பூசித்தான். தேவி அவனு

டைய சொப்பனத்தில் தோன்றி "ஏ காத்தியாயன! விந்தியமலையின் அருகில் மரமடர்ந்த காடு ஒன்றிருக்கிறது. அங்குக் காணபூதி யிருக்கின்றான். அவனைப் பார்க்கச்செல்" என்று கூறி மறைந்தருளினள். உடனே புஷ்பதந்தன் கண் விழித்துக்கொண்டு தேவியின் திருவருளை நினைத்து மனமகிழ்ந்து, எழுந்து தேவி குறிப்பிட்ட வனத்தை நாடிச்சென்றான். அவன் அந்தக் காட்டிற்போய்க் கொண்டிருக்கையில் ஓர் பெரிய ஆலமரத்தைக் கண்டான். அங்கு நாலாபக்கமும் பார்க்கையில் அதனடியில் காணபூதி பல பிசாசுகள் சூழ பிசாசுருவத்துட னிருக்கக்கண்டு அருகே சென்றான். காணபூதி இவனைப் பார்த்ததும் பரபரப்புடன் எழுந்துபணிந்தான். வாருசி உடனே அவண் உட்கார்ந்து, "பிசாசுருவங் கொண்டவனே! நீ இவ்வளவு நல்ல நடத்தையுடனிருக்கும்போது உனக்குப் பிசாசுருவம் வந்தவாறென்ன" என, காணபூதி தன்னிடம் அன்புள்ள காத்தியாயனனை நோக்கி "எனக்கு இயற்கையில் அறிவில்லை, ஆயினும் சர்வலோக சரண்யனாகிய பரமசிவன் உச்சினி நகரத்தில் இடுகாட்டிலிருந்து கதை சொல்லிக்கொண்டிருக்கும்போது நான் கேட்டேன். அதாவது கூறுகிறேன் கேள்.

பருவதவல்லியானவள் கணவனை நோக்கி, "ஓ நாதா! மண்டையோடுகளிலும் இந்த இடுகாட்டிடத்தும் தங்களுக்கு இவ்வளவு அன்புண்டானதற்குக் காரணமென்ன?" என்று கேட்டாள். பகவான், "தேவி! முன் பிரளயகாலத்தில் உலகம் முழுதும் ஜலமயமாகவே யிருந்தது. அப்பொழுது நான் தொடையைக் கீறி அதிலிருந்துண்டான இரத்தத் துளியைக் கீழே சிந்தினேன். அந்த இரத்த பிந்துவானது ஜலத்திற்குள் முட்டை வடிவமாயுண்டாயிற்று. பிறகு அந்த முட்டை இருபாகமாகப் பிரிந்தது. அதில் ஒரு பாகத்திலிருந்து ஓர் புருஷனுண்டானான். பிறகு உலகத்தைப் படைக்கப் பிரகிருதியை யுண்டு பண்ணினேன் அந்தப் புருஷனும் பிரகிருதியும் சேர்ந்து மற்றுமுள்ள பிரஜாபதிகளை யுண்டுபண்ணினார்கள். அதனால் அந்

தப் புருஷனைப் பிதாமகன் (தந்தையின் தந்தை) என்று கூறுகிறார்கள். அந்தப் பிதாமகன் தான் ஸ்தாவரஜங்கம ரூபமான இந்தப் பிரபஞ்சத்தைப் படைத்து அதன் காரணமாகக் கருவங்கொண்டான். அதற்காக நான் சிரசைச் சேதித்தேன். பிறகு நான் வருத்தமுற்று விரத நியமம் பூண்டேன். ஆதலால் எனக்குக் கையில் கபாலமேந்திக் கொண்டிருப்பதிலும் இடுகாட்டில் வசிப்பதிலும் பிரியமுண்டாயிற்று. தேவி! என் கையிலிருக்கும் கபாலமானது உலகமென்று அறிந்துகொள். முற்கூறிய முட்டையின் இருபாகத்துள் ஒன்று ஆகாயமாகவும் ஒன்று பூமியாகவுமாயிற்று என்று பரமசிவன் கூறுகையில் எனக்கு அதைக் கேட்பதில் மிகுந்த பிரியமும் அவாவுமுண்டானமையால் அங்கு தங்கினேன்.

பின் உமாதேவி ஈசனை நோக்கி, "பரமபதியே! அந்தப் புஷ்பதந்தன் இன்னும் எவ்வளவு காலத்தில் நன்மை யடைவான்" என, சங்கரன், "பார்வதி! இதோ காணப்படுகிறதே இந்தப் பிசாசு குபேரனுடைய சாபமடைந்த ஓர் யக்ஷன். ஸ்தூலசிரசு என்னும் பேர்கொண்ட ஓர்இராக்கதன் இவனுக்கு நண்பனுயிருந்தான். மகாபாபியாகிய அந்த அரக்கனிடம் சிநேகங்கொண்டிருந்த இந்த யக்ஷனைக் குபேரன் பார்த்து, "நீ பாபியின் சிநேக முடையவனாக இருக்கிறபடியாதலால் விந்திய மலைக்கருகேயுள்ள அரண்யத்தில் பிசாசுருவத்துடன் சஞ்சரிக்கக் கடவது" என்று சபித்தனன். அதுகண்ட இந்த யக்ஷனுடைய சகோதரனாகிய தீர்க்கஜங்கன் என்பவன் குபேரனுடைய பாதங்களில் விழுந்து சாபத்திற்கு முடிவுகாலத்தைத் தெரிவிக்க வேண்டுமென வேண்டினன். குபேரன், "சாபமடைந்த புஷ்பதந்தனென்னும் ஓர் யக்ஷனிடம் நீ பெரியகதையைக் கேட்பாய்; நீ கேட்ட அக்கதையைச் சாபமேற்றுமானிடனான மால்யவானுக்குக் கூறுவாய். பிறகு நீங்கள் மூவரும் அவரவர் பெற்ற சாபத்தினின்று விடுபடுவீர்கள்" என்று கூறினன். "பார்வதி! நீபுஷ்பதந்தனுக்குச் சாபவிமோசனம் குறிப்பிடும்போது சொன்ன காணபூதி இவன்

தான்; எண்ணிக்கொள்" என்றார். பகவான், இவ்வரலாற்றினைக் கேட்டு நான் மனமகிழ்ச்சியுடன் இங்குவந்தேன். இதுதான் என் வரலாறு; இந்தத்தோஷம் புஷ்பதந்தன் என்னிடம் வரும் வரையில் தான் என்று கூறிநின்றான் காணபூதி.

அந்தக்கணத்தில் வரருசியானவன் தன் ஜாதியை நினைத்துக்கொண்டு தூங்கியெழுந்தவன்போல் கூறுகிறான். நான்தான் அந்தப் புஷ்பதந்தன் அந்தக்கதையை நான் கூறுகிறேன் கேள் என்று சொல்லிப்பதினான்கு லக்ஷம் கிரந்தங்களால் பெரியகதைகளைக்கூறினான். காணபூதி "தேவனே! நீர் ருத்திர மூர்த்தியாகிறீர். இந்தக்கதையை யறிபவன் வேறு எவன்? உமது அனுக்கிரகத்தால் அந்தச்சாபமானது என்னைவிட்டுவிட்டது. ஓபிரபுவே! நீர்பிறந்தது முதல் நடந்தவரலாற்றைத்தெரிவிக்கவேண்டும்" என அந்தவரருசியானவன் அன்போடு அகமகிழ்ந்து கூறுகிறான்.

கௌசாம்பி என்றொரு நகரம். அங்கே சோமதத்தன் என்னுமோர் அந்தணரிருந்தார். அவருக்கு அக்கினிசிகன் என மற்றொருபெயருண்டு. அவருக்கு வசுதத்தை என்னுமொரு மனைவியிருந்தனள். அந்தவசுதத்தை ஓர் முனிவருடைய பெண். ஒருசாபத்தால் அவள் அந்த அந்தணருக்குமனைவியாயினள். அந்தவசுதத்தையிடம் சோமதத்தனுக்கு முன்னேற்பட்டசாபத்தால்நான் புத்திரனாகப்பிறந்தேன். நான் இளைஞனயிருக்கும்போது என் தந்தையிறந்தனர். பிறகு என்தாய் கஷ்டமானபல செய்கைகளைச் செய்துவளர்த்துவந்தாள். அச்சமயமே இரண்டு பிராமணர்கள் எங்கள் வீட்டுக்குவந்தார்கள். அவர்கள் வெகுதூரமிருந்துவந்தவர்களாகையால் அவர்களுடைய வஸ்திரமழுக்கடைந் திருந்தது. அவர்கள் என் வீட்டிலிருக்கும்போது முரசவாத்திய முழக்கம் கேட்டது. அதனால் என்தாய் தன் புருஷனை நினைத்துக்கொண்டு தளர்ச்சியுடன் என்னைக்குறித்து "அடேமகனே! உன்தந்தைக்கு நண்பனாகிய நந்தன் என்ற நடன் நர்த்தனம் செய்கின்றான்" என, நான் "அம்மா! அந்த நர்த்தனத்தைப் பார்க்கப்போகிறேன்.

அங்கு சென்று பார்த்துவிட்டு வந்து அந்த நர்த்தனத்தை நான் உனக்கு நடித்துக்காட்டுகிறேன்'' என்றேன். இந்தச்சம்பாஷணை யைக் கேட்டுக்கொண்டிருந்த அந்த அந்தணர்கள் பரமாச்சரிய மடைந்தார்கள். அதுகண்ட அன்னை அவர்களைப்பார்த்து "ஓ அந் தணர்களே! இந்தக்குழந்தையேதேனும் ஒன்றை ஒருமுறை கேட் பானேயாகில் அதைஉடனே இருதயத்தில் விடாமல் அமைத்துக் கொள்வான்" என்றாள். அந்த உண்மையையறிவான்கருதிய அவ் வந்தணர்களிருவரும் எனக்கு பிராதிசாக்கியம் (வேதலக்ஷணக் கிரந்தம்) என்ற கிரந்தத்தைப் படித்துக் காட்டினார்கள். நான் அவர்கள் பார்த்துக்கொண்டிருக்கும்போதே அவர்கள் படித்த படியே படித்தேன். பிறகு அந்த அந்தணர்களுடன் நர்த்தனம் பார்க்கச்சென்று வீடுவந்து அங்கு நடந்த நர்த்தனத்தை அவ் விதமே காட்டினேன். அப்பொழுது அந்த அந்தணர்களுள் ஒரு வராகிய வியாடி என்றபெயர்பூண்டவர் நான் எந்த விஷயத்தை யும் ஒருதடவை கேட்டதும் தெரிந்துகொள்வேனென்பதை நிச் சயமாய்த்தீர்மானித்து என்தாய்க்கு வந்தனம் செய்து ஒருகதை கூறலாயினர்.

வேதஸம் என்னும் நகரத்தில், தேவசுவாமி, கரம்பகன் என் னும் இரண்டு சகோதரர்களிருந்தார்கள். அவ்விருவரும் இணை பிரியா நேசமுடையவர்களாகவிருந்தார்கள். அவ்விருவருள் ஒரு வருடைய புத்திரர் இவர்; இந்திரதத்தர் என்பது இவரதுபெயர். நான் மற்றொருவருடைய புத்திரன். என்பெயர் வியாடி எனது தந்தை மரணமடைந்த பிறகு இந்த இந்திரதத்தருடைய தந்தை, என்தந்தை மரணமடைந்த துக்கம் சகிக்கொணாது வடதிசை நோக்கி யாத்திரை சென்றனர். மறுபடி திரும்பவில்லை. பிறகு எங் களுடைய தாய்மாரிருவருடைய மனமானது துக்கத்தில் தத்த ளித்தது. பிறகு நாங்களும் நாதனற்றவர்களானோம். எங்களுக்கு ஏராளமான பொருளிருந்தபோதிலும் கல்விகற்கவேண்டுமென் கிற விருப்பமுண்டாயிற்று. ஆகையால் அருந்தவம் புரிந்து

* சுவாமிநாதனுகிய சுப்பிரமணியக் கடவுளைப்பிரார்த்தனை செய்வதற்காகச் சென்று அங்கே, நாங்கள் தவம்புரிந்துவந்தோம். அப்போது இறைவன் எங்கள் சொப்பனத்தில் தோன்றி "அன்பர்களே! நீவிர் செய்த தவத்திற்குகந்தோம். பாடலிகம் என்னும் ஒரு பட்டண மிருக்கிறது. அந்நகரை நந்தன் என்னும் அரசனொருவன் பரிபாலித்து வருகிறுன். அந்நகரில் வருஷன் என்னும் ஒரு அந்தணனிருக்கிறுன். அவ்வந்தணன்பால் நீவிருவரும் கல்வியை யடையுங்கள். அங்கு செல்லக்கடவீர்," என்று கூறி மறைந்தார்.

பிறகு நாங்கள் அந்நகரம் சென்று அவ்வந்தணனைப் பற்றி விசாரித்தோம். "அங்குள்ளவர்கள் இங்கு வருஷன் என்னும்பெயரினையுடைய ஓர் அந்தணனிருக்கிறுன்; அவன் பெரியமூர்க்கன்" என்றூர்கள். அதைக்கேட்டதும் எங்கள் மனம் பெருஞ்சஞ்சலமடைந்தது. ஆயினும் நாங்கள் இறைவனது திருவருளை நம்பி அவ்வந்தணனுடைய வீட்டுக்குச் சென்றேம். அவன் வீடானது பார்ப்பதற்கு வீடென்று ஓர் சிறிதும் மதிக்கக்கூடாதநிலைமையிலிருந்தது. எங்குபார்த்தாலும் எலியும் பெரிச்சாளியும் பொந்துகள் செய்திருந்தன. சுவர் தலையில் இடிந்து விழும்போலிருந்தது. தங்குவதற்கு அவ்வீட்டில் சிறிதும் நிழலைக்காணேம். ஒளியிழந்து ஆபத்துக்கு ஜன்மபூமிபோற் காணப்பட்டது.

அந்த வீட்டின் நடுவே வருஷன் என்ற அந்த அந்தணன் வீற்றிருந்துதியானத்திலிருக்கப்பார்த்தோம். மனமகிழ்ந்து அவர் மனைவியின் அருகே சென்றேம். அவ்வம்மை எங்களை யதிதியாகப்பாவித்து உபசரணை செய்தாள். அவ்வம்மை யுடுத்தியிருந்த ஆடை அழுக்கடைந்திருந்தது. தேகம் மிகவும்இளைத்துக் கேவலம் எலும்பிலாயதோ வெனச் சந்தேகிக்கக்கூடிய நிலைமையிலிருந்தது. அவளை நாங்களிருவரும் வணங்கினேம். பிறகு அந்த அம்மாளிடம் நாங்கள் அவண் சென்றதற்குக் காரணத்தையும்

* இதனல் இவர்கள் வந்த இடம் கும்பகோணத்துக்கருகாமையிலுள்ள சுவாமிமலையென்று ஊகிக்கக்கூடும்.

அவ்வூரினர் அம்மாதரசியின் நாயகனை மூர்க்கன் என்று இகழ்ந்து பேசியதையும் கூறினோம்.

இதனைச் செவியுற்றதும் கற்பிற் சிறந்த காரிகையாகிய அவ்வம்மை, "அந்தணர்களே! நீவிரிருவரும் எனக்குப் புத்திரர்கள் போன்றவர்கள். ஆகையால் எனக்கு உங்களிடம் பேச வெட்கமில்லை. கேளுங்கள், கூறுகிறேன்" என்று கூறுகிறாள்.

இந்நகரத்தில் சங்கரஸ்வாமி என்னுமோர் விப்பிரரிருந்தார். அவர் அந்தணருள் சிறந்தவர். அவருக்கு வருஷன், உபவருஷன் என்னும் இரண்டு குமாரர்களிருந்தார்கள். அவ்விருவருள் வருஷனுக்கு நான் மாலை சூட்டினேன். இதோ இருக்கிறாரே இவர் தான் என் நாயகர். இவர் மூர்க்கத்தன்மையுள்ளவர். தரித்திரர். விபரீதகாரியங்களைச் செய்பவர். இவரது சகோதரனாகிய உபவருஷனும் இவ்விதமே யிருப்பார்.

ஓர் வருடம் மாரிகாலம் வந்தது. அக்காலத்தில் ஸ்திரீகள் வெல்லத்தினாலும் மாவினாலும் நிந்திக்கத் தக்க இரகசிய பிரதேசத்தைச் (பெண்குறி) செய்து மூர்க்கனும் தரித்திரனுமாகிய அந்தணனுக்குக் கொடுப்பது வழக்கம். ஆகையால் அவ்வழக்கப்படி என் கொழுந்தனாகிய உபவருஷனுடைய மனைவி அவ்விதமே ஓருருவைச்செய்து அதை என் கணவனுக்குத் தக்ஷிணையுடன் கொடுத்தாள். என் கணவனாகிய இவர் அதை வாங்கிக்கொண்டு வீடு வந்து சேர்ந்தார். நான் இவரைச்சினந்து கொண்டேன். இவர் நான் சொல்வதுணராமல் முட்டாள்தனத்தால் என்மீது கோபங்கொண்டு மிகவும் வருந்தினார். பிறகு குமாரக்கடவுளைச் சரணமடைந்து அவரைத்தியானித்துவந்தார். முருகப்பெருமான் இவர்மீதிரக்கங்கொண்டு இவருக்குக்கலைகள் யாவற்றையும் பிரகாசப்படுத்தினார். அன்றியும் எமதிறைவனாகிய கந்தபிரான் "ஒருதரம்கேட்டவுடன் மனதில் அமைத்துக்கொள்ள வல்ல ஓர் அந்தணனைக்கண்டவுடன் அவனுக்கு அந்தக்கலைகளனைத்தையும் பிரகாசப்படுத்து" என்றும் கட்டளையிட்டார். இவைகளனைத்தையும்

என்னிடத்து இவர் தெரிவித்தார். அன்றுதொட்டு இவர் சதாகாலமும் தியானத்திலும் ஜபம் செய்வதிலுமிருந்து வருகிறார். ஆகையால் நீங்கள் ஒருமுறை கேட்டதும் கிரகித்துக்கொள்ளக் கூடிய அந்தணனொருவனையழைத்துவாருங்கள்; அப்பொழுது தான் உங்களுடைய காரியம் சித்தியாகும்" என்றாள். அம்மா! அந்த வருஷனுடைய மனைவியிடம் அந்த விசேஷத்தைக்கேட்டு மகிழ்வுற்று, அவ்வம்மையினுடையதரித்திரம் நீங்கும்பொருட்டு நூறு பொன்னை அளித்து அவ்விடமிருந்து புறப்பட்டோம். பிறகு புவிமுழுதும் சுற்றினோம். எங்கும் நாங்கள் உத்தேசித்துத் தேடிய புருஷனைக்காணாமல் உன்னுடைய கிருகம் வந்தோம். உன்குமாரனே ஒருதடவைகேட்டதும் கிரகித்துக்கொள்ள வல்லவனென்பதையறிந்தோம். ஆகையால் அவனை அனுப்பவேண்டும்; அவனை அழைத்துக்கொண்டு போய்க் கல்விப் பொருளையடைகிறோம் என்று சொன்னார்கள்.

இங்ஙனம் கூறக்கேட்டதும் என்தாய், ஆதரவுடன் கூறுகிறாள்.

ஓ அந்தணரே! நீர் கூறியதுயாவும் உண்மையென்பதில் எனக்கு நம்பிக்கையுண்டு. இக்குழந்தை பிறந்தவுடன் ஆகாயத்திலிருந்து அசரீரிவாக்குண்டாயிற்று. அதாவது "இந்தக்குழந்தை ஒருமுறை கேட்டவுடன் தான்கேட்டதைக் கிரகித்துக்கொள்ள வல்லவன்; இவன்வருஷன் என்பவனிடம் கல்வியைப்பெறுவான்; இவனால்தான் வியாகரணசாஸ்திரம் நிலைபெறப்போகிறது. உலகத்தில் எதெதுசிறந்ததோ அந்த வஸ்துக்கள் யாவும் இந்தக் குமாரனுக்குத் திருப்தியுள்ளதாகும். அதனால் இவன் வரருசியென்றபெயரைப்பெறுவான்" என்பனவாம். பிறகு இவனுக்கு வயது வந்தவுடன் வருஷன் என்னும் அந்தணன் எங்குள்ளானென்பதைப்பற்றியறிய இரவும் பகலும்கவலைகொண்டிருந்தேன். இப்பொழுது உங்கள்முகமாகச்சங்கதிகளைத்தெரிந்துகொண்டது எனக்குக் கரைகடந்த மகிழ்ச்சியை யளித்தது. இது என்பாக்

கியந்தான். நீங்கள் இக்குமாரனைத் தடையின்றி யழைத்துச் செல்லலாம். இவன் உங்களுக்கு உடன்பிறந்தவனே. ஆகையால் இதில் வித்தியாசம் நினைக்கவேண்டாம்" என்றாள். பிறகு வியாடி இந்திரதத்தர் இருவரும் மிகுந்த சந்தோஷமடைந்து அன்றிரவை ஓர் கணநேரம்போல் கழித்தார்கள். பிறகு நான் வேதாத்தியயனம் செய்யும் யோக்கியதை பெறும் பொருட்டு அவ்விரு அந்தணருள் வியாடி யென்பவர் தமது கைப்பொருளை செலவு செய்து எனக்கு உபநயனஞ் செய்வித்தார்.

பிறகு நான் புறப்படும்போது என் தாயார் என்னைவிட்டுப் பிரிய மனம் பொறாமல் முதலில் வருந்தினாளாயினும் பிறகு ஆறுதலடைந்து எனக்குத்தரவளித்தாள். நான், எனக்கு அப்பொழுதுண்டான உற்சாகத்தால் என் தாயைவிட்டுப் பிரியும் துக்கத்தை யடையவில்லை. அவ்விரு அந்தணர்களும் என்னை யடைந்ததும் சுப்பிரமணியக்கடவுள் செய்த அனுக்கிரகமானது புஷ்பித்ததாக நினைத்து அந்நகரினின்று அப்பொழுதே புறப்பட்டு விரைவாக நடந்தார்கள்.

பிறகு சிலநாளைக்கெல்லாம் நாங்கள் மூவரும் வருஷனுடைய கிருகம் வந்து சேர்ந்தோம். அந்த வருஷன் என்பவர் என்னைக்கண்டதும் தன் உபாசனா மூர்த்தியாகிய சுப்பிரமணியக் கடவுளே மூர்த்தீகரித்து வந்ததாகக் கருதினார்.

மறுநாள் முதற்கொண்டு எங்களுக்குப் போதிக்கக் கருதி ஓரிடமமைத்து அங்கு எங்களை உட்காரச் செய்து அந்தணரும் ஓர் ஆசனத்தமர்ந்து ஓங்காரத்தை ஜபித்தார். உடனே வேதங்கள் நான்கும் அங்கங்களுடன் அவர் எதிர்தோன்றின.

பிறகு எங்களுக்குக்கற்பித்தார். நான் அவர்போதனையை ஓர் முறைகேட்டேன், வியாடி இருமுறைகேட்டார். இந்திரதத்தர் மும்முறைகேட்டார். எல்லோரும் எமதாசிரியர் கூறியதைக் கிரகித்துக் கொண்டோம்.

அவ்வூரிலிருந்த அந்தணர்கள் யாவரும் நாங்கள் ஓதும் போதுண்டான திவ்ய தொனியைக்கேட்டு பரமாச்சரியமடைந்து இது வென்ன வென்று பார்க்க நாலா பக்கததிலிருந்தும் வந்து கூடினார்கள். எமது குருவைத்துதித்து தங்கள் தங்கள் முகங்களில் ஒளியையடைந்தார்கள். பிறகு எல்லோரும் எமதாசிரியரை அன் போடு வணங்கினார்கள். நந்தன் என்ற அந்நகர மன்னன் பரம சிவனது குமாரனாகிய சுப்பிரமணியக்கடவுளினது மகிமையைக் கண்டு சந்தோஷமடைந்து அந்தப் பெருமானது திருவருள் பெற்ற எமதாசிரியர் வீடுமுழுதும் பொருளால் நிறைத்தான்.

# 3-வது தரங்கம்.

வாருசி மறுமடியும் காணபூதிக்குக் கூறுகிறான். ஓ காண பூதியே! நாங்கள் அத்தியயனம் செய்துகொண்டிருக்கும்போது சிலகாலம்சென்றது. எங்களுடைய ஆசிரியராகிய வருஷன்நித்திய கடனைமுடித்துச் சாவகாசமாய் வீற்றிருக்கும் ஓர்சமயம் நாங்கள் அவரிடம்சென்று, அவரைவணங்கி "இந்நகரமானது எக்காரணம் பற்றி கலைமாதுக்கும் பூமாதுக்குமுரிய க்ஷேத்திரமாயிற்று" என்று கேட்டோம்.

அந்த அந்தணர் மாணாக்கர்களே! கேளுங்கள்; கங்காநதி யின் அருகாமையில் கனகலம் என்னும் பெயர்கொண்ட ஓர் தீர்த்த மிருக்கிறது. அங்கு தென் தேயத்துப் பிராமணன் ஒரு வன் தன் மனைவியுடனிருந்து தவம் புரிந்து வந்தான். அந்த பிராமணனுக்கு அந்த இடத்திலேயே மூன்று குமாரர்கள் பிறந் தார்கள். குமாரர்கள் பிறந்த சிலகாலத்திற்கெல்லாம் அந்த விப் பிரன் தன் இல்லறக்கிழத்தியுடன் பரலோகமடைந்தான். பின்னர் அந்தக்குமாரர்கள் மூவரும் கல்வியயிலவெண்ணி, இராஜ

கிரகம் என்னும் இடத்திற்குச் சென்றார்கள். அங்கிருந்து அத்தியயனம் முடித்தார்கள். பின்னர் தாங்கள் அநாதையாயிருக்க நேர்ந்தமைக்கு வருத்தமுற்று அவ்விடத்தை விட்டுக் குமாரசுவாமியைத் தரிசனம் செய்யும் விருப்பத்துடன் தெற்கு நோக்கிச் சென்றார்கள். சிலநாள் வழி நடந்தபிறகு கடற்கரை யோரத்திலிருந்த சிஞ்சினி யென்னும் நகரத்தை யடைந்து அங்கு போஜகன் என்னும் ஓர் அந்தணனைக் கண்டு அவன் வீட்டில் தங்கினார்கள். அந்த போஜகனுக்குப் புத்திரசந்தானமில்லை. ஆகையால் அவன் தன் மூன்று கன்னிகைகளையும் அவர்கள் மூவருக்கும் பாணிக்கிரகணஞ் செய்து கொடுத்துத் தன் சொத்துக்களை அவர்களுக்கே உரிமையாக்கிப் பின் தவஞ்செய்யக் கானகம் சென்றான். அந்த மூவரும் தங்கள் மாமனார் வீட்டில் வசித்துவரும் போது அந்நகரில் மழையில்லாமற்போய் பஞ்சந்தோன்றியது. ஆகவே அவர்கள் தங்கள் பனைவிமார்களை அந்நகரத்திலேயே விட்டு வேறிடத்திற்குப் போய்விட்டனர். குரூர சுபாவமுடைய மானிடர்கள் சிலசமயங்கள் தங்கள் உறவினர்களையும் கவனிப்பதில்லை. தங்கள் கொழுநனை விட்டுப் பிரிந்த அம்மூன்று பிராமண மாதருள் இரண்டாவள் கர்ப்பிணியாயிருந்தாள் அச்சமயம். ஆகையால் மற்றஇரண்டுமாதர்களும் கர்ப்பிணியாயிருந்த தங்கள் சகோதரியோடு தங்கள் தந்தையின் நண்பனாகிய யக்ஞதத்தன் வீட்டை யடைந்து அங்கிருந்து வந்தார்கள். அம்மாதர்கள் மூவரும் தாங்கள் சுகமே வசிக்க ஓரிடத்தை யடைந்தும் தங்கள் கணவனை விட்டுப்பிரிந்த துக்கத்தால் சொல்லொணுவருத்தத்துடனிருந்து வந்தார்கள். குலஸ்திரீகள் ஆபத்துக் காலங்களிலும் பதிவிருதா தருமங்களினின்று தவறுவார்களா?

பிறகு கர்ப்பந்தரித்திருந்த இரண்டாவது மாது சிலமாத காலங்களுக்கெல்லாம் ஓர் புத்திரனைப் பெற்றாள். அந்தப் புத்திரனிடம் அந்த மூன்றுமாதர்களும் ஒருவரைவிட ஒருவர் பதின்மடங்கதிகமாக அன்புபாராட்டி நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்த்துவந்தார்கள்.

இங்ஙனமிருந்து வருகையில் பரமசிவனும் பார்வதிதேவியும் ஆகாய வீதி வழியே சென்றார்கள். அப்பொழுது பார்வதிதேவி இந்தக் குமாரனைக் கண்டு உடனே பரமசிவனை நோக்கி "மகா பிரபுவே! இந்தக் குழந்தையைப் பாருங்கள்; இந்த மூன்று மாதர்களும் ஒருவரைவிட ஒருவர் அளவிறந்த அன்புடன் கொஞ்சி முத்தமிட்டு அதன் வாயமுமுண்டு மகிழ்கிறார்கள். இம்மாதர்கள் இந்தக் குழந்தையைக் கொஞ்சி மகிழ்வது தங்களை அதுகாப்பாற்றும் என்கிற எண்ணங்கொண்டுதானே? ஆகையால் இக்குழந்தை இவர்களைக் காக்கும்படி அனுக்கிரகம் செய்ய வேண்டும்" என்று அன்புடன்கேட்டாள். மகாதேவன் தேவியிடம் கருணைகூர்ந்து "இந்த பாலகன் முன்ஜன்மத்தில் தன் மனைவியுடன் என்னையாராதித்தான். இவன் இப்பூமியில் நல்ல சுகமனுபவிப்பதன் பொருட்டுப் பிறந்திருக்கிறான். ஆகையால் இவனுக்கு அனுக்கிரகம் செய்கின்றேன். இவனுக்கு முன் ஜன்மத்தில் மனைவியாக விருந்தவள் இப்பொழுது மகேந்திரவர்மன் என்னும் பெயர் பெற்ற மன்னவனுக்குப் பெண்ணாகப் பிறந்து பாடலி என்னும் பெயருடனிருந்து வருகிறாள். இவளை இந்தப் பாலகனே மணஞ்செய்து கொள்ளப் போகிறான்என்று கூறினார்.

பிறகு அன்றிரவு அம்மூன்றுமாதர்களும் நித்திரைசெய்யும் போது அவர்கள் கனவில் பரமசிவன் தோன்றி "மாதர்களே! இந்த உங்களுடைய புத்திரனுக்குப் புத்திரகன் என்னும் திருநாமத்தைச் சூட்டுங்கள்; இவன் ஒவ்வொரு நாளும் இரவில் படுத்து நித்திரை புரிந்து எழுந்ததும் இவனுடைய தலை மாட்டில் இலட்சம் சொர்ணம் கிடைக்கும்; இவன் வயது வந்ததும் அரசனாவான்" என்று கூறிமறைந்தார்.

இங்ஙனம் இறைவன் இம்மாதர்களின் கனவில் தோன்றி அனுக்கிரகித்த மறுநாளே அவர்கள் தாங்கள் குழைந்தைக்குப் புத்திரகன் என்னும் பெயர் புனைந்து மகிழ்ந்தார்கள். புத்திரகன் என்னும் அந்தக்குழந்தை அன்றிரவுபடுத்து நித்திரை புரிந்து

பொழுதுபுலருந் தருணத்தெழுந்தது. எழுந்த அக்கணமே அதன் தலைமாட்டில் நூறுலட்சம் பொன்னிருக்கக்கண்டு மகிழ்வுற்றுத் தங்கள் விரதநியமம் பலித்தது பற்றியும், இறைவனது திருவருட்டிறத்தைப்பற்றியும் வியந்து புகழ்ந்தார்கள்.

இவர்களுக்கு நாளடைவில் அளவிறந்த பொன்கிடைத்தது. பிறகு வயதினையடைந்ததும் ஓர் நகரத்தையாளும் இராஜ பதவியையும் அடைந்தான். புத்திரகன்உலகத்தில் ஐசுவரியமுண்டாவது தவத்தைப்பற்றியதாகவல்லவா இருக்கிறது.

ஒரு சமயம் யக்ஞதத்தன் புத்திரகனைத்தனிப்படச்சந்தித்து "அப்பா! உன் தந்தையர் மூவரும் வறுமையின் கொடுமை சகிக்கொணாது எங்கேயோ போய்விட்டார்கள். ஆகையால் நீஅந்தணர்களுக்கு எப்போதும்தானம்செய்ய வேண்டும். அப்படி நீசெய்து வருவாயாயின் பிதிர்க்கள் அதைக்கேட்டுஉன்னிடம்வருவார்கள். இதற்குச்சான்றாக பிரம்மதத்தன் என்பவனுடையசரித்திரம்என் ஞாபகத்திற்கு வருகிறது சொல்லுகிறேன்; கேள்.

பிரம்மதத்தன் என்னும்அரசன்வாரணாசியிலிருந்துவந்தான். அவன் ஒருநாள் இரவில்ஆகாயமார்க்கத்தில் செல்லும் இரண்டு அம்சபட்சிகளைக்கண்டான். அந்த இரண்டு பறவைகளும் பார்வைக்குச் சொர்ணம்போல் பிரகாசித்தன.

உற்றுப்பார்ப்பவர்களுடைய கண்ணுக்கு அந்த இரண்டு அன்னப்பறவைகளைச் சூழ இன்னும் அநேக அன்னப்பறவைகளும் பறந்து செல்வது காணப்பட்டது. இவைகளனைத்தும் திடீரென்று ஆகாயத்தில் வெண்மை நிறமானமேகக் கூட்டங்கள் தோன்றியதற்கொப்பக்காணப்பட்டது.

இந்த அன்னப்பறவைகள் பறந்து கண்ணுக்குப்புலப்படாமற் சென்று விட்டன. அவைகள் மறைந்ததுமுதல் பிரம்மதத்த பூபதி அவைகளை மறுபடியும் காணவேண்டு மென்கிற அவாவினையடைந்தான். சிலநாள் அதே கவலையாகவிருந்து அரச

னுக்குரிய சுகங்களையும் கவனியாதொழிந்தான். பிறகு அமைச்சர்களிடம் யோசனைசெய்து ஓர் தடாகத்தை உண்டுபண்ணினன் ஜனங்களுக்குத் தன்னிச்சைப்படி பொருள்களைத் தானம் செய்தான். பிறகு கொஞ்சகாலமானவுடன் அந்த இரண்டு அன்னப்பறவைகளும் வந்தன. அவைகளை அரசன் கண்டான். கண்டதும் அரசன் "ஏ அன்னங்களே! உங்களுக்குச் சொர்ணமயமான சரீரமுண்டானதற்குக்காரணமென்ன" என்றுகேட்டான். அன்னங்கள் அரசனைநோக்கி "அரசனே முன்ஜன்மத்தில் நாங்கள் காக்கைகளாக ஜனித்திருந்தோம். அப்பொழுது பலியன்னத்தைப்புசிக்கும்போது நாங்களிருவரும் சண்டைசெய்துகொண்டு சிவாலயத்தில் அபிஷேக தீர்த்தம் விழும்பள்ளத்தில் விழுந்து மரணமடைந்தோம். அதனால் எங்களுடைய தேகம் இச்சன்மத்தில் சொர்ணமயமாக வானதுமன்றி முன்ஜன்ம வரலாற்றினையும் அறியவல்லவர்களானோம்" என்று கூறின. அதுகேட்ட அரசன் ஆச்சரியமடைந்து, அந்தப்பறவைகளைத்தன் விருப்பப்படி நெடுநேரம் பார்த்தும் சம்பாஷித்தும் ஆனந்தமடைந்தான். ஆகையால் "ஏ புத்திரக! நீ ஏராளமானபொருள்களைத்தானம் செய்து உன்னுடைய பிதிர்க்களையடைவாய்" என்று யக்ஞதத்தன் கூறினன் புத்திரகனும் அந்த யக்ஞதத்தனது சொற்படி பலதானக்களைச் செய்து மகிழ்ந்தான்.

இங்ஙனம் புத்திரகன் உலகமெச்சும்படி தானம் செய்துவருவதை அவனுடைய பிதிர்க்கள் அறிந்து அவனிடம்வந்தார்கள். புத்திரகனும் அவர்களைத் தன்னுடையபிதிர்க்கள் என்றுதெரிந்துகொண்டு அவர்களைத்தன் அரண்மனையிலேயே வைத்துக்கொண்டான். அவர்கள் தத்தம் மனைவியையும் குறைவற்ற செல்வத்தையும் கண்டு மகிழ்ந்து சுகமாக வாழ்ந்துவந்தார்கள். இப்படிச் சிலகாலங்கழிந்த பிறகுஅந்தப்பிதிர்க்கள் அவிவேகத்தால் தாங்கள் ஆபத்தினின்றும் மீட்கப்பட்டதையுணராது, புத்திரகனைக் கொன்று அந்த இராஜ்ய சுதந்தரத்தைத் தாங்கள்பெறக்கருதி விந்

தியமலைக்கருகேயுள்ள ஓர் காளிகோயிலுக்கு அவனையழைத்துச் சென்றார்கள். அந்தோ! எவ்வளவு பாடுபட்டாலும் மூடர்களுடைய புத்தி திரும்புவதில்லை. தங்களுடையபுத்திரனும் அரசனுமாகிய புத்திரகனைக் கொல்ல மனந்துணிந்தவர்களுடைய மதியை என்னென்று கூறுவது!

அந்தக் காளிகோயிலில் ஏற்கனவே கொலையாளிகளை இவர்கள் திட்டப்படுத்தி வைத்திருந்தார்கள். ஆகையால், கோயிலின் வாயிற்படி அணுகியதும் அந்தச் சதிக்காரர்கள் புத்திரகனை நோக்கி "நீ மட்டும் தனியே ஆலயத்துட் பிரவேசித்து அம்மனைத் தரிசித்து வா" என்று கூறினார்கள். அவர்கள் கூறியபடியே புத்திரகன் ஆலயத்துட் பிரவேசித்துக் கர்ப்பகிருகம் போனான். அங்கே கையிற் கத்தி யேந்திய கொலையாளிகள் நால்வரிருக்கக் கண்டு "நீவிர் யாவர்? இங்குக் கையிற் கத்தியுடனிருக்கக் காரணமென்ன" எனவே கொலையாளிகள் கத்தியை நோக்கிப் புத்திரகனை வெட்ட யத்தனிக்கவும் புத்திரகன் விலகி நின்று "நான் உங்களிடத்தில் அகப்பட்டுக் கொண்டேன், இனித்தப்பமாட்டேன். நான் உங்களுக்கு ஒரு தீங்கிழைத்ததாகத் தெரியவில்லை; அப்படியிருக்க ஏனோ என்னை நீங்கள் கொலை புரியத் துணிகிறீர்கள்? இதன் காரணத்தைத் தயை செய்து கூறுங்கள்; பிறகு என்னை உங்களிஷ்டப்படி செய்யலாம்" என்றான்.

கொலையாளிகள் மகாராஜாவே! தங்களுடைய தந்தையார் மூவரும் எங்களுக்கு இந்தக்கொலை புரியும்படி சொல்லிப் பொருளை எங்களிச்சைப்படி தந்தார். அதன் பொருட்டு நாங்கள் பிரவேசித்தோம்; வேறு காரண மொன்றுமில்லை" என்றார்கள். அரசன், அவர்களை நோக்கி, "பொருளுக்கு ஆசைப்பட்டுத்தானே நிரபராதியாகிய என்னைக் கொல்ல இசைந்தீர்கள். ஆகையால் உங்களுக்கு வேண்டுவது பொருளே தவிர என்னுயிரல்ல; இப்போதே உங்களுக்கு நான் அணிந்திருக்கும் இரத்தினாபரணங்

களனைத்தையும் தருகிறேன். என்னை விட்டு விடுங்கள். நான் இச்செய்தியை வெளியிடுவதில்லை. அன்றியும் கண்காணாத தேசத்திற்கு ஒருவரையும்அறியாமல் போய்விடுகிறேன்." என்று கூறவே, கொலையாளிகள் மனமிரங்கி அவ்விதமே யாகட்டுமென்று ஒப்புக்கொண்டார்கள். புத்திரகனும் அவர்களுக்கு இரத்தினாபரணங்களையளித்து அக்கோயிலிலேயேமறைந்திருந்து அவர்கள் சென்ற பின் ஒருவரையு மறியாமல் வெளிப் புறப் பட்டான்.

கொலையாளிகள் புத்திரகனுடைய பிதாக்களிடம் தாங்கள் புத்திரகனைக் கொன்று விட்டதாகப்பொய்கூறிப் போய்விட்டார்கள். பிதிர்க்கள் இராஜ்யத்தையடைந்ததும் மந்திரிகள் அவர்களைத் துரோகிகளென்றும் பாதகர்களென்றும்தெரிந்துகொண்டு அவர்களைக் கொஞ்சமும்அஞ்சாமல்எதிர்த்துவதஞ்செய்தொழித்தார்கள். அந்தோ!

"எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்றமகற்கு" என்பதல்லாவா ஞாசிரியர் திருவாக்கு! அது பொய்க்குமா? ஆகவே அந்தப்பாவிகளுக்குமங்களமுண்டாகவில்லை. கெடுமதி கேட்டைத் தந்தது. துரோகம் பலித்தது. வஞ்சகம் வதைத்தது.

ஆலயத்திலிருந்து வெளிப்புறப்பட்டபுத்திரகன் ஒருவரையு மறியாமல் இரவுபகலாக நடந்து விந்தியமலைக் கருகாமையில் ஒரு பெரிய ஆரண்யத்தை யடைந்து அங்கு திரிந்து கொண்டிருந்தான். அச்சமயம் அந்த வனத்தில் ஓரிடத்தில் கைச் சண்டை செய்து கொண்டிருக்கும் இரண்டு ஆடவர்களைக் கண்டான். அவர்களை "நீங்கள்யார்" என்றுவிசாரித்தான். அவர்கள் "அப்பா! நாங்கள்மாயாசுரனுடைய மைந்தர்கள். எங்களுக்கு அந்த மாயாசுரனுடைய சொத்துக்கள் இருக்கின்றன. இதோ இங்கிருக்கும் பாத்திரம் ஒன்றுக்கும் தடிக்கம்பு, பாதுகைகள்

இவைகளுக்காக நாங்கள் சண்டைசெய்துகொள்ளுகிறோம். வலு வுள்ளர்களுக்கு இவைகள் கிடைக்கும்" என்றார்கள்.

இச்செய்திகேட்டதும் புத்திரகன் நகைத்து, "மாயன்மைந் தர்களே! இந்தப்பொருள்கள் என்னவிலை பெறுமானது; இவை களுக்காகச்சண்டை செய்துகொள்கிறீர்களே!" என்றான். அவர் கள். "அப்பனே! இந்தப்பாதுகைகளை எவன் தரித்துக்கொள் கிறானோ அவன் ஆகாயத்தில் சஞ்சரிக்கும் வல்லமையை அடை வான். இந்தத்தடிக்கம்பில் எதைவரைந்தாலும் அது பலிக்கும், இந்தப்பாத்திரம் வைத்திருப்பான் எந்த ஆகாரத்தை விரும்பு கிறானோ அந்த ஆகாரம்உடனேகிடைக்கும்"என்றார்கள் புத்திரகன் உடனே யோசித்து, "நீங்களேன் சண்டைபோடுகிறீர்கள்; நான் சொல்லுகிறபடி செய்யுங்கள்; அதாவது நீங்கள் இருவரும் ஓடுங் கள்; எவன் முந்தி ஓடிஜெயிக்கிறானோ அவன் இவைகளைபடை யட்டும்" என்றான். அந்த இரண்டு மூடர்களும் புத்தரகனுடைய பேச்சை நம்பி ஓடினார்கள். அவர்கள் ஒருஇருபதடி தூரம்சென் றதும், புத்தரகன் தடிக்கம்பையும் பாத்திரத்தையும் எடுத்துக் கொண்டு பாதுகைகளைத் தரித்துக் கொண்டான். உடனே ஆகாய மார்க்கத்தில் கிளம்பி வெகு தூரம்போய் அங்குசஞ்சரித தான். பிறகு கொஞ்சநேரத்திற்கெல்லாம் ஆகரிஷிகை என்னும் பெயர்கொண்ட ஓர் நகரத்தைக்கண்டு ஆகாயத்திலிருந்து அப் பட்டணத்திலிறங்கினான். இறங்கியதும் "இந்த உலகத்தில்வேசி கள் மோசக்காரிகள், பிராமணர்களோ என் தந்தைகளைப்போல் கொடும்பாவிகள், வைசியர்கள் பொருளில் பேராசை கொண்ட வர்கள;இப்படியிருக்கின்றமையால் நான் இந்நகரில் எவரை நம்பி எங்கு வசிப்பேன்" என்று பலபடியாக யோசித்துக் கடைசியில் இடிந்து தலையில் விழும் நிலைமையிலிருந்த ஒரு வீட்டிற்குச் சென்று அதில் நுழைந்தான். அங்கே வயது சென்ற கிழவி யொருத்தி யிருக்கக்கண்டான். அவளைப் புத்திரகன் வணங்கி அவளுக்குக் கொஞ்சம் பொருள் கொடுத்துச் சந்தோஷப் படுத் தினான். அந்தக்கிழவி புத்திரகனிடம் அன்புபாராட்டி அன்ன

மிட்டு வந்தாள். புத்திரகன் அங்கு ஒருவரையுங்காணுமல் வசித்து வந்தான்.

இப்படி யிருக்கையில் ஒரு நாள் கிழவி புத்திரகனைப் பார்த்து, "குழந்தாய்! நீ இன்னும் விவாகம் செய்து கொள்ளாம லிருப்பது எனக்கு வருத்தமாயிருக்கிறது இந்நகரத்து மன்ன னுக்குப் பாடலி என்று ஒரு கன்னிகையிருக்கிறுள். அந்தக் கன்னிகையே உனக்கேற்றவள். அவள் அரசனது மாளிகையின் மேன்மாடியிலிருந்து வருகிறுள். அவளை நீ யடைவாயாகில் நீயே பாக்கியவான். நான் நினைப்பது முடவன் கொம்புத்தேனை விரும்புவதுபோலிருப்பினும் என்னுசையானது உன்னிடம் என் மனதிலுதித்ததைத் தெரிவிக்கும்படி செய்து விட்டது" என்ருள்.

அவ்வுரை செவியிற் புகுந்ததும் அவ்வுரை புகுந்த புத்திரக னுடைய செவியாகிய வழியைப் பின்பற்றியே மன்மதனும் பிர வேசித்து, அவன் மனதை யடைந்தான். மன்மதன் உள்ளே புகுந்ததும்புத்தரகன்மனம்பேதித்தது "ஆ! அந்தக்கண்மணியை எப்படி நானடையப்போகிறேன்" என்கிற கவலைக்குள்ளாகிக் கடைசியில் ஓர் தீர்மானஞ்செய்து கொண்டு பாதுகைகளின் மீதேறி ஆகாயவழியே சென்று இராப்பொழுதில் இராஜ மாளிகையை யடைந்தான்.

பருவதசிகரம்போல் உயர்ந்த அந்த மாளிகையின் பலகணி வழியே புத்திரகன் உள்ளே பிரவேசித்து, அங்கே தனித்துப் பஞ்சணைமீது படுத்துத் துயில்புரியும் பாடலி யென்னும் கன்னி கையைக் கண்டான். அவளுடைய தேகம் சந்திரனிலும் பிரகாச முள்ளதாக விருந்தது. மன்மதனுடைய சக்திபோலிருந்தாள். இந்த உலகத்தை ஜயித்து பிரத்தியட்சமாகக் களைப்படைந் தவள்போல் காணப்பட்டாள். புத்திரகன் ஆச்சரியமடைந்து "ஆ! இந்த சுந்தரமாதை நான் எப்படி எழுப்புவேன்; கைக் கெட்டிய பழம் வாய்க்கெட்டாமலிருக்கிறதே!" என்று கவலைக்

குள்ளாழ்ந்து, இது செய்வதென்றுணரப்பெறுமல் சற்றுத்தயங்கி நின்றான்.

அப்பொழுது யாமத்திற் கொருமுறை நகர்சோதனைசெய்பவன் தெருவழியே போய்க்கொண்டு தற்செயலாய்—

"உலகத்தில் மானிடனாக ஜனித்தவர்களில் வாலிபன், மதுரமான குரலுடையவளும், மதத்தால் சோம்பலுடையவளும், திறந்த கண்களுடையவளுமாகிய ஓர் பெண்மணியைக் காதலோடு கட்டியணைத்துத் தூக்கத்தினின்றும் எழுப்புவானாகில் அவனே பாக்கியவானாகிறான். அவன் ஜன்மமே சபலமாகிறது!" என்று கூறினான்.

இதைக்கேட்டவுடன் புத்திரகன்தேகம் நடுங்கிற்று. உடனே பரவசமாயினன். பின் சற்று நிதானித்து அந்தப் பெண்ணாயகமாகிய பாடலியென்பவளின் அருகேசென்று தன்னுடையகரங்களாற்கட்டியணைத்தான். உடனே அந்த மாதரசிவிழித்துக்கொண்டு தன் எதிரே நிற்கும் ஓர் சுந்தரபுருஷனைக் கண்டதும் அவள் மனதில் வெட்கம் சந்தோஷம் இரண்டும் பிரவேசித்து ஒன்றுக் கொன்று சுமார் ஐந்து நிமிஷகாலம் தர்க்கஞ் செய்து கொண்டன. பின் வெட்கம மனதைவிட்டு ஓடிவிட்டது. உடனே பாடலி தான் கொண்ட காதலின் மிகுதியால் அவனை இன்னானென்று விசாரிக்குமுன்னமே பஞ்சணையி லெழுந்துட்கார்ந்து "என் துரையே!" என்றழைத்து வரலாறு விசாரித்து இருவரும் மனமொப்பிய பின்னர் அந்த இடத்திலேயே காந்தர்வமணம் செய்து கொண்டனர். இவர்களது மனநிலைமைக்கேற்ப அன்பும் அதிகமாக விர்த்திபடைந்தது. அது போல் இரவுவிருத்தியாகவில்லை. இவர்கள் ஒருவர்மேல் ஒருவர் காதல் கொண்டு அன்பைப் பெருக்கிக்கொண்டது போல் இரவையும் விருத்தியாக்கிக் கொள்வது எங்ஙனம் இவர்களால் சாத்தியம்?.

ஆகவே பொழுது விடியுந்தருணத்தில், புத்திரகன் பாடலியைவிட்டுப் பிரியமாட்டாமற் பிரிந்து முன்போலவே தன்பாதுகையின் உதவியால் கிழவியின் வீடடைந்தான். அன்று முதற் கொண்டு புத்திரகன் நாடோறும் இரவுபாடலியிடம் செல்வதும் பிறகு விடியுந்தருவாயில் திரும்புவதுமாக விருந்தான்.

இவ்வாறு சிலமாதகாலம் நடந்துவந்தது. பின் பணிவிடைப் பெண்கள் பாடலியின் சரீரத்தில் சம்போகச்சின்னங்கள் தோன்றக் கண்டு வியப்புற்று அவள் தந்தையாகிய அந்நகரத்து மன்னனிடம் தெரிவித்தார்கள். இங்ஙனம் அரசனுக்குச் சங்கதி தெரிவிக்கப்பட்டிருப்பதை பாடலிபறியாள். அரசன் இந்த இரகசியம் அறியவேண்டிப் பாடலியின் படுக்கையறையில் ஓர் பணிவிடைப் பெண்ணை மறைந்திருந்து பார்த்து வரும்படி திட்டப்படுத்தினன்.

பின் மறுநாள் இராப்பொழுது வந்தது. பாடலி சந்தோஷமாகத் தன் பஞ்சணை மீது படுத்துக்கொண்டு புத்திரகனது வரவை ஆவலாய் எதிர்பார்த்திருந்தாள். பணிவிடைக்காரியும் அரசனது ஆக்கினைப்படி பாடலியின் அறையில் ஓர் புறம் மறைந்திருந்தாள். வழக்கம் போல் புத்திரகன் வந்ததும் இருவரும் அன்போடு அளவளாவிப் பேசிக்கொண்டிருந்தார்கள் சற்றுநேரம். பின்னர் நித்திராதேவியின் வசத்தர்களாகி இருவரும் நித்திரை போய்விட்டார்கள். பிறகு பணிவிடைக்காரி அந்தப் புத்திரகனைக் காலையில் அடையாளங் கண்டு பிடிக்க வெண்ணி, அவன் வஸ்திரத்தில் செம்பஞ்சுக் குழம்பை வாரித் தெளித்துவிட்டுத் தன்னிருப்பிடம் போய்விட்டாள்.

பின் பொழுது புலர்ந்தது. புத்திரகன் வழக்கம்போல் தன் வீடு போய்ச் சேர்ந்தான். அரசனிடம் நேற்றிரவு தான்கண்டதைக் கண்டபடி பணிவிடைக்காரி தெரிவித்தாள். அரசன் உடனே சில வேலைக்காரர்களை யழைத்துப் புத்திரகனைக் கண்டுபிடித்துக்கொண்டு வரும்படி உத்தரவிட்டான். அவர்கள் தாங்கள் அரசன் உத்தரவுப்படி எங்குந் தேடிச் செல்லுகையில் புத்திரகன் செம்பஞ்சுக் குழம்பு தெளிக்கப்பட்ட வஸ்திரத்துடன் தன்னுடைய வீட்டிலிருந்து வெளியேவரக்கண்டார்கள். உடனே அவனைப்பிடித்து அரசனிடம் கொண்டுபோனார்கள். அரசன் புத்திரகனைக்கண்டதும் கண்களிற் அனற் பொறிபறக்கக் கோபங்கொண்டான். அது கண்ட புத்திரகன், உடனே தன்பாதுகைகளைக் காலிலணிந்துகொண்டு ஆகாய மார்க்கமாகப் பாடலியின் மாளிகை சென்று அவளைக்கண்டு "கண்மணி! நாமிருவரும் நேசங்கொண்டிருப்பதை உனது தந்தை அறிந்து விட்டார். ஆகையால், நாமிருவரும் இதோ இந்தப் பாதுகையின்மீதேறிக்கொண்டு இந்த இடம் விட்டுச் செல்வோம். சீக்கிரம்

புறப்படு" என்று சொல்லவே, பாடலியும் திடுக்கிட்டு உடனே புறப்பட்டுத் தன் அன்பன்பணித்தவாறே அப்பாதுகையின் மீதேற இருவரும் வானமார்க்கமாகச் சென்று வெகுதூரம் போய்விட்டார்கள்.

பின்னர் வெகுநேரத்திற் கப்பால் கங்காநதிக்கரை சென்றார்கள். அங்கே பாடலி களைப்படைந்தமை கண்டு உடனே வானத்திலிருந்து கீழே இறங்கித் தன்பாத்திரமகிமையால் தின்பண்டங்களை வரவழைத்துப் பாடலிக்குக் கொடுத்துக் களை தெளியும்படி செய்வித்துச் சந்தோஷப்படுத்தினான். பிறகு அந்த இடத்தில் தன் கைத்தடியால் வரைந்து நான்கு அங்கங்களுடன் கூடின ஓர் நகரத்தையுண்டாக்கினான். அந்நகரம் மகோன்னதமாக விளங்கிற்று. அதற்குத் தானே அரசனாகிப் பாடலியின் தந்தையைத் தனக்குத் தலைவணங்கும்படி செங்கோல் செலுத்தினான்.

அதுதான் இந்நகரம். இது தேவர்களுக்குரியது. மாயையால் ஏற்பட்டது. பூமகளுக்கும் கலைமகளுக்கும், இருப்பிடமாக விளங்குவது. பாடலிபத்திரம் என்னும் பெயருடையது.

ஓ காணபூதியே இவ்விதம் வருஷன் முகமாக இந்த அபூர்வமான கதையைக் கேட்டு நாங்கள் ஆச்சரியமடைந்தோம் என்றார்கள்.

## நான்காவது தரங்கம்

இவ்விதம் வரருசியானவன் காணபூதிக்கு விந்தியமலையின் மத்தியில் இக்கதையைச் சொல்லி விட்டு, மேலே கூறுகிறான்.

காணபூதியே! நான் வியாடியுடனும் இந்திரதத்தனுடனும் குருவின் வீட்டிலிருந்து வருகையில் முறைப்படி கல்வி பயின்று தேர்ச்சியடைந்தேன். நான் கல்வியிற் றேர்ச்சியடைந்த போது என் வாலிபப்பருவமும் மாறிற்று. அப்பொழுது நாங்கள் இந்திரனுடைய உற்சவம் பார்க்க வெண்ணி ஒரு நாள் வெளிப் புறப்

பட்டோம். அங்கு ஓர் கன்னிகையைக் கண்டோம். அவ்வேந்திழை மதனனுக்கு அஸ்திர மென்று சொல்லும்படி யிருந்தாள். நான் இந்திரதத்தனைப் பார்த்து இவள் யாரென்று கேட்டேன். இந்திரதத்தன், "இவள் உபவருஷன் குமாரி, உபகோசை யென்பது இவள் பெயர்" என்றான். அந்த உபகோசையும் தன் தோழிகள் மூலமாய் என்னை இன்னானென்று அறிந்து என்னை அன்போடு பார்த்து என் மனதைக் கவர்ந்துகொண்டு அவள் வீடு சென்றாள். அவளுடைய முகம் பூரணசந்திரனை யொத்திருக்கும். கண்கள் கருநெய்தல் மலரை யொத்திருக்கும். கைகள் தாமரைத் தண்டெனச் சொல்லும் வண்ணம் எழிலுடையன. சங்கம் போன்ற கழுத்தும் தளிர்போன்ற பல்வரிசைகளுமுடையவள். பல சொல்வானேன்; மன்மதமகாராஜனுடைய சௌந்தரியமாகிய வீட்டிற்கு மற்றொரு இலக்ஷ்மிபோன்றவள்.

இவ்வளவு மகிமைவாய்ந்த உபகோசையின் திருவுருவவெழிலைக் கண்டது எனதிருதயம் மன்மதபாணத்தின் தொந்தரவுக்குள்ளாகி மிகுந்த தாபமடைந்தது. பிளவுறும் நிலைமையையடைந்தது. அந்தப் பூங்கொடியினது கொவ்வைக்கனி போன்ற இதழமுதம் பருக என்னுள்ளத்துள்ளெழுந்த ஆசையால் அன்றிரவு வெகுநேரம் வரையில் நித்திரையுண்டாகவில்லை. பின்னர் விடியற்காலம் நித்திரை யுண்டாயிற்று. அப்பொழுது வெள்ளைக்கலை யுடுத்தவளும் தேவர்களைச் சார்ந்தவளுமாகிய ஓர் ஸ்திரீயைக் கனவிற் கண்டேன். அவள், "ஓ வரருசியே! உனக்கு இந்த உபகோசை முன்பு மனைவியாயிருந்தவள். உன் குணங்களையறிந்தவள். உன்னையன்றி மற்றெவரையும் கணவனாகக் கருதியவளன்று. ஓ புத்திர! நீ இதற்காகக் கவலைப்படவேண்டாம். நான் உனது இருதயகமலத்துள் வசிப்பவள். நான் கலைமகள். நீ கொண்டபெருங்கவலையை மாற்றவெண்ணி உனக்குப்பிரத்தியக்ஷமானேன்." எனக் கூறி மறைந்தனள்.

பிறகு நான்விழித்துக் கொண்டேன். உடனே மிகுந்த ஆவலுடன் பிராணநாயகியின் வீட்டிற்குச் சென்று அதனருகேயிருந்த ஓர் தேமாமரத்தின் கீழே வீற்றிருந்தேன். அப்பொழுது அவ்விடத்திற்கு உபகோசையின் தோழி வந்து, என்

வரலாறு கேட்டு உபகோசை என்னை நினைத்துக் கொண்டு மிகவும் வருந்துகிறாளென்பதையும் கூறினாள். அதைக் கேட்டதும் எனக்குப் பெரும் வருத்தமுண்டாகி விட்டது. மனம் அனலிலிட்ட இழுதாய் உருகிற்று. ஆகையால், நான் அந்தத் தோழியை அழைத்து, "அம்மா! என் வருத்தமாகிய அனலுக்கு நெய் சொரிந்தது போலாயிற்று உன் சொற்கள். என்மனம் சகிக்கொணாது தவிக்கின்றது. நான் அந்த உத்தமியை அவள் தந்தையர் கொடுக்காமல் எப்படியடையக் கூடும்? அவ்வழியிற் பெறாமல் வீணை அபகீர்த்தியுண்டாகும் விதம் நடப்பதில் எனக்குப் பிரியமில்லை. அதைவிட என்னுயிரைக் காலனுக்கு இரையாக்குதலே மேலென்று தீர்மானித்துவிட்டேன். ஆகையால் உனதாருயிர்த் தோழியின் இருதயத்திலிருக்கும் எண்ணம் இப்போதே அவள் தாய் தந்தையருக்குத் தெரிவிக்கப்படுமாயின் அந்த மங்கை யென்னை யடைதல் கூடும்.

மங்கள சுபாவமுடையவளே! "உனதின்னுயிர்த் தோழியாகிய உபகோசையையும் என்னையும் நீதான் உயிர் தரிக்கும்படி செய்யவேண்டும்" என்று கூறினேன். தோழி என்னுரையைச் செவியிலேற்று அதுவே யுக்தமெனக் கொண்டு உபகோசையின் தாய்க்கு விஷயந்தெரிவித்தாள். அவள் அவளுடைய கணவன் உபவருஷனுக்குச் சொன்னாள். அந்த உபவருஷன் தன் பிதாவாகிய வருஷனிடம் கூறினான். வருஷன் அதைக்கேட்டதும் உசிதமென உவந்தனன். பிறகு விவாகம் எல்லோராலும் நிச்சயிக்கப்பட்டது. வியாடியென்பவர், வருஷாசாரியரின் உத்தரவுப்படி கௌசாம்பி நகரம் சென்று என் தாயாரை யழைத்துவந்தார். பிறகு உபவருஷன் விதிப்படி பெண்ணை எனக்கு விவாகஞ் செய்து கொடுத்தான். நான் தாயாருடனும் தாரத்துடனும் அங்கு சுகமாக வாசஞ் செய்தேன்.

பின் கொஞ்சகாலத்திற்கெல்லாம் வருஷனுக்கு அநேகம் சீடர்கள் ஏற்பட்டார்கள். அந்தச்சீடர்களுள் பாணினியென்பவன் ஒருவன். அவன் மிகவும் மந்தமதியுடையவன். அவன் தன் வாத்தியார்களுக்கு ஊழியஞ் செய்ததால் மிகவும் கிலேசமுற்றான். அப்பொழுது ஒரு வாத்தியாரின் மனைவி அவனை வீட்டிலிருக்கவேண்டாமென்று துரத்

திவிட்டாள். பாணினி அதனால் மிகவருத்தமுற்று எந்தவிதத்திலேனும் நாம்கல்வியை யடையவேண்டும் என்று கருதி இமயமலைச்சாரலுக்குச்சென்று அங்கு கடுந்தவம்புரிந்து சந்திரசேகரரைச் சந்தோஷப்படுத்தி வித்தைகளுக்கெல்லாம் சிறந்ததானவியாகரணசாஸ்திரத்தைக்கற்றான். பிறகு அந்தப்பாணினியென்னிடம் வந்து என்னையேவாதுக்கழைத்தான். ஏழுநாள் எங்களிருவருக்கும் விவாதம் நடந்தது. எட்டாவது நாளில் பாணினியை நான் ஜயித்தேன். அப்பொழுது பரமசிவன் ஆகாயமார்கத்திலிருந்து ஹூங்காரசப்தம் செய்தார். அதுமிகவும் பயங்கரமாயிருந்தது. அதனால் நாங்கள் அப்பியசித்த வியாகரண சாஸ்திரமானது எங்களுக்கு மறைந்து போயிற்று. பிறகு பாணினி எங்களை வென்றுவிட்டான். தோல்வியடைந்த நாங்கள் மூர்க்கர்களானோம். பிறகு நான் அதிக வருத்தமடைந்து குடும்பயோக க்ஷேமத்திற்காக ஹிரண்யகுப்தனென்ற வியாபாரியிடம் வேண்டுமான பொருளைக்கொடுத்து அதை என்மனைவி உபகோசையிடம் தெரிவித்துவிட்டுப் பரமசிவனைக் குறித்துத் தவம்புரிவதற்கு இமயமலை சென்றேன்.

நான் சென்றபின் என்மனைவி என்நன்மையை விரும்பி வீட்டில்நாள்தோறும்பலவிரதங்களையியற்றியும் கங்கையில்நீராடியும் மனவடக்கத்துடனிருந்தனள். நாளடைவில் உபகோசை சரீரம் வெளுத்துக்களைப்படைந்தனள். ஆயினும் மனோஜ்ஞமா யிருப்பாள். வளர்பிறைப் பிரதமைச்சந்திரகலைபோல் கண்களை அபகரிக்கும் மேனியையுடையவள்.

இந்நிலைமையிலிருந்த உபகோசை வசந்தகாலத் தொருநாட் காலைப்பொழுதில் கங்காநதிக்கு ஸ்நானஞ்செய்யப்போகையில் வழியில், இராஜபுரோகிதர், சேனாபதி, குமாரசிவன் இம்மூவரும் அவளைக்கண்டு மன்மத பாணங்களுக்கு விஷயமாயினர்.

உபகோசை அன்றையதினம் கங்கையில் ஸ்நானஞ்செய்து வெகுநேரம் வரையில் அங்கிருந்து நேமநிஷ்டைகளைச் செய்துகொண்டிருந்தனள். பிறகு அவள் திரும்பிவரும்போது குமாரசிவன் பலாத்காரமாக அவளைக் கிரகித்தான். உபகோசை புதிது புதிதாகத்தோன்றும் அறிவுடையவ ளாதலால் அவனை உடனேபார்ப்

த்து, "ஓ மங்கள சுபாவமுடையவனே! உனக்கு என்னிடமிருக்கும் ஆசைபோலவே எனக்கும் உன்னிடமிருந்த ஆசையிருக்கிறது. ஆயினும் நான் நல்ல குலத்திற் பிறந்தவள். என்னுடைய கணவனோ யாத்திரை போயிருக்கின்றார். இவ்விதமிருக்க, நான் எப்படித் தங்கள் விருப்பத்திற் கிணங்குவேன்? அன்றி வேறு யாரேனும் நம்மைப்பார்த்து விடின் என்னும்? உனக்கும் எனக்கும் தீராத அவமதிப்பல்லவா உண்டாகும்? ஆகையால் நானொன்று கூறுகிறேன். அப்படிச் செய். வசந்தோற் சவத்தன்றிரவு எல்லாரும் உற்சவ வேடிக்கையில் ஈடுபட்டிருப்பார்கள். அன்றிரவு முதல் யாமத்தில் நீ என் வீட்டிற்கு வந்துவிடு; உன் எண்ணத்தை அப்போது நிறைவேற்றுகிறேன்" என்றாள். தெய்வ வசத்தால் குமாரசசிவன் அதற்கிணங்கி அவளை அனுப்பிவிட்டான்.

பிறகு உபகோசை கொஞ்சதூரம் சென்றவுடன் இராஜபுரோகிதர் அவளைக் கண்டு பலாத்காரம் செய்ய, உபகோசை அவரை உற்சவத்தன்று இரவு இரண்டாவது யாமத்திற் தன் வீடு வரும்படி சங்கேதம் செய்து அவரிடமிருந்து தப்பிச் சென்றாள்

பிறகு கொஞ்சதூரம் சென்றதும் உபகோசையை சேனுபதிகண்டு பலாத்கரிக்க, அவள் அவனை அதேஇரவில் மூன்றாவது யாமத்திற் தன் வீடுவரும்படி சொல்லி, அவனும் தெய்வ வசத்தால் அதற்கிசையவே அதிக ஆச்சரியத்துடனும் பயத்துடனும் வீடுவந்து சேர்ந்தாள்.

வீட்டிற்கு வந்ததும் தன் பணிவிடைப் பெண்களிற் சிலரையழைத்து, "கணவன் யாத்திரை சென்றிருக்கும் போது குலஸ்திரீகள் மரணமடைவதே சிலாக்கியம். அவள் அழகைக் கண்டு சந்தோஷிக்கும் துஷ்டர்களுடைய கண்களில் விழப் பாத்திரமாக விருப்பது சிலாக்கியமாகாது." என்று இங்ஙனம் கூறி என்னை நினைந்து துக்கமடைந்து சரீரம் நொந்து ஆகாரமில்லாமலே அன்றிரவைக் கழித்தாள்.

காலையில் எழுந்து அந்தணர்களைப் பூஜிக்கக் கொஞ்சம் பொருள் வாங்கிவர ஹிரண்யகுப்தன் என்னும் வியாபாரியிடம் தன் சேடியருள் ஒருத்தியையனுப்பினாள். ஹிரண்யகுப்தன் இரகசிய

மாக வந்து "ஏ பெண்ணே! என்னை நீயடைந்தால் உன் கணவன் என்னிடம் கொடுத்த பொருளைக் கொடுக்கிறேன்" என்றான். உபகோசை அதைக் கேட்டதும "ஆ தெய்வமே! இப்படியா என் கதியாக வேண்டும்" என நினைத்து, பின் தன் கணவன் யாதொரு சாட்சியுமின்றி வியாபாரியிடம் பொருள் கொடுத்திருக்கிறானென்பதையும் தெரிந்து கொண்டு விசனமும் கோபமுமடைந்து முந்தி மூவருக்கு விடையளித்தது போலவே இவனையும் அன்றிரவு நான்காம் யாமத்தில் தன் வீட்டுக்குவரும்படி கேட்டுக் கொண்டாள். அந்த வியாபாரி அதற்கிணங்கிச் சென்றனன்.

பிறகு அந்த உபகோசை தன் பணிவிடைக்காரிகளைக்கொண்டு கஸ்தூரி முதலியவைகளுடன் கூடியதும் எண்ணெய் கலந்ததுமான மையை மிகுதியாக ஓர் குடத்தில் தயார் பண்ணினாள். அந்த மையில் நான்கு கோவணத்துணிகளைத் தோய்த்துத் தயார் செய்து வைத்துக்கொண்டாள். பெரிதும் வெளிப்பக்கத்தில் தாளுள்ளதுமாகிய ஓர் பெட்டியையும் தயார்செய்தாள்.

பிறகு வசந்தோற்சவத்தினத்தன் றிரவுமுதல் யாமத்தில் குமாரசிவன் சிறந்த வஸ்திரங்களை யுடுத்துக்கொண்டு உபகோசையின் வீட்டுக்குள் ஒருவருக்குந் தெரியாமல் பிரவேசித்தான். அப்போது, உபகோசை, "ஓ குமாரசிவ! நீங்கள் ஸ்நானம் செய்யாவிடில் தங்களை நான் தொடமாட்டேன். ஆகையால் சீக்கிரமாக அதோ அந்த அறைசென்று ஸ்நானஞ்செய்யுங்க"ளென்று ஓர் அறையைக்காட்டினாள். மூடனாகிய குமாரசிவன், அப்படியே யென்று ஒப்புக்கொண்டான். உடனே உபகோசையின் பணிவிடைப் பெண்கள், அந்தக் குமாரசிவனை இருள் சூழ்ந்ததும் பத்திரமானதுமான அந்த அறைக்கு அழைத்துச் சென்றார்கள். அங்கே, அந்தப்பணிவிடைப் பெண்கள், குமாரசிவனுடைய வஸ்திரங்களைக் களைந்து ஓரிடத்தில் வைத்துவிட்டு அவனுக்கு ஓர் கௌபீனம் கொடுத்து அணிந்துகொள்ளும்படி செய்து அவனுடைய தலை முதல் கால் வரையில் ஏற்கனவே தயாரித்து வந்திருந்த எண்ணெய் கலந்த மையைத் தேய்ப்பதுபோல் பூசினார்கள். அவனுடைய சரீரத்தையும் நன்றாய்ப் பிடித்துக்கொண்டிருந்தார்கள்.

இவன் கதி யிப்படியிருக்கையில் இரண்டாவது யாமத்தில் அந்த இராஜ புரோகிதன் வந்தான். அவன் உள்ளே பிரவேசித்ததும் பணிவிடைப் பெண்கள், குமாரசசிவனை நோக்கி, "ஐயா! வாருசிக்கு மித்திரன் வந்திருக்கிறார். இவர் புரோகிதரன்றோ! ஆகையால் இந்தப்பெட்டியில் பிரவேசியுங்கள்" என்று முன் தயாரித்திருந்த பெட்டிக்குள் பிரவேசிக்கும்படி செய்து அப்பெட்டியை வெளிப்பக்கத்தில் பூட்டிக்கொண்டார்கள்.

பிறகு உபகோசை அந்தப் புரோகிதனையும் ஸ்நானஞ்செய்து வரவேண்டுமெனச் சொல்லி அந்த இருட்டறைக்குள் அவனை யழைத்தேகப் பணிவிடைக்காரிகளுக் குத்தாவிட்டாள். அவர்கள் அவ்வாறே அந்தப் புரோகிதனையும் அழைத்துச் சென்று அவனுடைய வஸ்திராபரணங்களையுங் களைந்து வைத்துக்கொண்டு தரித்துக்கொள்ளக் கோவணம் தந்து அவன் தேகத்தில் எண்ணெய் கலந்த அந்த மையையே தடவிப் பிடித்துக் கொண்டிருந்தார்கள்.

புரோகிதன் இக்கதியிலிருக்கையில் மூன்றாவது யாமத்தில் சேனாபதி வந்தான். அவனைப் புரோகிதனுக்குக் காட்டிப் பயமுறுத்தி "நீ யிங்கிருக்கலாகாது; இப்பெட்டிக்குள் ஒளிந்துக்கொள்" என்று கூறிப் புரோகிதனையும் குமாரசசிவனை யடைத்த பெட்டிக்குள்ளேயே விடுத்து முன்போல் வெளியே பூட்டிக்கொண்டார்கள். பிறகு இரண்யகுப்தன் வந்தான் நான்காவது யாமத்தில். அவனைக்காட்டிச் சேனாபதியைப் பயமுறுத்திச் சேனாபதியையும் பெட்டியில் பிரவேசிக்கச்செய்து தாளிட்டுக்கொண்டார்கள்.

அந்தப் பெட்டியில் குமாரசசிவன், இராஜ புரோகிதன், சேனாபதி மூவரும் அந்ததாமிஸ்ரம் என்று சொல்லும் நரகத்தில் வாசம் செய்வதற்குப் பழக்கஞ் செய்துகொள்வதை யொத்து ஒருவர் மேல் ஒருவர் படும்படியிருந்தும் சம்டாஷித்துக்கொள்ளவில்லை.

பின் உபகோசை வீட்டில் விளக்கேற்றி இரண்யகுப்தனை ஓர் அறைக்குள் அழைத்துச்சென்று அவனைப்பார்த்து, "வியாபாரியே! என் கணவன் கொடுத்திருக்கும் பொருளைக்கொடும்" என்றாள். மோசக்காரனாகிய அந்த வியாபாரி வீட்டில் யாருமில்லாமையைக் கண்டு "உபகோசே! உன்கணவன் என்னிடம் கொடுத்த பொருளை

நான் உனக்கு வாக்குக்கொடுத்தபடி கொடுத்துவிடுகிறேன்" என்ருன். பின் உபகோசை, பெட்டிக்கருகே யழைத்துச் சென்று "தேவதைகளே! இரண்யகுப்தன் கூறியதைக் கேட்டீர்களா?" என்றுரைத்துத் தீபத்தை நிறுத்தினள். உடனே பணிவிடைக்காரிகள் இரண்யகுப்தனையும் இருட்டறைக்குள் அழைத்துச் சென்று அவனுக்கும் உடுக்கக் கோவணங் கொடுத்து உடுத்தி யிருந்தவஸ்திரங்களைக் களைந்தெடுத்து வைத்துக்கொண்டு எண்ணெய் கலந்த மையைப்பூசி வெகு நேரம் வரையில் கால்கைகளைப் பிடித்துக் கொண்டிருந்தார்கள்.

பிறகு பொழுது புலருந்தருணமாயிற்று. உடனே பணிவிடைக்காரிகள், "ஓ வியாபாரியே! பொழுது விடியப்போகிறது. நீர் இனி உமது வீட்டுக்குச் செல்லலா"மென்ருர்கள். வியாபாரிசெல்ல மனம்வராமல் தியங்கிநிற்கையில் சேடிகள் கோபங்கொண்டு அவன் கழுத்தில் கைகொடுத்து வெளியே தள்ளினர்கள். வியாபாரி மை பூசின சரீரத்துடன் கோவணமுடுத்தவாறே வெளியே செல்லுகையில் அவனை அநேக நாய்கள் தொடர்ந்து குரைத்தன. வெட்கத்துக்காற்ருது தலைகுனிந்த வண்ணமே தன வீடுபோய்ச் சேர்ந்தான் வியாபாரி.

பிறகு உபகோசை காலையில் சேடிகளை அழைத்துக்கொண்டு நேற்றிரவு நடந்ததை யொருவருக்கும் அறிவிக்காமல் தன் குருமார்களுடனும் கூருமல் அரசனுகிய நந்தன் அரமனைக்குச் சென்று "மகாராஜாவே! என் கணவன் தேசாந்திரம் செல்லும்போது இவ்வூர் வியாபாரியாகிய இரண்யகுப்தனிடம் திரவியங்கொடுத்து என்னிடம் வேண்டும்போது கொடுக்கும்படி சொல்லிச் சென்ருர். அவன் அந்தப் பொருளைக் கொடுக்கமனமின்றி யபகரிக்க எண்ணுகிருன்" என்று முறையிட்டாள். உடனே நந்தனென்னும் அந்த அரசன் அதன் விவரமறியவெண்ணி இரண்யகுப்தனைச் சபைக்கு வரவழைத்து விசாரித்தான். இரண்யகுப்தன் "இந்த மாதினுடைய பொருள் என்னிடம் சிறிதும் இல்லை" எனச் சாதித்தான். அது கேட்டதும் உபகோசை "என் ஐயனே! இந்த விவகாரத்திற்குச் சாக்ஷிகளிருக்கிருர்கள். அவர்கள் வீட்டுத் தெய்வங்கள். அவர்களை யென் சாட்சியாக ஏற்படுத்தி என் வீட்டில்

ஓர் பெரிய பெட்டியில் வைத்திருக்கிறார் என் புருஷன். இந்த வியாபாரி, தானே அந்த தெய்வங்களுக்கு முன்னிலேயில் ஒப்புக் கொண்டு பொருளைவாங்கிக் கொண்டான். அந்தப் பெட்டியை இங்கு வரவழைத்து நீங்கள் விசாரிக்கலாம்" என்று தைரியமாய்க் கூறினாள்.

அரசன் இதைக் கேட்டதும் வியப்புற்று உடனே அப்பெட்டியை வரவழைக்கத் தன் அமைச்சர்களுக்குக் கட்டளையிட, அமைச்சர்கள் ஆக்ஞைப்படி உடனே தூதர்கள் பலர்சேர்ந்து அப்பெட்டியை நியாய ஸ்தலத்திற்குக் கொண்டுவந்தனர். உடனே உபகோசை அப்பெட்டியை நோக்கி, "பெட்டியிலிருக்கும் தேவதைகளே! நீங்கள் உண்மையைக் கூறவேண்டும். இந்த வியாபாரி இரண்யகுப்தன் என்ன கூறினான். அதைமட்டும் தெரிவியுங்கள். பின்னர் நமது வீட்டுக்குப் போய்விடலாம். உண்மைகூறத் தவறினால் உங்களை நான் பொசுக்கிவிடுவேன். அல்லது இச்சபையில் திறந்து விடுவேன்" என்று கூறினாள்.

இதைக்கேட்டதும் பெட்டியிலிருக்கும் மூவரும் மிகவும் அச்சமுற்று, "மகாராஜனே! இந்தவியாபாரிஇரண்யகுப்தன்பொருளைப் பெற்றுக் கொண்டது உண்மைதான்" என்றனர். உடனே அரசன் வியாபாரியைப் பார்த்து, என்ன சொல்கிறாய் என்றதும், வியாபாரி பணம் பெற்றுக்கொண்டதாக ஒப்புக் கொண்டான்.

பிறகு அரசன் உபகோசையின் சம்மதத்தின்பேரில் அப்பெட்டியைத் திறக்கச்செய்தான். அதிலிருந்து மூவரைச் சேவகர்கள் இழுத்து வெளியே கொண்டு வந்தார்கள். அவர்கள் மூவரும் ஒரே இருள் பிண்டமாய் இருந்ததுகண்ட அரசனும் அமைச்சர் முதலியவர்களும் பயந்துபின் ஊகித்துப் பார்த்தார்கள். மூவரையும் இன்னாரெனத் தெரிந்துகொண்டு நகைத்தார்கள். பிறகு உபகோசையைக் காரணம் வினவ, உபகோசை நடந்ததை நடந்தபடி கூறினாள். அந்தச் சபையோர் யாவரும் "ஆகா உத்தம குணங்களை வகித்த குலஸ்திரீகளின் சரித்திரமானது மிகவும சிலாக்கியமானது" என்று கூறி உபகோசையை வாயாரப்புகழ்ந்து மகிழ்ந்தார்கள்.

பின்னர் நந்தபூபாலன் பிறர் மனைவிகளிடம் பற்றுதல் கொண்ட அவர்களுடைய சொத்துக்களை இராஜாங்கத்திற்குச்

சொந்தமாக்கிக்கொண்டு அவர்களை அத்தேசத்திலிருந்து அப்புறப் படுத்தினன். கெட்ட நடத்தை எவனுக்குத்தான் நன்மையைக் கொடுக்கும்! பிறகு அரசன் உபகோசையின் சாமர்த்தியத்திற்கு மெச்சி அவளுக்கு வேண்டிய பொருளைக் கொடுத்து "இன்று முதல் நீ எனக்கு உடன்பிறந்த உத்தமியாகிறாய்" என்று கூறி அவளை வீட்டிற்கனுப்பினன்.

வருஷனும் உபவருஷனும் இச்செய்தியறிந்து கற்பிற் சிறந்தவளாகிய அந்த உபகோசையைப் புகழ்ந்து வாழ்த்தினார்கள். அந் நகரத் தலைவரும் "இத்தையலை இறைவன் என்றும் புரந்தருள்க" என்று வாழ்த்தினார்கள்.

இச்சமயத்தில் இமயமலையில் தவம் புரிந்து கொண்டு பார்வதீ பதியைப் பூசித்த எனக்கு உமாகாநந்தன் வரமருள பிரஸன்னமானர். பாணினியைச் சார்ந்ததான அச்சாஸ்திரத்தையே விளக்கியருளினர்.

எங்கும் நிறைந்த இறைவனாகிய சிவபெருமானது விருப்பத்தின்படி அவர்செய்த அனுக்கிரகத்தால் நான் அந்தப்பாணினி செய்த வியாகரணத்தைப் பூர்த்தி செய்தேன். பிறகு நான் என் வீடுவந்து சேர்ந்தேன். நடந்தவருத்தம் எனக்குச் சிறிதும் தோன்றவில்லை. சந்திரகலையைச் சிரசில் தரித்த சாம்பசிவனுடைய அனுக்கிரகமாகிய அமுதம் நிறைந்தவனானேன். பிறகு எனது அன்னைக்கும் குமாரனுக்கும் வந்தனம் செய்தேன்.

பிறகு இங்கு நடந்தவிஷயத்தைப் பற்றி உபகோசை கூறக் கேட்டு ஆச்சரியமும் ஆனந்தமும் அடைந்தேன். அதன்பின்பு வருஷன் என்முகமாகப் புதிய வியாகரணத்தைக் கேட்பதற்கு விரும்பினர். பிறகு சுவாமியாகிய குமாரனே அந்த வருஷனுக்கு வியாகரணத்தை விளக்கி அருளினர்.

அப்பால் வியாடியும் இந்திரதத்தனும் குருவாகிய வருஷனிடம் தாங்கள் விரும்பும் தக்ஷிணை எவ்வளவு என்று கேட்டார்கள். குருவாகிய வருஷன் தனக்கு ஒரு கோடி சொர்ணம் தக்ஷிணையாக வேண்டுமென்றார்.

வியாடியும் இந்திரதத்தனும் அவ்விதமே என்று ஒப்புக் கொண்டு என்னிடம் சொன்னார்கள். பிறகு "ஓ நண்ப! அரசனாகிய நந்தனிடம் செல்வோம்; குரு தக்ஷிணைக்குப் பொருளை யாசிப்போம் மற்ற விடங்களுக்குச் சென்றால் நமக்குக் கோடி சொர்ணம் கிடைக்காது. இந்த நந்த மகாராஜன் 99 கோடிக்கு அதிபன். முன் அவ்வரசன் உபகோசையைப் பார்த்து "உபகோசே! நீஎனக்குத் தருமமாகச் சகோதரி ஆகிறாய்" என்று சொல்லியிருக்கிறான். ஆகையால் அந்த நந்தன் உனக்கு மைத்துனன். உன்னுடைய குணங்களால் அவ்வளவு பொருளும் கிடைக்கும் என்று சொன்னார்கள்.

பிறகு நாங்கள் மூவரும் அயோத்தியிலிருக்கும் நந்தபூபதியிடம் சென்றோம். நாங்கள் அவ்வூர் சென்றதும் அந்த நந்த பூபாலன் மரணமடைந்தான். அதனால் நாங்கள் மிகவும் வருத்தமடைந்தோம். இராஜ்யமும் சொல்லற்கரிய வருத்தத்தில் மூழ்கியது. அப்பொழுது எங்களில் ஒருவனும் யோக கீர்த்திபெற்றவனும் ஆகிய இந்திரதத்தன் எங்களைப் பார்த்து "நண்பர்களே! நான் இந்த நந்தனுடைய சரீரத்திற்குள் பிரவேசித்து நந்தனாகிறேன். வாருசி என்னிடம் யாசகத்துக்கு வரட்டும். நான் அவனுக்கு சொர்ணத்தைக் கொடுக்கிறேன். நான் திரும்பிவரும் வரையில் வியாடி என் சரீரத்தைக் காக்கட்டும்" எனக் கூறி உடனே நந்தனுடைய சரீரத்திற் பிரவேசித்தான். அரசன் பிழைத்தானென்பதை அந்நகரம் கேட்டு மகிழ்ந்து மகோற்சவம் கொண்டாடிற்று.

வியாடியானவன் இந்திரதத்தனுடைய தேகத்தைக் காப்பாற்றுவதற்காகச் சூன்யமான ஒரு தேவாலயத்தில் நுழைந்தான். அப்பொழுது நான் அரசனிடம் சென்று அரசனுக்கும் மங்களம் கூறினேன். குருதக்ஷிணைக்காகச் சொர்ணம் வேண்டுமென்று யாசித்தேன்; நான் யாசித்ததும் அந்த யோக நந்தன் அமைச்சனை நோக்கி "ஏ சகடால! இவ்வந்தணனுக்குக் கோடி சுவர்ணங்களைக் கொடு" என்று ஆக்ஞாபித்தான்.

அந்தச் சகடாலன் என்றமந்திரி 'மரணமடைந்த அரசன் உடனே பிழைத்ததையும் அதே கணத்தில் யாசகன் வந்ததையும் கவனித்து உண்மையை அறிந்து கொண்டான். புத்திமான்களுக்கு அறிதற்கரிது எதுவாகும்! அரசன் உத்தரவைக் கேட்ட சகடா

லன் "தேவ! ஆக்ஞைப்படியே செய்கிறேன்" என்று சொல்லி, நந்தனுடைய குமாரனோ குழந்தை; இராஜ்யமோ அனேக சத்ருக்களுக்கு இடையில் இருக்கிறது; இதைக் காப்பாற்றவேண்டும் என்று யோசனை செய்து அச்சமயத்தில் அவ்வூரிலுள்ள சவங்களைத் தேடி வரும்படி தூதர்களுக்குக் கட்டளையிட்டு அவைகளைத் தகனம் செய்யும்படி ஆக்ஞாபித்தான். அப்படியே சாரர்கள் நெடுகத்தேடிச் செல்லுகையில் தேவாலயத்தின் மத்தியில் இந்திரதத்தனுடைய சரீரம் இருக்கக் கண்டு அதற்குக் காவலாய் இருந்த வியாடியை வெரட்டி விட்டு அச்சரீரத்தைத் தகனம் செய்து விட்டார்கள்.

இச்சமயத்தில் யோகநந்தன், "சகடால! எனது கட்டளைப்படி கோடி சொர்ணங்களைக் கொடுத்தாய்விட்டதா"? என்று துரிதப்படுத்தினன். அமைச்சன், "மகாராஜாவே! தாங்கள் உயிர்பெற்றெழுந்ததைக் கண்டு வியப்புற்று அந்த உற்சவத்தில் பரிஜனங்கள் யாவரும் ஈடுபட்டு நிற்கிறார்கள். ஆகையால் இந்த பிராமணோத்தமர் ஓர் கணமிருக்கட்டும்; நான் தங்கள் கட்டளையை நிறைவேற்றுகிறேன்." என்றான்.

இங்ஙன மிருக்கையில் வியாடி என்னும் அந்தணன் ஓடோடியும் வந்து, யோகநந்தனுடைய முன்னேநின்று "ஆ! என் ஐயனே! யோகாப்பியாசஞ் செய்துகொண்டிருந்த ஓர் அந்தணன் ஜீவித்திருக்கும்போதே அவனை இறந்தவனென நினைத்து அவனது சரீரத்தை அனாதைப் பிரேதமாகக் கொண்டு உமதுற்சவத்தில் தகனம் செய்து விட்டார்கள் தூதர்கள். இந்தக் கொடுமை தகுமா?" என்று முறையிட்டான். இதைக்கேட்டதும் யோகநந்தன் இருதயத்தில் பெரியவருத்தங் குடிபுகுந்தமையால் பெருஞ்சங்கடத்திற்குள்ளானன்.

மகாபுத்திசாலி யாகிய சகடாலன், இந்திரதத்தனுடைய சரீரம் தகனமாய்விட்ட நிச்சயமறிந்து "இனியிவன் அரசனது சரீரத்திலேயே யிருப்பான்; யாருன்" என்று தீர்மானித்து எனக்குக் கோடி சொர்ணங்களைக் கொடுத்தான்.

பிறகு யோகநந்தன் தனியே வியாடியை யழைத்துச்சென்று ஓ வியாடியே! நான் பிராமணனேயாயினும் சூத்திரனாய்விட்

டேன்'' என்று விசனித்தான். வியாடி யோகநந்தனைச் சமாதனம் செய்து, காலத்துக்குத் தக்கபடியே பேசுகிறான் மந்திரி; உன்னைப்பற்றித் தெரிந்து கொண்டிருக்கிறான். ஆகையால் அவனைப் பற்றியோசிக்கவேண்டும். இவன் சிறந்த மந்திரி. கூடிய சீக்கிரத்தில் உன்னை நாசஞ்செய்து விடுவான். சத்திய நந்தன் குமாரனாகிய சந்திரகுப்தனைக்கு முடி சூட்டிவைப்பான். ஆகையால் வாருசியை முக்கிய மந்திரியாக ஏற்படுத்திக்கொள். வாருசி விசேஷமான மகிமையுடையவர். அவர் துணையிருந்தால் உனக்கு என்றுங் குறைவில்லை. இராஜ்யம் நிலை நிற்கும் என்றுரைத்து உடனே அவ்விடம் விட்டுப் புறப்பட்டு குருதக்ஷிணை கொடுக்கச் சென்றான். அப்பொழுது அந்தயோகநந்தன் என்னை யழைத்து மந்திரி உத்தியோகம் கொடுத்தான்.

நான் மந்திரி உத்தியோகத்தில் அமர்ந்ததும் யோகநந்தனைப் பார்த்து, ''உன்னுடைய பிராமண்யமானது குறைந்து போனதொன்றிருக்க,இந்தச் சகடாலன் நமதுகாலடியிலிருக்கும் வரையில் இராஜ்யம் நிலைப்பதும் அரிதாய்விடும் என்றெண்ணுகிறேன். ஆகையால் இவனை நாசம் செய்வதற்கு யுக்தியைத் தேடவேண்டும்.'' என்று நான் மந்திராலோசனை சபையில் தெரிவித்தேன். பிறகு யோகநந்தன் என் யோசனைக் கிணங்கிச் சகடாலன் மீது உயிரோடிருந்த யோகியை இவன் பொசுக்கினனென்கிற குற்றத்தைச்சுமத்தி அவனையும் அவன் பிள்ளைகள் நூறு பேர்களையும் ஓர் பெரியபாழுங் கிணற்றில் தள்ளும்படி செய்தான். அந்தச் சகடாலனுக்கும் அவன் பிள்ளைகள் நூறு பேர்களுக்கும் நாடோறும் ஒரு கரண்டி வருத்தஅரிசிமாவும் ஒரு கரண்டி நீரும் ஆகாரமாகக் கொடுக்கச்செய்தான்.

அந்த ஆகாரத்தை யடைந்த சகடாலன் தன்பிள்ளைகளைப் பார்த்து இந்த வருத்தரிசிமாவையும் நீரையும் ஒருவர் புசித்துவரினும் ஜீவித்தலரிது; அங்ஙனமிருக்க, நாமெல்லாரும் இந்தச் சொற்ப ஆகாரத்தில் ஜீவிப்பதெப்படி? ஆகையால் எவன் யோகநந்தனுக்குப் பதில் தீங்குசெய்ய வல்லவனோ அவனே இந்த ஆகாரத்தைப் புசிக்கவேண்டும், என்றான். பிள்ளைகள், ''பிதாவே! அரசனுக்குப்பதில் தீங்குசெய்பவல்லவர்கள் தாங்கள்தான். ஆகையால்

இந்த ஆகாரத்தை நீங்களே புசியுங்கள்" என்று கூறினார்கள். வீரர்கள் தங்களுக்குத் தீங்கிழைத்தவர்களுக்குப் பதில் தீங்குசெய்வதையே தங்கள் பிராணனிலும் பெரியதாகக் கருதுவார்கள்.

பிறகு அந்தச்சகடாலன் அவ்விதமே நாடோறும் அந்த அற்ப ஆகாரத்தையும் நீரையும் அருந்தி ஜீவித்துவந்தான். பகைவர்களை வெல்ல விருப்பங்கொண்டவர்கள் காரியத்தில் கடுமையாகவே யிருப்பார்கள். கஷ்டம்! தன் பிள்ளைகள் பசிப்பிணியால் வருந்தி உயிரை விடும்போது அடைந்த உபத்திரவத்தைப் பார்த்துச் சகித்துக்கொண்டிருந்தான் சகடாலன்.

யோகநந்தனோ தன் இராஜ்ய விவகாரத்தைக் கவனிப்பதில் நினைவைச்செலுத்தி வந்தான். வியாடியும் சில காலத்திற்கெல்லாம் குருதக்ஷிணை கொடுத்துத் திரும்பிவந்து யோகநந்தனைக் கண்டு "நண்ப! நீ நீடூழிகாலம் இராஜ்யத்திருந்து சுகமனுபவித்துவா; நான் தவம் செய்யப்போகிறேன். உன்னிடம் தெரிவித்துவிட்டுப்போகவந்தேன்" என்றான்.

இதைச் செவியுற்றதும யோகநந்தன் துக்கங்கொண்டு "நண்ப! நீ என்னைவிட்டுச் செல்லக்கூடாது. என்னுடனிருந்துவரவேண்டு" மென்று வேண்டினான். வியாடி "நண்ப! இச்சரீரம் நிலையற்றது. ஓர் கணத்தில் யழியக்கூடியது. அறிவுடையவன் எவன் இந்த அற்பசுகத்தை விரும்புவான்? கானலில் தோன்றும காநதியானதுபிராஞ்ஞனை மோகப்படுத்துமோ?" என்றுகூறி அச்சமயமே தவம் செய்யவனம சென்றனன்.

பிறகு யோகநந்தன் தன்னுடைய அரசனாகிய சத்தியநந்தன் பரிபாலனம செய்த பாடலிகம என்ற நகரத்தை யடைந்து என்னுடனும் சைன்னியங்களுடனுமிருந்து சுகமாய் வாழ்ந்துவந்தான்.

ஓ காணபூதியே! நானும் அங்கு உபகோசையால் உபசரிக்கப்பட்டு அமைச்சனாக இருந்து அன்னையுடனும் ஆசிரியர்களுடனு மிருந்த பொருளைச் சம்பாதித்து வெகுகாலம் வசித்து வந்தேன். நான செய்யும தவத்திற்குக் கங்காதேவி பிரஸன்னமாகி சொர்ணங்களை யளித்தாள். ஸரஸ்வதி பிரத்தியக்ஷமாகி வேண்டிய காரியங்களுக்குக் கட்டளையிட்டாள்.

# ஐந்தாவது தரங்கம்.

வரருசி இங்ஙனம் கூறியபின், மறுபடியும் சொல்கிறான்:—

பிறகு யோகநந்தன் கொஞ்சகாலத்தில் காமம் முதலியவைகளின் சுவாதீனமாகி கஜேந்திரனை யொத்து மதங்கொண்டு எதையும் விரும்பாமலிருந்தான். அகாரணமாகப் பொருள் கிடைக்குமாயின் எவன் தான் மோகமடையான்?

அரசன் காமத்திற்குள்ளாகி எதையுங் கவனியாதிருப்பதனால் நான் இராஜ்யகாரியங்களைக் கவனிக்க நேர்ந்தது. அதனால் என்னுடைய தருமத்திற்குக் குறைவுண்டாயிற்று. ஆகையால், நான் அரசனிடம் விவரம் தெரிவித்துச் "சகடாலனைச் சகாயத்திற்கு வைத்துக்கொள்ள விரும்புகிறேன். அவன் நானிருக்கும்போது தங்களை என்ன செய்யப் போகிறான். ஒன்றும் செய்யான். அவனைக் கரையேற்ற உத்தரவு தரவேண்டும்" என்று கேட்டுக்கொண்டேன். அரசன் என் பேச்சிற்கிணங்கி உத்தரவு தந்தான். உடனே சகடாலனைக் கிணற்றிலிருந்து கரையேற்றும்படி செய்தேன். சகடாலன் கரையேறியதும், "பிராமணர்கள் மிதமாயிருப்பவர்கள். எவ்விதத்திலும் ஜயிக்க முடியாதவர்கள். அன்றி வரருசி அருகேயிருக்கிறான். ஆகையால் காலத்தை யெதிர்பார்த்து நீர்வஞ்சியின் விருத்தியை ஆசரித்திருக்கிறேன்" என்று யோசித்துக் கொண்டு மீண்டும் அமைச்சத் தொழிலை யேற்றுக்கொண்டு இராஜகாரியங்களை நடத்திவந்தான்.

பிறகு ஒரு சமயம் யோகநந்தன் நகரத்திற்கு வெளியே புறப்பட்டுப் போனான். காங்கா நதியின் நடுவே ஐந்து விரல்களும் சேர்ந்த கரத்தைப் பார்த்தான். அதைக் கண்டதும் என்னை யழைத்து என்ன இது என்று விசாரித்தான். நான் அந்தக் கையிருக்கும் திசையில் எனது இரண்டு விரலைக் காட்டினேன். உடனே அக்கை மறைந்தது. அது கண்டு அரசன் அதிக ஆச்சரியம்

டைந்து மறுபடியும் என்னை நோக்கி இது என்ன வென்று கேட்டான். நான் "அரசனே! இப்போது நமக்கு முன் தோன்றிய கை, ஐந்து விரல்களைச் சேர்த்துக் காட்டியது உலகத்தில் ஐந்து பேர்கள் சேர்ந்தால் எந்தக் காரியம் சித்தியாமற் போகும் என்பதைக் குறிப்பதாகும். நான் பிறகு இரண்டு விரல்களைக் காட்டியது இருவர் ஒரு மனப்பட்டுச் சேர்ந்திருந்தால் எது தான் முடித்தற்கரிதாகும் என்பதைக் குறித்தற்கேயாம்" என்று கூறினேன். இந்த இரகஸ்யமறிந்ததும் அரசன் மிகவும் மகிழ்ச்சி யடைந்தான். என் புத்தியையும் அறிவையும் கவனித்த சகடாலன், "இவனை வெல்லுவதரிது" என நினைத்துத் துக்கித்தான்.

இதன் பிறகு ஒரு சமயம் ஓர் அந்தணன் வீதி வழியே போய்க்கொண்டிருந்தான். அவனைப் பலகணி வழியே மேன் மாடியிலிருந்த அரசன் மனைவி பார்த்தாள். அவளைப் பிராமணன் பார்த்தான். இதை யோகநந்தன் பார்த்தான். பார்த்த அக் கணத்திலேயே மிகவும் கோபங் கொண்டு அந்த பிராமணனைக் கொலைசெய்யும்படி உத்தரவிட்டான். அசூயை யென்பது விவேகத்திற்கு முற்றும் பகையானதல்லவா? கொலையாளிகள் அவ்வந்தணனைக் கொலை செய்யக் கொலைக்களத்திற்குக் கொண்டு போனார்கள். அப்போது தெருவில் இறந்து கிடந்த ஓர் மீன் சிரித்தது. அதைக் கவனித்த அரசன், கொலையாளிகளை யழைத்து அந்தணனைக் கொலை செய்ய வேண்டாமெனத் தடுத்தான். பிறகு மீன் சிரித்ததற்குக் காரணங் கேட்டான். நான், "இந்த விஷயமாய்க் கவனித்துச் சொல்ல வேண்டும்; பிறகாகட்டும்" என்று சொல்லி அரசனை விட்டு வெளியே வந்து ஓரிடத்திருந்து ஸரஸ்வதியை நினைத்தேன். தேவி சிந்தித்ததும் பிரசன்னமாய் "வரருசியே! நீ இந்தப் பனைமரத்தின் மீது இரவில் யாருமறியாமல் வந்திரு; மீன் சிரித்ததற்குக் காரணம் தெரிந்து கொள்வாய்" என்று கட்டளையிட்டனள்.

தேவியின் ஆக்ஞைப்படியே இரவில் பனைமரத்தின்மீதிருந்தேன். அங்கே சில சிறுவர்களுடன் பயங்கரமான மானிட உருவங்கொண்ட ஓர் இராக்கதமாதைக் கண்டேன். அந்தச் சிறுவர்கள், தாயைப் பார்த்து, ஆகாரம் வேண்டுமென்று கேட்டார்கள். தாயா

ராகிய அந்த அரக்கி "குழந்தைகளே! கொஞ்சம் பொருத்துக் கொள்ளுங்கள். காலையில் பிராமணனுடைய மாமிசத்தைக் கொடுக்கின்றேன். இப்போது அந்த அந்தணனைக் கொலை செய்யவில்லை" என்றாள். சிறுவர்கள், "ஏன் இப்போது பிராமணனைக் கொலை செய்யவில்லை" என்று தாயாரைப் பார்த்து கேட்டார்கள். அதற்கு அரக்கி "அந்தப் பிராமணனைப்பார்த்து இறந்த மீனொன்று சிரித்தது; அதனால் கொலை செய்யப்படவில்லை." என்றுகூற, சிறுவர்கள், "மீன் ஏன் அந்தணனைப் பார்த்துச் சிரித்தது" என்று கேட்டார்கள். இராக்கத மாது "குழந்தைகளே! அரசன் அரண்மனையிலுள்ள இராஜஸ்திரீகள் யாவரும் தோஷமுள்ளவர்கள் தான். அங்கே அந்தப்புரமெங்கும் புருடர்கள் ஸ்திரீ வேடத்துடனிருக்கிறார்கள். அங்ஙனமிருக்கக் குற்றமற்றவனாகிய அந்தணனைக் கொலை செய்கிறானேயென்று சிரித்தது மீன். அரசர்களுடைய அவிவேகத்தை நினைத்து ஹாஸ்யம் செய்வனவும் எல்லாவற்றுள்ளும் சஞ்சரிப்பனவுமாகிய பூதங்களின் செய்கைகள் இவ்விதமிருக்கின்றன" என்று கூறினாள்.

இங்ஙனம் இராக்கதமாது கூறியதைக் கேட்டு உடனே அந்த இடத்தை விட்டு வீடு திரும்பி மறுநாட்காலையில் மீன் சிரித்ததின் காரணத்தை அரசனுக்குத் தெரிவித்தேன். அரசன் அதைக் கேட்டதும் ஆச்சரியமடைந்து உடனே அந்தப்புரம் போய்ப் பார்த்து அங்கே ஸ்திரீ வேடத்துடனிருக்கும் புருடர்களைக் கண்டு நான் சொன்ன துண்மையெனவறிந்து எனக்கு வெகுமான மளித்தான். பிராம்மணனையும் கொலை செய்யாமல் விடுதலை செய்தான். இப்படிப்பட்ட இடையூறுகள் அரசனுக்கு ஏற்பட்டதற்கு நான் மிகவும் வருத்தமடைந்தேன்.

பின் ஒரு சமயம் ஓர் சித்திரக்காரன் வந்தான். அவன் வஸ்திரத்தில் பட்டமகிஷியையும் யோகநந்தனையு மெழுதினான். அந்தச் சித்திரம் உயிருள்ளது போலவே காணப்பட்டது. அரசன் அதைக் கண்டு மகிழ்ந்து சித்திரக்காரனுக்குத் தக்க வெகுமதியளித்து அனுப்பினான். அந்தச் சித்திரம் எழுதப்பட்ட வஸ்திரத்தை அரண்மனையில் சுவரில் தொங்கவிட்டிருந்தான் அரசன். நான் ஒரு சமயம் தற்செயலாய் அங்கே சென்று சித்திரத்தைக் கண்

டேன். அதில் பட்டமகிஷியின் உருவம் பரிபூர்ணமாயமைந்திருப்பது பார்த்து வியப்புற்றேன். உடனே என்னுடைய அறிவின் நுட்பத்தால் ஸ்திரீகளின் உத்தம இலக்ஷணம் இவ்விதமிருக்க வேண்டுமென்று கருதி அரைநூன்மாலை அணிந்து கொள்ளுமிடத்தில் ஓர் திலகம் வைத்துப் பார்த்துவிட்டுச் சென்றேன்.

பிறகு ஒரு சமயம் யோகநந்தன் அந்த இடத்திற்கு வந்தான். அந்தச் சித்திரத்தில் இதற்கு முன்னில்லாத ஓர் திலகம் இருக்கக் கண்டான். அவன் வியப்புற்று அங்கு அப்பொழுதிருந்தவர்களை நோக்கி "இந்தத்திலகத்தை இச்சித்திரத்தில் யாரிட்டது" என்று கேட்டான். அவர்கள், "மகாராஜாவே! திலகமிட்டவர் மந்திரியாகிய வாருசி" யெனத் தெரிவித்தார்கள். அரசன் "தேவியின் இரகசியப் பிரதேசத்திலிருக்கும் இந்த அடையாளத்தை யென்னையன்றி வேறெவரும் அறியார்களே; அப்படியிருக்க வாருசி யதை எப்படி யறிந்தான். மேலும் நமது அந்தப்புரத்தில் நடப்பவைகளை இவன் வஞ்சகனாகவிருந்து தெரிந்து கொண்டிருக்கிறான். அதனால் தான் இவன் அந்தப்புரத்திலிருக்கும் ஸ்திரீ ரூபங்கொண்ட புருஷர்களைக் கண்டு பிடித்திருக்கிறான்". என்று கருதி மிகக் கோபங்கொண்டான். ஆகா! இரகசியமான விஷயங்களும் மூடர்களிடம் இவ்விதமாகின்றன.

பிறகு யோகநந்தன் சகடாலனை வரவழைத்து "சகடால! வாருசியானவன் தேவியைக் கெடுத்துவிட்டதால் அவனைக் கொலை செய்து விடு" என்றான். சகடாலன் "மகாராஜாவே! உத்தரவுப்படி செய்கிறேன்" என்று சொல்லி வெளியே சென்று ஓரிடத்திருந்து, "வாருசியைக் கொல்வதற்கெனக்குச் சக்தியில்லை. அவன் மகாபுத்திமான்; என்னை ஆபத்தினின்றும் கரையேற்றினவன். பிராமணனாகவு மிருக்கிறான். ஆகையால் அவனை இரக்ஷிப்பதே தகிலாக்கியம்; நான் காப்பாற்றுகிறேன் அவனை" என்று யோசனை செய்து தீர்மானித்துக் கொண்டு என்னிடம் வந்து, அரசனுக்குக் கோபம்வந்ததன் காரணத்தையும் அதற்காக என்னைக் கொலைசெய்யக் கட்டளையிட்டிருப்பதையுங் கூறி "வாருசியே! நான் தங்களைக் கொலை செய்வதற்குப் பதிலாக வேறு யாரையேனும் கொலை செய்துவிட்டு அரசனது கட்டளையை நிறைவேற்றியதாகச் சொல்லி விடுகிறேன்

நீர் என் கிருகத்தில் அரசனுக்குத் தெரியாமலிருந்துவாரும்" என்று சகடாலன் தெரிவித்தனன். நான் சகடாலன் சொற்படியே அவன் வீட்டில் மறைந்திருந்தேன். சகடாலன் என்னைக் கொல்வதற்குப் பதிலாக வேறொருவனைக் கொலை செய்து அரசனுக்கு என்னைக் கொன்றதாகத் தெரிவித்து விட்டான்.

இங்ஙனம் நீதிதவறாமல் நடந்த மந்திரி சகடாலனை நான் பார்த்து "சகடால! நீயே மந்திரிகளுள் உத்தமன். ஏனெனில் என்னை நீ கொல்ல மனங் கொள்ளவில்லையல்லவா? அன்றியும், என்னை நீயும், மற்றெவரும் கொல்லமுடியாது. எனக்கு இராக்கதனொருவன் நண்பனாகவிருக்கிறான். அவ்வரக்கன் நான் எந்த நேரத்தில் நினைத்தாலும் வந்தெதிர் நிற்பான். நான் உத்தரவிடுவேனாகில் பிரபஞ்ச முழுதையும் விழுங்கிவிடுவான். இப்போது அரசனாயிருப்பவன் இந்திரதத்தன் என்னும் பெயர் கொண்ட ஓர் பிராமணன். எனக்குப் பரமமித்திரன். ஆகையால் அந்த "அரக்கனை யேவி அரசனை வதஞ்செய்ய எனக்கு இஷ்டமில்லை" என்று கூறினேன்.

இதைக்கேட்டதும் சகடாலன் என்ற அந்த மந்திரி, அந்த அரக்கனைஎனக்குக் காட்டவேண்டுமென்றுதெரிவித்தான். உடனே அரக்கனைமனதில் நினைத்தேன். அவன் நினைத்த அக்கணமே தோன்றினான். அவனைச் சகடாலனுக்குக் காட்டினேன். அந்தச் சகடாலன் அரக்கனைக் கண்டவுடன் நடுக்கங்கொண்டான். பரமாச்சரியமடைந்தான். பின்னர் இராக்கதன் மறைந்து போனான். சகடாலன் உடனே தங்களுக்கு இராக்கதன் எப்படி நண்பனானான்" எனக் கேட்டான். நான், "சகடால! முன் நகர்சோதனைக்காக ஏற்பட்ட எவனும் அந்தந்த இரவில் இறந்து போய்க் கொண்டேயிருந்தான். அது கண்டு வியப்புற்ற யோகநந்தன் நகர்சோதனைக்காக என்னை யேற்படுத்தினான். அப்பொழுது இரவில் நான் ஓர் அரக்கனைக்கண்டேன். அந்த அரக்கன் என்னைப் பார்த்து இந்நகரத்தில் அழகுவாய்ந்த ஸ்திரீ யார் என்று கேட்டான். உடனே நான் நகைத்து எவள் எவன் மனதிற்குப் பிடித்தவளோ அவளே அவனுக்கு அழகு" என்றேன். அதைக்கேட்ட அரக்கன், "உன்னால் தான் நான் ஜயிக்கப்பட்டேன். நீ நான் கேட்ட கேள்விக்குச் சரி

யான விடை பகர்ந்தமையால் நான் உன்னைக் கொல்லாமல் விடுகி றேன். நான் மிகவும் மகிழ்ச்சியடைந்தேன். நீ எனக்கு இனி பரம மித்திரன். நீ என்னை நினைத்தவுடன் உன்னிடம் நான் வருகிறேன்" என்றுகூறி மறைந்துபோனான். நானும் இராக்கதனிடம் விடைபெற்றுத்திரும்பினேன். அன்று முதல் இராக்கதன் எனக்கு உதவிபுரிந்துவரும் நண்பனாகவிருந்துவருகிறான்" என்று கூறிப் பிறகு சகடாலனுக்கு பிரத்தியக்ஷமாகக் கங்காதேவியையும் காட்டினேன். அதற்குப் பிறகு சகடாலன் என்னிடம் மிகவும் சந்தோஷமடைந்து எனக்குச் சகாயம் செய்பவனாகவே யிருந்தான்.

பிறகு ஒரு சமயம் நான் மறைந்திருந்து காலங்கழிக்க நேர்ந்ததைக் குறித்து மிகவும் வருத்தமுற்றேன். அதுகண்ட சகடாலன், என்னை நோக்கி, "தாங்கள் சகலமும் அறிந்தவர்கள்; அப்படியிருந்தும் ஏன்மனதிற்குக் கிலேசத்தைக் கொடுக்கவேண்டும். அரசர்களுடைய அறிவின் வியாபாரமானது விசாரியாமலே காரியங்களைச் செய்வதில் விருப்பமுடைய தென்பதைத் தாங்கள் அறியீர்களோ? தங்களுக்கு சீக்கிரம் நன்மையுண்டாகும். இது சம்பந்தமான கதையொன்று கேளுங்கள்" என்று கூறலானான்.

முன்காலத்தில் ஆதித்தியவர்மன் என்னும் பெயருடைய ஓர் அரசனிருந்தான். அவ்வரசனுக்குச் சிவவர்மன் என்னுமோர் அமைச்சனிருந்தான். அவன் மகா புத்திசாலி. அந்த ஆதித்தியவர்மனுடைய முக்கிய மனைவியருள் ஒருத்தி கர்ப்பவதியானாள். இதையறிந்த அரசன் அரமனைக் காவலாளிகளை யழைத்து "நான் அந்தப்புரத்தில் பிரவேசித்து வருடம் இரண்டாகிறது. அங்ஙனமிருக்க என் மனைவி கர்ப்பமானதற்குக் காரணமென்ன?" வென்று கேட்டான். காவலாளிகள், "மகாராஜாவே! சமஸ்தான மந்திரி சிவவர்மனைத் தவிர வேறு எவரும் இங்கு பிரவேசிக்கவில்லை" யென அரசன், "ஓகோ! இந்தச் சிவவர்மன் தான் நமக்குத் துரோகியாய் விட்டான். அவனை இரகசியமாகக் கொல்லவேண்டும். பிரகாசமாகச் செய்வோமாயின் அபவாதம் உண்டாய்விடும்." என்று யோசித்துக்கொண்டு அதற்கோர் யுக்திசெய்து சிவவர்மனை அடுத்த தேசத்தரசனும் தனது நண்பனுமாகிய போகவர்மன் என்

பவனிடம் அனுப்பினன். பிறகு அவனைத் தொடர்ந்தாப்போல் ஓர் தூதனிடம் "என்னுடைய மந்திரியாகிய சிவவர்மனை உடனே யோசியாமல் கொலை செய்துவிட வேண்டியது" என்ற சமாசார மடங்கிய ஓர் கடிதத்தைக் கொடுத்தனுப்பினன்.

மந்திரி சிவவர்மன் சென்று ஏழுநாளான பிறகு இராஜனுடைய மனைவியாகிய அந்த கர்ப்பிணி தனக்கு அரசனால் ஏதாவது துன்பம் நேரிடுமென்று கருதிப் பயந்து அரண்மனையை விட்டு ஒருவரையு மறியாமல் ஓடினள். அப்போது காவலாளிகள் அவளை ஸ்திரீ வெடம் பூண்ட சில சோர புருஷர்களுடன் கண்டுபிடித்து அரச னுக்குத் தெரிவித்தார்கள். அச்செய்தி கேட்ட அரசன் தான் விசாரியாமல் தன் மந்திரி சிவவர்மனைக் கொலை செய்யும்படி செய்த ஆக்கினையைக் குறித்து மிகவும் வருத்தமுற்றான்.

இங்கிப்படியிருக்க, சிவவர்மன் போகவர்மனிடம் போய்ச் சேர்ந்தான். அந்தத் தூதனும் பத்திரிகையுடன் போய்ச் சேர்ந் தான். போகவர்மன் கடிதத்தைப் பார்வையிட்டு ஆச்சரியமடை ந்து சிவவர்மனையழைத்து, தனித்த ஓரிடத்தில் ஆதித்தியவர்மன் அவனைக் கொலை செய்யும்படி தனக்குக் கடிதமனுப்பி யிருப் பதைத் தெரிவித்தான்.

அதைக்கேட்டவுடன் சிவவர்மன் ஸாமந்தராஜனாகிய போக வர்மனைப் பார்த்து "ஓ அரசனே! நீர் என்னைச் சந்தேகமின்றிக் கொலை செய்யவேண்டும். இல்லாவிடில் நானே தற்கொலை செய்து கொள்ளுகிறேன்" என்றான். போகவர்மன் ஆச்சரியங்கொண்டு சிவவர்மனைப் பார்த்து, "பிராமணோத்தமரே! இது விஷயமென்ன நீர் சொல்ல வேண்டும். இல்லாவிட்டால் சாபத்தை யடைவீர்." என மந்திரியாகிய சிவவர்மன் "போகவர்மராஜனே! நான் எந்த தேசத்தில் கொலைசெய்யப் படுகிறேனோ அந்த தேசத்தில் பன்னி ரண்டு வருஷம் வரையில் மழைபெய்யாது" என்று கூறினன். போ கவர்மன் தன்மந்திரிகளை யழைத்துச் சபைகூட்டி "மந்திரிகளே! ஆதித்தியவர்மன் துஷ்டன்; நமது தேசத்தில் மழையற்றுப்போ கக் கருதி இந்த யுக்தி செய்திருக்கிறான். அங்கே அவனிடத் தில் கொலையாளிகள் இல்லையா? இந்தச் சிவவர்மனை இங்கே அனுப்பியது நல்ல கருத்துக் கொண்டல்ல. இப்போது நாம்

செய்யவேண்டியதென்ன வெனில், இந்தச் சிவவர்மன் தற்கொலைபுரிந்து கொள்ளாவண்ணம் நாம் காப்பாற்றவேண்டும்", என யோசித்து அதேக்ஷணத்தில் தக்ககாவலாளிகளோடு சிவவர்மனைத் தன் தேசத்தினின்றும் வெளிப்படுத்தினன்.

சிவவர்மன் புத்தி சாதுரியத்தால் இவ்வாறு உயிர்தப்பினன். தருமம் தலைகாக்குமல்லவா? ஆகவே அதுவும் இச்சமயம் துணைசெய்ததென்றறியுங்கள். ஏ காத்தியாயன! இவ்விதமே தங்களுக்கும் குற்றமேற்படாது. அது வரையில் தாங்கள் என் வீட்டிலேயே யிருங்கள். இந்தயோகநந்தனும் பின்னுக்கு மிகவும் வருத்தமடைவான்.

ஓ காணபூதியே! சகடாலன் என்ற மந்திரி இங்ஙனம் கூற அவனுடைய கிருகத்திலிருந்து சமயத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன்.

ஓ காணபூதியே! அந்த யோகநந்தனுடைய மகனாகிய இரண்யகுப்தன் ஒருசமயம் வேட்டையாடும் பொருட்டு காட்டுக்குச் சென்று வேட்டையாடிக்கொண்டே வெகுதூரம்சென்றுவிட்டான். வனத்தில் தனியே சென்ற அவன் பொழுது போனமையால் திரும்பிவரயோசித்து அங்கிருந்த ஓர் மரத்தில் இரவைக்கழிக்கக்கருதி அதன் மேலேறினன். அதேசமயத்தில் அம் மரத்தின்மீது சிங்கத்தால் துரத்தப்பட்ட ஓர் கரடியும் ஏறிற்று. அக்கரடியைக்கண்டதும் இராஜகுமாரனாகிய இரண்யகுப்தன் பயந்தான். அது கண்டகரடி, "அப்பா! நீ பயப்படாதே நீ எனக்கு நண்பனாகின்றாய்" என்று கூறி அவன் பயத்தைப் போக்கிற்று. இராஜகுமாரன் கரடியின வார்த்தையில் நம்பிக்கை கொண்டு பயமின்றித் தூங்கினன். கரடியோ விழித்துக் கொண்டேயிருந்தது. அப்பொழுது கரடிக்காகக் கீழே காத்துக்கொண்டிருந்த சிங்மானது "கரடியே! அங்கிருக்கும் மானிடனைக் கீழே தள்ளிவிடு. அவனை நான் புசித்துச் செல்கிறேன்" என்று சொல்லிற்று. கரடி, "ஏ பாபியே! நான் மித்திரனைக் கொலை செய்யச் சம்மதியேன்" என்று மறுத்தது. இராஜகுமாரன் விழித்துக்கொண்டான். பிறகு கரடி தூங்கிற்று. அப்பொழுதும்

சிங்கம், "மானிடனே! அக்கரடியைக் கீழே தள்ளி எனக்கு ஆகாரமாக்கு; உன்னை நான் விட்டு விடுகிறேன்" என்றது. அதைக்கேட்ட இரண்யகுப்தன் பயமடைந்து சிங்கத்திற்கு நல்லவனாகக் கருதிக் கரடியைத் தள்ளினான். கரடிவிழித்துக்கொண்டு கீழே விழாமல் தப்பிற்று. உடனே அவனை நோக்கி "மகாபாவியே! மித்திரனுக்குத் துரோகஞ்செய்த சண்டாளா! "நீ இன்று முதல் பைத்தியக்காரனாகக் கடவது" என்று சாபமிட்டது. இந்தச் சாபமானது "உனக்கு இந்த வரலாறை மற்றொருவன் அறிவுக்கும் வரையில் உன்னைப் பீடிக்கக்கடவது; பின் நீ விமோசனமடைய வேண்டியது" என்று விமோசனத்தையுங்கூறிற்று.

இரண்யகுப்தன் சாபத்தைப்பெற்றுக் கொண்டு மறுநாள் காலையில் வீட்டுக்கு வந்தான். யோகநந்தன் அவனைப்பார்த்து மிகவும் வருத்தமடைந்து "ஆகா! இச்சமயம் வரருசி இவ்விடம் இருப்பானாகில் என் மகன் பைத்தியங் கொண்டதற்குக் காரணத்தைத் தெரிவிப்பான். அவனைக்கொன்ற இந்தப்பாவியின் சாமர்த்தியத்தைச் சுடவேண்டும்." என்று கூறினான். இதைக் கேட்டுக்கொண்டிருந்த சகடாலன், "ஆச்சரியம்! இதுதான் நமக்குக்காத்தியாயனன் பிழைத்திருப்பதை வெளிப்படுத்தத் தக்கசமயம். வரருசி மானியாகையால் இவனிடம் மந்திரியாயிருக்கமாட்டான். அரசனுக்கும் என்னிடம் நம்பிக்கையுண்டாகும் என்று கருதி அரசனைப்பார்த்து, மகாராஜாவே! பயப்படவேண்டாம். வரருசி உயிருடனிருக்கிறான்" என்றான். அது கேட்ட யோகநந்தன் மனமுவந்து அவனை யழைத்துவாவென, சகடாலன் என்னை யோகநந்தனிடம் பலாத்காரமாக அழைத்துச் சென்றான். அங்கேஇராஜகுமாரன் பைத்தியங்கொண்டவனா யிருப்பதைக் கண்ட நான் அரசனைப்பார்த்து, இவன் இப்படியிருப்பதற்குக் காரணம், இவன் மித்திரத் துரோகம் செய்ததேயாம் என்று ஸரஸ்வதியின் அனுக்கிரகத்தாலறிந்து கூறினேன். உடனே இராஜகுமாரன் கரடி கூறியபடியே சாபத்தினின்று விடுபட்டு என்னை ஸ்தோத்திரம் செய்தான். அது கண்ட அரசன் வியப்புற்று நீ இதையெப்படியறிந்தாய் யென நான் "அரசனே! அறிவாளிகளின் அறி

வின் வழி இலக்ஷணத்தாலும் அனுமானத்தாலும் எல்லாவற்றையும் கவனிக்கத்தக்கது. முன் பட்டமகிஷியின் இடையிலிருந்த மருவை யெப்படியறிந்தேனோ அவ்வாறே இதையுமறிந்தேன்" என்றேன். அரசன் உடனே வெட்கமுற்று அனுதாபமடைந்தான். பிறகு அரசன் எனக்கு வெகுமான மளித்தான். அதை நான் பொருட்படுத்தாமல் வீடு வந்து சேர்ந்தேன். குற்றமற்றவனென்று பெயர்பெற்றதையே லாபமாகக் கொண்டேன். வித்துவான்களுக்கு சிலமே தனமாகிறது. என்கிருகத்தில் என்னைக் கண்டதும் யாவரும் கதறினார்கள். அதைக்கண்டு பிரமங்கொண்ட உபவருஷன் என்னைப்பார்த்து, "வரருசியே! நீ அரசனுக்கிணையினால் மரணமடைந்தாய் எனக்கேட்டு உன்மனைவி உபகோசை அக்கினிப் பிரவேசமாயினள். உன் அன்னையின் இருதயம் துக்கத்தால்வெடித்தது" என்று கூறினான். அச்செய்திகேட்டதும் சகித்தற்கரிய துக்கங்கொண்டு அதனால் பிரக்ஞையற்று காற்றிற் காற்றுத மரம் போல் தரையில் சாய்ந்துவிட்டேன். அன்புள்ள உறவினரின் விநாசத்தின் துக்கமாகிய தீயானது எவனுக்குத் தான் தாபத்தையுண்டாக்காது. உடனே வருஷன் "இந்த உலகமும் உலகத்துப் பொருளும் அநித்தியம். யாவும் ஈசனுடையமாயை; இதனை நீயறிந்தும் ஏனோமயங்குகிறாய்?" என்று கூறி எனக்குத் தைரியமுண்டாக்கினான்,

பிறகு மனதிற்கு வைராக்கிய முண்டாயிற்று. பந்தங்களனைத்தையும் ஒழித்தேன். ஒழிவையே சகாயமாகக் கொண்டேன். பின் தபோவனம் சென்று அங்கு தவம் செய்து கொண்டிருந்தேன். அப்பொழுது சிலகாலஞ் சென்ற பிறகு அயோத்தியிலிருந்து ஒரு அந்தணன் என்னிடம் வந்தான். நான் அந்த பிராமணனிடம் யோகந்தனுடைய சுகச்செய்தி விசாரித்தேன். அவன் அவிடத்திய விஷயங்களை நினைத்துக் கொண்டு மிகுந்த துக்கத்துடன் என்னைப் பார்த்து, "மந்திரியே! நந்தபூபதியை விட்டுத் தாங்கள் பிரிந்த பின்பு சகடாலனுக்கு மிகுதியும் ஒழிவு நேரம் கிடைத்தது. நந்தபூபாலனைக் கொல்லவெகுநாள் வரையில் சமயம்

பார்த்திருந்தான். ஒருநாள் அவன் பூமியைக் கெல்லும் சாணக்கியன் என்ற பிராமணனைக் கண்டான். அவனைப் பார்த்து நீ யேன் பூமியைக் கெல்லுகிறாய் என்றுகேட்டான். அதற்கு அவ்வந்தணன் "இங்கேயிருக்கும் நாணற்புல்லைக் களைவதன் பொருட்டுக் கெல்லுகிறேன். இந்த நாணப்புல்லால் என் கால் புண்ணுயிற்று" என்றான். அந்த மந்திரி அவ்வந்தணனைக் கோபமுள்ளவனென்று கண்டுகொண்டு இவனைக் கொண்டு நாம் யோகநந்தனைக் கொலை செய்பலாமென்றெண்ணி, "ஓ பிராமணோத்தம! நந்த மகாராஜன் கிருகத்தில் திரயோதசி திதியில் சிராத்தம் வருகிறது. லக்ஷம் சொர்ணம் தக்ஷிணை கிடைக்கும். அந்த வருப்படி உமக்குக் கிடைக்கும்படி செய்கிறேன். இப்பொழுதே அங்கு வந்திருந்து சமயத்தில் அரசன் வீடு செல்லலாம். அதுவரையில் என் வீட்டிலேயே சாப்பிட்டுக்கொண்டிருங்கள்" என்று கூறி அவனைத் தன் கிரகத்திற்கு அழைத்துச் சென்றான். பிறகு சிராத்ததினம் வந்தது. அப்பொழுது அரசனிடம் பிராமணனைப் பற்றித் தெரிவித்தான். அரசனும் அவ்வந்தணனிடம் அன்புகொண்டு வரவேற்றான். அந்தணன் சிராத்தத்தின் *முதற்போஜனத்தில் உட்கார்ந்தான். அதுகண்ட சகடாலன் நந்தபூபதியிடம் சென்று "அரசனே! சுபந்து வென்கிற இந்த அந்தணனே யோக்கியன். இவனை விட வேறு எவரும் யோக்கியனல்ல. ஆகையால் முற்போஜனத்தில் இவனேயிருக்கட்டும்" என்றான். அரசன் அதற்கு வேறு விதமாய் உத்தரவிட உடனே சகடாலன் சாணக்கியனிடம் வந்து அரசன் உத்தரவிப்படியிருக்கிறது; என் பேரில் குற்றமில்லை; என்ன செய்வேன் நான்" என்றான். அந்தணன் அச்சொற்களைக் கேட்டதும் கடுஞ்சினமடைந்து தன் சிகையவிழ்த்தலை யசைத்து "இந்த நந்தனை நான் ஏழு நாளைக்குள் வதம் செய்கின்றேன். அதன் பிறகு தான் இப்பொழுது அவிழ்ந்த என் சிகையை முடிப்பது" என்று ஓர் பிரதிக்ஞை செய்தான். அதைக் கேட்டுக் கொண்டிருந்த யோகநந்தன் மிகக்கோபங் கொண்டு அந்தணனை நோக்கினான். உடனே சாணக்கியன் ஓட்டம் பிடித்தான். அவனைச் சகடாலன் அரசனுக்குத் தெரியாமல் வரவழைத்துத் தன் வீட்டில் வைத்துக்காப்பாற்றினான்.

---

* விசுவேதேவஸ்தானம்

அந்த அந்தணன் ஓர் நாள் யாருமறியாத இடத்திற்குச் சென்று அங்கிருந்து * கிருத்திகையைச் சாதகம் செய்தான். அதனால் யோகநந்தன் தாகஜ்வரமடைந்து ஏழாவது நாளில் மரணமடைந்தான். பிறகு சகடாலன் அந்த யோகநந்தன் குமாரனாகிய ஹிரண்யகுப்தனையுங் கொன்றான். இவனுக்கு முன் அரசு புரிந்து வந்த சத்தியநந்தன் குமாரனாகிய சந்திரகுப்தனுக்கு முடிசூட்டுவித்தான். பிறகு அறிவில் பிரஹஸ்பதிக்கு நிகரான சாணக்கியனைப் பிரார்த்தித்து அந்தச் சந்திரகுப்தனுக்கு மந்திரியாக்கினான். இவ்விதம் சகடாலன் தனக்குத்தீங்கு செய்த யோகநந்தனைக் கொன்ற பிறகு தன் புத்திரர்கள் மரணமடைந்ததை நினைத்து வருந்தி நாட்டைத் துறந்து காடேகினன்.

ஓ காணபூதியே! அந்த பிராமணன் இங்ஙனம் கூறக்கேட்டு பெரும் வருத்தமடைந்தேன். எல்லாம் சஞ்சலந்தருவனவென்றே நிச்சயித்தேன். அந்த வருத்தத்துடன் புறப்பட்டு விந்தியமலையில் வசிக்கும் இந்தத்தேவியைத் தரிசிக்க வந்தேன். ஓ நண்ப! இந்தப் பாதேவதையின் அனுக்கிரகத்தால் என் ஜாதி நினைவுக்கு வந்தது. எனக்குத் திவ்யஞான முண்டாயிற்று. உனக்கும் பெரிய கதையைக்கூறினேன். இப்போது சாபமும் நீங்கிற்று. இச்சரீரத்தைத் தியாகம் செய்ய முயற்சிக்கிறேன். நீ இப்பொழுது இங்கு தானிருக்கவேண்டும். குணாட்டியன் என்ற பேர்கொண்ட அந்தணன் இங்குமாணாக்கர்களுடன் வரப்போகிறான்; அவனும் என்னைப் போல் தேவியால் சபிக்கப்பட்ட கணங்களிலொருவன். மானிடதேகமடைந்தவன். மகேசுவரனால் சொல்லப்பட்ட இந்தப் பெரிய கதையை அந்தக் குணாட்டியனுக்கு நீ கூறவேண்டும். அதன் பிறகு உனக்கும் அவனுக்கும் சாபவிமோசனமேற்படும் என்று கூறி வரருசியானவன் தன் தேகத்தைத் தியாகம் செய்ய பதரிகாச்சிரமம் சென்றான்.

பதிரிகாச்சிரமம் செல்லும்போது கங்கையில் கீரைகளை ஆகாரம் செய்யும் ஓர் முனிவரைக்கண்டான். வரருசி அவர் அருகே சென்றதும் அந்த ரிஷிக்கு தர்ப்பை கிழித்துக் கையில் ஓர் காயம் உண்டாயிற்று. அந்தக் காயத்தினின்று இரத்தம் வெளிப்பட்டது. அப்

* சத்ருக்களைச் சங்கரிக்கும் சக்தி.

பொழுது வாருசி அந்த ரிஷியின் அகங்காரம் எப்படியிருக்கிற தென்று சோதிப்பதின் நிமித்தம் மகிழ்ச்சியோடு தன்மகிமையால் அந்த இரத்தத்தைக் கீரையின் இரசம் போலாக்கினான்.

அதைக்கண்டதும் அந்த முனிவர் "ஆச்சரியம்! நான் சித்தனாய்விட்டேன்" எனக் கருவமடைந்தார். அது கண்டவாருசி சிறிது புன்னகைகொண்டு, "தங்களைச் சோதிப்பதன் நிமித்தமே தங்களுடைய இரத்தத்தைக் கீரை ரஸமாகச் செய்தேன். ஓ முனிவரே! நீர் இன்னும் அகங்காரத்தை விடவில்லையே. அகங்காரம் என்பது ஞானமார்க்கத்திற்கு எவராலும் கடக்கமுடியாத பரிகமாகிறது. பலவிரதங்களை யனுஷ்டானம் செய்தாலும் ஞானமின்றி முத்தி கிட்டாது. முத்தியில் விருப்பமுள்ளவர்களின் மனதைச் சொர்க்கம் கவர்ந்துவிடும். அந்த சொர்க்கசுகங்கள் அழிவுள்ளவைகள். ஆகையால் "ஓ முனிவரே, அகங்காரத்தையொழித்து ஞானமடைய முயற்சிசெய்யுங்கள்" என்றார். இங்ஙனம் கண்டித்தவுடன் முனிவர் வாருசியைக் கொண்டாடினார். பிறகு வாருசி பதரிகாச்சிரமம் சென்றான்.

அங்கே வாருசி மானிடத் தன்மையைத் தியாகஞ்செய்ய விரும்பி மிகுதியான பக்தியுடன் அந்த ஆச்சிரமத்தில் சரணமடைவதற்குரிய தேவியைச் சரணமடைந்தான். உடனே அந்தத் தேவி பிரத்தியக்ஷமாகிச் சரீரத்தை விடுவதற்குத் தாரணைசெய் என்றார். அவ்விதமே வாருசி தாரணைசெய்து சரீரத்தைத் தகித்துக்கொண்டு தேவ சொரூபமடைந்தான். பிறகு அந்தக்காணபூதி விந்தியபர்வதத்தின் அருகே சஞ்சரித்துக்கொண்டு தான் கோரிய குணாட்டியனுடைய வரவை எதிர்பார்த்துக் கொண்டிருந்தான்.

## ஆறாவது தரங்கம்.

உமாதேவியின் சாபப்படியே மால்லியவான் மானிடனாகி குணாட்டியன் என்ற பேர் கொண்டு ஸாதவாகனன் என்ற அரசனை

யடுத்து வனத்தில் திரிந்து வந்தான். அவன் அவ்வரசனுக்கு முன்னே ஸம்ஸ்கிருதம் முதலிய மூன்று பாஷைகளையும் தியாகம் செய்தான். மனதில் மிகவும் வருத்த முற்று விந்தியமலைச் சாரலையடைந்து தேவியைத் தரிசிப்பதற்கு வந்தான். அந்தத்தேவியின் கட்டளைப்படி காணபூதியைக் கண்டான். பிறகு தன் பூர்வஜென்ம நினைவையறிந்து! பிரபோதம் கைவரப்பெற்றான். மூன்று பாஷைகளுக்கும் வேறான பிசாச பாஷையைக் கொண்டு காணபூதியிடம் தன்னுடைய நாமதேயத்தைத் தெரிவித்துக் கூறுகிறான்.

“ஓ காணபூதியே! புஷ்பதந்தனிடம் கேட்ட கதையை எனக்குச் சீக்கிரமாகக் கூறவேண்டும். அப்பொழுது நண்ப! நீயும் நானும் சாபத்திலிருந்து விடுபடுவோம்” என்றான். இதைக்கேட்டதும் காணபூதி மகிழ்ச்சியடைந்து வந்தனம் செய்து, “பிரபுவே! நான் தங்களுடைய இஷ்டப்படியே கதையைக்கூறுகிறேன். அதில் எனக்கு மிகவும் சந்தோஷம். ஆயினும் முதலில் தங்களுடைய ஜன்மம் முதலிய வரலாற்றைத் தயைசெய்து சொல்லவேண்டும்” என்று வேண்டிக்கொள்ள, குணாட்டியன் “அப்பனே! பிரதிஷ்டானம் என்னும் தேசத்தில் சுப்பிரதிஷ்டம் என்னும் ஓர் நகரமுண்டு. அந்நகரத்தில் சோமவர்மன் என்னும் ஓர் பிராமண சிரேஷ்டனிருந்தான். நண்ப! அவ்வரசனுக்கு வத்ஸன் என்றும், குலமகன் என்றும் இரண்டு குமாரர்களிருந்தார்கள். மூன்றாவதாகச் சுருதார்த்தை என்னும் ஓர் கன்னிகை பிறந்தாள். சிலகாலஞ்சென்றபின், அந்தச்சோமவர்மனும் அவன் மனைவியும் மரணமடைந்தார்கள். அவருடைய புத்திரர்களிருவரும் அந்தப்பெண்ணைக்காப்பாற்றிவந்தார்கள். சுருதார்த்தை என்னும் அந்தப்பெண் மங்கைப்பருவமடைந்த சில காலத்திற்கெல்லாம் அகாரணமாகக் கர்ப்பமடைந்தாள். அது கண்ட வத்ஸன், குலமகன் என்ற அவளுடைய இரண்டு சகோதரர்களுக்கும் பெரிய சந்தேகமுண்டாயிற்று. ஏனெனில் அங்கு வேறு புருஷர்களில்லை. தன்னுடைய சகோதரர்கள் சந்தேகங்கொண்டிருப்பதை யறிந்த சுருதார்த்தை, “என் அருமைச் சகோதரர்களே! நீங்கள் என்னிடம் கெட்ட எண்ணங் கொள்ளவேண்டாம், நான் உண்மையைக் கூறுகிறேன். கேளுங்கள்; நான் நீராடப்போன தருணத்தில் சர்ப்பங்களுக்கு அரசனாகிய வாசுகியின் சகோதரன் குமாரன்

என்னைப்பார்த்தான். உடனே கீர்த்திசேனன் என்ற அவன் காம வேதனையுற்றான். என்னிடம் அவனுடைய பரம்பரையையும் பெயரையுந் தெரிவித்து என்னைக்காந்தருவ விவாகம் செய்து கொண்டான். அதனால் நான் கர்ப்பமடைந்தேன் என்றாள்.

இதைக் கேட்டதும் அவ்விருவரும் "சுருதார்த்தே! உன்னுடைய இந்தப்பேச்சை யார் நம்புவார்கள்?" என, சுருதார்த்தை அந்த நாககுமாரனை மனதில் எண்ணினாள். ஸ்மரித்த அந்தக்கணமே நாககுமாரனாகிய கீர்த்திசேனன் அங்குத்தோன்றி வத்ஸனையும் குலமகனையும் பார்த்து, "இந்தச்சுருதார்த்தைஉத்தமமான அப்ஸரஸ்திரீ; சாபவசத்தால் பாணிடஸ்தரீயானாள். இவளை நான்மணவிபாகக் கொண்டதுண்மை. இவளைப்போலவே நீங்களும் சாபத்தினாலேயே புவியில் பிறந்தீர்கள். இவளுக்கு ஓர் புத்திரனுண்டாகப்போகிறான். இதிற் சிறிதும் ஐயமில்லை. பின்னர் உங்கள் மூவருக்கும் சாபவிமோசனம் உண்டாகப்போகிறது." என்று தெரிவித்து மறைந்தான். பிறகு கொஞ்ச நாளைக்செல்லாம் சுருதார்த்தனுக்கு நான் குமாரனாய்ப் பிறந்தேன் என்று தெரிவித்ததும் ஆகாயத்திலிருந்து, "இவன் பிரமதகணங்களுள் ஒருவன், குணாட்டியன் என்பது இவன் பெயர். பிராமணன்" என்றோர் வாக்குண்டாயிற்று. அது கேட்டு இருவரும் ஆச்சரியமடைந்தார்கள். பிறகு குணாட்டியன், "நண்ப! நான் பிறந்த சிலகாலத்திற்கெல்லாம் என் அன்னை என் மாமன்மார் இருவர் ஆக மூவரும் சாபவிமோசனமடைந்து காலம் வந்ததும் மரணமடைந்தார்கள். பிறகு எனக்குமிகவும் ஆதரியமுண்டாயிற்று. ஆபினும் என்னிடத்தில் அச்சமயம் ஏற்பட்ட ஓர் பிடிவாத குணத்தால் கல்விபயிலும் பொருட்டுத் தென்றிசை சென்று கொஞ்சகாலத்தில் கல்வியில் தேர்ச்சியடைந்தேன். பிறகு நான் கற்றகல்வியின் விசேஷங்களைக் காட்டவெண்ணி சுப்பிரதிஷ்ட நகரம் வந்தேன்.

இந்நகரத்தில் பலமாணாக்கர்கள் பல இடங்களில் தனித்தனிக் கூட்டங்களாக விருந்து வேதபாராயணம் செய்யக்கண்டு மகிழ்ந்தேன். சிலவிடங்களில் சிலர் சாமகானம் செய்வதைப் பார்த்தேன். சிலவிடங்களில் பிராமணர்கள் கூடி வேதங்களை நிர்ணயஞ்செய்வதில் ஒருவருக்கொருவர் விவாதம் செய்துகொண்டிருக்கவும் கண்டேன்.

சில இடங்களில் வஞ்சகர்கள் சிலர் கூடி யிருக்கக் கண்டேன். அவர்கள், இந்நகரத்தில் யார் சூதாடுகிறார்களோ அவர்களிடம் பொருள் குவிகிறது என்று பேசிக்கொண்டிருக்கக் கேட்டு ஆச்சரியமடைந்தேன். சிலர் சிலவிடங்களில் கூடி வியாபாரஞ் செய்யும் விஷயத்தைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தார்கள். அவர்களுள் ஒருவன், பொருளைக்கொண்டு பொருள் சேர்ப்பதில் என்ன ஆச்சரியமிருக்கிறது. நான் பொருளில்லாமலே முன்னம்பொருள் சம்பாதித்திருக்கிறேன். நான் என் அன்னையின் கர்ப்பத்திலிருக்கும் போதே என் தந்தை மரணமடைந்தார். பிறகு என் அன்னையிடமிருந்து தாயாதிகள் சொத்துக்களை யபகரித்துக்கொண்டார்கள். அப்பொழுது என் அன்னை அந்த தாயாதிகளுக்குப் பயந்து அவளுடைய தந்தையின் நண்பருள் ஒருவராகிய குமாரதத்தனுடைய வீட்டிலிருந்து வந்தாள். அந்த வீட்டில் நான்பிறந்தேன். என் தாய் என்னை அநேக கடுமையான வேலைகளைச் செய்து காப்பாற்றிவந்தாள். எனக்கு கல்வி பயில வயது வந்ததும் என் தாய் ஓர் உபாத்தியாயரை வணங்கி அவரிடம் என்னை ஒப்புவித்துக் கல்விகற்றுக்கொடுக்கும்படி வேண்டிக்கொண்டாள். அந்த உத்தம புருஷன் என் தாயின் வேண்டுகோளுக்கிரங்கி, எனக்கு எழுத்தையும், கணக்கையும், முறையே கற்றுக்கொடுத்தார். பிறகு என் தாய், "அப்பா! மகனே! நீயோர் வியாபாரியின் புத்திரனானதால் நீ வியாபாரஞ் செய்யப்பழகு" என்றும், இந்த ஊரில் விசாகிலன் என்ற ஓர் பெரிய பணக்காரனிருக்கிறான்; அவன் நல்ல குலத்தில் பிறந்த ஏழைகளுக்குத் தக்கபொருளைத் தானமாக வழங்குகிறான். அவனிடம் சென்று யாசியென்றும் சொல்லியனுப்பினாள்.

நான் என் அன்னையின் கட்டளைப்படியே அந்த வியாபாரியிடம் சென்றேன். அந்த விசாகிலன், அப்பொழுது மற்றொரு வியாபாரியைப்பார்த்து, "ஓ வியாபாரியின் பிள்ளையே! இதோ இறந்து கிடக்கும் இந்த எலியிருக்கின்றதே இதைக்கொண்டு புத்திசாலியானால் பொருள் தேடவேண்டும். உனக்கு வெகு சொர்ணங்களைக்கொடுத்தேனே; அவைகளை நீ விருத்தி செய்வதிருக்கட்டும் நீ அந்தச் சொர்ணங்களையும் காப்பாற்றவில்லை" என்று கோபத்துடன் கூறினான்.

நான், அதைக் கேட்டுக் கொண்டே இருந்து சரேலென்று விசாகிலனை நோக்கி, பிரபுவே? ஓர் பாண்டவளவு மூல தனத்திற்கு வந்த நான் ஓர் எலியை கிரகித்துக்கொண்டேன், " என்று சொல்லி அந்த எலியை யெடுத்துக்கொண்டு வெளிப்புறப்பட்டேன். அந்த விசாகிலன் அதைக்கண்டு நகைத்தான்; நான் பிறகு அந்த எலியை ஓர் வியாபாரியினுடைய பூனைக்கு உணவுக்காக விக்கிரயம் செய்தேன்; அதன் கிரயமாகக் கொடுத்த ஒருகைக் கடலையைச் சுண்டி யெடுத்துக்கொண்டு அப்பட்டணத்திலுள்ள நாற்சந்திக்குச் சென்று அங்கு ஓர் மரத்தின் நிழலில் உட்கார்ந்திருந்தேன். என்னிடம் அப்பொழுது ஒரு ஜலபாத்திரமும் வைத்திருந்தேன்; அங்கே தலையில் விறகைச் சுமந்துக் கொண்டு வரும் ஜனங்களுக்கு அவர்கள் களைப்புத்தீரத் தண்ணீர் கொடுத்துக் கொஞ்சம் கடலையும் கொடுத்து வணக்கத்துடன் உபசரித்துவந்தேன்; விறகுக்காரர்களில் ஒவ்வொருவனும் தான் கொண்டு போகும் சுமையில் இரண்டு விறகைக் கொடுத்துச் சென்றார்கள். அந்த விறகைக் கடைத் தெருவுக்குக் கொண்டு போய் விற்றேன். அதனால் சொற்பப் பணம் கிடைத்தது. அவைகளைக் கொண்டு கடலைகளை வாங்கி மறுநாள் அவ்விதமே சுண்டி யெடுத்துக் கொண்டு நாற்சந்தி சென்று உட்கார்ந்து விறகு சுமப்பவர்களுக்குக் கொடுத்து விறகுகளைச் சம்பாதித்தேன். இவ்விதம் நாடோறும் செய்து பொருளீட்டிப் பின் விறகு சுமப்பவர்களிடம் மூன்று நாள் வரையில் விறகுகளை யெல்லாம் விலைக்கு வாங்கினேன். அந்த விறகுகளை யோரிடத்தில் சேகரித்து வைத்திருந்தேன்.

பின்னர் ஒருசமயம் பெருமழை பொழிந்து நகரமுழுவதும் விறகுக்குத் தட்டுண்டாயிற்று. அப்போது நான் சேர்த்துவைத்திருந்த விறகு எனக்கு அதிகவிலைக்கு விற்பனையாகி நல்லபணங்கிடைத்தது. அப்பொருளை வைத்துக்கொண்டுகடைவைத்தேன். வியாபாரத்தைக் கிரமமாகச் செய்துகொண்டே வந்தேன். பிறகு அதில் நான் நல்ல இலாபமடைந்தேன். பின்பு விசாகிலன் என்றவியாபாரிக்கு சொர்ணத்தால் ஓர் எலியைச்செய்து கொடுத்தேன். அந்த விசாகிலன் மகிழ்ச்சியடைந்து தன் பெண்ணை எனக்குக் கொடுத்தான். அதனால்தான் நான் மூஷகன் என்று பிரசித்திபெற்றேன் என்று

தன் வரலாற்றை முடித்தான். இதைக்கேட்ட மற்றவியாபாரிகள் ஆச்சரியமடைந்தார்கள்.

ஓரிடத்தில் சாமகனாகிய அந்தணன் ஒருவன் எட்டு * மாஷம் சொர்ணத்தைத் தானம் வாங்கினான். அதைக் கண்ட மற்றொரு அந்தணன் ஓய் சாமகரே! நீர் பிராமணனாக விருப்பதால் எங்கும் போஜனம் கிடைக்கும். இந்தச் சொர்ணத்தைக் கொண்டு உலக நடவடிக்கைகளைக் கற்றுக் கொள்ளுமென்றார். அவன் எனக்கு யார் உலக நடவடிக்கை கற்றுக் கொடுப்பவரென, மற்றவன் இதோ இந்த ஊரில் சதுரிகை யென்றொரு தாசியிருக்கிறாள். அவளுடைய வீடுசெல் லென்றான். அதுகேட்டதும் சாமகன்வியந்து நான் அங்கே சென்று என்ன செய்வது என, "நீ அங்கே சென்று உன்னிட முள்ள சொர்ணங்களை அவளிடம் கொடுத்து விட்டு அவளுக்கு உன் மீது பிரியம் உண்டாகும்படி சாமத்தைக்கானம் செய்" என்றான். இந்த மூடனாகிய சாமகன் அவ்விதமே சதுரிகை என்ற தாசி வீடு சென்றான். அந்தணனைக் கண்டதும் வேசி எதிர் கொண்டு உப சரித்தாள். அந்தணன்மனமகிழ்ச்சியுடன் அவளுடையஉபசாரணையை யேற்றுக் கொண்டு "பெண்ணே! இந்தா, என்னிடமுள்ள இந்தச் சொர்ணங்களைப் பெற்றுக் கொண்டு எனக்கு உலக நடவடிக்கை களைப்பழக்கிவை" என்று கூறி அவளிடம் சொர்ணத்தைக் கொடுத் தான். அதைக் கண்டு அங்குள்ள யாவரும் நகைத்தார்கள். சாமக னாகிய அந்தணன் அப்போது சற்று யோசித்துத் தன் கரங்களைக் பசுவின் செவிகளுக்கொப்பாகக் கூப்பிக் கொண்டு உச்சஸ்வரத்து டன் சாமகானம் செய்தான். இந்த வேடிக்கையைப் பார்க்க அங்கு விடர்களில் அநேகர் கூடினார்கள்.

அந்த விடர்கள் அந்த அந்தணன் செய்யுங் கானத்தைக்கேட் டதும் "ஓ! இவன் ஓர் ஜாலநரி. தவறிப்போய் இங்கேவந்து கூச் சலிடுகிறது. இதன் கழுத்தில் அர்த்தசந்திரப்பிரயோகம் செய்யுங் கள்" என்று கூறினார்கள். அந்தணன், அர்த்தசந்திரபிரயோகம் என்பதை பாணம்என்று கருதித்தலைபோய்விடுமென்றஞ்சி "எனக்கு உலக நடவடிக்கை தெரிந்துவிட்டது" என்று சொல்லிக் கொண்டு அவள் வீட்டிலிருந்து வெளியேவந்து தன்னையனுப்பிய பிராமணன்

* ஓர் கணக்கு

வீட்டிற்குச் சென்று அவனைக் கண்டு நடந்ததைத் தெரிவித்தான்.

அவன் அதைக் கேட்டதும் நகைத்து, "ஓய் பிராம்மண! சாமம் என்றதற்கு நல்ல வார்த்தை என்றர்த்தம்; நான் அதைச் சொல்லப்போக, நீர் வேதத்தைக்கானம் செய்திருக்கிறீர். வேத கானம்செய்ய அதுவாவிடம்? நீர் வேதமுணர்ந்தவராக விருந்தும் உம்மிடத்தில் மூடத்தனம் மிகவும் விசேஷமாக விருக்கிறதே. வெகுநன்று" என்று பரிகசித்தான்.

பின் அந்த சாமகப்பிராமணன் "அப்படியா! தெரிந்துகொண்டேன்." என்று கூறி உடனே சதுரிகையென்கிற தாசியிடம்சென்று "இரண்டுகால்பசுவாகிய எனக்குச் சொர்ணமாகிய அந்தத்திருணத்தைத் தள்ளிவிடு" என்றான். அந்த வேசி நகைத்து, அவன் கொடுத்திருந்த சொர்ணத்தைக் கொடுத்தாள். பிராமணன் அதைப் பெற்றுக்கொண்டுதான் மறுபடியும் உலகத்தில் ஜனித்ததாகவே கருதித் தன் வீடு வந்துசேர்ந்தான்.

நான் இம்மாதிரியான வேடிக்கைகளைப் பார்த்துக்கொண்டே இந்திரனது கிருகம்போன்ற அரசன் அரமனைக்குப்போனேன். நான் அரமனையிற் பிரவேசிக்குமுன்னர் என் மாணுக்கர்கள் முன்னல் சென்று என் வருகையைத் தெரிவித்தார்கள். பின் நான் பிரவேசித்தேன். அப்பொழுது சாதவாகனன் என்ற அரசன் ஆஸ்தானத்தில் வீற்றிருக்கப் பார்த்தேன். அரசனை சர்வவருமன் முதலிய அமைச்சர்கள் சூழ்ந்திருந்தார்கள். இரத்தினசிங்காதனத்தில் தன் மந்திரிமார்கள் புடைசூழ அவ்வரசன் வீற்றிருப்பது தேவர்கள் சூழ இந்திரன் வீற்றிருப்பதை ஒத்துவிளங்கிற்று.

நான் மன்னனுக்கு ஆசி கூறி ஆசனத்தமர்ந்தேன். அரசன் என்னை அன்போடு வரவேற்றுக் கௌரவப்படுத்தினன். சிவவருமன் முதலிய அமைச்சர் "மகாராஜனே! இவர் மகான்; உலகம் புகழ விளங்கும் உத்தமர். கல்வியில் நல்லஞானமுடையவர். இவரைச் சுணட்டியரென்று சொல்லுவார்கள். அந்தப் பெயர் இவருக்கு உண்மையில் பொருத்தமுடையதே" என்று என்னைப் புகழ்ந்துபேசினர்கள். இதை அரசன் கேட்டதும் மகிழ்ச்சியடைந்து என்னை மற்றுமொருமுறை கைகுவித்து வணங்கி உபசரித்துத் தன் ஸமஸ்தான மந்திரியாகவேற்படுத்திக்கொண்டான்.

பிறகு நான் இராஜகாரியங்களை முடிப்பதில் கண்ணுங் கருத்துமாக விருந்து அமைச்சத்தொழில் நடத்திவந்தேன். இத்தோடு அநேகபிள்ளைகளுக்கு வேதஞ் சொல்லிக்கொடுத்தேன். பிறகு எனக்கு விவாகமும் செய்து கொண்டு சுகமாக வாழ்ந்துவந்தேன்.

இங்ஙன மிருந்து வருகையில் ஒருநாள் மாலைப்பொழுதில் கோதாவரி நதிக்கரைமீது நான் சந்தோஷமாக உலாவிக்கொண்டிருந்தேன். அப்பொழுது அங்கே தேவிகிருதிஎன்று பெயர்போன ஓர் நந்தவனத்தைக்கண்டேன். அது மிகமேன்மையாக விருந்தது. பார்க்கப் பார்க்க மனதிற்குப் பரமானந்தந்தந்தது. ஆகவே அதன் வரலாறு விசாரிக்க வெண்ணித் தோட்டக்காவற்காரனிடம் சென்று கேட்டேன். காவற்காரன் என்னிடம் மகிழ்வுற்று, "சுவாமி! எனக்கொன்றும் தெரியாது. இந்தவனத்தைப்பற்றிப் பெரியோர்கள் சொல்லிக்கொள்வதைக் கூறுகிறேன் கேளுங்கள்.

முன்னொருசமயம் மௌனவிரத முடையவரும், ஆகாரத்தை யொழித்தவருமாகிய ஓர் அந்தணர் இங்கு வந்தனராம். அவர் இந்தவனத்தையும் ஓர் கோயிலையும் உண்டாக்கி இங்கிருந்து வந்தனராம். பிறகு அநேக பிராமணோத்தமர் இங்கு வந்து கூடி அவரைத் தரிசிக்கத் தொடங்கினராம். அப்பொழுது தரிசிக்கவந்த அந்தணருட் சிலர் அவரை "சுவாமி! தங்கள் வரலாறு தெரிவிக்க வேண்டுமென்று பன் முறையும் வேண்டி நிர்ப்பந்திக்க அவர், தமது வரலாற்றைப் பின் வருமாறு தெரிவித்தனராம்.

நான் பருகச்சம் என்னும் தேசத்தைச்சார்ந்தவன். பருகச்சம் என்ற அந்த தேசம் நர்மதா நதிக்கரையிலுள்ளது. நான் அந்தணனே யெனினும் பரம சோம்பேறி. அதிலும் பரமதரித்திரன். எனக்கு எவரும் பிக்ஷைகொடுப்பதில்லை. இப்படியிருந்த நான் ஒரு சமயம் பெரும் வைராக்கியமடைந்து வீட்டைவிட்டுப் புறப்பட்டுத் தீர்த்தயாத்திரை செய்து கொண்டு விந்தியமலையை யடைந்து அங்குத்தேவியைத் தரிசிக்கக் கருதி ஆலயத்தை யடைந்து அம்மனைக் கண் கொண்டு பார்த்தேன். பார்த்தவளவில், "ஆகா! அன்பர்களுக்கு அவர்கள் கேட்டவரத்தைக் கொடுக்கும் தேவிக்கு ஜனங்கள் பசுவைப் பலி கொடுக்கிறார்கள். நான் ஜட

மாகிய என்தேகத்தையே பசுவாகப் பலிகொடுக்கிறேன்"—என்று தீர்மானித்து என் தலையைச் சேதிப்பதற்கு ஆயுதமெடுத்தேன்.

அக்கணத்தில் அன்பர்க் கிரங்கும் ஜகதீசுவரி பிரஸன்னமாகி "புத்திர! நீ சித்தனாகிவிட்டாய். உன் சரீரத்தை இம்சித்துக் கொள்ளாதே; என் சமீபமேயிரு" என்றாள். இங்ஙனம் தேவியிடம் வரம் பெற்றதும் நான் தெய்வத்துவம் அடைந்தேன். என்பசி தாகங்கள் ஒழிந்தன.

பிறகு ஒருசமயம் தேவி என்னை யழைத்து "புத்திர! நீபிரதி ஷ்டா நகரம் சென்று அங்கே மிக அழகான ஓர் உத்தியான வன த்தை உண்டாக்கு "என்று கூறி திவ்ய பீஜாக்ஷரத்தை உபதேசம் செய்தாள். பிறகு நான் இங்கே அந்தத்தேவியின் மகிமையால் இந்த உத்தியான வனத்தை உண்டாக்கினேன். இதை நீங்கள் பரிபாலியுங்கள் என்று தெரிவித்தனராம். சுவாமி! இது தேவியின் மகிமையால் இவ்வித மமைந்ததாம் என்றான் காவற்காரன். நான் இதைகேட்டுப் பரமானந்த மடைந்து வீடுவந்து சேர்ந்தேன் என்றான் குணாட்டியன்.

இதைக்கேட்டதும் காணபூதி பிரபுவே! அரசனுக்குச் சாத வாகனன் என்ற பெயர் எப்படி யுண்டாயிற்று; அதன் விவரம் தெரிவிக்கவேண்டுமெனக் குணாட்டியன், காணபூதியே! கேள்—

"தீபகர்ணி என்றொரு அரசனிருந்தான். அவன் மகா பராக்ரம முடையவன், அவனுக்குச் சக்திமதி யென்ற மனைவியிருந்தாள். அவளை அவன் தன் பிராணனிலும் பெரிதாகக் கருதிவந்தான். அவள் ஒரு சமயம் உத்தியானவனத்தின்கண் விளையாடிக்கொண் டிருந்து திருப்புகையில் அரவந்தீண்டி இறந்தனள். அரசன் அவ ளிடம் கொண்டிருந்த ஆசையால் வேறு மணஞ்செய்ய விரும்பா மல், அன்று முதல் ஸ்திரீ சங்கமத்தை யொழித்தான், ஆனால் சில சில சமயம் தனக்குப்பின் தன் இராஜ்யத்தை வகிக்க ஓர் புத்திரனி ல்லாமைக்கு வருந்துவான். இறைவன் சிவபெருமான் அவன் சொப் பனத்தில் ஓர்நாள் தோன்றி "ஓ தீபகர்ணியே! நீ வனத்தில் சென்று வேட்டையாடும்போது சிங்கத்தின் மீது ஓர் வாலிபன் ஏறிவரக் காண்பாய்; அவனை நீ யழைத்துக்கொண்டு அரமனை வருவாயாக

அவனையே! நீ புத்திரனாகக் கொள்க" என்று கூறி மறைந்தனர். பிறகு அரசன் நித்திரை தெளிந்தெழுந்து ஈசன் திருவருளைச் சிந்தித்து அபரிமிதமான சந்தோஷமடைந்தான். பிறகு அரசன் ஒரு நாள் வேட்டையாடப் புறப்பட்டு அரண்யத்தில் தொலை தூரம் சென்றான்; அங்கே அரசன் பத்மஸரஸொன்றைக் கண்டு நிற்கையில் ஓர் அரசிளங்குமாரன் சிங்கத்தின்மீது ஏறிவரப் பார்த்தான். சிறுவன் சூரியனை யொத்து விளங்கினான். உடனே அரசன் தான் முன்னொரு தடவை கண்ட சொப்பனத்தை யெண்ணி ஜகதீசனுடைய திருவருளால் கிடைத்த குழந்தையன்றோவிது வென எதிர்கொண்டோடி விரைவில் அவனைச் சிங்கத்தினின்றிறக்கி அவனுக்கு அவன் விரும்பியபடி தாகசாந்தி செய்வித்ததுமன்றி சிங்கத்தையும் சங்கரித்தான். அச்சிங்கம் உடனே அச்சரீரம் நீங்கப் பெற்று புருஷ சரீரத்துடன் விளங்கிற்று. அதுகண்ட தீபகர்ணி என்ற அரசன் ஆ! கஷ்டம்! கஷ்டம்!! இதுவென்ன?' இதுவென்ன!' என்று வியப்படைந்தான். உடனே அந்தப் புருஷன், "அரசனே! நான் குபேரனுக்கு நண்பனாகிய யக்ஷன். என் பெயர் ஸாதன். நான் ஓர் நாள் கங்காநதி சென்றேன். அங்கு ஓர் முனிவரின் புத்திரி நீராடிக்கொண்டிருக்கக் கண்டேன். அந்தப் பெண்மணியும் என்னை நோக்கினாள். இருவரும் காமன்கணைக்கு இரையாகி நொந்தோம். உடனே அவளை காந்தருவவிவாகம் செய்துகொண்டேன்." இச்செய்தியை அந்த மங்கையின் உறவினர் அறிந்து அவளையும் என்னையும் பார்த்து, "நீவிரிருவரும் பெரும் பாவிகள். ஆகையால் இஷ்டப்படி சஞ்சரிக்கும் சிங்கங்களாகக் கடவ"தெனச் சபித்தார்கள். நாங்களிருவரும் பிரார்த்தித்ததும் எனக்கு உமது பாணத்தால் அடிபடுங்காலத்தையே சாபவிமோசன காலமாகக் குறிப்பிட்டார்கள். அவளுக்கு ஓர் மகன் பிறக்கும்போது சாபம் நீங்குமெனத் தெரிவித்தார்கள். பின்னர் அவர்கள் சாபப்படியே நாங்களிருவரும் ஆண்பெண் சிங்கங்களாகமாறினோம். அந்தப்பெண்மணி சிலகாலஞ் சென்ற பிறகு கர்ப்பந்தரித்துக் குமாரனை யீன்றாள். அவன் தான் இந்தக் குழந்தை. அவள் அக்கணமே சாபவிமோசனம் பெற்றாள். நான் பிறகு அங்கிருக்கும் பெண் சிங்கங்களிடத்தில் இக்குழந்தையைப் பால் குடிக்கும்படி விட்டு வளர்த்து வந்தேன். இப்போது நீர் பாணத்தால் அடித்ததால் சாபம் நீங்கப்

பெற்றேன். இந்தக் குமாரனை நான் உமக்குக் கொடுக்கிறேன் பெற்றுக்கொள்ளும். இவன் மகா பராக்ரமசாலி—என்று தெரிவித்து ஸாதன் என்ற யக்ஷன் மறைந்தான். பிறகு அரசன் அந்த பாலகனோடு தன் அரமனை வந்து அவனுக்கு ஸாதவாகனன் என்ற பெயர் புனைந்து வளர்த்து வந்தான். ஸாதனென்ற யக்ஷனல்லவா சுமந்து வந்தனன்? பிறகு ஸாதவாகனன் தக்க வயதினையடைந்ததும் இராஜ்யத்தை அவனிடம் கொடுத்துவிட்டுத் தீபகர்ணி அரண்யம் சென்றான். இந்த ஸாதவாகனன் பிறகு ஸர்வபௌமனானான். இன்னமுங் கேள் காணபூதியே! அந்த ஸாதவாகனன் ஓர் சமயம் வசந்தோற்சவங் கொண்டாடத் தேவியின் திருவருளால் அமைக்கப்பட்ட அந்த உத்தியானவனத்திற்குச் சென்றான். அங்கே இந்திரன் விளையாடுவது போல் வெகு நேரம் விளையாடிக் கொண்டிருந்தான். பின்னர் ஜலக்கிரீடை செய்யக்கருதி மாதர்களோடு குளத்தில் இறங்கினான். குளத்து நீரை இருகரங்களினும் எடுத்துத் தன் அஷ்டநாயகிகளின் மீதும் இறைத்தான். அந்த மாதர்களும் பெண் யானைகள் ஆண் யானையின் மீது நீரைவாரி யிறைப்பது போல் இறைத்தார்கள். பின்னர் அந்த மாதர்களின் கண்களில் தீட்டியிருந்த மை கரைந்து கண்கள் வெளுத்தன. பிறகு அரசனே அவர்கள் தங்கள் முகத்தில் வரைந்துகொண்டிருந்த மகரிகை முதலிய ரேகைகளையும் அணிந்து கொண்டிருந்த திலகத்தையும் அழித்தான். கொடிகளில் மலர்ந்திருக்கும் மலர்களைக் காற்று உதிரும்படி செய்வதுபோல் அவர்களுடைய கூந்தலிற் சூட்டிக்கொண்டிருந்த மலர்களை அரசன் உதிரும்படிசெய்தான். அப்பொழுது நிலவாகைமலரையொத்தமெல்லிய சரீரமுடைய ஓர் மாது மிகுந்த சிரமமடைந்தாள். அதைக் கவனிக்காமலே அரசன் அவள் மீதும் நீரை வாரி இறைத்தான். அதைச் சகிக்கமுடியாமல் "தேவனே! என்னை நீராலடிக்க வேண்டாம். *மோதகத்தால் அடியும்" என்றாள். இதைக் கேட்டதும் அரசன் சேடியரையனுப்பி மோதகம் வரவழைத்தான். அது கண்ட அந்தஸ்திரீ நகைத்து, "ஜலக்ரீடைசெய்யும் இச்சமயம் மோதகத்திற்கு என்ன சமயம்? நான் உதகத்தால் (ஜலம்) அடிக்கவேண்டாம் என்றேன். மா என்ற வடமொழியும் உதகம் என்ற வடமொழி

* மா-உதகம் மோதகம். நீர் வேண்டாம் என்பது பொருள். மோதகம் என்ற பலகாரத்திற்கும் பொருள்படும்.

யும்சேர்ந்தால் இந்த விதமாய்ப் பொருள்படும் என்பதை நீர் உணர வில்லை. அன்றி உமக்குச் சமயமும் தெரியவில்லை. வியாகரண சாஸ்திர முணர்ந்த அந்த ஸ்திரீ இவ்விதங் கூறவே, மற்றவர்கள் நகைத்தார்கள். அரசன் அப்போது மிகவும் வெட்கமடைந்தான். உடனே அரசன் ஜலக்கிரீடை செய்வதை விட்டுக் குளத்திலிருந்து கரையேறி கருவ பங்கமடைந்து வீடு போய்ச்சேர்ந்தான் பட்ட அவமானத்திற் காற்றுது மனக்கவலை கொண்டான். ஆகாரத்தையும் மறுத்து சித்திரம் போல் ஒருவரோடும் பேசாமலிருந்தான். செய்! கல்வியறிவுடைய பண்டிதனே உலகத்திலிருக்கத் தக்கவன். அதில்லாதவன் மரணமடைதலே உத்தமம்" என்று நினைத்துப் பெருங் கவலையிலாழ்ந்து பித்தங்கொண்டவன் போல் ஒன்றிலும் பற்றில்லாமலிருந்தான். அரசன் இவ்வாறு இருப்பதை யறிந்த பரிஜனங்கள் மிகவும் கவலைகொண்டு இன்னசெய்வ தென்று தோன்றுது வருந்தினார்கள்.

பிறகு இச்செய்தியை நானும் சர்வவருமனும் அறிந்தோம். சர்வவருமன் உடனே அரசனுடைய ஊழியக்காரனில் ஒருவனாகிய இராஜஹம்ஸன் என்றவனை அழைத்து விவரம் விசாரித்தான். அவன், "அரசன் இதற்கு முன் இவ்விதக் கவலைகொண்டதில்லை. பொய்யான பாண்டித்தியமுடைய விஷ்ணு சக்தியின் பெண்ணால் அலக்ஷியம் செய்யப்பட்டதாகவும் அன்று முதல் மிகவும் கோபங் கொண்டிருக்கிறார் என்றும் மற்றத் தேவிமார்கள் கூறினார்கள்" என்றான். இதைக் கேட்டதும் சார்வவர்மனுடன் நானும் கவலை கொண்டு "ஓ கோ! அரசனுக்குச் சரீரத்தைப்பற்றிய நோயானால் வைத்தியர்கள் வருவார்கள். மனதிற்குத் துக்கமாயின் அதன் காரணம் செவ்வனே விளங்கவில்லை. மேலும் அரசனுக்குப் பகைவர்களுடைய தொந்தரவெதுவுமில்லை. பிரஜைகளும் அரசனிடத்து அன்புபாராட்டி வருகிறார்கள். தெரிந்தவரையில் ஒருவிதமான குறைவுமில்லை. ஆகையால் இப்படிப்பட்ட கவலையேற்பட்டதற்குக் காரணம் ஒன்றுந்தெரியவில்லையே—என நான் யோசித்துக் கொண்டிருந்தேன். அதுகண்ட அறிவாளியாகிய சர்வவர்மன், "அரசனுக்குக் கோபமுண்டானதின் காரணத்தை நானறிவேன். நானோ மூடன்; எப்போது நான் பண்டிதனாவேனோ தெரியவில்லை.

அந்த அரசனிருக்குமிடம் எவனும் பிரவேசிக்கக்கூடாதென்கிற ஆக்ஞையிருந்தபோதிலும் நாங்கள் வெகு பிரயாசத்துடன் உள்ளே பிரவேசித்தோம். பின் சமயம் நோக்கி அரசன் அருகே சென்று அவனனுமதிபெற்று உட்கார்ந்து மிகவும் வணக்கத்துடன், "பிரபுவே! காரணமின்றிக் கவலைபடைந்திருக்கக் காரணம் யாதென்று தெரியவில்லை. அதை நான் அறியலாமெனின் தெரிவிக்க வேண்டுகிறேன்" என்றேன். அரசன் என் வார்த்தைகளைச் செவியிற் கொண்டும் கொள்ளாதவன்போல் முன்போலவே மௌனமாயிருந்தான். அது கண்ட சர்வவர்மன் அப்போது, அற்புதமான சில வசனங்களைக் கூறினன்—அவைபாவன—

"மகாராஜனே! நான் நேற்றிரவு கனவில் ஆகாயத்திலிருந்து ஓர் தாமரை மலர் விழக்கண்டேன். அந்தமலரை ஓர் திவ்விய குமாரன் மலரும்படிசெய்யப் பார்த்தேன். அதிலிருந்து வெள்ளைக்கலையுடுத்து வெள்ளைப்பணி பூண்ட திவ்யமங்களரூபமுடைய ஓர் மாது வெளிப்படக் கண்டேன். அந்தத்தேவி பிறகு உமது முகத்தில் பிரவேசித்தாள். பிறகு நான் விழித்துக்கொண்டேன். அந்தமாதை ஸரஸ்வதி தேவி என்று நினைக்கிறேன். அவள் தமது முககமலத்தில் பிரத்திபக்ஷமாகப் பிரவேசித்திருக்கிறாள். இதிற் சிறிதும் சந்தேகமில்லை."

இங்ஙனம் சர்வவர்மன் கூறியதும் சாதவாகனராஜன் புன்னகைகொண்டு என்னை நோக்கி, "ஒருமனிதன் மிகுந்த சிரமமெடுத்துக் கொண்டு கல்வி பயிலுவானுகில் எவ்வளவு வருஷத்தில் நல்ல பாண்டித்தியம் பெறக்கூடும்? அதைத் தெரிவியுங்கள் முன்பு. அத்தகைய கல்விச் செல்வமில்லாமல் இந்த இராஜ்ய சம்பத்து பிரகாசிக்கவில்லை. கட்டைக்கு ஆபரணம் போடுவது போலல்லவா இந்த மூர்க்கனுக்கு ஐசுவரிய மிருப்பதும்! அதனுல் பயன் யாது?" என்றான்.

பின்னர், நான் "பிரபுவே! ஒருமனிதன் பன்னிரண்டு வருடகாலம் பிரயாசைப் படுவானுகில் வித்தைகள் எல்லாவற்றிற்கும் முகம் போன்ற வியாகரண சாஸ்திரத்தைத் தெரிந்து கொள்ளலாம். அப்படிப்பட்ட வியாகரண சாஸ்திரத்தை நான் ஆறு வருடத்தில் தங்களுக்கு அப்பியாசம் செய்விக்கிறேன்" என்றேன்

இங்ஙனம் கூறி வாய்மூடியதும் சர்வவர்மன் பொறுமை கொண்டு "நல்ல சுகத்திலிருக்கும் இவ்வரசன், நீர் குறிக்கும் அந்த நீண்ட காலம் வரையில் எப்படி சிரமப்படுவார். அந்த வித்தையை நான் ஆறு மாதத்தில் அப்பியாசம் செய்விக்கிறேன்" என்று படபடப்புடன் கூறினன்.

ஒருபோதும் சம்பவியாத இவ்வார்த்தை என் செவியிற் பட்டவுடன், நான் சினங்கொண்டு "நீ ஆறுமாதத்தில் அந்த வியாகரண சாஸ்திரத்தை அரசனுக்கு அப்பியாசஞ் செய்வித்தால், ஸம்ஸ்கிருதம், பிராகிருதம், தேசபாஷை இம்மூன்றும் எப்போதும் மானிடர்களுக்கு வியக்தமாகவே இருக்கட்டும்" என்று சொன்னேன். உடனே சர்வவர்மன் "நான் அங்ஙனம் செய்யாவிடில் என் தலையில் பன்னிரண்டு வருடகாலம் வரையில் உனது பாதுகையைத் தூக்கிச்செல்லுகிறேன்" என்று கூறி அக்கணமே யெழுந்து தன் கிருகம் சென்றான். நானும் எனது கிருகம் சென்றேன். பின்னர் அரசனும் இரண்டு விதத்தில் ஏதேனும் ஒருவிதத்தால் தன் எண்ணம் நிறைவேறு மென்று சமாதானம் செய்துகொண்டான்.

சர்வவர்மன்தான் அரசன் முன்னிலையிற் செய்து கொண்ட பிரதிக்ஞையை நிறைவேற்றுதல் கஷ்டசாத்தியமானதென்று கண்டு மிகவும் துக்கித்து அந்தவிஷயத்தைத் தன் மனைவியிடம் அறிவித்தான்.

அவனுடைய மனைவி இச்சங்கதி செவியிற் கொண்டதும் மிகுந்த துக்கங்கொண்டு கணவனை நோக்கி "நாதனே! இந்தச் சங்கடத்தில் உமக்கு நமதிறைவன் குமாரக்கடவுளையன்றி வேறு கதியில்லை" என்றாள். சர்வவர்மனும் தன் மனைவியின் சொற்படி குமாரக்கடவுளையே நம்பி ஆகாரத்தை யொழித்திருந்து இரவில் நான்காவது யாமத்தில் குமாரக்கடவுளின் ஆலயத்திற்கே புறப்பட்டான். நான் இவ்விஷயத்தைச் சாரர்கள் மூலமாக வறிந்து காலையில் அரசனிடம் தெரிவித்தேன். இதைக் கேட்டதும் அரசனும் என்ன நடக்குமோ என்கிற கவலையுடனிருந்தான்.

பின் சிங்ககுப்தன் என்னு மோர் இராஜகுமாரன் அரசனுக்கு நண்பனுகையால், அரசனைப் பார்த்து, "தேவ! தாங்கள் வருந்தும்போது எனக்கு மிகவும் வருத்தமுண்டாயிற்று. அதனுல் நான் தங்களுடைய நன்மையை விரும்பி, சண்டிகையின் ஸந்நிதி சென்று என்னுடைய சிரசைச் சேதித்துக்கொள்ள யத்தனித்தேன். அச்சமயம் ஆகாயவாணி, 'நீ இப்படிச் செய்யாதே! அரசனுடைய விருப்பம் நிறைவேறும்.' என்று கூறிற்று. ஆகையால் தங்களுக்குக் காரிய சித்தியாவதிற் சிறிதும் தடையில்லை" என்று சிங்ககுப்தன் தெரிவித்து அரசனிடம் விடைபெற்றுக் கொண்டு சீக்கிரமாகவே சர்வவர்மனுக்கு இரண்டு தூதர்களை யனுப்பினுன். சர்வவர்மனே காற்றையே உணவாகக் கொண்டு மௌனவிருதம் பூண்டு குமாரக்கடவுளின் அருகேயிருக்கிறுன். இங்ஙனம் தன் சரீரத்தையும் பொருட்படுத்தாது தவம் புரியும் சர்வவர்மனுக்கு கருணைமூர்த்தியாகிய கார்த்திகேயன் திருவுள மிரங்கி அனுக்கிரகம் செய்தார். அங்ஙனம் இறைவன் அனுக்கிரகம் செய்ததைக் கேட்டுக் கொண்டிருந்த தூதர்கள் வியப்புற்று அரசனிடம் வந்து செய்திதெரிவித்தார்கள். அதைக்கேட்ட நான் மேகக்கூட்டத்தைக் கண்ட அன்னபக்ஷிபோல் வருத்த முற்றேன். அரசனுக்கோ மேகக்கூட்டத்தைக் கண்ட சாதகபக்ஷி போல் மகிழ்ச்சியுண்டாயிற்று.

பிறகு சர்வவர்மன் அரசனிடம் வந்து அரசனுக்குச் சகல வித்தைகளையும் நினைத்தமாத்திரத்தில் போதித்தான். சாதவாகனன் அவனது போதனையால் சகல வித்தைகளையு முணர்ந்தான் பரமேசுவரனுடைய அனுக்கிரகம் கிடைத்த பின் எதுதான் கிடைப்பதரிது? அரசன் சகல வித்தைகளையும் சர்வவர்மனுலடைந்தானென்று கேட்ட நகரத்து ஜனங்கள் யாவரும் சந்தோஷமடைந்தார்கள். யாவரும் உற்சவங்கொண்டினுர்கள். எங்குகண்டாலும் பதாகைகளும் தோரணங்களும் கட்டி அலங்கரித்து மகிழ்ந்தார்கள்.

பிறகு அரசன் சர்வவர்மனைக் குருவாகக்கொண்டு அவருக்கு அளவற்ற இரத்தினங்களைக் கொடுத்துப் பூசித்து நருமதாநதிக்கருகேயுள்ள பருகச்சம் என்ற தேசத்திற்கு அவரை அரசனுகவும் செய்தான். சிங்ககுப்தன் அனுப்பிய சாரர்களால் சர்வவர்மனுக்கு ஷண்முகக்கடவுளனுக்கிரகம் ஏற்பட்டது என்பதை அரசன் தெரி

ந்துகொண்டமையால், அந்தச் சிங்ககுப்தனிடம் அரசன் மகிழ்வு ற்று அவனுக்கு வேண்டிய பொருளைக் கொடுத்து உதவிபுரிந்தான். அந்த விஷ்ணுபக்தியின் பெண்ணாகிய தன் மனைவி இந்த வித்தைக் குக் காரணமானது கருதி அவளுக்குப் பட்டமகிஷி பதவி தந்து பட்டாபிஷேகம் செய்தான்.

## ஏழாவது தரங்கம்.

பிறகு நான் மௌன விருதம் பூண்டு மன்னனுடைய சமீபம் சென்றேன். அங்கே ஓர் அந்தணன் தான் பாடிய ஒரு செய்யு ளைப் படித்தான். அரசனும் அந்தச் செய்யுளை ஒரு முறை படித் தான். அதைக்கேட்ட அங்கிருந்த ஜனங்கள் யாவரும் சந்தோஷ மடைந்தார்கள். பின் அரசன் சர்வவர்மனை நோக்கி, "குருவே! தங்களுக்குக் கடவுள் எவ்விதம் அனுக்கிரகஞ் செய்தார்" என வினவ, சர்வவர்மன் "அரசனே! நான் இங்கிருந்து மௌன விரதத் துடன் ஆகாரமில்லாமலே சென்றேன். நான் போகவேண்டிய இடம் இன்னும் கொஞ்சதூரமிருக்கும்போதே தவத்தினால் களைப் படைந்து பிரக்ஞை யிழந்து புவியில் விழுந்தேன். அச்சமயம் சக்தி யென்ற ஆயுதத்தைக் கையிற்கொண்ட ஓர் மானிடன் வந்து "ஏ புத்திர! எழுந்திரு; உனக்குச் சர்வ மங்களமுமுண்டாகும்" என்று கூறினான். அச்சொற்கள் என் செவியிற் புகுந்ததும் அமுத வருஷத்தில் ஸ்நானஞ் செய்தவன்போலாய் விழித்துக்கொண் டேன். பசி தாகமில்லாதவன் போலவு மானேன்.

பிறகு சந்தோஷங்கொண்டு பக்திப் பெருக்கத்தால் மனமுருகி னேன். உடனே நீராடித் தேவாலயம் சென்று கர்ப்பகிருகத்தில் பிரவேசித்தேன். ஆங்கு எனக்குக் கருணையங்கடலாகிய கந்த பிரான் தரிசனமளித்தார். அந்தப்பரமதயாபரனது அனுக்கிரகத் தால் எனது இருதயத்தில் கலைமகள் பிரவேசித்தாள். பிறகு ஜகத்

பிரபுவாகிய ஸ்ரீசுப்பிரமணியக் கடவுள் தாமரை மலரை யொத்த ஆறுமுகங்களாலும் "வர்ணங்களின் அப்பிராசம் சித்தித்தது" என்ற சூக்திரத்தை எனக்குபதேசம் செய்தார். அச்சூத்திரத்தைக் கேட்டவுடன் மானிட சுபாவத்திற்கு எளிதான சபலத்தன்மையால் மேல் சூத்திரத்தை ஊகித்து நானே கூறினேன். அதைச் செவியுற்றதும் இறைவன் என்னைக் கருணையோடுபார்த்து, "நீ அச்சூக்திரத்தைக் கூறாதிருப்பாயாகில் இச்சாஸ்திரம் பாணினியின் சாஸ்திரத்திற்கு மேலானதாகும். இப்போது இது சொற்பமான தந்திரமுடையதாகையால் காதந்திரம் என்னும் பெயரைப் பெறப் போகிறது" எனக் கூறி அதி விரைவில் அந்த ஸப்ப சாஸ்திரத்தைப் பிரகாசப்படுத்திவிட்டு மறுபடியும் என்னைப் பார்த்து, உன்னைச் சேர்ந்த அரசன் முன் ஜன்மத்தில் ரிஷியாக விருந்தான். பாரத்வாஜ முனிவருடைய மாணாக்கனுன். அப்போது அவனுக்குக் கிருஷ்ணன் என்று பெயர் வழங்கி வந்தது. அவன் மகா தவசியாக விருந்தான். அவன் அப்படியிருந்துவருகையில் ஓர் முனிவரின் புத்திரி அவனிடம் ஆசை கொண்டாள். அவனும் அவள் மேல் ஆசை கொண்டு இருவரும் மன்மத பாணத்திற்கிரையாகி வருந்தினார்கள். அதுகண்ட முனிவர்கள் அவர்களுக்குச் சாபங்கொடுத்தார்கள். அந்த ரிஷியின் குமாரனே இங்குண்டாயிருப்பவன். அந்த முனிவர் புத்திரியே இவ்வரசனுக்கு மனைவியாயிருக்கின்றனள். ரிஷிகுமாரனுகிய சாதவாகன மகாராஜனை நீ கண்டதும் உன் இச்சைப்படி வித்தைகள் யாவும் அவனை யடையப்போகின்றன. மகாத்மாக்கள் ஜன்மாந்தரத்தில் செய்த மிகுந்த புண்ணியவசத்தால் காரியசித்திகளைச் சிரமமில்லாமலும் உத்தமமான பலனுடனும் அடைவார்களல்லவா? என்று இங்ஙனம் கூறி அந்தமங்களமூர்த்தி அந்தர்த்தானமடைந்தார். பிறகு நான் கர்ப்ப கிருகமிருந்து வெளிவந்தேன். அங்கே எனக்குக் குருக்கள்மார் ஆகாரத்திற்காக அரிசிகொடுத்தார்கள். மன்னனே! நான் அந்த அரிசியைப் புசித்துக்கொண்டே வழி நெடுக நடந்து வந்தேன். ஆச்சரியம்! நான் இங்கே வந்து சேரும் வரையில் அந்த அரிசி எனக்கு ஆகாரத்திற்குப் போதுமானதா யிருந்தது என்றான். சர்வவர்மன் இவ்வாறு உரைத்து மௌனமாயிருந்த பின்பு ஸாதவாகனமகாராஜன் சந்தோஷத்துடன் ஸ்நானம் செய்ய எழுந்தான்.

பிறகு நான் வாய்பேசாமல் விவகாரத்திற்குக் கட்டுப்படாமலே அவ்வரசனுக்கு வந்தனஞ் செய்வதையே விடைகேட்பதாகக் கொண்டு என்னிடம் விருப்பமில்லாத அவ்வரசனை விட்டுப் புறப்பட்டேன். அந்த நகரினின்று வெளிப்படும்போது இரண்டு மாணுக்கர்களுடன் தவஞ்செய்ய நிச்சயித்து விந்தியமலையில் வசிக்கும் தேவியைத் தரிசனம் செய்வதற்கு எண்ணினேன். அவ்விதமே அங்கு வந்தேன். அங்குத் தேவி சொப்பனத்தில் உன்னைப் பார்க்கக் கட்டளையிட்டாள். அந்தத்தேவியின் கட்டளைப்படியே பயங்கரமான இவ்வரண்யம் புகுந்தேன். அங்கிருந்த வேடர்களின் சொல்லைக்கேட்டுத் தெய்வகதியாக இவ்வழியையடைந்தேன். இங்கே அநேகம் பிசாசுகளைக் கண்டேன். அந்தப் பிசாசுகள் ஒன்றுக்கொன்று சம்பாஷணை செய்துகொண்டிருந்தன. அந்தச்சம்பாஷணையை நான் வெகுதூரத்திலிருந்து கேட்டுக்கொண்டிருந்தேன். அந்தப்பிசாச பாஷையானது எனக்கு அப்பியாசமாயிற்று. நான் ஏற்கனவே சர்வவர்மனிடம் பிரதிக்ஞைசெய்தபடி நான் படித்த ஸம்ஸ்கிருதமும், பிராகிருதமும், தேசபாஷையும் மானிடர்களை யடைந்து விட்டபடியால் வாய்பேசாமல் மௌனமாகவிருந்தேனல்லவா? அந்த மௌன விருதத்தை விடுவதற்கு இப்பிசாச பாஷை காரணமாயிற்று. பின் நீ உச்சயினி நகரத்திலிருப்பதாக விசாரித்து உன் வருகையை எதிர்பார்த்துக்கொண்டிருந்தேன். உன்னைக் கண்டதும் நான்காவதாகிய இந்தப் பிசாச பாஷையால் உன் வரவை விசாரித்தேன். பின் என் ஜன்மத்தின் வரலாறும் ஞாபகத்திற்கு வந்தது. இதுதான் என் ஜன்மத்தின் விருத்தாந்தம் என்றான்.

குணாட்டியன் இவ்விதம் கூற, காணபூதி அந்தக் குணாட்டியனிடம் "நான் இந்தஇரவில் உன்வரவை அறிந்துகொண்டேன். அவ்விஷயத்தைக்கேள்—

பூதிவர்மன் என்றபெயருடன் இராக்கதன் ஒருவனிருக்கிறான். அவன் திவ்ய ஞானமுள்ளவன். எனக்கு நண்பன். உச்சயினி நகரத்திற்கு அருகே ஓர் மயானமிருக்கிறது. அந்த இராக்கதன் அங்கு இருந்து வருகிறான். நான் அங்கு சென்று அவனைக்கண்டு சாபத்திற்கு முடிவைக்கேட்டேன். அதற்கு

அவ்வரக்கன் "ஓ நண்ப! எங்களுக்குப் பகலில் மகிமையில்லை. நீ இங்கேயேயிரு இரவில் உன் சாபத்தைப்பற்றிக் கூறுகிறேன்" என்றான். நான் அவ்விதமே ஒப்புக்கொண்டு அங்கிருந்தேன். இராத்திரியானதும் வெகு பூதங்கள் கூடிச் சத்தம் செய்தன. அச்சத்தங் கேட்டவுடன் அவ்விதம் பூதங்கள் சந்தோஷிக்கக் காரணத்தைக் கேட்டேன். பூதிவர்மன் என்ற அரக்கன் "ஓ மித்திர! முந்தி பிரமதேவருக்கும் சங்கரனுக்கும் நடந்த ஸம்வாதத்தில் சங்கரன் எதைத் தெரிவித்தாரோ அதை நான் உனக்குக் கூறுகிறேன்" என்று கூறுகிறான்.

"சூரியனுடைய ஒளியால் ஒடுங்கிய இந்த யக்ஷர்களுக்கும் இராக்கதர்களுக்கும் பகற் பொழுதில் மகிமையில்லை. ஆகையால் இரவில் சந்தோஷமடைகின்றன. எங்கே தேவர்கள் பூஜை பெறவில்லையோ, எங்கே அந்தணர்கள் உசிதப்படி பூஜைபெறவில்லையோ, எங்கே அந்தணர்கள் உசிதப்படி சம்மானம் பெறவில்லையோ, எங்கே விதியின்றிப் புசிக்கிறார்களோ அவ்விடங்களில் இவர்கள் உண்டாகிறார்கள். மாம்சம் புசியாதவனும், கற்பு நெறி தவறாத நியமமுள்ள ஸ்திரீயும் இருக்குமிடங்களில் இவர்கள் செல்லார்கள். பரிசுத்தர்களும், சூரர்களும், ஞானமுடையோர்களுமாகிய இவர்களிடம் எப்போதும் இவர்கள் ஆக்கிரமிக்க மாட்டார்கள்" என்று தெரிவித்து மறுபடியும் என்னை நோக்கி "உன் சாபவிமோசனத்திற்குக் காரணமாகிய குணாட்டியன் என்பவன் வந்திருக்கிறான். நீ செல்" என்றான்.

அதைக் கேட்டுப் பின் நான் இங்கே வந்தேன். பிறகுமே உம்மையும் நான் பார்த்தேன். அந்தப் புஷ்பதந்தன் கூறிய கதையை நான் தங்களுக்கு இப்போது கூறுகிறேன். ஆயினும் இதில் எனக்கு ஒரு சந்தேகமிருக்கிறது. அந்தப் புஷ்பதந்தனும் நீயும் மால்யவான் என்று பெயர் பெற்றதற்குக் காரணம் கூறவேண்டும் என்று காணபூதி கூறினன். குணாட்டியன் சொல்லுகிறான்.

கங்கா நதிக்கரையில் பகுசுவர்ணகம் என்ற பெயர்கொண்டஓர் அக்கிரகாரமிருக்கிறது. அவ்வக்கிரகாரத்தில் கோவிந்ததத்தன் என்ற ஒரு அந்தணனிருந்தான். அவன் நல்ல படிப்புள்ளவன். அவனுக்கு அக்கினிதத்தை யென்ற பெயர் பூண்ட மனைவியிருந்தாள். அவள் தன் கணவனையே தெய்வமாகக் கொண்டவள்.

அந்தப் பதிவிருதையிடம் கோவிந்ததத்தன் ஐந்து பிள்ளைகளைச் சரியான காலத்தில் அடைந்தான். அவர்கள் அனைவரும் மூர்க்கர்கள். ஆனால் நல்ல ரூபமுடையவர்கள். அபிமானமுடையவர்கள்,

ஒருசமயம் இந்தக் கோவிந்ததத்தன் வீட்டிற்கு வைச்வாநரன் என்னும் பெயர் கொண்ட அந்தணரொருவர் அதிதியாகவந்தார். அவர் வேறொரு அக்கினியோ வென்று சொல்லத்தக்க திவ்ய தேஜஸுடையவர். இந்த பிராமணோத்தமர் வந்த வேளையில் கோவிந்ததத்தன் வெளியே போயிருந்தான். அப்பொழுது வைச்வானரர் கோவிந்ததத்தனுடைய குமாரர்களைக் கண்டு வந்தனஞ் செய்தார். அவர்கள் பதிலுக்கு வந்தனம் செய்வதை விடுத்து மந்தகாசம் செய்தார்கள். அது கண்டு வைச்வானரர் அந்த கிருகத்தினின்று கோபத்துடன் வெளிப்புறப்பட யத்தனித்தார். அவர் புறப்படும் அச்சமயம் கோவிந்ததத்தன் வந்து சேர்ந்தான். தன் வீட்டுக்கு வந்த அதிதியாகிய வைச்வானரர் கோபத்துடன் செல்கிறாரென்பதை யறிந்த கோவிந்ததத்தன் அவரை வணங்கி மிகவும் வினயத்துடன் கேட்டுக்கொண்டதின் மேல் பிராமண சிரேஷ்டராகிய அவர் "உன்புத்திரர்கள் பதிதர்கள்; மூர்க்கர்கள்; அவர்களுடன் நீ சேர்ந்திருக்கின்றமையால் நீயும் பதிதனாய்விட்டாய். ஆகையால் நான் உன் வீட்டில் போஜனம் செய்யேன். நான் புசிப்பேனாயின் பிராயச்சித்தம் செய்து கொள்ளநேரிடும்" என்றார். இதைக் கேட்டதும் கோவிந்ததத்தன் "பிராமண சிரேஷ்டரே! நான்என் புத்திரர்களாகிய துஷ்டர்களைஸ்பரிசித்ததுமில்லை. அப்படியிருக்கஎன்னையும் பதிதன் என்று விலக்குவது தருமமாகாது" என்றான். அந்தக் கோவிந்ததத்தனுடைய மனைவியாகிய பதிவிருதையும் பிராமணரருகில் வந்து அவ்விதமே தெரிவித்தாள். பிறகு இந்த வைச்வானரர் மிகச்சிரமத்தின்பேரில் ஆதித்தியம் பெற்றுக்கொண்டார். பிறகு கோவிந்ததத்தன் குமாரர்களுள் ஒருவன் தன்னைத்தன் தாயும் தந்தையும் கருணையின்றித் தங்களோடு சேர்த்துக்கொள்ளாது தள்ளிப் பேசியதற்கு வருத்தமுற்றுத் தவம்புரியக் கருதி பதரிகாச்சிரமம் சென்றான். அங்கு ஓரிடத்தமர்ந்து பரமபதியாகிய சிவபெருமானை மகிழ்வித்தற்பொருட்டு முதலில் பச்சிலைகளைத் தின்றும் பிறகு புகையைப் பானம் செய்தும் வெகுகாலம் வரையில் தவம்

செய்தான். அவனது அருந்தவத்திற்கிரங்கி சிவபெருமான் தரிசனம் தந்தார். அது கண்டு மகிழ்ந்த அவன் அவரை வணங்கி அவரிடம் தனக்கு என்றும் அன்பிருக்கவேண்டுமென்பதையே வரமாகக் கேட்டுக்கொண்டான். அதற்குச் சிவபெருமான் "தேவதத்த! உனக்கு என் அனுக்கிரகத்தால் சகல கலைகளும் உண்டாகும். பிறகு பூமியில் எல்லாச் சுகங்களையும் அனுபவிப்பாய். உன் இஷ்டமெல்லாம் நிறைவேறும்" என்று வரமளித்தார்.

பிறகு அந்த தேவதத்தன் கல்வியையடைய விரும்பி பாடலிபுத்திரம் என்ற பட்டணஞ்சென்று அங்கு வேதகும்பர் என்ற குருவையடுத்து அவரிடம் முறையே கல்வி பயின்று வந்தான். குருவின் கட்டளையைச் சிரமேற்கொண்டு அவருக்கு அன்புடன் பணிவிடை புரிந்து வந்தான். இப்படியிருக்கையில் அந்தக் குருவின்மனைவி ஒரு சமயம் காமவெறிகொண்டு தேவதத்தனை பலாத்காரம் செய்தாள். ஸ்திரீகளின் சித்தவிருத்தி சஞ்சலமுடையதன்றோ? பின்தேவதத்தன் இனி இந்நகரத்திலிருக்கக்கூடாதென நினைத்து உடனேபிரதிஷ்டா நகரம் போய்ச் சேர்ந்தான். இங்கே வயதான மனைவியையுடைய மந்திரிஸ்வாமி யென்பவரை குருவாகக் கொண்டு அவரிடம் வித்தைகளை அப்பியசித்து வந்தான்.

ஒருநாள் அந்நகரத்து அரசனாகிய சுசர்மன் என்பவனுடைய குமாரி ஸ்ரீயென்பவள் கல்வியில் தேர்ந்தவனும், ரூபவானுமாகிய இந்த தேவதத்தனை லக்ஷ்மிதேவி நாராயணமூர்த்தியைப் பார்ப்பதுபோல் பலகணியின் வழியே பார்த்தாள். தேவதத்தனும் பலகணியின் அருகே இருக்கும் கன்னிகையைப் பார்த்தான். அக்கன்னிகை விமானத்தின்மீது சஞ்சரிக்கும் சந்திரனுடைய அதிதேவதை போலிருந்தாள். ஸ்ரீ என்ற அந்த ராஜகுமாரியால் தேவதத்தனும் தேவதத்தனால் அந்த ஸ்ரீயும் மன்மதனாகிய சங்கிலியால் கட்டுண்டு இருந்த இடம் விட்டு அசையத் திறமையற்றவர்களானார்கள். ஆசையால் அச்சமயம் அந்த இராஜகுமாரியானவள் பிரத்தியக்ஷமான மன்மதனுடைய ஆக்ஞைபோல் தன்னுடைய கைவிரலால் இங்கு வா என் சமீபம் என்று சைகை செய்தாள். தேவதத்தன் உடனே புறப்பட்டு

இராஜ அரமனையில் அந்தமாது இருக்குமிடம் செல்ல அவன் மீது அந்த ஸ்ரீயானவள் தன் பல்லால் மலரை எடுத்துப் போட்டாள். இராஜகுமாரி செய்த இந்த இரகசியமான சைகையின் இரகசியம் இன்னதென்று அறியாமல் செய்யவேண்டியது இன்னதென்பதையும் தெரிந்துகொள்ளாமல் தன் குருவின் வீட்டுக்குச் சென்று அங்கே தரையில் விழுந்து புரண்டான். ஒன்றும் சொல்லத் தெரியாமல் தனக்குள் மிக்வும் வருந்தினன். மோசம்போன ஊமையன் போலானன். இதை அவனுடைய குரு கண்டதும் மகா புத்திசாலியாகையால் அவர் அவனிடம் காமவேதனையாலேற்படும் சின்னங்களை ஊகித்தறிந்து அவனைக் காரணம் கேட்டார். அவன் பிரயாசத்தின்பேரில் நடந்த விவரங்களைக் கூறினன். குரு சற்று யோசித்துப்பார்த்துத் தமது புத்தி நுட்பத்தால், "ஏ மாணவ! இராஜகுமாரத்தி பல்லால் புஷ்பத்தை யெடுத்து உன் மேல் போட்டாளன்றோ? ஆசையால் புஷ்பங்கள் நிறைந்த புஷ்பதந்தம் என்னும் தேவாலயத்திற்கு நீ சென்று அவளுக்காக எதிர்பார்த்துக் கொண்டிரு; இப்போதே நீ செல்லலாம்" என்றார். தேவதத்தன் அவ்விதமே புஷ்பதந்தம் என்னும் தேவாலயம் சென்று அங்குகாத்திருந்தான். அந்த இராஜகுமாரத்தியும் அஷ்டமி விருதத்தை யுத்தேசித்து அந்த ஆலயம் வந்தாள். அவள் தனியே வந்தவளாகையால் சுவாமியைத் தரிசனம் செய்யக் கர்ப்பகிருகத்தில் பிரவேசித்தாள். அந்த கர்ப்பகிருகத்தின்வாயிற்படியில் தேவதத்தன் இராஜகுமாரத்தியைச் சந்தித்தான். அவளும் இவனைப் பார்த்துவிட்டாள். உடனே தேவதத்தன் விரைந்து அந்த ஸ்திரீரத்தினத்தின் கழுத்தைக் கட்டித்தழுவிக் கொண்டான். அதனல் ஸ்ரீ புளகாங்கிதமுற்று அந்த வாலிபனை நோக்கி "அன்று யான் செய்த சைகையை நீ எவ்வாறறிந்தாய்?" என, தேவதத்தன் "பெண்மணியே! நான் அதைத் தெரிந்துகொள்ளவில்லை. என்மீது அன்புள்ள என் குரு நீ செய்த சைகை இன்னதெனவறிந்து எனக்குக் கூறினர்" என்று உண்மையைத் தெரிவித்தான். இதைச் செவியுற்றதும் ஸ்ரீயின் முகமானது மாறிவிட்டது. உடனே தேவதத்தனை எறிட்டு நோக்கி, "அப்படியா? செய்; என்னைவிடு முட்டாளே என்னைவிடு" எனச்சினந்து கூறிச் சரேலென்று அவனிடமிருந்து விடுபட்டு முகத்தைத் திருப்பிக்கொண்டு குனிந்த

வண்ணத்தில் "ஓ! இந்த இரகசியம் வெளியாமாயின் நாமென்ன செய்வ" தென்கிற வியாகுலத்துடன் தன் வீடு சென்றாள்.

இவ்விதம் தரிசனந்தந்து மறைந்ததும் தேவதத்தன் அந்த இராஜபுத்திரியை நினைத்து நினைத்து மனம் நொந்து விரகதாபத்தோடு அங்கிருந்து வெளிப்பட்டான். இவன் மீது இரக்கங்கொண்ட பரமகருணாநிதியாகிய பரமசிவன் தமது கணத்துள் பஞ்சசிகன் என்பவனை யழைத்துத் "தேவதத்தனுடைய மனோபீஷ்டத்தை நிறைவேற்றி வா" என்றுத்தரவிட, அவன் அவ்வாறே தேவதத்தனிடம் வந்து அவனைத் தேற்றி பிறர் எவரும் புருடனென்றறியா வண்ணம் ஸ்திரீ வேடந்தரித்துக் கொள்ளும்படி செய்து அவனை யழைத்துக்கொண்டு சுசர்மராஜனிடம் சென்றான். சுந்தரமான நேத்திரமுடைய ஸ்ரீயின் தந்தையாகிய சுசர்மன் அவர்களைக் கண்டதும் மிகவும் வினயத்துடன் உபசரித்து, இங்கு வந்ததன் காரணமென்னவென்று வினவ, பஞ்சசிகன் அவ்வரசனை நோக்கி, "மகாராஜாவே! என் மகன் எங்கேயோ போய்விட்டான். அவனைத் தேடிக்கொண்டு செல்கிறேன். இந்தமாது என் மருமகள். இவளை நான் திரும்பி வரும் வரையில் தமதரண்மனையிலேயே வைத்துக் காப்பாற்றிவரவேண்டும்; இந்தப் பேருதவிபுரியவேண்டும்" என்று வேண்டிக் கொண்டான். அரசன், நாம் இதை மறுப்போமாகில், நமக்குப் பிராமணசாபமேற்படுமென்கிற அச்சத்தால் அந்தப் பஞ்சசிகனது வேண்டுகோளுக்கிணங்கி தேவதத்தனை உண்மையில் மாதெனவே நம்பி, அவனைத் தனதருமை மகளாகிய ஸ்ரீ யிருக்குமிடம் அனுப்பி அங்கிருந்துவரத் திட்டப்படுத்தினான். பின் பஞ்சசிகன் அவ்வேந்தனிடம் விடை பெற்றுக்கொண்டு சென்றான்.

தேவதத்தன் மனமகிழ்ச்சியுடன் தான் ஆசைப்பட்ட மாதினிடமிருந்து வருகையில் நாளடையில் தன்னை அவள் நம்பும்படி நடந்துகொண்டான். பின்னர் ஓர் நாளிரவு அந்த ஸ்ரீ தேவதத்தனை இன்னானென்று அறிந்து அவன் சாமர்த்தியத்திற்கு மெச்சி அவனை ஆண்வேடந்தரித்துக் கொள்ளும்படி செய்து அந்த இராப் பொழுதிலேயே காந்தருவ விவாகம் செய்துகொண்டாள். இதன் பிறகு சிலநாளைக்கெல்லாம் ஸ்ரீ என்னும் அந்த மாது கர்ப்பந்தரித்தாள். அதனையறிந்த தேவதத்தன் அப்பொழுதே

பஞ்சசிகனை மனதில் நினைத்தான். உடனே அந்த கண சிரேஷ்டன் இரவில் தேவதத்தன்முன் தோன்றி அவனை யாரு மறியாமல் அரமனையிலிருந்து அழைத்துச் சென்றான்.

பிறகு மறுநாள் காலையில் பஞ்சசிகன் தேவதத்தனை அவன் சுயரூபத்துடன் சுசர்மராஜனிடம் அழைத்துச் சென்று அரசனைப் பார்த்து "மகாராஜாவே! என் மகனைக் கண்டு பிடித்து இதோ அழைத்து வந்துவிட்டேன். என் மருமகளைத் தயைசெய்து அனுப் பித்தர வேண்டும்" என்று கேட்டான். சுசர்மராஜன் சரி, அப் படியே செய்வோமென்று கூறி அந்தப்புரத்தில் விசாரிக்க, இரவில் எங்கேயோ ஓடிப்போய்விட்டதாகச் சொல்லக்கேட்டு உடனே தன் அமைச்சர்களை வரவழைத்துச் சபை கூட்டி, "அமைச்சர்களே! இவன் பிராமணனல்ல; இவன் யாரோ ஒரு தேவன். இந்த மாதிரி யான விவகாரம் எப்போதும் நடப்பதுண்டு. முன்னொரு காலத் தில் சிபி என்றொரு சக்ரவர்த்தி யிருந்தான். அவன் மகா பரிசுத் தன். தபோமகிமை வாய்ந்தவன். தருமநெறி தவறாதவன். சாந்தகுண சீலன் இரக்கம் என்கிற மகா உத்தமமான குணத்தைத் தனக்கோர் சிறந்தஆபரணமாகக் கொண்டவன். சிறிதும் சலிக்காது கொடுக்கும் கொடையாளி. தன்னைப் புகல்புகுந்தார்க்குத் தன் இன்னுயிரையுங் கொடுத்துக்காக்கும் அருளுடையவன்.

இத்தகைய சிறந்த குணங்களமைந்த உத்தமபுருஷனாகிய அரசனை எவ்விதத்திலேனும் மோசஞ்செய்ய வேண்டுமென்று இந் திரனும் தருமதேவதையுமெண்ணி, தங்களுடைய எண்ணத்தை நிறைவேற்றுவதன்பொருட்டு இந்திரன் பருந்துருவங்கொண்டான். தருமதேவதை மாடப்புறா வடிவமெடுத்துக்கொண்டு உயரப்பறந் தான். இந்திரனாகிய பருந்து உயரப்பறந்து செல்லும் தருமதேவ தையாகிய மாடப்புறாவைத் தொடர்ந்து பறந்து சென்று வெரட்டி யது. மாடப்புறா பருந்துக்குப் பயந்தது போற் பாசாங்குசெய்து அங்குமிங்கும் பறந்து சென்று கடைசியில் சிபிச்சக்ரவர்த்தியின் மாளிகைக்குட்புகுந்து அவன்மடிமீதுபோயுட்கார்ந்தது. தொடர்ந்து சென்றபருந்தும் மாளிகைக்குட்புகுந்து அரசன்முன்னிலையிலிருந்து அவனைப் பார்த்து, "மன்னா! இந்தப்புறாவை விட்டு விடும்; நான் எனக்கு இதை உணவாக்கிக்கொள்ளக் கருதித் துரத்திவந்தேன். இப்

பொழுது இந்தப் புறாவை யானடையப்பெறேனாகில் மரணமடைவேன்; இது நிச்சயம். அங்ஙனம் நேருமாயின் உமது தருமம் நிலைபெறுவதெப்படி?" என்று கூறிற்று. சிபிச்சக்ரவர்த்தி "பருந்தே! நீ சொல்வதுண்மையே, இந்தப்புறாவோ என்னிடம் அடைக்கலம் புகுந்திருக்கிறது. நான் இதை இச்சமயம் எப்படி உன்னிடம் விடுவேன். விடுவது தருமமல்ல; இதற்குப் பதிலாக நீ வேறு எந்த இறைச்சியையேனும் கேள்; தருகின்றேன்" என்றான். பருந்து அப்படியாயின் "எனக்கு உமது சரீரத்திலுள்ள இறைச்சியைக்கொடும்; இந்தப் புறாவிற்குச் சமமாக நான் அதைத்தான் பெற விரும்புகிறேன்" என்று கேட்டது.

இச்சொற்களைக் கேட்டதும், சக்கரவர்த்தி எப்படியாயினும் சரி, "நமது தருமம் நிலைநிற்கவேண்டும்; அதுதான் நாம் விரும்புவ" தென்று மகிழ்வுற்று "அவ்விதமே தருகிறேன்" என்று ஒப்புக்கொண்டான். உடனே பருந்தானது அரசனை நோக்கி "என் ஐயனே! இந்தப்புறா எவ்வளவு பளுவிருக்கின்றதோ அவ்வளவு மாம்சம் எனக்குக்கிடைத்தால் போதுமென, அரசன் அதற்கிணங்கி ஒரு தராசுவரவழைத்து அதன் ஒருதட்டில் புறாவை வைத்துத் தன் தேகத்தில் ஓரிடத்தைக் கொஞ்சம் சேதித்து சிறிது இறைச்சியெடுத்து மற்றொரு தட்டில் வைத்தான். அது பற்றாதது கண்டு மறுபடியும் கொஞ்சம் அறுத்து வைத்தான். அதுவும் போதாமல் இன்னும் வேண்டுமென்று தெரியவே இன்னும் ஓரளவு மாமிசம் சேதித்து வைக்க, அதுவும் போதாமலிருக்க இப்படியே எவ்வளவு மாமிசம் அறுத்தறுத்து வைத்தும் புறாவின் அளவேமிகுந்திருக்கக்கண்டு அந்தத் தட்டில் தானே ஏறிநின்றான். அப்பொழுது "சரி சரி" என்ற அசரீரி வாக்குண்டாயிற்று. அன்றி த்தட்டும் சரியாய் ஏற்றத்தாழ்வின்றி யிருந்தது.

பிறகு பருந்தாயிருந்த இந்திரன் தன் சுயவடிவமெடுத்துக்கொண்டு சிபிச்சக்கிரவர்த்தியைத் தோத்தரிக்கலானான், புறாவாயிருந்த தருமதேவதையும் தன் சுயவடிவங்கொண்டு தோத்தரித்தான். சக்ரவர்த்திக்கு இருவருமாகச் சேர்ந்து குறைவற்ற சரீரத்தை யுண்டாக்கினார்கள். பிறகு அவன் விரும்பிய வரங்களை மகிழ்ச்சியுடனளித்து மறைந்தார்கள். மந்திரிகளே!" இவ்விதமே என்னையும் பரீ

க்ஷை செய்யக் கருதி யாரோ ஒரு தேவன் வந்திருக்கிறான்? இது உண்மை" யென்றுகூறி உடனே அந்த கணசிரேஷ்டனிடம் வந்து அவனை வணங்கி "பிராமணோத்தமரே! எனக்கு அபயம் அளிக்கவேண்டும். உமது மருமகளை நான் இரவும் பகலும் தக்க காவல்களேற்படுத்திக் காத்துவந்தும் நேற்றிரவு யாருடைய மாயையாலோ அபகரிக்கப்பட்டு இப்பொழுது எந்த இடஞ் சென்றாளென்பதே தெரியவில்லை. என்னை மன்னிக்கவேண்டும்" என பிராமண ரூபங்கொண்ட அந்த கணசிரேஷ்டன் "சரி அப்படியாயின் எனது குமாரனுக்குத்தமதுகுமாரத்தியை விவாகம் செய்து கொடுப்பதை யன்றி வேறு வழியைக் காணோம்" என்று சொன்னான். மன்னன் அந்தணன் சபித்துவிடுவானெனவஞ்சித் தன் பெண்ணைக் கொடுக்கச் சம்மதித்து ஒரு நல்ல முகூர்த்தம் அக்கணமே பார்த்து நிச்சயித்து அந்தத் தேவதத்தனுக்கு ஸ்ரீயைக் கொடுத்து விவாகத்தைமுடித்தான். பிறகு பஞ்சசிகன் அரசனிடம் விடைபெற்றுக்கொண்டு தன்னிருப்பிடம் சென்றான். தேவதத்தன் தன் காதற்கிசைந்த அதிசுந்தரரூபவதியாகிய ஸ்ரீயை யடைந்ததற்கு மிகவும்மகிழ்வுற்றான். அந்தச் சுசர்மராஜனுக்கு வேறு ஆண் சந்ததியில்லையாதலால் அவ்வரசனது சொத்துக்களைத் தேவதத்தனும் ஸ்ரீயுமே அனுபவித்தார்கள். பிறகு ஸ்ரீ யென்கிற அந்த சுந்தரவனிதை பகீரதன் என்னுமோர்மகனைப் பெற்றாள். சுசர்மன் தன்பேரனாகிய பகீரதனுக்கு வயதுவந்ததும் தன்னுடைய இராஜ்யத்திற்கு அவனை அரசனாக்கிமுடி சூட்டுவித்துத்தவம் புரியக் கருதி வனஞ்சென்றான். பின் சில வருடங்கள் சென்றதன் மேல் தேவதத்தனும் தன் மனைவி ஸ்ரீ யுடன் தபோவனமேகினன். அங்கே தேவதத்தன் மீண்டும் பரமசிவனைக் குறித்துத்தவம்புரிந்து மானிடசரீரத்தை யொழித்து அந்த ஜகதீசனுடைய கருணையால் அவரது கணங்களுள் ஒருவனாகவிருக்குந் தன்மையை யடைந்தான். இந்தத் தேவதத்தன் மீது காதல்கொண்ட ஸ்ரீயென்பவள் புஷ்பங்களை யெறிந்து செய்த சைகையை இவன் அறியாததன்காரணமாக இவனுக்கு இங்கே கணங்களுடைய சபையில் புஷ்பதந்தன் என்றே பெயருண்டாயிற்று. இவனுடைய மனைவியாகிய ஸ்ரீயென்பவள் ஜயையென்கிற பெயர் பெற்று உமாதேவியின் பணிவிடைப் பெண்களுள் ஒருத்தியாயினள்.

இனி என் வரலாறு கூறுகின்றேன் கேள்—"தேவதத்தன் தந்தையாகிய கோவிந்ததத்தனைப்பற்றி முன்னமேயே கூறினேனன்றோ? முதலில் அவருக்குப் புத்திரனாகப் பிறந்து ஸோமதத்தன் என்ற பெயர் பெற்றிருந்தேன். அப்பொழுது இமயகிரி சென்று சிலகாலம் தவம்புரிந்தேன். பிறகு நாடோறும் மலர்களைக்கொய்து மெய்யன்போடு பரமபதியாகிய சிவபெருமானைப் பூசித்துவந்தேன். எனது பக்திக்கிரங்கிய அந்த உமாகாந்தன் என்முன் தோன்றி நீ விரும்பும் வரனைக்கேள்" என்று கூறினர். நான் என்னுடைய சுகத்தைச் சிறிதும் விரும்பாது என் அப்பனே! என்னையாண்டருளும் கருணாநிதியே! அடியேனை நினது கணத்துள் ஒருவனாகக் கொண்டு அருள் புரியவேண்டுமெனக் கேட்டேன். அதைக்கேட்ட கருணையங்கடலாகிய சந்திரசேகரமூர்த்தி "அன்பனே! நீஎன்னை நாடோறும் நல்லவாசனையுள்ள புஷ்பங்களைக்கொய்து அன்போடு பூசை புரிந்து வந்தமையால் உன்னை விரும்பியவாறே எமது கணத்துள் ஒருவனாகக் கொண்டோமாகையால் நீ மால்யவான் என்ற பெயருடன் கணக்கூட்டத்துள்ளிருந்து வரக்கடவாய்; என்றுவரமருளி மறைந்தனர்; பிறகு இறைவனது திருவருளால் கணங்களுள் ஒருவனானேன்; அன்று முதல் நான் மால்யவானென்றபெயரையடைந்தேன்.

ஓ காணபூதியே! நான் மறுபடியும் பார்வதிதேவியின் சாபத்தால் மானிடனாகப்பிறந்தேன். ஆகையால் பரமசிவன் திருவாய் மலர்ந்தருளிய அந்தக்கதையை இப்போது சொல்லவேண்டும். நம்மிருவருக்கும் சாபத்தினால் நேர்ந்திருக்குங் கஷ்டங்கள் அதனால் தீரவேண்டும் என்றான்

# எட்டாவது தரங்கம்.

இவ்விதம குணாட்டியன் சொல்லக்காணபூதி! ஏழுகதைகளைத் தன்னுடைய பாஷையில் கூறினான். குணாட்டியன் அக்கதைக

ளேழையும் ஏழுவருடங்களில் ஏழுலக்ஷங்கிரந்தங்களாக பிசாசபா ஷையில் செய்தான். அவ்வேழுகதைகளையும் வித்தியாதரர்கள் தெரிந்து கொள்ளக்கூடாதெனக் கருதி வனத்திற்குச் சென்று அங்கு மசியில்லாமையால் தன்னுடைய இரத்தத்தைக்கொண்டு எழுதி முடித்தான். அச்சரித்திரங்களைக் கேட்கச்சித்தர்கள் வித்தியாதரர் கள்முதலியயாவரும் வந்து கூடினார்கள். பிறகு காணபூதி சாபம் நீங் கப்பெற்றுத் தன்னுடைய இருப்பிடம் சென்றான். அந்தக் காணபூதி யோடு சேர்ந்திருந்த பிசாசுகளும் தேவர்களுக்குரிய இச்சரித்திர ஙதைக் கேட்டதும் சொர்க்கலோகம் சென்றன.

பின் குணாட்டியன் என்ற அந்த மகாகவி, "நாம் செய்த இந்தப் பெருங்கதையை நமது சாபவிமோசன காலத்தில் உலகத்தில் பிர சித்தியடையும்படி செய்யவேண்டுமென்பதல்லவா தேவியின் கட் டளை; அதைஎப்படி நிறைவேற்றுவது? யாருக்கு இக்கதையைப்போதி த்து உலகத்தில் பரவும்படி செய்வது" என்கிற கவலையுடனிருந்தான். இதனையறிந்த குணதேவன், நந்திதேவன் என்கிற அவனது மா ணவருள் இருவர் அங்ஙனம் கவலைகொண்ட தங்கள் குருவை நோக்கி, " எங்கள் ஐயனே! தாங்கள் செய்த சரிதையை அர்ப்பணஞ்செய்யப் பாத்திரமானவன் சாதவாகனமகாராஜன் ஒருவ னேயாவான்: காற்றானது மலரினின்று மணத்தைக் கிரகிப்பது போல் காவ்யத்தைக் கிரகிப்பவனன்றோ இரசிகன்?" என்று கூறினார்கள். உடனே குணாட்டியன் தன்னுடைய மாணவர் இருவரையும் பார்த்து " நல்லயோசனை சொன்னீர்கள்; நீங்கள் சொன்னதுபோல் அவ்விறைவனே இக்கதையைப் பெறத்தக்க வன். ஆகையால் இப்புத்தகத்தை யெடுத்துக்கொள்ளுங்கள்; நாம் சாதாவாகனனிடம் செல்வோம்" என்று கூறிப் புத்தகத்தைத் தன் னுடைய மாணவர்களிடம் கொடுக்க, அவர்கள் அப்புத்த கத்தை மிக்கவணக்கத்துடன் பெற்றுக்கொண்டு புறப்படத் தயா ராயிருந்தார்கள். பிறகு குணாட்டியன் ஓர் சுபதினத்தில் தன் மாணவர் இருவரையும் அழைத்துக்கொண்டு பிரதிஷ்டாநகரம் என்னும் அவ்விறைவனது நகரம் சென்று அங்கு தேவர்களால் அமைக்கப்பட்ட உத்தியானவனத்தில் தங்கி, மாணவரிருவரையும் அரசனிடம் போய் வரும்படியனுப்பினான்.

அவர்களிருவரும் தங்கள் குருவின் கட்டளையைச்சிரமேற்கொண்டு விரைந்து அரசனிடம் சென்று, " பிரபுவே! இந்நூல் எங்கள் குருவாகிய குணாட்டியருடைய கிருதியென்று அந்த நூலைக்காட்டினார்கள். அரசன் உடனே, " அப்படியா! நல்லது, இந்நூல் எந்தபாஷையிற் செய்யப்பட்டுள்ளது? கிரந்தங்கள் இதனில் எவ்வளவு அடங்கி யிருக்கின்றன" என்று வினவ, அவர்கள் நடந்த வரலாறு கூறினார்கள். அரசன் உடனே அவ்விரு மாணவர்களையும் பிசாசென நினைத்து அவர்களை நோக்கி " இந்நூலில் அடங்கியுள்ள கிரந்தமோ எழுலக்ஷம்; இதுஎழுதப்பட்டுள்ள பாஷையோ இரசமற்ற பிசாசபாஷை! அன்றி இது இரத்தத்தால் எழுதப் பட்டிருக்கிறது. ஆகவே இந்தப் பிசாசுக் கதை நிந்தைக்குரியதாகும். நாம் இதை விரும்போம்" என்று தான் கற்ற வித்தையின் மதத்தினால் கூறினான். உடனே மாணவரிருவரும் அந்தப் புத்தகத்தை யெடுத்துக்கொண்டு வந்து தங்கள் குருவினிடம் மிக்க வருத்தத்துடன் கொடுத்து சங்கதி தெரிவித்தார்கள். குணாட்டியன் அச்சங்கதி கேட்டதும் பொறுக்கொணாத வருத்தத்துள் மூழ்கிப்பல படி யோசனைசெய்தான். பின் அங்கிருந்து தன் மாணவர்களுடன் புறப்பட்டு அந்நகரத்தைச் சார்ந்த மலையடிவாரத்திற்குச் சென்று அங்கு பரிசுத்தமான ஓரிடத்தில் அக்னிகுண்டம் ஏற்படுத்தினான். அதன் முன்பு தான் நின்றுகொண்டு தன்னுடைய மாணவர்களிடம் தான் செய்த நூலினின்று ஒவ்வொரு ஏடாகக்கொடுத்துப் படிக்கச் சொல்லி அங்கிருந்த விலங்கினங்களுக்கும் பறவைகளுக்கும் சிரவணம் செய்வித்தான். படித்துமுடிந்த ஒவ்வொரு ஏட்டையும் தன் மாணவர்கள் பார்த்துக்கொண்டிருக்கும் போதே தன் கண்களில் அருவிபோல் நீர்பெருக நின்று அக்னியில் போட்டு எரித்தான். அப்போது அதினின்று கிடைக்கப்பெற்ற நரவாகனதத்தனுடைய சரித்திரத்தை மாணவர்கள் விரும்பியபடியால், அதைமட்டும் அக்கினியில் போடாது மீதி வைத்து மற்றவைகளை மனவருத்தத்துடன் போட்டு எரித்தான்.

இவ்வாறு குணாட்டியன் தான் செய்த நூலைப்படித்துக் காட்டும்படி செய்து அக்கினியில் போட்டு எரிக்கும்போது அங்கிருந்த பன்றிகள், மான்கள், எருமைகள், முதலிய மிருகங்கள் யாவும் கதை கேட்டவாறே அவ்விடத்தில் சூழ்ந்து கொண்டிருந்தன. புற்

களையும் அவைகள் அச்சமயம் விரும்பவில்லை. இச்சமயத்தில் சாதவாகனராஜனுக்குத் தேக அசௌக்கிய மேற்பட்டிருந்தது. அரமனைவைத்தியர்கள் அரசனது கைபார்த்து யோசித்து "மன்னனே! சத்தில்லாத மாம்சத்தைப் புசித்தமையால் இப்போது தேக அசௌக்கியம் ஏற்பட்டிருக்கிற" தென்று கூறக் கேட்டு உடனே மன்னன் தன்னுடைய சமயற்காரனையழைத்து விசாரித்தான். சமயற்காரன் "ஐயனே! நான் எதைக் கண்டேன். வேடர்கள் கொண்டு வந்து கொடுக்கும் இறைச்சியை நான் சமையல் செய்கிறேன்" என, அரசன், உடனே வேடர்களை அழைத்து வரச்செய்து அவர்களைக் காரணம் கேட்டான். அவர்கள், "மகாராஜாவே! மலையடிவாரத்தில் ஓர் அந்தணர் ஒரு பெரிய அக்கினிகுண்டம் வளர்த்து அதன் முன் நின்று கொண்டு ஒரு புத்தகத்திலிருந்து ஒவ்வொரு ஏடாக எடுத்து அவருக்குப் பக்கத்திலிருக்கும் வேறு இருவரிடம் கொடுத்து அதைப் படிக்கச் சொல்லுகிறார். பிறகு அவ்வேட்டை வாங்கி அக்கினி குண்டத்தில் போட்டு எரித்து விடுகிறார். அங்குள்ள விலங்கினங்கள் யாவும் அவர்கள் படிக்கும் விஷயங்களுக்குச் செவி கொடுத்துக்கொண்டு தங்கள் ஆகாரத்தை விரும்பாமல் அசைவற்று இருந்த இடத்திலேயே நிற்கின்றன. ஆகலால் தான் நாங்கள் கொண்டு வரும் மாமிசம் சத்தின்றி யிருக்கின்றது" என்று கூறினார்கள். உடனே அரசன் பல்லக்கிலேறி அந்த மலையடிவாரம் சென்று கண்களிலிருந்து நீர் பெருக விலங்கினங்களுக்கிடையே நின்று கொண்டு அக்கினியில் ஏட்டைப் போட்டு எரித்துக்கொண்டிருக்கும் குணாட்டியனைக் கண்டு வந்தனம் செய்து இங்ஙனம் நூலையெரிப்பதற்குக் காரணம் என்னவென்று கேட்டனன். குணாட்டியன் பூதபாஷையில் புஷ்பதந்தனது வரலாற்றையும் அதன் மூலமாகக் கதை யேற்பட்டதையும் அரசனுக்குத் தெரிவித்தான். அரசன் குணாட்டியனை பரமசிவகணத்துள் ஒருவனெனவறிந்து, அவனுடைய திருவடிகளிற் பணிந்து சிவபெருமான் திருவாய்மலர்ந்தருளிய அந்தக் கதையைத் தரும்படி கேட்டான். "குணாட்டியன் அரசனே! நான் ஆறுலக்ஷம் கிரந்தங்களையும் பொசுக்கிவிட்டேன். ஆறுகதைகள் எரிந்து போய் விட்டன; ஒருலக்ஷம் கிரந்தமுடைய ஒருகதை யிருக்கிறது. அதைவேண்டுமானால் எடுத்துக் கொள்ளலாம். எனது மாணவர்களாகிய இவ்விரு

வரும் இந்தக்கதைக்கு வியாக்கியானஞ் செய்வார்கள்" என்று கூறி அரசனிடம் விடைபெற்றுக்கொண்டு தன் சரீரத்தை யோகமகிமையாலொழித்து விட்டுச் சாப விமோசனம் பெற்றுத் தனது இருப்பிடம் சென்றான்.

பின் சாதவாகனன் பிருகத்கதை என்ற பெயருடைய அந்த நரவாகனதத்தன் சரித்திரத்தை யெடுத்துக்கொண்டு அரமனைக்கு வந்து சேர்ந்தான். குணதேவன், நந்திதேவன் இருவருக்கும், பூமி பொருள், வஸ்திரம், வாகனம் இவைகளைக் கொடுத்துச் சந்தோஷப்படுத்தினான்.

அரசனது வேண்டுகோளின்படி அந்தக் கதைக்குக் குணதேவன், நந்திதேவன் இருவரும் பீடிகையைச் செய்து முடித்தார்கள். இக்கதை மனதிற்கு இரம்மியமாயிருக்கும். தேவர்களின் சரித்திரங்களையும் மறக்கச்செய்யும்.

முதலாவது கதாபீடலம்பகம்.

முற்றுப் பெற்றது.

# கதாமுக லம்பகம்.

## முதலாவது தரங்கம்.

### பரசிவவணக்கம்.

---

சகல புவனகர்த்தாவாகிய சிவபெருமான் பார்வதீ தேவியைப் புதிதாக ஆலிங்கனஞ் செய்தபோது, அவரது நுதற்கண்ணினின்று தோன்றிய அக்கினிக்குப் பயந்த சமயம் காமன் பிரயோகித்த வாருணாஸ்திரம் போலுண்டான வேர்வை நீரானது உங்களை இரக்ஷிக்கக்கடவது.

முன் சைலைபங்கிரியில் சங்கரனிடமிருந்து கணசிரேஷ்டனாகிய புஷ்பதந்தனும் பின் வாருசியாகப் பிறந்த அந்தப் புஷ்பதந்தனிடமிருந்து காணபூதியும் காணபூதியிடமிருந்து குணாட்டியனும் குணாட்டியனிடமிருந்து சாதவாகனனுமாக அடைந்த வித்தியாதானுடைய சரித்திரத்தைக் கேளுங்கள்.

வற்சமென்னும் பெயர்கொண்ட தேசமொன்றுண்டு. இது முதலில் சொர்க்கத்தைப் படைத்த பிர்மதேவனால் அந்தச் சொர்க்கத்தின் கருவத்தை அடக்குவதன் பொருட்டு புவியின் கண்ணும் படைக்கப்பட்டதோ வென்று சொல்லத்தக்க சிறப்பினையுடையது. இந்தத் தேசத்தின் நடுவே கௌசாம்பி யென்றோர் நகரமொன்றிருக்கிறது. இப்பட்டணமானது இலக்குமி தேவியின் வாசஸ்தலம் போன்றது. இந்த திவ்ய நகரத்தில் சதானீகன் என்ற ஓர் அரசனிருந்தான். இவன் பாண்டவர்களின் வம்சத்திற் பிறந்தவன் ஜனமேஜய மகாராஜனுக்குக் குமாரன். பரீக்ஷித்துக்குப் பௌத்திரன். அபிமன்னியுவுக்குப் பிரபௌத்திரன். இந்தச் சதானீக ராஜனுக்குத் திரிபுராந்தகனாகிய சிவபெருமானுடன் அமர்புரிந்த வில்லாளியாகிய அர்ச்சுனனே, ஆதி புருஷனாக ஏற்பட்டவன். பூதேவியும் விஷ்ணுமதியுமே அவ்வரசனுக்கு மனைவிகளாக

விருந்தார்கள். பூதேவி இரத்தினங்களை யுண்டு பண்ணினாள். மற்றொருத்தியாகிய விஷ்ணுமதி யென்பவளோ புத்திரனையேனும் உண்டுபண்ணினாளில்லை.

இவ்வரசன் ஓர் நாள் கானகம் சென்று வேட்டையாடி வந்தான். அப்பொழுது அவனுக்கு அங்கு தவம் புரிந்து வந்த சாண்டில்லிய முனிவருடைய பழக்க மேற்பட்டது. அரசன் அந்த முனிவரிடம் தனக்கு மக்கட்பேறுண்டாகும்படி அனுக்கிரகம் செய்ய வேண்டுமென்று வேண்டிக் கொண்டனன். முனிவர் அரசனுடைய வேண்டுகோளுக்கிணங்கி அவனுடன் கௌசாம்பி நகரம் வந்து புத்திரசம்பத்துண்டாகும்படி மந்திரத்தால் ஹவிஸ்ஸை பரிசுத்தம் செய்து விஷ்ணுமதிக்குக் கொடுத்தார். விஷ்ணுமதி அந்த ஹவிஸ்ஸைப் புசித்த சில நாளைக்கெல்லாம் கர்ப்பந்தரித்து ஓர் புத்திரனைப் பெற்றாள். அந்தப் புத்திரனுக்கு அரசன் ஸஹஸ்ரானீகன் எனப் பெயரிட்டு மிகச்செல்வமாய் வளர்த்து வந்து தக்க வயது வந்ததும் அவனுக்கு யுவராஜ பட்டாபிஷேகமும் செய்வித்தான். அதனால் அரசன் ராஜ்யபாரம் குறைந்து சந்துஷ்டியாகக் காலங் கழிக்கலாயினன்.

இப்படியிருக்கையில் ஒரு சமயம் வழக்கம்போல் தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் யுத்தந் தொடங்கியபடியால் இந்திரன் இந்த சதானீகனிடம் உதவியை விரும்பி மாதலியை யனுப்பினான். இந்திரன் தன்னுதவியை விரும்பும் செய்தி கேட்டதும் சதானீகன் மகிழ்வுற்றுத் தன் பிரதான மந்திரியாகிய சுப்பிரதீகனை யழைத்து புத்திரன் ஸஹஸ்ரானீகனையும் இராஜ்யத்தையும் அவனிடம் ஒப்புவித்துச் சிறிதும் காலதாமதம் செய்யாமல் இந்திரனிடம் சென்றான். இந்திரன் இப்பொழுது அசுரர்களை யெதிர்த்து அமராடிக் கொண்டு வருகிறானாதலால் சதானீகனும் அந்த யுத்தத்திற்கலந்து அசுரர்களிற் பலரைக் கொன்று தானும் யுத்தகளத்திலேயே மரணமடைந்து வீர சொர்க்கம் சென்றான்.

சதானீகனுடைய சரீரத்தை மாதலியென்பவன் அக்கணமே அவன் புத்திரன் ஸஹஸ்ரானீகனிடம் கொண்டு வந்து சேர்த்தான். அவன் மனைவி விஷ்ணுமதியும் கணவன் இறந்ததை யறிந்த அந்த நிமிஷமே உயிர் துறந்தனள்.

பிறகு ஸஹஸ்ராநீகன் தன் தந்தை வீற்றிருந்த சிங்காசன மேறி ஏனைய அரசர்கள் யாவரும் தன்னை வணங்கும்படி இராஜ்ய பரிபாலனம் செய்து வந்தான். இப்படியிருக்கையில் ஒருநாள் தேவேந்திரன் தன் பகைவர்களை வென்று உற்சவங்கொண்டாடினன். அந்த உற்சவத்திற்கு மாதலியையனுப்பித் தன் நண்பனுகிய ஸஹஸ்ராநீகனை சொர்க்க லோகத்திற்கு வரவழைத்தான். அங்கொரு நந்தவனத்தில் தேவர்களிற் சிலர் தங்கள் மனைவிகளுடன் விளையாடிக் கொண்டிருக்கக் கண்டு தானும் தகுதியான மனைவி யொருத்தியை அடைய வேண்டுமே யென்கிற கவலையிலாழ்ந்தான். இதையறிந்த இந்திரன், ஸஹஸ்ராநீகனை யருகே யழைத்து "அரசனே கவலைப் படவேண்டாம். நீ கொண்ட விருப்பம் கைகூடும். உமக்கேற்ற மனைவி புவியிற் பிறந்திருக்கிறாள். அந்த மங்கையைப் பற்றிய விசேஷத்தைக் கேள்:—

முன்னொரு சமயம் நான் பிர்மதேவரது சபை சென்றேன். என்னுடன் விதூமன் என்ற வசுவும் வந்திருந்தான். நாங்கள் சபையில் வீற்றிருக்கும் சமயம் அலம்புசை யென்ற ஓர் அப்ஸரஸ்திரீ பிர்மதேவரைப் பார்ப்பதற்காக அங்கே வந்தாள்; அவளுடைய வஸ்திரம் காற்றினால் கொஞ்சம் விலகிற்று. அது கண்ட வசுவானவன் மன்மதன் வசத்தனானான். அலம்புசை யென்கிற அந்த அப்ஸரஸ்திரீயும் விதூமனுடைய அழகில் மயங்கினாள்.

இந்த சம்பவத்தைக் கண்ட பிர்மதேவர் என் முகத்தை நோக்கினார். அவர் என் முகம் நோக்கிய தன் காரணம் நானறிந்து அவ்விருவரையும் பார்த்து "நீங்கள் வணக்கமில்லாதவர்கள். ஆகையால் நீவிருவரும் புவியிற் பிறக்கக்கடவீர்கள்" என்று சபித்தேன். ஆகையால் அந்த வசுவே சந்திரவம்சத்திற்குப் பூஷணமாக விளங்கும் நீ. அந்த அலம்புசை கிருதவர்மராஜனுக்குப் பிறந்து மிருகாவதி யென்ற பெயரோடு விளங்குகிறாள். அவள் தான் உனக்கு மனைவியாகப் போகிறாள்" என்று கூறி முடித்தான்.

இந்திரன் கூறிய மொழிகளாகிய காற்றானது ஸஹஸ்ராநீகனுடைய மனதில் மன்மதாக்கினியை விரைவில் விருத்தியாகும்படி செய்தது. அதையறிந்த இந்திரன் ஸஹஸ்ராநீகனுக்குத் தக்க

வெகுமான மளித்து மாதலியோடு கௌசாம்பி நகரம் அனுப்பி னன். அரசன் பிரயாணப்பட்டு வரும் வழியில் திலோத்தமை யென்கிற அப்ஸரஸ்திரீ கண்டு "அரசனே! தங்களுக்குச் சில சங் கதிகள் கூறுகின்றேன்; கவனியுங்கள்" என்று கூறினள். அரசன் அச்சொற்களைக் கவனியாமல் மிருகாவதியை நினைத்த வண்ணம் சென்றனன். அதனல் திலோத்தமை வெட்கமுற்று உடனே அரசனைப்பார்த்து, "அரசனே! நான் கூறும் மொழிகளுக்குச் சிறி தும் செவிசாய்க்காமல் மிருகாவதியினிடம்மனஞ்செலுத்தியவாறே செல்கின்றமையால் உங்களுக்கு அவளுடைய சேர்க்கையானது பதினன்குவருடம் வரையில் ஏற்படக்கடவது" என்று சபித்தாள். அந்தச் சாபம் மாதலியின் செவியில் மட்டுமே பட்டது. ஸஹஸ் ரானீகனே ஒரே மனதாய்க்கௌசாம்பி நகரம் வந்து சேர்ந்து பின் அரியாத்திக்குச் சென்றான்.

பிறகு தான் இந்திரனிடம் கேட்ட மிருகாவதியின் வாலாறை யுகந்தரன் முதலிய மந்திரிகளுக்குத் தெரிவித்தான். அதன் பின் அக்கன்னிகையின் தந்தையாகிய கிருதவர்மராஜனிடம் தான் அவ னது புத்திரியை விவாகம் செய்துகொள்ள விரும்புவதாகத் தெரி விக்கும்படி ஓர் தூதனையனுப்பினன். அவன் வரக் காலதாமத மானது கண்டு, மீண்டும் ஓர் தூதனையனுப்ப அவன் கிருதவர் மராஜனிடம் சென்று, அவனை வணங்கித் தன் எஜமான் கூறியதைத், தெரிவிக்க, அவன் மகிழ்வுற்று, உடனே தன் பட்டமகிஷியாகிய கலாவதியை யழைத்து அவளிடம் விஷயத்தைத் தெரிவித்தான். அவள் "நாதா! நமது மகள் செய்த பாக்கியமே பாக்கியம்!" என் கனவில் நேற்றிரவு ஓர் அந்தணன் தோன்றி "மாதே! உன் மகள் மிருகாவதியை ஸஹஸ்ரானீகராஜனுக்கு அவசியம் திருமணஞ் செய்து கொடு" என்று கூறியருளினர். அதற் கேற்பத் தூதனும் வந்திருக்கிறான். இது ஈசன் செயல், "பிராணநாதா! அப்படிச் செய்வது தான் நமக்கு நலந்தரும்" என்று சொன்னாள். உடனே அரசன் தன் மகள் மிருகாவதியை ஸஹஸ்ரானீகராஜனுக்குக் கொடுக்கத் தீர்மானித்துத்திருமுகம் கொண்டு வந்த தூதர்களிடம் தன் மகளின் நர்த்தன விசேஷம், சங்கீதஞானம் முதலியவைகளைப் பற்றிச் சொல்லி அதை ஸஹஸ்ரானீகனுக்குத் தெரிவிக்கும்படி

உத்திரவிட்டுத் தன் சம்பதத்தையும் ஓர் திருமுகத்திற் காட்டி அவர்களிடம் கொடுத் தனுப்பினான். தூதர்கள் ஓடோடியும் வந்து தங்கள் அரசனிடம் அந்தத் திருமுகத்தைக் கொடுக்க அதையரசன் வாங்கிப் பார்த்து, மகிழ்வுற்று விவாகத்திற்குச் சித்தமானான். பிறகு கிருதவர்மராஜன் சந்திரனுக் கொப்பான வதனமும் தாமரை மலர் போன்ற நேத்திரமுமுடைய மிருகாவதியை ஸஹஸ்ரானீகனுக்கு நல்ல சுபமுகூர்த்தத்தில் திருமணஞ் செய்து கொடுத்து மகிழ்ந்தான்.

இங்ஙனம் மகாரூபவதியாகிய பெண்மணி மிருகாவதியை பணந்த ஸஹஸ்ரானீகனுடைய அமைச்சரான யுகந்தரனுக்கு யௌகந்தராயணன் என்னுமோர் புத்திரன் பிறந்தான். சுப்ரதீகனுக்கு ருமண்வான் என்ற புத்திரன் உண்டானான். இந்த ஸஹஸ்ரானீகனுடைய நர்மசசிவனுக்கு (வேடிக்கை பேசும் மந்திரி) வசந்தன் என்னுமோர் புத்திரன் பிறந்தான், பிறகு மிருகாவதி கர்பந் தரித்தனள்; அவள் தேகம் வெளுத்தது; மேனியெங்கும் பச்சை நரம்பு பரக்க ஓடிற்று. நாவும் பல தின்பண்டங்களை விரும்பிற்று.

இப்படியிருக்கையில் ஓர்நாள் மிருகாவதி தன் கணவனை நோக்கி "நாதா! இரத்தம் நிறைந்த ஓர் குளத்தில் மூழ்கி விளையாட எனக்கு விருப்பமுண்டாகிறது. என் விருப்பத்தை இச்சமயம் நிறைவேற்ற வேண்டும்" என்று கேட்டாள். அரசன் அவள் விருப்பத்தை நிறைவேற்றக் கருதி ஓர் தடாகத்தில் ஏராளமாகச் செம்பஞ்சுக்குழம்பைக் கலக்கும்படி செய்து, அதை ஓர் இரத்த வாவி போலாக்கி, மிருகாவதியை அதில் ஸ்நானம் செய்ய அனுப்பினான். மிருகாவதி மிகவும் மகிழ்ச்சியுடன் அக்குளத்திற்குத் தன் சேடிகளுடன் சென்று நாள்தோறும் ஸ்நானம் செய்து வாலானாள். ஓர்நாள் மிருகாவதி தன் சேடிகளில் ஒருவரையும் அழைத்துக் கொள்ளாமல் தனியே குளத்திற்குச் சென்று ஸ்நானம் செய்து கொண்டிருந்தாள். அச்சமயம் வானத்தில் பறந்து கொண்டிருந்த ஓர் பருந்து வாவியில் இவள் விளையாடுவதைக் கண்டு இந்த இரத்த மடுவில் நாம் உணவாகக் கொள்ளக் கூடிய ஏதோ தின்பண்டம் மிதக்கிறதென நினைத்துச் சரேலெனப் பாய்ந்து

அவளை யெடுத்துக் கொண்டு பறந்து போய் விட்டது. ஸ்நானத்திற்குச் சென்ற மிருகாவதி வெகு நேரமாயும் வாராததை யறிந்ததும் அரசனுடைய தைரியமானது, பறவையால்எங்கேயோகொண்டு போகப்பட்ட பெண்மணியைத் தேடச் சென்றது போல் அவனை விட்டுப் போய் விட்டது. அந்த வனிதையின் மேல் ஆசை கொண்ட அவ்வரசன் மனமும் ஒன்றிலும் செல்லாது, அப்பக்ஷியால் அபகரிக்கப்பட்டது போலானமையால் அந்த பூபாலன் அடியற்ற மரம் போல் புவி மீது சாய்ந்து விட்டான். இச்செய்தியறிந்த மாதலி ஆகாய மார்க்கமாக இறங்கிப் புவியின்கண் வந்து ஸஹஸ்ரானீகனைக் கண்டு சமாதானப் படுத்தி, முன் நான் கேட்டபடி திலோத்தமை கொடுத்த சாபத்தையும் அதற்குப் பதினான்கு வருடம் தான் காலமென்பதையும் கூறி விடை பெற்றுச் சென்றான். பிறகு அரசன் "ஆ! பிரியமுள்ளவளே! அந்தப்பாவியான திலோத்தமையின் மனோரதம் நிறைவேறிற்றே!" என்று கூறிச் சகிக்கமுடியாத வருத்த முற்றுத் தரையில் விழுந்து கதறினான். அவன் மந்திரிகள் அவனைத் தேற்றிப் பலபடியாகச் சமாதானங் கூறியபடியாலும் தான் மீண்டும் அந்த மிருகாவதியை யடையக் கூடுமென்பதைச் சாபவரலாற்றினால் தெரிந்து கொண்டமையாலும் பிராணனையிழக் காமல் எழுந்தான்.

இராஜகன்னிகையைத் தூக்கிச் சென்ற பறவை வெகு தூரம் பறந்துசென்று உதயகிரியை யடைந்து, அதன் மீது உட்கார்ந்து தான் உண்ணத்தக்க இறைச்சியாக நினைத்து எடுத்துக்கொண்டுவந்த இராஜகன்னிகையைப் பார்த்து, உயிருடன் இருக்கக் கண்டு பயந்து அந்த மலையின் மீது அப்படியே கிடத்தி விட்டுப் பறந்து போய் விட்டது. இப்பொழுது மிருகாவதி பயத்தால் மூர்ச்சை யடைந்திருந்தாளாகையால், அம்மலையில் விடப்பட்ட சற்று நேரத்திற்கெல்லாம் மூர்ச்சை தெளிந்து எழுந்தாள். தான் ஒரு மலை மீது தன்னந்தனியே விடப்பட்டிருப்பதைக் கண்டு பெரும் பீதியும் வியாகுலமுமடைந்து "ஐயோ! நாதனற்றவளானேனே! ஈசா இதுவும் என் விதியோ! ஐயோ நான் என்ன செய்வேன்! யாரிடம் புகலடைவேன்! இச்சமயம் எனக்கு இந்த மலைமீது யார் வந்து உதவி செய்யப்போகிறார்கள்" என்று கதறினாள். இப்படிக் கதறும் மிரு

காவதியை அச்சமயம் ஓர் பெரிய அரவம் விழுங்க வந்தது. அது கண்டு பயந்து கூக்குரலிட்டழவே, அவள் முன் அக்கணமே ஓர் திவ்ய புருஷன் தோன்றி, அந்த அரவத்தைத் தன்கைவாளால் கொன்று அவளை விடுவித்து மறைந்தான். பிறகு அந்த மிருகாவதி தன்னுடைய வருத்தத்தைச் சகிக்க முடியாமல் சுற்று மற்றும் பார்த்துத் தனக்கு முன் கொஞ்ச தூரத்தில் ஓர் பெரிய யானை வரக்கண்டு விரைவாக வெழுந்து அதனிடம் சென்றாள். இப்பொழுதும் முன் அரவத்தினின்றும் விடுவிக்கத் தோன்றிய திவ்ய புருஷன் தோன்றி அந்த யானைக்கிரையாக விடாமல் காப்பாற்றி மறைந்தான். ஆச்சரியம்! துஷ்ட ஐந்துக்களுடைய வாயில் விழுந்தும் மிருகாவதி உயிர் தப்பிப்பிழைத்தனளன்றோ! ஈசனது இச்சையிருக்குமாயின் எது தான் சித்திபெருது.

வாசகர்களே! இப்பொழுது மிருகாவதி கர்ப்பமாயிருக்கிறுளென்பதை நீங்களறிவீர்கள். ஆகவே அவள் இப்படிப்பட்ட மகத்தான துன்பத்தைச் சகிக்கமுடியாது, வருந்தி அங்கிருந்த ஓர் குகையை நோக்கித் தன் கணவனை நினைத்துக்கொண்டு வாய் விட்டுக் கதறினாள். அச்சத்தங் கேட்ட ஓர் முனிவர்குமாரன் தனியே அங்கு வந்து துக்கமே ஓர் மானிடஸ்திரீயாக உருவெடுத்து வந்ததற்கொப்பாக நின்ற மிருகாவதியைக் கண்டு வியப்புற்று, அருகே வந்து "அம்மா! நீ யா"ரெனக் கேட்டு அவளது வரலாறு தெரிந்து கொண்டான். பிறகு பல படியாகச் சமாதானங் கூறி அவளைத் தேற்றி ஜமதக்னிமுனிவரின் ஆச்சிரமத்திற் கழைத்துச் சென்றுன். அங்கே, மகாதேஜஸ்வியாக விளங்கும் ஜமதக்னி முனிவரைக் கண்டு அவரை மிருகாவதி சாஷ்டாங்கமாக நமஸ்கரித்தாள். அம்முனிவர் தம்மை வந்து வணங்கித் துக்கத்துடனிருக்கும் இராஜகன்னிகையாகிய மிருகாவதியைத் தமது ஞான திருஷ்டியால் இன்னுளெனவறிந்து இரக்கங் கொண்டு "பெண்ணே! நீ வருந்தாதே! உன்கணவன் வம்சம் விளங்க ஓர் புத்திரன் இங்கு உனக்குண்டாகப் போகிறுன். பிறகு உன்கணவனையும் நீ யடையப் போகிறுய். நீ சிறிதும் சஞ்சலப்படாதே" என்று கூறினர்.

இதைக் கேட்ட மிருகாவதி தனக்குத் தன் கணவனுடைய சேர்க்கையுண்டாகுமென்கிற ஆசையால் அந்த ஆச்சிரமத்திலேயே யிருந்து வந்தாள். ஸாதுக்களின் உறவானது நல்ல ஆசாரத்தைக் கொடுக்குமல்லவா? அது போல் கற்பிற் சிறிதுந் தவறாத அந்த மிருகாவதி சில மாதகாலத்திற் கெல்லாம் ஓர் புத்திரரத்தினத்தைப் பெற்றாள். ஜனனசமயத்தில் "இந்தப் புத்திரன் உதயனன் என்று அழைக்கப் படுவான்; இவன் மகாகீர்த்திவாய்ந்த அரசனாகப் போகிறான்" என்று ஓர் அசரீரிவாக்குண்டாயிற்று. இந்த நல்வாக்கைக் கேட்டு மிருகாவதியே யன்றி இன்னும் ஆச்சிரமத்திலுள்ளார் யாரும் பரமானந்தமடைந்தார்கள்.

ஜமதக்கினி, அந்தக் குமாரனுக்கு க்ஷத்திரியர்க்குரிய ஸமஸ்காரங்களைச் செய்வித்தார். நாளடைவில் கல்வியிலும் தனுர்வேதத்திலும் நல்ல பயிற்சியடையும்படி அனுக்கிரகஞ் செய்தார்.

உதயனன் நல்ல வாலிபப்பருவத்தை யடைந்து ஒப்பற்ற ரூபவானாகவும் வீரனாகவும் விளங்குகையில், ஓர் நாள் மிருகாவதி தன் கையில் அணிந்துகொண்டிருந்த தன் நாயகன் பெயரெழுதிய மோதிரத்தைக் கழற்றி அவனுக்கிட்டு அழகு பார்த்து மகிழ்ந்தாள்.

பிறகு ஒரு சமயம் உதயனன் வேட்டையாடப் பிரியப்பட்டு ஆச்சிரமம் விட்டு வெகுதூரஞ் சென்று வெகு உக்ரமாக வேட்டையாடிக் கொண்டிருந்தான். அப்பொழுது ஒரு வேடன் ஓர் அரவத்தைப்பிடிக்கமுயற்சித்துக்கொண்டிருந்தான். அதுகண்ட உதயனன் அவனிடம் சென்று "அப்பா! நான் சொல்வதைக் கேள்; இந்த அரவத்தைக்கொல்லாதே; விட்டுவிடு" என்று சொன்னான். வேடன் "பிரபுவே! எனக்கு இததொழில் ஜீவனமாயிற்றே! நான் பரம ஏழை. நான் இந்தப் பாம்பைப் பழக்கி விளையாடும்படி செய்து ஜீவிப்பது வழக்கம். என்னிடம் முன் இருந்த சர்ப்பம் இறந்து போய்விட்டது. பிறகு நான் நெடுநாள் சர்ப்பமில்லாமல் வருந்தினேன். இன்று இச் சர்ப்பத்தைக் கண்டு மந்திர சக்தியாலும் மூலிகையாலும் தடை செய்திருக்கிறேன். அப்படியிருக்க, நான் இதை எப்படி விடுவேன்" என்றான். இதைக் கேட்டதும உதயனன் சற்றுலோசித்து 'அப்பா! உன் ஆகார நிமித்தமாகத் தானே இதைப் பிடிக்கப்

போகிறாய். இந்தா இந்த மோதிரத்தைப் பெற்றுக் கொண்டு இதை விற்று நீ ஜீவனஞ் செய். என் பொருட்டு இந்தச் சமயம் இந்தச் சர்ப்பத்தைக் கட்டவிழ்த்து விடு" என்று சொல்லி மோதிரத்தைக் கொடுத்தான். அந்த வேடன் சந்தோஷத்துடன் அதை வாங்கிக் கொண்டு உதயனனுக்கு வந்தனஞ் செய்து பாம்பையும் விடுவித்தான். உடனே அந்தப் பாம்பு உதயனனை, நோக்கி, "நான் வாசுநேமி யென்ற பெயருடையவன். வாசுகிக்குச் சகோதரன். உன்னால் நான் காப்பாற்றப் பட்டேனாகையால், இந்தா இந்த வீணையை நீ பெற்றுக்கொள். இது யானைக்ளுமாகச் சப்திக்கும் தந்திரையுடையது. செவிக்குப் பரமானந்தத்தைக் கொடுக்கக்கூடியது" என்று கூறி ஒரு வீணையைக் கொடுத்தது. அன்றியும் உடனே வாடாத புஷ்பமாலையையும் தாம்பூலத்தையும் கொடுத்து அவைகளைப் பெற்றுக் கொள்ளும்படி வேண்டிற்று. உதயனன் அவைகளை வேண்டாமென்று மறுக்காமல் பெற்றுக்கொண்டு ஜமதக்னி முனிவரின் ஆச்சிரமத்திற்கு வந்து காட்டில் நடந்த விஷயத்தை யாவருக்குந் தெரிவித்து மகிழ்ச்சியடைந்தான்.

இனி மோதிரம் பெற்றுச் சென்ற வேடனைக் கவனிப்போம். வேடன் உடனே மோதிரத்துடன் ஸஹஸ்ரானீகனது பட்டணம் சென்று அங்கே அம்மோதிரத்தை விலை கூறினான். அந்த மோதிரம் தற்செயலாய் இராஜ சேவகர்கள் கையில் கிடைத்தது. அதில் தங்கள் அரசன் பெயர் வரைந்திருக்கக்கண்ட அவர்கள் உடனே வேடனைப் பிடித்து அரசனிடம் கொண்டுபோய் விட்டு விஷயந் தெரிவித்து மோதிரத்தை அரசனிடம் கொடுத்தார்கள். அரசன் மோதிரத்தை வாங்கிப் பார்த்ததும் சகித்தற்கரிய துக்கங்கொண்டு வேடனை நோக்கி "அப்பா! உனக்கு இந்த மோதிரம் எப்படிக் கிடைத்தது?" என்று கேட்க, வேடன், அரசனுக்கு வந்தனஞ் செய்து தனக்கு மோதிரங் கிடைத்ததை உள்ளபடி தெரிவித்தான். உடனே அரசன் தன் ஆருயிர்க் காதலியை நினைத்துக்கொண்டு பெருங்கவலைக்குள்ளாழ்ந்தான். அச்சமயம் "அரசனே! சாபவிமோசனமாய் விட்டது. ஜமதக்னி முனிவரின் ஆச்சிரமத்தில் உம்முடைய மனைவியாகிய மிருகாவதியும் அவளுக்கு அங்கு பிறந்த உமது ஸத்புத்திரன் உதயனனுமிருக்கிறார்கள்" என்று ஓர் அசரீரி வாக்கு

உண்டாயிற்று. இந்த மங்களகரமான வாக்கைக்கேட்டதும், அரசன் மழையைக் கண்ட மயில் போல் மனமகிழ்ந்தான். அந்த நாள் முழுவதையும் ஓர் யுகமாகக் கழித்து மறுநாள் உதயத்திலெழுந்து தன் பரிவாரங்களுடன் வேடனை முன்னிட்டுக் கொண்டு புறப்பட்டு ஜமதக்னி முனிவரது ஆச்சிரமத்தை நோக்கிச் சென்றான் ஸஹஸ்ராநீகன்.

# இரண்டாவது தரங்கம்.

ஸஹஸ்ரானீகன் நகரத்தை விட்டுப் புறப்பட்டு வெகுதூரம் வந்ததும் வழியில் ஓர் தடாகத்தைக் கண்டு சிரமபரிகாரம் செய்து கொள்வதன் பொருட்டு, அங்கே தங்கினான். அன்று சாயங்கால வேளையில் அரசன், தன்னிடம் ஊழியஞ் செய்பவனும் மனோற்சாகமுண்டாகும்படி கதைகள் சொல்பவனுமாகிய ஸங்கதகன் என்பவனைப் பார்த்து, "ஸங்கதக! என் மனத்திற்குச் சந்தோஷமுண்டாகும்படி ஓர் கதை சொல்லவேண்டும். நான் இப்போது மிருகாவதியின் முகமாகிய சந்திரனைப் பார்க்கவேண்டுமென்கிற ஆவலுடையவனாக விருக்கிறேன்" என்றான்.

இதைக் கேட்டதும் ஸங்கதகன், "பிரபுவே! ஏன் வருத்தப்பட வேண்டும்; தங்களுக்குத் தேவியின் சேர்க்கை சீக்கிரம் கிடைக்கும். சாபமும் நாசமடைந்தது. சேர்க்கை யென்பது எப்போது ஏற்பட்டதோ பிரிவினையும் உண்டாமன்றோ? இது மானிடர்களுக்குள் சம்பவிப்பது வழக்கந்தான். இருக்கட்டும்" தங்களிஷ்டப்படியே இப்போது ஓர் கதை சொல்லுகிறேன்; கேளுங்கள்—

நீர்வளம் நிலவளம் மலிந்த மாளவதேசத்தில் யக்ஞசோமன் என்ற ஓர் விப்பிரனிருந்தான். அவன் பரமசாது. தானுண்டு, தான் வேலையுண்டு என்று இருப்பான். ஒருவர் ஜோலிக்கும் போகான். அவனுக்குக் காலநேமியென்றும் விகதபன் என்றும் இரண்டு

குமாரர்களிருந்தார்கள். இவ்விருவரும் குழந்தைகளாயிருக்கும் போதே யக்ஞசோமன் என்கிற அந்த விப்பிரன் இறந்து விட்டானாகையால் அவ்விருவரும் கல்வி பயிலுவதன் பொருட்டு பாடலீபுத்திரம் என்ற பட்டணம் வந்து சேர்ந்தார்கள். அங்கே தேவசர்மா என்ற ஒருவர் அவர்களுக்கு உபாத்தியாயராகவிருந்து கல்வி போதித்து வந்தார். சில வருடகாலத்தில் அவ்விருவரும் வித்தையில் நல்ல பயிற்சியடைந்தார்கள். அதுகண்ட அவர்களிடம் சந்தோஷம் கொண்ட தேவசர்மா என்னும் உபாத்தியாயர் தன் இருகண்களுக்கும் சமானமாக நினைத்து வளர்த்து வந்த தன்னுடைய இரண்டு பெண்களையும் அவர்களுக்கு விவாகம் செய்து கொடுத்தார்.

இப்படியிருக்கையில் காலநேமி யென்பவனுக்குப் பொருள் தேட வேண்டுமென்கிற அவாவுண்டானமையால், அவன் பொருளுக்கு அதிதேவதையாகிய இலக்ஷ்மி தேவியை அல்லும் பகலும் துதித்து ஆராதனை புரிந்து வந்தான். கொஞ்சநாளையில் தன்னை வணங்கும் அன்பர்களுக்குத் தருணந் தவறாது அருள் புரியும் தயாநிதியாகிய கமல மலர்ச்செல்வி காலநேமியின் பூசைக்கு வந்து அவனுக்குப் பிரத்தியக்ஷமாகி அவனை நோக்கி "உனக்கு ஏராளமான சம்பத்துண்டாகும். இராஜ்யலக்ஷ்மியை யடைவாய், புத்திரபாக்கியமும் உண்டாகும். ஆனால் உனக்கு மரணம் திருடர்களுக்குச் சம்பவிப்பது போல் நேரிடும். ஏனெனில் நீ கோபத்தால் கலக்க மடைந்திருந்த மனதுடன் அக்கினியில் ஹோமம் செய்தாயல்லவா?" என்று கூறியறைந்தாள்.

இலக்குமி தேவியின் வரத்தின்படியே காலநேமி பெருஞ்செல்வத்தை யடைந்தது மன்றி ஒரு தேசத்திற்கு அரசனாகவும் ஆனான். பிறகு காலக்கிரமத்தில் ஓர் புத்திரனையுமடைந்தான். காலநேமி ஸ்ரீதேவியின் அனுக்கிரகத்தாலுண்டான தன் செல்வப் புத்திரனுக்கு ஸ்ரீதத்தன் என்று பெயரிட்டான். அவனை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்த்து வந்தான். ஸ்ரீதத்தன் வளர்பிறைச் சந்திரன் போல் வளர்ந்து வயதையடைந்ததும் பிராமணனாகவிருந்தும் அஸ்திரவித்தைகளிலும் மல்யுத்தத்திலும் வல்லவனானான். காலநேமியின் சகோதரனாகிய விகதபன் காலநேமியைப் போல் பணக்காரனாகாவிடினும் அவனும் அவன் பனைவி

யும் அன்னவஸ்திரத்திற்குச் சிறிதும் கஷ்டமின்றி வாழ்ந்துவந்தார்கள். விகதபன் மனைவி நல்ல குணவதி. அவள் தன் புருஷனை யடைந்த சிலவருடங்கட்கெல்லாம் வினைவசத்தால் பெரிய அரவத்திற்கிரையானமையால் விகதபன் உலகவாழ்க்கையை வெறுத்துத் தீர்த்தஸ்நானம் செய்ய விரும்பித் தேசாந்திரஞ் சென்றான்.

இவன் கதியிப்படியிருக்க, ஸ்ரீதத்தனின் குணவிசேஷங்களை யறிந்த வல்லபசக்தி என்னுமோர் அரசன் தன் குமாரனாகிய விக்ரமசக்திக்கு ஸ்ரீதத்தனை நண்பனாகத் தெரிந்தெடுத்தான். இராஜகுமாரனாகிய விக்ரமசக்தியோ மகாகர்வங்கொண்டவன். அவனுடன் ஸ்ரீதத்தன் சினேகங் கொள்ள நேர்ந்தது துரியோதனனுடன் பீமசேனனுக்குச் சேர்க்கை யேற்பட்டது போலாயிற்று. பிறகு இந்த ஸ்ரீதத்தனிடம் அவந்திதேசத்தவர்களாகிய பாகுசாலி வஜ்ரமுஷ்டி என்ற இரண்டு வீரர்கள் சினேகங் கொண்டார்கள். பின் கைச்சண்டையில் வல்லவர்களும் நல்ல குணமுடையவர்களும் அத்தேசத்து மந்திரி குமாரர்களுமாகிய மகாபலன், வியாக்கிரபடன், உபேந்திரபலன் என்னும் மூவர் ஸ்ரீதத்தனுக்கு உற்ற நண்பரானார்கள்.

ஸ்ரீதத்தன் இப்படி இராஜ ஆதரவு பெற்றுத் தன் நண்பர்களுடன் வெகு சுகமாக வாழ்ந்து வருகையில் மாரிகாலத்தில் ஓர் நாள் தன் நண்பர்கள் எல்லாருடனும் கங்கைக் கரைக்கு வந்தான். அப்பொழுது ஊழியக் காரர்களிற் சிலரும் அவர்களுடன் சென்றிருந்தார்கள். எல்லோரும் கங்கைக் கரையில் ஓரிடத்தில் உட்கார்ந்து சந்தோஷமாகச் சம்பாஷித்துக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது ஊழியர்கள் எல்லோரும் விக்ரமசக்தியை அரசனாகப் பாவித்து வந்தனை வழிபாடு செய்யலாயினர். ஆனால் ஸ்ரீதத்தனுடைய நண்பர்கள் ஸ்ரீதத்தனுக்கே அரசனுக்குள்ள மரியாதையைச் செலுத்திவந்தார்கள். அது கண்ட விக்ரமசக்தி கோபங்கொண்டு அப்பொழுதே ஸ்ரீதத்தனை அவன் ஓர் அந்தணன் என்பதையும் கவனியாது யுத்தத்திற்கழைத்தான். ஸ்ரீதத்தனும் யுத்தத்திற்குச் சம்மதித்து அவனுடன் கைச் சண்டை செய்து அவனை வென்றான். உடனே விக்ரமசக்தி கவலைகொண்டு சற்று யோசித்து ஸ்ரீதத்தனை எவ்விதத்திலாவது கொன்று விடுவதென்கிற தந்திரத்தை மனதிற் கொண்டு அச்சமயம் சும்மாவிருந்தான். அந்த இரகசி

யத்தை அந்தணனாகிய ஸ்ரீதத்தன் தன் புத்திசாலித் தனத்தால் தெரிந்து கொண்டானாகையால் தன் நண்பர்களுடன் அவனை விட்டு விலகி வேறு இடம் சென்றான்.

ஸ்ரீதத்தன் போய்க் கொண்டிருக்கையில் அந்தக் கங்காநதியின் வெள்ளத்தில் ஓர் பெண் மிதந்து போவதைக் கண்டான். அந்தப் பெண் பார்வைக்கு ஸ்ரீதேவியைப் போலிருந்தாள். ஆகையால் ஸ்ரீதத்தன் உடனே தன் நண்பர்களைக்கரை மீது சற்றுநேரமிருக்கும்படி வேண்டிக்கொண்டு, தான் அப்பெண்ணைக் கரையேற்றுவதன் பொருட்டு கங்கையில் குதித்து அந்தப் பெண்ணின் கூந்தலிற் கைபோடப் போனான். அப்பொழுது அந்தப் பெண் அந்த ஸ்ரீதத்தனுடைய கைக்ககப்படாமல் நீரில் ஆழ்ந்து விட்டாள். ஸ்ரீதத்தனும் உடனே ஜலத்தில் முழுகிக் கொஞ்சதூரம் சென்று தேடினான். இவன் முழுகிய சில நிமிஷ நேரத்திற்கெல்லாம் அங்கே திவ்ய விமானமமையப் பெற்ற ஓர் சிவாலயம் காணப்பட்டது. அதைச் சூழ பல பிராகாரங்களும் பிராகாரங்களில் மாடமாளிகைகளமைந்த வீடுகள் நிறைந்த தெருக்களும் காணப்பட்டன. ஆனால் ஜலத்தையாவது அந்தப் பெண்ணையாவது அவன் அங்கே பார்க்கவில்லை. இந்த அதிசயத்தைக் கண்ணுற்ற வளவில் ஸ்ரீதத்தன் பிரமித்தான். என்ன ஆச்சரியமிது வென வியந்தான். சற்றுநேரம் வரையில் ஒன்றுந்தோன்றாது நின்றான். பிறகு ஆலயத்துட் சென்று சிவபெருமானைத் தரிசித்து வருவோமென்று கருதி அதிற் பிரவேசித்து சர்வ ஜீவதயாபரமூர்த்தியாகிய விருஷபத்துவஜனை வணங்கித் துதித்து என்றுமடையாத மகிழ்ச்சி யடைந்து அன்றைப்பொழுதை யங்கிருந்தே கழித்தான்.

மறுநாள் உதயத்தில் ஸ்ரீதத்தன் அந்த ஆலயத்தை விட்டு வெளிப்பட இருக்கும் தருணத்தில் முதல் நாள் ஜலத்தில் மிதந்த பெண்மணி சிவபெருமானைப் பூசிப்பதற்காக அங்கு வந்தாள். அந்தப் பெண்மணி உத்தம ஸ்திரீகளுக்குரிய இலக்ஷணங்கள் யாவும் அமையப்பெற்று இலக்ஷ்மிதேவிபோலிருக்கக் கண்டு ஸ்ரீதத்தன் பரமாச்சரியமடைந்தான். அந்தப் பெண் வந்ததும் ஆலயத்திற்குள் நுழைந்து வலம் வந்து மெய்யன்போடு ஈசனை வணங்கி வந்த வழியே அவ்வாலயத்தினின்றும் வெளிப்பட்டாள்.

ஸ்ரீதத்தனும் அவளைப் பின் தொடர்ந்து சென்றான். கொஞ்ச தூரம் சென்றதும் அந்தப் பெண்மணி, திவ்யமணிமாடம மைந்த ஓர் கிரகத்திற்குள் பிரவேசித்தாள். ஸ்ரீதத்தனும் அந்தத் திவ்யகிருகத்திற்குள் நுழைந்தான். அங்கே அக்கிருகத்தின் நடு மத்தியில் ஒரு திவ்யாசனம் போட்டிருந்தது. அந்த ஆசனத்தைச் சூழ அனேக பணிப்பெண்கள் நின்று கொண்டிருந்தார்கள். அவர்களனைவரும் அந்த மாதரசியைக் கண்டதும் வணங்கினார்கள். அவள் அவர்களுடைய வந்தனத்தை யேற்றவண்ணமே சென்று அந்த ஆசனத்தமர்ந்தாள். ஸ்ரீதத்தனும் தைரியமாய்ச் சென்று அவளுக்கருகே உட்கார்ந்தான். இவன் உட்கார்ந்த கணமே அந்தப் பதிவிருதை அழுதாள், கண்களினின்று அப்பொழுது பெருகிய நீர்த்திவலைகள் அவளுடைய கொங்கைகளில் முத்துப் போல் விழுந்தன. அதைக் கண்ட ஸ்ரீதத்தன் மனதில் இரக்கங்கொண்டு "ஏ சுந்தரி! நீ யார்? நீ துக்கப்படக் காரணமென்ன? அது எது வாயிருந்தாலும் நான் நிவர்த்திசெய்கிறேன்; அதை ஒளியாமல் தெரிவி" என்று கேட்டான்.

இதைக் கேட்டதும் மாதரசி, குனிந்த வண்ணத்தில், "ஐயா! அசுரராஜனாகிய மகாபலிசக்ரவர்த்தியினுடைய பௌத்திரிகள் ஆயிரம் பேர்களுள் நானொருத்தி. நான் தான் மூத்தவள். என் பெயர் வித்யுத்பிரபை. எங்களுடைய பிதாமகனாகிய மகாபலியை நாராயணமூர்த்தியானவர் அனேக காலம் கட்டி வைத்து விட்டார். அவரே எங்களுடைய தந்தையையும் கைச் சண்டையில் உயிர் துறக்கும்படி செய்தார். பிறகு எங்களையும் நகரத்தை விட்டு அப்புறப் படுத்தி விட்டார். நாங்களிருந்த நகரத்திற்கு ஒரு சிங்கத்தைக் காவலாக ஏற்படுத்தியிருக்கிறார். ஆகையால் நாங்கள் பெரிய துன்பக்கடலுள் மூழ்கி வருந்துகிறோம். அந்தச் சிங்கம் முன் ஜன்மத்தில் ஓர் யக்ஷன். அவனுக்கு ஏற்பட்ட குபேரனுடைய சாபத்தால் அவன் சிங்கமானான்.

பிறகு நாங்களெல்லோரும் நாராயணமூர்த்தியை வணங்கி நகரத்திற்குள் மீண்டும் பிரவேசிக்க உபாயங் கேட்டோம். அதற்கு பகவான் "இந்தச் சிங்கத்திற்கு ஒரு மானிடனால் சாபவிமோசனம் ஏற்படும் என்று கூறினார். ஆகையால் அதை நீ ஜயிக்க வேண்டும்.

அதற்காக இங்கு உம்மை யழைத்து வந்தேன். அந்தச் சிங்கத்தை ஜயிப்பீரேயாகில் மிருகாங்கம் என்னும் கத்தி உமக்குக் கிடைக்கும். அந்தக் கத்தியால் புவி முழுதும் ஜயித்துச் சக்ரவர்த்தி யாகலாம்" என்று கூறினாள். ஸ்ரீதத்தன் அவ்விதமே யாகட்டு மென்று சொல்லி அன்றைக்கு அங்கேயே யிருந்தான். மறுநாள் எழுந்து அசுரர்களுடைய நகரம் சென்று சிங்கத்தை யெதிர்த்துச் சண்டை செய்து அதை ஜயித்தான். அந்தச் சிங்கம் சாபத்தி னின்றும் விடுபட்டு திவ்ய மானிட சரீரம் பெற்று தன்னை விடுவித்த ஸ்ரீதத்தனுக்கு மிருகாங்கம் என்கிற கத்தியைக் கொடுத்து அக்கணமே மறைந்தது. பிறகு ஸ்ரீதத்தன் அசுரகன்னி கைகளுடன் அந்நகரத்துள் பிரவேசித்தான். அங்கே ஸ்ரீதத் தனுக்கு அந்த அசுரஸ்திரீ விஷத்தைப் போக்கக்கூடிய மோதிர மொன்றைக் கொடுத்தாள். அதை ஸ்ரீதத்தன் மன மகிழ்ச்சியுடன் பெற்றுக் கொண்டான். இவன் வாலிபனானதால் அந்த சுந்தரமாதின் மேல் ஆசைகொண்டு தன் எண்ணத்தை அவளுக்குச் சைகையால் காட்டினான். இவனைமணந்து கொள்ள அவளுக்குப் பிரியமில்லையாதலால் அவனை அந்நகரத்தினின்று வெளியேற்றக் கருதி, "வாலிபனே! உன் விருப்பத்தை யறிந்து கொண்டேன். பிறகு சொல்லுகிறேன் அதற்கு மறுமொழி. ஆனால் அதற்குள் நீ யொன்று செய்ய வேண்டும். அதாவது நீ இதோ தெரியும் இந்த வாவியில் உன் கத்தியுடன் முழுகி விட்டுவா; பிறகு பேசிக் கொள்வோம்" என்று கூறினாள். ஸ்ரீதத் தன் அதற்கு இசைந்து அந்த வாவி சென்று அதில் மூழ்கினான். முழுகிய கண நேரத்திற்கெல்லாம் முதலில் தான் கங்கையில் எந்த இடத்தில் இறங்கினானோ அங்கு வந்து சேர்ந்தான். உடனே அதிக வியப்புடன் கரையேறி தான் அசுரஸ்திரீயிடம் மோசம் போனதை நினைத்து வருந்தினான். பிறகு தன்னுடைய நண்பர்கள் அங்குக் காணாதிருக்கவே, மிகவும் துக்க மடைந்து அவர்களைத் தேடிக் கொண்டே தன் வீட்டுக்குத் திரும்பினான். வழியில் நிஷ்டுர கன் என்ற தன் நண்பனைச் சந்தித்தான். நிஷ்டுகரன் ஸ்ரீதத்தனைக் கண்டதும் வணங்கி, நண்பா! நீ கங்கையில் மூழ்கிப் பின் வெகு நாள் வராமலிருந்து விட்டமையால் நாங்கள் யாவரும் தற்கொலை செய்து கொள்ள நிச்சயித்தோம். அச்சமயம் "வேண்டாம்

ஸாகஸம் செய்ய வேண்டாம். உங்களுடைய நண்பன் உயிருடன் வருவான். நீங்கள் அஞ்சவேண்டாம்” என்றோர் அசரீரி வாக்குண்டாயிற்று. அதனால் நாங்கள் எங்கள் பிரயத்தினத்தை நிறுத்திவிட்டு உன் தந்தையிடம் செல்லப் புறப்பட்டோம். அப்பொழுது ஒரு புருஷன் எங்கள் முன் தோன்றி “இப்போது நீங்கள் நகரத்திற்குள் பிரவேசிக்கக்கூடாது. வல்லபசக்தி இறந்து விட்டான். மந்திரிகள் எல்லோரும் சேர்ந்து விக்ரமசக்தியை அரசனுக்கிஇருக்கிறார்கள். விக்ரமசக்தி ராஜ்யாதிகாரம் பெற்ற மறுநாளே காலநேமியின் வீடு சென்று அவனைப் பார்த்து உன் மகன் ஸ்ரீதத்தன் எங்கே யென்று கேட்டான். காலநேமி அவன் எங்குச் சென்றானோ நானறியேனென்றான். அது கேட்டதும் விக்ரமசக்தி உன் மகன் உன்னையறியாமல் எங்கே சென்றிருப்பான்; எங்கேயோ மறைத்து வைத்து விட்டுத் தெரியாதெனத் தெரிவிக்கிறாயா மூர்க்கா! என்று கூறிச் சினந்து அவனைக் கழுவிலேற்றிக் கொன்று விட்டான். இங்ஙனம் காலநேமி உயிர் துறக்கவே அவனுடைய மனைவியின் மனமானது படலென்று வெடித்தது. அவளும் இறந்தாள். அந்த விக்ரமசக்தி இன்னும் ஸ்ரீதத்தனையும் அவனுடைய நண்பர்களையும் கொல்வதற்காகத் தேடிக் கொண்டிருக்கிறான். ஆகையால் இவிடமிருந்து வேறெங்கேனும் செல்லுங்கள்” என்று அந்தப் புருஷன் கூறினான். உடனே பாகுசாலி முதலிய ஐவரும் பெருந்துக்கத்துடன் அவர்களுடைய சொந்த நகரமாகிய உச்சயினி நகரம் சென்றார்கள். அப்பொழுது அவர்கள் என்னை மட்டும் இங்கிருந்து உன் வரவை எதிர்பார்க்கும்படி சொல்லிப் போயினர். அவ்விதமே நான் யாரையும் அறியாமல் இங்கிருந்து வருகிறேன். வா, நாம் அவர்களிடம் போவோம் எனறழைத்தான்.

நிஷ்டூரகன் இங்ஙனம் கூறக் கேட்டதும் ஸ்ரீதத்தன் தன் பெற்றோரின் கதியை நினைத்து வருத்தமுற்று உடனே மனந்தேறித் தன் பகைவனாகிய விக்ரமசக்தியின் மேல் பெருங் கோபங் கொண்டு கத்தியை உருவி உற்றுப் பார்த்து மீண்டும் உறையுள் போட்டு சமயம் எப்போது வாய்க்கு மென்று எதிர்பார்த்த வண்ணமே நிஷ்டூரகனுடன் உச்சயினி நகரம் செல்லப் புறப்பட்டான். இவர்கள் உச்சயினியை நோக்கிச் செல்லும் போது வழியில்

கங்கையில் முழுகியது முதல் நடந்த விசேஷங்களைப் பற்றி ஸ்ரீதத்தன் கூற நிஷ்டூரகன் கேட்டுக் கொண்டே போனான். அப்போது அவ்வழியில் ஒரு மாது அழுது கொண்டு செல்வதைக் கண்டார்கள். அவள் மீது இரக்கங் கொண்ட இவர்கள் "அம்மா! நீங்கள் யார்? எங்கே செல்கிறீர்கள்" என்று கேட்க, "அவள் நான் மாளவதேசம் செல்வதன் பொருட்டுப் புறப்பட்டு வந்தேன். வழி தவறி விட்டேன்" என்றாள். அவளை இவர்கள் தங்கள் கூடவே வரும்படி சொல்ல, அவளும் சம்மதித்து இவர்களைத் தொடர்ந்து நடந்து சென்றாள். மூவரும் அன்றிரவு ஒரு நகரத்தை யடைந்து அங்கு ஒரு சத்திரத்தில் தங்கினார்கள்.

அப்போது இரவில் நிஷ்டூரகனும் ஸ்ரீதத்தனும் நித்திரை செய்கையில் இவர்கள் கூட வந்த அந்த மாது நிஷ்டூரகனைக் கொன்று அந்த நரமாமிசத்தைப் புசித்தாள். அப்பொழுது தற்செயலாய் ஸ்ரீதத்தன் விழித்துக் கொண்டமையால் இந்த பயங்கரமான செய்கையைக் கண்டதும் கடுஞ் சினமடைந்து தான் கொண்டு வந்த மிருகாங்கம் என்ற கத்தியை உருவி யெடுத்துக் கொண்டு எழுந்தான். அது கண்ட அந்த மாது கோரமான ஓர் இராக்கத வடிவமெடுத்துக் கொண்டு எதிர் நின்றாள். உடனே ஸ்ரீதத்தன் அவளைக் கொல்ல நினைத்து அவள் கூந்தலில் கைபோட்டான். அக்கணம் அவ்வரக்கி ஒரு திவ்ய வடிவங் கொண்டு ஸ்ரீதத்தனை நோக்கி, "மகாபாக்கியசாலியே! என்னைக் கொல்லாதே! நான் இராக்கத மாதல்ல. எனக்கு இப்படிப்பட்ட சாபம் விசுவாமித்திர முனிவரால் ஏற்பட்டது. முன் கௌசிக முனிவர் கடுமையாய்த் தவம் செய்து கொண்டிருந்தார். அது கண்ட குபேரன் எங்கேமுனிவர் நமது பதவியையடைய விரும்பித் தவம் புரிகிறாரோ வென ஐயமுற்று அவரது தவத்தைக் கெடுக்க என்னை யனுப்பினான். நான் அப்படியே முனிவரிடம் வந்தேன். அவரைப் பார்த்ததும் திவ்ய வடிவங் கொண்டு அவர் மனதைக் கலங்கும்படி செய்வதற்குச் சக்தியற்றவளானேன். ஆகையால் கோரரூபமெடுத்துக் கொண்டு அவரைப் பயமுறுத்தினேன். அதுகண்டதும் முனிவர் "ஏதுஷ்டே! நீ மானிடர்களைப் புசிக்கும் இராக்ஷஸியாகக் கடவது.— ஸ்ரீதத்தன் என்னும் உத்தம புருஷன் உன் கூந்தலைப் பிடிக்கும்

போது உன் சாபம் நீங்கும்" என்று முதலிற் சாபங் கொடுத்துப் பிறகு அதற்கு விமோசனத்தையுந் தெரிவித்தார். உடனே நான் இப்படிப் பட்ட இராக்ஷதத்தன்மையை யடைந்தேன். வெகுகால மாக இந்நகரத்திலுள்ள ஜனங்களைப் புசித்து வருகிறேனாதலால் இந்நகரம் அநேகமாகச் சூன்யமாய் விட்டது. அப்பனே! உன்னால் சாபவிமோசனம் பெற்றேன். நீ வேண்டும் வரம் என்ன? அதைக் கேள். தருகிறேன்" என்றாள்.

ஸ்ரீதத்தன் "ஓ தேவமாதே! எனக்கு வேறு வரம் எதுவும் வேண்டியதில்லை. எனது நண்பனாகிய இந்த நிஷ்டூரகன் பிழைக்க வேண்டும்" என்றான். உடனே தேவமாது "அவ்விதமேயாகும்" எனக் கூறி மறைந்தனள். நிஷ்டூரகன் அக்கணமே துயில் புரிந்து எழுந்தவன் போல் சரீரத்தில் யாதொரு குறைவுமின்றி எழுந்திருந்தான். உடனே ஸ்ரீதத்தன் நிஷ்டூரகனைக் கட்டித் தழுவிக் கொண்டு ஆச்சரியத்துடன் நடந்ததைக் கூறினான். நிஷ்டூரகன் கேட்டுத் தன் நண்பனிடம் அளவிறந்த மகிழ்ச்சியடைந்தான். இருவரும் அங்கிருந்து புறப்பட்டு உச்சயினி நகரம் வந்து சேர்ந்தார்கள். அவர்கள் தங்கள் வரவை எதிர்ப்பார்த்தவண்ணமிருந்த நண்பர்களைக் கண்டு ஒருவரை யொருவர் ஆலிங்கனம் செய்து கொண்டு மகிழ்ந்தார்கள். ஸ்ரீதத்தனும் நிஷ்டூரகனும் தங்களுக்கு நேரிட்ட சம்பவங்களைக் கூறி ஈசன் திருவருளால் தங்கள் நண்பர்களை மறுபடி சந்திக்க நேர்ந்ததற்குப் பரமானந்தமடைந்தார்கள். அவ்வாறே அவர்களும் தங்களுக்கு நேரிட்ட துக்கங்களைக் கூறி வியந்தார்கள்.

பிறகு ஸ்ரீதத்தனை பாகுசாலியென்பவன் தன் கிருகத்திற்கு அழைத்துச் சென்றான். பாகுசாலியின் பெற்றோர் ஸ்ரீதத்தனிடம் அன்புபாராட்டி அவனை நன்றாய் உபசரித்தார்கள். பிறகு ஸ்ரீதத்தன் தன் நண்பன் பாகுசாலியின் வீட்டிலிருந்தே காலங் கழித்தான்.

இப்படியிருந்து வருகையில், மதுமாஸமஹோற்சவம் வந்தது. அச்சமயம் ஸ்ரீதத்தன் தன் நண்பன் பாகுசாலியுடன் ஓர் சிங்காரத்தோட்டத்திற்குச்சென்றான். அங்கே ஓர் இராஜகுமாரியைக் கண்டான். அவள் ஸ்ரீபிம்பகி என்ற ஓர் அரசனுடைய

புத்திரி. வசந்தலக்ஷ்மியே சரீரமெடுத்து வந்ததற்கொப்பப் பேரெழில் வாய்ந்தவள். மிருகாங்கவதி யென்ற பெயர் பெற்றவள். இவளை ஸ்ரீதத்தன் கண்டதும் அவனுடைய இருதயத்தில் குடிபுகுந்தாள். அவளுடைய அன்பு நிறைந்த கண்களானது தூது சொல்வதன் பொருட்டு வந்த மாதைப்போல் சுழன்றவாறேயிருந்தன. பிறகு சற்று நேரத்திற்கெல்லாம் அந்த மிருகாங்கவதி அருகே இருந்த மரங்களடர்ந்த வனத்திற்குள் புகுந்தாள். அவள் மறையவே ஸ்ரீதத்தனுடைய மனமும் யாறியது. தான் இன்ன விடத்தில் இருக்கிறோமென்பதையும அறியமுடியாதபடி தன்னையே மறந்து நின்றான். அது கண்ட அவன் நண்பன் பாகுசாலி, "மித்திரா! உன் மன எண்ணத்தை நானறிந்தேன். நீ அதை மறைக்கமுடியாது. இதோ நீ ஆசை கொண்ட அந்த வனிதை சென்ற வனத்திற்குள் சென்று பார்த்து வருகிறேன்" என்று கூறித் தன்னுடன் வந்த சேவகனையுமழைத்துக்கொண்டு சென்றான். இந்த பாகுசாலி அந்தப் பெண்மணியைக் கிட்டுந் தருணத்தில் அவளை யோர் அரவந் தீண்டியபடியால் அவள் " ஆ! கஷ்டம், கஷ்டம் !!" என்று கூவிக் கொண்டு தரையில் விழுந்தாள். அதை யறிந்த பாகுசாலி உடனே தன் அருகே இருந்த சேவகனைப் பார்த்து "அடே! என் நண்பனிடம் விஷத்தைப் போக்கும மோதிரமிருக்கிறது. அல்லாமலும் அவனுக்கு மந்திரந் தெரியும். அவனைச் சீக்கிரயாக அழைத்து வா? செல்" என்று கூறியனுப்பினன். சேவகன் சென்று ஸ்ரீதத்தனிடம் சங்கதியைச் சொல்லி அவனை மிருகாங்கவதியிடம் விரைவாக அழைத்து வந்தான். ஸ்ரீதத்தன் உடனே அந்த மோதிரத்தை ஜபித்து அவள் கையில் அணிந்தான். அவள் நித்திரை தெளிந்தெழுந்தவள் போல உடனே எழுந்தாள். அச்சமயம் அங்கே போய்க் கொண்டிருந்தார் சிலர், இதைக்கண்டு ஆச்சரியமடைந்து ஸ்ரீதத்தனை வாழ்த்தினார்கள். பிறகு இச்செய்தி பிம்பகி என்ற அரசனுக் கெட்டியது. அரசன் அந்த ஆரண்யத்திற்கு வந்து ஸ்ரீதத்தனைக்கண்டு புகழ்ந்து மகிழ்ந்தான், தன் குமாரத்தி கையிலிருந்த மோதிரத்தை வாங்கித் தான் அணிந்து கொண்டு வீடு சென்றான். மிருகாங்கவதியும் ராஜகிருகம் சென்றாள். ஸ்ரீதத்தன் முதலிவர்களும் வீடு சென்றார்கள்.

பிறகு மறுநாள் ஸ்ரீதத்தனுக்கு அரசன் சொர்ணங்களையும் இரத்தினங்களையும் தன் மனங்கொண்டமட்டும் பரிசளித்தான்.—ஸ்ரீதத்தன் அவைகளைப் பாகுசாலியின் தந்தையிடம் கொடுத்து அவரை வணங்கினன். பிறகு ஸ்ரீதத்தனுக்கு மிருகாங்கவதியை எவ்விதத்திலேனும் அடையவேண்டுமென்கிற எண்ணமுண்டாயிற்று. இதை அவன் நண்பர்கள் தெரிந்து கொண்டார்களாகையால், அவர்கள் மிருகாங்கவதியின் தோழியாகிய பாவனிகையிடம் கூறினார்கள். பாவனிகை சமயம் பார்த்திருந்தாள். பிறகு இரண்டு நாள் கழித்து அரசன் ஸ்ரீதத்தனுடைய மோதிரத்தை அவனிடமே சேர்ப்பிக்கும்படி கூற அவள் அதைவாங்கிக்கொண்டு ஸ்ரீதத்தனிடம் வந்து மோதிரத்தைக் கொடுத்து விட்டு "ஏ சுந்தர! என்னுடைய தோழிமிருகாங்கவதியின் பிராணபிச்சை தந்தவர் நீரே யாகையால், நீர் தான் அவளுக்கு நாயகன். அவளை நீரடையவேண்டியது அவசியமாகையால் அதற்குத்தக்க முயற்சி செய்யவேண்டும்" என்று கூறி உடனே அங்கிருந்த பாகுசாலி முதலிய ஸ்ரீதத்தனுடைய நண்பர்களுடனிருந்து ஒரு யோசனைசெய்து அந்தப்படி செய்வதெனத் தீர்மானித்துக் கொண்டு வீடு சென்றாள்.

பிறகு இரண்டு நாள் கழித்து அன்று செய்த யோசனைப்படி பாகுசாலியும் ஸ்ரீதத்தனுடைய நண்பர்களில் இன்னும் இரண்டு பேரும் மதுராபுரிக்கு வியாபாரம் செய்யப் போவதாகச் சொல்லிக்கொண்டு புறப்பட்டார்கள். ஸ்ரீதத்தன் ஓர் ஸ்திரீயையும் அவள் பெண் ஒருத்தியையும் மிருங்காகவதியின் மாளிகைக் கனுப்பி அங்கிருந்து வரும்படி செய்தான். அன்று மாலை விளக்கு வைக்குந் தருவாயில் பாவனிகை அந்த ஸ்திரீக்கும் அவள் பெண்ணுக்கும் மதுவைத் திருப்திகரமாகக் கொடுத்தாள். அவர்கள் வயிறுகொண்டமட்டும் குடித்து விட்டு மயங்கிக் கிடந்தார்கள். பிறகு பாவனிகை ஒருவரையுமறியாமல் மாளிகையின் ஒரு புறம் சென்று அங்கே தீயை வைத்தாள். மாளிகை பற்றி யெரியும்போது மிருகாங்கவதியுடன் வெளியே வந்து விட்டாள். பாவனிகையின் முன் யோசனைப்படி அங்கு ஸ்ரீதத்தன் நின்று கொண்டிருந்தானாகையால் உடனே இருவரையும் தன்னுடைய இரண்டு மித்திரர்களிடம் ஒப்புவித்து.

முன்னால் சென்ற பாகுசாலியிடம் கொண்டு போய்ச் சேர்க்கும்படி திட்டப்படுத்தி யனுப்பி விட்டான்.

பிறகு மாளிகை தீப்பிடித்தெரிவது அரசனுக்குத் தெரிந்து அவன் அநேக ஆட்களை விட்டுத் தீயை யவிக்கும்படி செய்து மிருகாங்கவதியைத் தேடினான். அங்கே ஓரிடத்தில் முன் மதுவை யுண்டு மயங்கிக் கிடந்த ஸ்திரீயும் அவள் மகளும் இறந்து கிடக்கக் கண்டு அவர்களை மிருகாங்கவதியும் அவள் தோழி லாவணிகையுந் தானென நினைத்து மிகவும் வருத்தத்துடன் தன் அரமனை சென்றான்.

மறுநாள் இராத்திரி ஸ்ரீதத்தன் மிருகாங்கம் என்கிற தன் கத்தியை யெடுத்துக்கொண்டு அந்நகரத்திலிருந்து புறப்பட்டுச்சென்று விந்தியமலைக்கருகேயிருந்த ஒரு வனத்தில் பிரவேசித்தான். அப்போது அவனுக்குச் சில அபசகுனங்களுண்டாயின. அவைகளைக் கண்டு பிரமித்தான். பின் இன்னுங் கொஞ்சம் போய்ப் பார்ப்போமென்று கருதி கொஞ்சதூரம் போய்ப் பார்த்தான். அங்கே திருடர்களிடத்தகப்பட்டுத் தொந்தரவடைந்து மனம் வருந்தி நிற்கும் தன் நண்பர்களாகிய பாகுசாலி முதலியவர்களைக் கண்டான். கண்டதும் வியப்பும் விசனமுமடைந்து "நண்பர்காள்! இக்கோலம் அடைந்ததன் காரணமென்ன? எங்கே என் இன்னுயிர்க்காதலி" என்று கேட்டான். அவர்கள், "சற்று முன் நாங்கள் இங்கே வந்து கொண்டிருந்தபொழுது சில குதிரைவீரர்கள் எங்களை நோக்கி வந்து எங்களை யடித்துக் கீழே வீழ்த்தி, அவர்களைக் கண்டு மிகவும் பயந்த மிருகாங்கவதியை அவர்களில் ஒருவன் தூக்கித் தன் குதிரை மீது வைத்துக் கொண்டு சென்று விட்டான். பிறகு மற்றவரும் போய் விட்டார்கள். இப்போது அவர்கள் கொஞ்சதூரமே சென்றிருப்பார்கள். நீ தாமதிக்காமற் சென்றால் அவர்களைப் பிடிக்கலாம். இங்கு நில்லாதே. செல்" என்று கூறி விசனமுற்றார்கள்.

இதைக் கேட்டதும் ஸ்ரீதத்தன், "ஆ! அப்படியா! எத்திசையை நோக்கிச் சென்றார்கள். அவர்கள் எவ்வளவு தூரம் சென்றிருப்பார்கள்?" என்று கேட்க, அவர்கள் ஒரு திசையைக் குறிப்பிட்டு, "சீக்கிரம், போ நில்லாதே" என்றார்கள். ஸ்ரீதத்தன், உடனே புறப்பட்டு அதிக வேகமாகச் சென்று வெகுதூரம் போனபின்

அக்குதிரைவீரர்கள் கூட்டத்தையும், அவர்களுக்கு நடுவில் ஓர் ராஜகுமாரன் ஒரு குதிரை மீதும், மிருகாங்கவதி அவனருகே மற்றொரு குதிரை மீதும் செல்வதைக் கண்டான். கண்டதும் கடுங் கோபமடைந்தான். பிறகு வடவாக்கினி போல் கிளம்பிய கோபத்தைத் தணித்துக்கொண்டு மெதுவாகச் சென்று அவர்களைக் கிட்டியதும் அந்த ராஜகுமாரனைப் பார்த்து, "அப்பா! இந்த இராஜ குமாரத்தியை விட்டுவிடு" என்று நயந்து கூறினான். அவன் "நீ யார்? எங்கே வந்தாய்! போய் விடு. நின்றால் உன் உயிர் தப்புவதரிதாய்ப் போய்விடும்" என்று பதிற் கூறினான். உடனே ஸ்ரீதத்தன் சினமடைந்து குபீலென்று ராஜகுமாரன் மேல் பாய்ந்து அவனைக் குதிரையினின்றும் கீழே வீழ்த்தி மற்றவர்களைத் தன் கைக் கத்திக்கிரையாக்கி மிருகாங்கவதியைக் குதிரை மீது வைத்துக்கொண்டு தன் நண்பர்களை நோக்கி வந்தான். கொஞ்ச தூரம் வந்ததும் குதிரை சோர்ந்து நடையோடாமல் நின்று நின்று சென்றது. அது கண்ட ஸ்ரீதத்தனும் மிருகாங்கவதியும் குதிரையினின்றும் கீழே இறங்கி யோசித்தார்கள். அப்பொழுது அது சற்று முன் நடந்த யுத்தக்களைப்பினால் சோர்வடைந்துள்ளதென்பதைக் கண்டு என்ன செய்வதென்று தோன்றாது மலைத்து நின்றார்கள். அதற்குள் அக்குதிரை கீழே விழுந்து கால்களையுதைத்துக்கொண்டு இறந்தது. பிறகு இருவரும் மிகுந்த வருத்தத் துடன் கொஞ்சதூரம் கால் நடையாகவே சென்றார்கள். இப்போது மிருகாங்கவதிக்குத் தாகம் மிகுதியுண்டாயிற்று. கால் நடையோடவில்லை. அதிக களைப்புமுண்டாயிற்று. ஆகையால் ஸ்ரீதத்தனிடம் "அதிக தாகமாயிருக்கிறது; கொஞ்சம் ஜலம் வேண்டும்" என்று கேட்டாள். ஸ்ரீதத்தன் அவளை அங்கோர் மரத்தடியிலிருக்கும்படி சொல்லிவிட்டுத் தான் தண்ணீர் கொண்டு வர ஒரு குளத்தைத் தேடிச் சென்றான்.

பிறகு வெகுதூரம் சென்று சூரியன் அஸ்தமனமாகும் வேளையில் தண்ணீரிருக்குமிடத்தைக் கண்டு பிடித்தான். இவன் அங்கிருந்து தண்ணீரெடுத்துக்கொண்டு திரும்பிக் கொஞ்சதூரம் வருவதற்குள் நன்றாய் இருட்டி விட்டமையால் ஸ்ரீதத்தனுக்கு அதற்கு மேல் நடந்து வர வழி தெரியவில்லை. ஆகவே அந்தக் காட்டில்

அன்றிரவு முழுதும் அங்குமிங்கும் சுற்றித் திரிந்து கொண்டு சக்ரவாகபக்ஷிபோல் கதறிக் கொண்டிருந்தான்.

பிறகு பொழுது புலர்ந்தது. இப்பொழுது தான் வந்த வழியைத் தெரிந்து கொண்டு அவ்வழியே நடந்து முன் மிருகாங்கவதியை இருக்கும்படி சொல்லி விட்டுப் போன மரத்தடியில் வந்து பார்த்தான். அங்கு அவள் காணுதிருக்கவே மிகுந்த வருத்தமடைந்து சுற்றும் மற்றும் சென்று தேடிப்பார்த்தான். பிறகு அங்கிருந்த ஒரு பெரிய மரத்கடியில் தன் கையிலிருந்த மிருகாங்கம் என்ற கத்தியை வைத்து விட்டு அதன் மேலேறிப் பார்த்தான். அப்பொழுது அவ்வழியே வந்த வனவேடனெருவன் அந்தக் கத்தியைக் கண்டு அதைக் கையிலெடுத்துக் கொண்டான். அதைக் கண்ட ஸ்ரீதத்தன் "ஓகோ! என்ன ஆபத்திது. கத்தியையும் ஒருவன் எடுத்துக் கொண்டானே! என்ன செய்வேன் ஜகதீசா" வென்றெண்ணிச் சரேலென்று கீழே யிறங்கி வந்து வேடனைக் கண்டு மிகவும் வணக்கத்துடன் "அப்பனே! கத்தி என்னுடையது; அதைக் கொடு" என்று கேட்டும், தான் தன்னேடு வந்த மிருகாங்கவதிக்காகத் தேடிக் கொண்டிருப்பதாகவும் கூறினுன். வேடன், "சரி நீ என்னுடன் கொஞ்சதூரம் வருவாயாகில் அங்கு, நீ தேடிக்கொண்டிருக்கும் மாதைக் காண்பிப்பது மன்றி இக்கத்தியையும் தருகின்றேன்" என, ஸ்ரீதத்தன் "அப்படியே யாகட்டுமென" அவனுடன் நடந்தான். வேடன், ஸ்ரீதத்தனையழைத்துக் கொண்டு கொஞ்சதூரம் சென்று பல வேடர்கள் கூடியிருக்கும் சராலயம் என்னுமிடத்தையடைந்தான். இங்கே வேடர்கள் ஸ்ரீதத்தனைக் கண்டதும் மிகுந்த பரிதாபங்கொண்டவர்கள் போல் பேசிச் சிறிது களையாறும்படி சொன்னுர்கள். ஸ்ரீதத்தன் அங்கிருந்த ஒரு குடிசைக்குட் புகுந்து சிரமபரிகாரம் செய்து கொள்ளக் கருதிப் படுத்தான். படுத்த ஒரு நிமிஷ நேரத்திற்கெல்லாம் கண்ணை அயர்ந்து நித்திரை போய்விட்டான்.

பிறகு சற்று நேரத்திற்கெல்லாம் விழித்துக் கொண்டு பார்க்கையில் தன் கால்களில் விலங்கு பூட்டியிருக்கக் கண்டு "ஆகா! இப்படியும் ஆமா என் விதி! அந்தோ! நான் யாருக்கு என்ன தீங்கு செய்தேன், ஒரு கணநேரம் சுகமும், அந்த சுகமுண்ட நினைவு மாறு

முன் துக்கமும் நேரிடுகிறதே! ஈசா! இதென்ன விந்தை! இப்படியும் மனிதனுடைய பாபத்திற்கொருதண்டனையா? என் அப்பனே இனி நீ பிரயாசைப் படாதே. மிருகாங்கவதியைத் தேடுவது வீண் என்பதைத் தெரிவிக்கவோ இப்படி என் காலில் விலங்கிடப் பட்டிருக்கிறது' என்றிவ்வண்ணம் நினைத்துப் பெருந்துக்கத்துள் மூழ்கியவனாயிருந்தான்.

இப்படி இரண்டொரு நாள் சென்றது. பிறகு ஸ்ரீதத்தனிருந்த இடத்திற்கு மோசனிகை யென்ற பணிப்பெண் ஒருத்தி வந்து அவனைப் பார்த்து "மகாபாக்கிய சாலியாகிய நீ இங்கு எங்கே உயிர் துறக்க வந்தாய்? ஆ கஷ்டம்! கஷ்டம்!! வேடர்களுக்கு அதிபனாகிய சபராதிபன் என்பவன் இப்போது வெளியே சென்றிருக்கிறான். வந்ததும் அவன் உன்னைக் காளிக்கு பலி கொடுக்கப் போகிறான். இதற்காகவே உன்னை அவனைச் சார்ந்த வேடனொருவன் இங்கு கூட்டி வந்திருக்கிறான். உன்னைச் சண்டிகைக்குப்பலி கொடுக்கும் பொருட்டுத் தான் உனக்கு வயிறுநிறைய உணவை யளித்துப் போஷித்து வருகிறார்கள். நீ இதிலிருந்து தப்புவதற்கு ஓர் உபாயமிருக்கிறது. அதாவது, இந்தச் சபராதிபனுக்குச் சுந்தரி யென்றொரு குமாரத்தியிருக்கிறாள். அவள் உன்னைப் பார்த்ததுமுதல் மன்மதன் வசத்தளாகி வருத்தப் படுகிறாள். அவளை நீயடைவாயாகில் உனக்குச் சுகம் கிடைக்கும்" என்று கூறினாள். இதைக் கேட்டதும் ஸ்ரீதத்தன் "அம்மா! அப்படியேயாகட்டும்; என்னை விடுவிப்பதுன்கடமை" என்றான். உடனே மோசனிகை சென்று ஒருவரையுமறியாமல் சபராதிபன் குமாரத்தி சுந்தரியை யழைத்துக் கொண்டு வந்து ஸ்ரீதத்தனிடம் விட்டாள். இருவரும் அங்கு காந்தர்வ விவாகம் செய்து கொண்டார்கள். பிறகு சுந்தரி நாள் தோறும் இரவில் ஒருவரையுமறியாமல் ஸ்ரீதத்தனிடம் வந்து அவனுடைய விலங்கை கழற்றிவிட்டுப் பின் அவனுடனிருந்து சுகமனுபவிப்பதும் போகும் போது விலங்கை முன் போலவே பூட்டி விட்டுப் போவதுமாக விருந்தாள்.

இப்படி யிருந்து வருகையில் சில மாத காலத்திற்கெல்லாம் சுந்தரி கர்ப்பந்தரித்தாள். இச்செய்தியை சுந்தரியின் அன்னை மோசனிகையின் மூலமாகத் தெரிந்து கொண்டாள். அவள்

தன் மகளின் அன்பிற் குரியவனுயிற்றே யென்கிற அபிமான த்தால் உடனே ஸ்ரீதத்தனிடம் வந்து, "ஓ புத்திர! சுந்தரியின் தந்தை மிகக் கோப முடையவர். இந்த மர்மம் அறிவாராயின் அவர் உன்னை மன்னிக்கவே மாட்டார். ஆகையால் இக்கணமே இவிடம் விட்டுச் சென்று விடு; சுந்தரியை மட்டும் மறவாதே" என்று கூறி விலங்கினின்றும் விடுவித்தாள். உடனே ஸ்ரீதத்தன் சுந்தரியை யழைத்து மிருகாங்கம் என்ற கத்தி வேடனிடமிருப் பதைத் தெரிவித்தும் பிறகு சற்றிரிந்து விட்டு அங்கிருந்து புறப்பட்டு முன்பு தான் திரிந்து கொண்டிருந்த வனத்துக்கு வந்து சேர்ந்தான். இப்பொழுது இவனுக்கு மனதில் பெருங்கவலை யுண்டாயிற்று. சற்று நேரம் ஒன்றுந் தோன்றாமல் மலைத்து நின் றான் பிறகு மிருகாங்கவதி சென்ற வழியே சென்று தேடி னான். கொஞ்ச தூரம் சென்றதும் சுபசகுனங்கள் தோன்றக் கண்டு சிறிது மனக்கவலை நீங்கியவனாகி அவ்வழியே பின்னும் சென்றான். அங்கொரு வேடனைச் சந்தித்தான். அவனிடம் மிரு காங்கவதியைப் பற்றி விசாரித்தான். வேடன் "ஆ! நீ ஸ்ரீதத் தனா?" என்றான். ஸ்ரீதத்தன் பெருமூச்சு விட்டுக் கொண்டு "அப்பா பாக்கிய ஹீனனான ஸ்ரீதத்தன் நான் தான்" என்றான். பிறகு வேடன், "நண்ப! உன் மனைவியை நான் கண்டேன். அந் தப் பெண்மணியைக் கண்டதும் கருணை கூர்ந்து எங்களிருப்பி டத்திற்கு அழைத்துச் சென்றேன். அங்கு வாலிபப் பருவமு டைய சில வேடர்களிருந்தமையால் அவர்கள் மீது சந்தேகங் கொண்டு அந்தப் பூங்கொடியை மதுரைக்கருகேயுள்ள நாகஸ் தலம் என்னும் கிராமத்திற்கு அழைத்துச் சென்றேன். அங்கே எனக்கொரு நண்பனிருக்கிறான். அவன் பெயர் விசுவதத்தன். அவனிடம் மிருகாங்கவதியை அடைக்கலமாக வைத்து விட்டு அம்மாதரசியினிட மிருந்து உன் பெயரை யறிந்து கொண்டு இங்கு வந்தேன். நான் வேறு காரியமாகப் போக வேண்டியதாயி ருக்கிறது. ஆகையால் நீ இப்போதே நாகஸ்தலத்திற்குச் செல்; தாமதியாதே" என்று சொல்லிப் போய் விட்டான்.

பிறகு ஸ்ரீதத்தன் நாகஸ்தலத்தை நோக்கி நடந்து மறு நாள் மாலையில் அவ்வூரை யடைந்து வேடன் சொல்லிய விச்வ

தத்தனுடைய வீட்டிற்குச் சென்று அவனைக் கண்டு "ஐயா! வேடன் தங்களிடத்து ஒப்புவித்த மிருகாங்கவதி எங்கே" என்று கேட்டான். விசுவதத்தன், "ஐயா! உமது பெயர் ஸ்ரீதத்தன். சரி, மிருகாங்கவதியை வேடன் என்னிடம் ஒப்புவித்தது உண்மைதான். இவ்வூரில் அந்தப் பெண் மணியை வைத்துக் காப்பாற்றுவது கஷ்டமாயிருந்தமையால் மதுரையிலிருக்கும் எனது நண்பராகிய பிராமணோத்தமரிடம் ஒப்புவித்திருக்கிறேன். அந்தமாது அங்கிருந்து வருகிறாள். பிராமணராகிய எனது நண்பர் உத்தமமான குணங்களையுடையவர். அவ்வூர் மன்னனுக்கு உபாத்தியாயர். அன்றியும் இந்த இராஜ்பத்து மந்திரி உத்தியோகமும் பார்த்து வருகிறார். ஆகையால் நீர் நாளை காலையில் அங்கே செல்லலாம். இன்று இங்கிருந்து சிரம பரிகாரம் செய்துகொள்ளும்" என்று சொன்னான்.

ஸ்ரீதத்தன் விசுவதத்தனுடைய வேண்டுகோளுக்கிணங்கி அன்றிரவு அவன் வீட்டிலேயே யிருந்து மறுநாட் காலையில் உதயத்திற்கு முன்பே புறப்பட்டு சூரியன் உதித்த கொஞ்ச நேரத்திற்கெல்லாம் மதுரை வந்து சேர்ந்தான். இதுவரையில் ஸ்ரீதத்தன் வெகுதூரம் நடந்து வந்திருக்கிறானதலால், அவன் தேகத்திலும் வஸ்திரத்திலும் மிகுதியும் அழுக்குப்படிந்திருந்தது. ஆகவே அவன் அவ்வூருக்குப் புறம்பேயிருந்த குளத்திலிறங்கி அதில் அழுக்குத் தேய்த்து ஸ்நானஞ் செய்து பின் கரை யேறினான். அங்கொரு உலர்ந்த வஸ்திரம் ஓர் சிறு மரத்தின் மீது வைத்திருக்கக் கண்டு அதை யெடுத்து உடுத்துக்கொண்டு மதுராபுரிக்குள் பிரவேசித்தான்.

இங்கே காவலாளிகள் இவனைப் பிடித்துக்கொண்டு அவ்வூர் அரசனிடம் கொண்டுபோய் நிறுத்தி "மகாராஜாவே! திருடன் அகப்பட்டு விட்டான். இதோ பாருங்கள் இவனிடம் திருட்டுப் போன வஸ்திரமிருக்கிறது" என்று கூறி ஸ்ரீதத்தன் குளக்கரையின் மேலிருந்த மரத்திலிருந்து எடுத்து உடுத்துக்கொண்ட வஸ்திரத்தைக் காட்டினார்கள். அரசன் ஸ்ரீதத்தனைத் திருடனெனவே நிச்சயித்து அவனைக் கொலைசெய்யும்படி உத்தரவிட்டான். கொலை

யாளிகள் உடனே ஸ்ரீதத்தனைப் பிடித்துக் கொலைக் களத்துக்க ழைத்துச் சென்றார்கள். அப்பொழுது அவனுக்குப் பின்னால் அக்காலத்து வழக்கப்படி டண்டிவாத்திய முழக்கிக் கொண்டு சென்றார்கள். அப்பொழுது மந்திரியின் கிருகத்திலிருந்த மிருகாங் கவதி பலகணியின் வழியே ஸ்ரீதத்தன் செல்லும் அலங்கோலத் தைக் கண்டாள். உடனே "ஆ! என் கனவனைக் கொலைசெய் யக் கொண்டு போகிறார்களே" என்று கூக்குரலிட்டாள். அதை யறிந்த மந்திரி மிருகாங்கவதியின் அருகே வந்து விசாரிக்க அவள் ஐயோ! இதோ பாருங்கள் என் கனவனை இழுத்துக்கொ ண்டு போகிறார்கள் "நானென்ன செய்வேன்" என்று கதறினாள். மந்திரி மிருகாங்கவதியை "அழாதே" என்று கூறித்தேற்றி உடனே கொலையாளி களிடம் வந்து ஸ்ரீதத்தனை விடும்படி சொல்லி அரசனுக்குச் சங்கதி தெரிவித்துத் தன் வீட்டுக்கழைத்துச் சென் றான். அப்பொழுது ஸ்ரீதத்தன் அந்த அந்தணனைச் சற்று உற்றுப் பார்த்து, உடனே ஆகா! "தாங்கள் என் தந்தையின் உடன் பிறந்தவரல்லவா? நீர் முன்பு தேசாந்திரஞ் செல்லவில்லை யா?" என்று கேட்க, உடனே அவ்வந்தணனான் ஸ்ரீதத்தன் தன அண்ணன் மகன் என்று தெரிந்து கொண்டு பரமாச்சரிய படைந்து "என் அப்பா மகனே!" என்று கட்டித்தழுவிக் கொண் டான். பிறகு ஸ்ரீதத்தன் தந்தை வதமடைந்தது முதல் நடந்த விஷயங்களைக் கூறினான். அதைக் கேட்டதும் அவ்வந்தணன் கண்களிலிருந்து நீர் பெருக விசனமுற்றுப் பின் ஸ்ரீதத்தனைப் பார் த்து "மகனே! அதைரியப்படாதே. எனக்கு யக்ஷிணி ஒன்று பிர த்தியட்சமாகி மக்கட் பேறில்லாத எனக்கு ஐயாயிரம் குதிரைக ளையும் ஏழுகோடி சொர்ணங்களையும் கொடுத்துச் சென்றது. அப்பனே! அந்தப்பொருள் யாவும உனக்குத்தான்" என்று கூறி மிருகாங்கவதியை ஸ்ரீதத்தனிடம் ஒப்புவித்தான். ஸ்ரீதத்தன் மிரு காங்கவதியை அன்போடு ஏற்றுக்கொண்டு தன் சிற்றப்பனான அவ் வந்தணன் வீட்டிலேயே சிலகாலம் வசித்து வந்தான்.

இப்பொழுது இவனுக்கு பாகுசாலி முதலியவர்களின் நினை ப்புண்டாயிற்று. இருதயத்தில் பலினத்தன்மையைக் கொடுக்கும் விசாரம் குடி புகுந்தது. இப்படி இருக்கையில் ஒரு நாள் மந்திரி

யாகிய அந்தணன் ஸ்ரீதத்தனை யழைத்து, "புத்திர! சூரசேனரா ஜனுக்கு ஒரு கன்னிகை யிருக்கிறாள். அக்கன்னிகையை அவந்தி தேசத்திற்கு அழைத்துச் செல்லும்படி எனக்கு அந்த அரசன் உத்தரவு செய்திருக்கிறான். அவ்வுத்தரவுப் படியே நான் அந்தக்கன்னிகையை அழைத்துப்போகப் போகிறேன். அப்பொழுது அக்கன்னிகையுடன் சில சேனைகளை யனுப்புவான் அரசன். அந்தச்சேனைகளையும் நீயே வைத்துக்கொள். முன் "இலட்சுமி தேவி கூறியபடி நீகூடிய சீக்கிரத்தில் இராஜபதவியை யடைவாய்" என்று சொல்ல, ஸ்ரீதத்தன் மகிழ்வுற்றான். பிறகு மந்திரி இராஜகன்னிகையை யழைத்துக்கொண்டு புறப்பட்டான். அரசனால் சில சேனைகளும் அவர்களுடன் செல்ல அனுப்பப்பட்டன. இப்படி மந்திரி புறப்பட்டவுடன் ஸ்ரீதத்தனும் தன் மனைவி மிருகாங்கவதியோடு புறப்பட்டான். எல்லாரும் வெகுதூரம் போய் விந்தியமலைச்சாரலை யடைந்தார்கள். இந்த இடம் ஜனசஞ்சாரமே இல்லாத பெருங்காடானதால் திருடர்கள் சிலர் வந்து இவர்களை மடக்கிக் கொண்டார்கள். ஸ்ரீதத்தனும் சைன்னியங்களும் அவர்களை யெதிர்த்து அமர்புரிகையில் திருடர்கள் ஸ்ரீதத்தனை யடித்து மூர்ச்சை போய்க் கீழே விழும்படி செய்து விட்டார்கள். சைனயங்களையும் நையப் புடைத்து நாலாபக்கங்களிலும் "தப்பினோம்! தப்பினோம்!!" என்று சொல்லிக்கொண்டு ஓடும்படி செய்தார்கள். பிறகு அவர்களிடமிருந்த பொருள்கள் முழுவதையும் கவர்ந்து கொண்டது மன்றி ஸ்ரீதத்தனையும் தூக்கிக்கொண்டுபோய் விட்டார்கள். திருடர்கள் தங்களிருப் பிடத்தை யடைந்ததும் ஸ்ரீதத்தனைச் சந்நிதியில் சண்டிகையின் ஆலயத்திற்குக் கொண்டு போய் பலி கொடுக்க நிறுத்தினார்கள். அப்பொழுது வழக்கப் படி மணிகள் கண! கண!! என்று ஓசைப்பட்டன. இச்சமயம் சண்டிகையைத் தரிசிக்கக்கருதி முன ஸ்ரீதத்தன் ஓர் வேடனிடத் தகப்பட்டபோது காந்தர்வ விவாகம் செய்து கொண்ட சுந்தரி யென்னுமாது இடுப்பில் ஓர் இளங்குழந்தையை யெடுத்துக் கொண்டுஆலயத்திற்கு அம்மன் தரிசனஞ் செய்வதன் பொருட்டு வந்தாள். அவள் ஸ்ரீதத்தனிருக்கும் நிலமையைக் கண்டு "நமது ஆருயிர் காதலல்லவா? இவர் இங்கு எப்படிவந்தார்? இவர்கள்கையில் இவர் இங்கு எப்படிச்சிக்கினர்" என்று கருதி அச்சமுற்றுப் பின்

தைரியமடைந்து திருடர்களிடம் தன்னுடைய நாதன் என்பதைச் சொல்லி விட்டு விட வேண்டுமென வேண்ட, அவர்கள் மனமிரங்கி ஸ்ரீதத்தனைப் பலி கொடுக்காது அந்தமாதுடன் அனுப்பி விட்டனர்.

சுந்தரி தன் நாதன் ஸ்ரீதத்தனுடன் வீடு சென்று தன் தந்தையிடம் ஆதிமுதற் சொல்லித் தன்னையும் தன் நாதனையும் மன்னிக்கும்படி கேட்க, சுந்தரியின் தந்தை அவ்வாறே மன்னித்துத் தனக்கு வேறுபிள்ளையில்லாமையால் தன் மருமகனாகிய ஸ்ரீதத்தனையே பிள்ளையாகக் கொண்டு தன் சொத்துக்களுக்கு உரிமையாக்கினன்.

பிறகு ஸ்ரீதத்தன் தன் மாமனாருடைய உதவியால் திருடர்களிடமகப்பட்டு அடிபட்டுக் கிடக்கும் தன் சிறிய தந்தை சேனைகள், தன் மனைவி மிருகாங்கவதி, மிருகாங்கம் என்றகத்தியெல்லாவற்றையுமடைந்தான். சூரசேன ராஜன் குமாரியையும் தானே மணம்புரிந்து அந்த இடத்தில் தன் இராஜ்யத்தை ஸ்தாபித்தான. இச்செய்தி யறிந்த பிம்பகி சூரசேனன் என்ற இரண்டுமன்னர்களும் இவன் மீது படையெடுத்துவர, அவர்களோடு ஸ்ரீதத்தன் அமர் புரிந்து தோல்வி யடையும்படி செய்தான். அவர்கள் ஸ்ரீதத்தனை வெல்வதரிதெனக்கண்ட பின்பு அவனோடு சமாதானம் செய்து கொண்டார்கள். பிறகு ஸ்ரீதத்தனும் மாமனாருக்குரிய மரியாதையை அவர்களுக்குச் செய்து மகிழ்ந்தான். பிறகு ஸ்ரீதத்தன் இராஜபதவியையடைந்து வாழ்வதை யறிந்து அவனது நண்பர்களாகிய பாகுசாலி முதலியவர்கள் அவனிடம் வந்து சேர்ந்தார்கள்.

இவ்வாறு சில நாட் சென்றதும் ஸ்ரீதத்தன் தன் மாமனாருடன் தன் தந்தையைக் கொன்ற விக்ரமசக்தியிடம் போய் அவனைத் தன்னுடைய கோபமாகிய அக்கினிக்கு இரையாகத் தந்தான. அதாவது அவனை யுத்தத்தில் கொன்று அந்த இராஜ்யத்தையும் தனக்குச் சுவாதீனப்படுத்திக் கொண்டு சுகமாக வாழ்ந்து வந்தான்.

"ஓ அரசனே! தைரியசாலிகள் நீண்டகாலத்திற்குப் பிறகும் தங்களுடைய வியசனமாகிய கடலைக்கடந்து சுகம் பெறுவார்களென்றறிவீர்களாக" என்று சங்கதன் கூற ஸஹஸ்ரானீகன்

அன்றிரவைச் சுகமாகக் கழித்தான். பிறகு மறுநாட்காலையில் தன் பிரிய நாயகியைத் தேடிக்கொண்டு புறப்பட்டுச் சில நாள்களில் அந்த ஜமதக்னியின் ஆசிரமம் போய்ச் சேர்ந்து அந்த முனிவரைக் கண்டு பணிந்தான். முனிவர் ஸஹஸ்ரானீகனைப் பிரியத்துடன் உபசரித்தார். போகலக்ஷ்மியைப் போன்ற இராஜகுமாரியாகிய மிருகாவதியையும் அவள் புதல்வனையும், அரசனிடம் ஒப்புவித்தார். மிருகாவதியும் ஸஹஸ்ரானீகனும் சாப முடிவைப்பெற்று இருவரும் என்று மடையாத மகிழ்ச்சி யடைந்தார்கள். அரசன் தன் குமாரனாகிய உதயனனைக்கட்டியணைத்து முத்தமிட்டு ஆனந்தசாகரத்தில் மூழ்கினான்.

பிறகு அந்த ஆச்சிரமத்தில் சில தினங்கள் வசித்திருந்து முனிவரிடம் விடை பெற்றுக் கொண்டு தன் மனைவி புத்திரன் இவர்களுடன் புறப்பட்டுத் தன்னுடைய திவ்யநகரத்திற்குள் பிரவேசித்தான். அப்பொழுது அவர்களை அந்நகரத்தார் யாவரும் பார்த்து மகிழ்ந்தார்கள்.

ஆகவே ஸஹஸ்ரானீகன் முன் கொண்டிருந்த கவலையிலும் எண்படங்கதிகமான சந்தோஷத்துடன் அரமனை வந்து சேர்ந்தான். பிறகு சில நாட் கழிந்ததும் உதயனனுடைய அருமையான குணங்களைக்கண்டு மகிழ்ந்து அவனுக்கு யுவராஜ்ய பட்டாபிஷேகஞ் செய்வித்தான். தன்னுடைய அமைச்சர்களின் குமாரர்களாகிய வசந்தகனன், ருமவான், யௌகந்தராயணன் இவர்களை மந்திராலோசனைத் தலைவராக ஏற்படுத்தினான். அப்போது “சிறந்த இந்த மந்திரிகளால் உதயனன் புவிமுழுதும் தனக்குள்ளாகக்கொண்டு அரசு செலுத்தப் போகிறான்” என்று அசரீரிவாக்குண்டாயிற்று. வானத்திலிருந்து மலர்மாரி தாரை வருஷித்தது. பிறகு ஸஹஸ்ரானீகன் சிலவருட காலம் மிருகாவதி யுடனிருந்து உலகவாழ்க்கையை யனுபவித்துப் பின்பு உதயனனிடம் இராஜ்யபாரத்தை ஒப்புவித்து விட்டுத் தானும் தன் மனைவியுமாக இமயமலைச் சாரலை நோக்கித் தவம் புரியச் சென்றான்.

# மூன்றாவது தரங்கம்.

பின்னர் உதயனன் தந்தை தனக்களித்த ராஜ்யத்தை யேற்றுக்கொண்டு கௌசாம்பி நகரத்திலிருந்து அரசு புரிந்து வந்தான். சில காலஞ் சென்றபிறகு உதயனன் தன் இராஜ்யத்தை யௌகந்தராயணன் முதலிய அமைச்சர்களிடம் ஒப்புவித்து விட்டுச் சுகங்களை யனுபவிப்பதன் மேற் சிந்தை செலுத்திச் சில சமயம் கானகம் சென்று வேட்டையாடி வருவான். சில சமயம் முன்னம் வாசுகி யளித்த வீணையை வைத்துக்கொண்டு கானம் செய்வான். இவன் இப்படி வீணாகானம் செய்துகொண்டு ஒரு சமயம் காட்டிற்குச் சென்றான். அங்கே அந்த வீணாகானத்தைக் கேட்டு மோகமடைந்த சில யானைகளைப் பிடித்துக் கட்டிக் கொண்டு வந்தான். பின் சில நாளைக்கெல்லாம் வேசிகளின் வசத்தனாகி அவர்களிடம் சுகமனுபவிப்பதையே பெரிதாகக் கருதி வந்தான். பின்னொருக்கால் இவனுக்கு விவாகம் செய்துகொள்ள வேண்டுமென்கிற அவாவுண்டாகித் தனக்கேற்ற பெண் எங்குக் கிடைக்கப் போகிறாள் என்கிற கவலையில் மூழ்கியவனானான். பின் விசாரித்ததில் உச்சயினியில் வாசவதத்தை யென்ற ஒரு பெண் நல்ல ரூபவதியாயிருக்கிறாளெனத் தெரிந்து அப்பெண்ணை எவ்விதமடைவதென்கிற யோசனையிலிருந்தான்.

இவன் இப்படியிருக்கையில் உச்சயினியில் வாசவதத்தை யென்னும் அந்தப் பெண்ணின் தந்தையாகிய சண்டமஹாஸேனன் என்ன செய்கிறானெனில், நமது பெண்ணுக்கேற்ற கணவன் ஒருவனையுங்காணோமே! எந்த அரச குமாரனும் மனதிற்குப் பிடிக்கவில்லையே! உதயனன் ஒருவன்தான் நல்ல ரூபவானாகவும் நமது குழந்தைக்கேற்ற புருஷனாகவும் காணப்படுகிறான். அவனோ இப்போது நமக்குப் பகைவனாயிருக்கிறான்; அவனை யெப்படி நாமடைவது? ஒரு வழியையுங் காணோமே! அவன் வேட்டையாடுவதன் நிமித்தம் அடிக்கடி காட்டிற்கு வருகிறான். அப்போது அவனை

யெப்படியேனும் இங்கே கொண்டு வந்து நமது பெண்ணுக்கு வசப் படும்படி செய்து விடலாமா? என்றிப்படி யோசித்துக்கொண்டிருந்து கடைசியில் அப்படிச் செய்வது தவறு; அவனுக்கோ கானசாஸ்திரம் தெரியும்; அவனிடம் நமது பெண்ணை மாணவிகையாகவிருக்கும்படி செய்வோம். அப்பொழுது அவனை நமது பெண்ணே வசப்படுத்தி விடுவாள். காரியம் சுலபத்தில் முடியும், எனத் தன் யோசனையை முடிவுக்குக் கொணர்ந்து அது நிறைவேறு வதன் பொருட்டு சண்டிகையின் ஆலயம் சென்று தேவியைப் பூசித்தான். அப்பொழுது "அரசனே விரைவில் உன் மனோபீஷ்டம் நிறைவேறும்." என்றோர் அசரீரி வாக்குண்டாயிற்று.

அது கேட்டு அரசன் மகிழ்ச்சியடைந்து உடனே புத்ததத்தன் என்ற தன் மந்திரியிடம் வந்து, "உதயனன் மகாகர்வி? ஆனால் உலோபகுணமில்லாதவன்; அவனுடைய வேலைக்காரர்கள் யாவரும் அவனிடம் அன்புள்ளவர்கள். மகாபலசாலி. சாமோபாயம் முதலியவைகளுக்கு அசாத்தியமானவன். ஆயினும் அவனை சாமோபாயத்தாலே சுவாதீனப் படுத்தல் வேண்டும். அதற்காக ஒரு நிரூபம் இவ்வாறு எழுதியனுப்பலாமென்று யோசித்திருக்கிறேன் என்று கூறிப் பின் வருமாறு நிரூபம் எழுதினன்.

உதயனமகாராஜன் அவர்களுக்குச் சண்டஸேனன் மிகவும் வணக்கமாய் எழுதியது.

என் குமாரி வாஸவதத்தை தங்களிடம் மாணவிகையாக விருந்து ஸங்கீதம் கற்றுக் கொள்ள விரும்புகிறாள். தங்களுக்கு எங்களிடம் அபிமானமிருக்கும் பக்ஷத்தில் இவிடம் வந்து சிலகாலமிருந்து குழந்தைக்குச் சங்கீதம் கற்றுக் கொடுத்து அவள் விருப்பத்தைப் பூர்த்தி செய்ய வேண்டும். தங்களுடைய பதிலை யெதிர் பார்க்கிறேன்.

இங்ஙனம்,
தங்கள் அன்பன்
சண்டமஹாஸேனன்.

இக்கடிதத்தை மந்திரி புத்ததத்தன் வாங்கிப்பார்த்து, "சரி நன்றாயிருக்கிறது உபாயம்; இவ்வாறே செய்யலாம்" என்று கூறி

உடனே ஒரு தூதனை யழைத்து அவனிடம் அக்கடிதத்தைக் கொடுத்தனுப்பினான்.

தூதன் விரைவாகச் சென்று கௌசாம்பி நகரமடைந்து உதயனனிடம் அக்கடிதத்தைக் கொடுத்தான். உதயனன் கடிதத்தைப் படித்துப் பார்த்து வியப்புற்று தன் மந்திரி யௌகந்தராயணனை யழைத்துக் கடிதத்தைக் காட்டி, "என்ன துணிவு பார்த்தாயா? அவன் கருவம் அவனை இப்படிக் கடிதமெழுதியனுப்பச் செய்திருக்கிறது. மந்திரி! என்ன அபிப்பிராயம் கொண்டு இந்தக்கடிதமெழுதிருப்பான்" என, மந்திரி, "தாங்கள் வேட்டையாடுவதில் விருப்பங்கொண்டு கானகந்தோறும் திரிவது இந்த உலகமுழுதும் கொடிபோல் படர்ந்திருக்கிறது. இந்த வரலாறு அந்தக் கொடிக்குத் துவர்ப்பும் கைப்பும் கலந்த பலன் போலாயிற்று. அந்தச் சண்டசேனன் தங்களை ஆசை கொண்டவனென்று கருதி, தன்னுடைய பெண்ணைக் கொண்டு தங்களுக்குப் பிரீதி யுண்டு பண்ணித் தங்களைத் தனக்குச் சுவாதீனப் படுத்திக் கொள்ளும் பொருட்டு இக்கடிதம் வரைந்தனுப்பி யிருக்கிறான். ஒன்றில் மனதைச் செலுத்தி அதைப் பெற விரும்பிக் கவலை கொள்ளும் தங்களைப் போன்றவர்கள் பள்ளங்களில் விழுந்து அகப்பட்டுக் கொள்ளும் காட்டு யானைகளைப் போல் பகைவர்களிடம் அகப்பட்டுக் கொள்வார்கள். ஆகையால் தாங்கள் எதற்காகவும் கவலைப்படக்கூடாது" என்றான்.

மந்திரி இவ்வாறு கூறவே உதயனன், சினங்கொண்டு ஒரு தூதனையழைத்து "உன் புத்திரியை என்னிடம் மாணவிகையாக அனுப்ப விருப்பமிருக்குமாயின் அவளை இங்கு என்னிடத்திற்கு அனுப்புங்கள்" என்று ஒரு கடிதம் வரைந்து அவனிடம் கொடுத்து "விரைவாகப் போய் வா" என உத்தரவு செய்தனுப்பினான். பின்னர் மந்திரிகளைப் பார்த்து "மந்திரிகளே! அந்தச் சண்டனைக் கட்டிப் பிடித்துக் கொண்டுவர இன்றே நான் புறப்படுகின்றேன்" என்று படபடத்துக் கூறினான். மந்திரிகள் மகாராஜாவே! அப்படிச் செய்வது முடியாத காரியம். மேலும் அதுயோசனையற்றதாகும். தவிர அவன் மகாமகிமை வாய்ந்தவன், அவனை உபாயத்தால் வெல்லவேண்டும். அவனைப் பற்றித் தெரிவிக்கிறேன் கேளுங்கள்.

அவன் அரசு புரிந்து வரும் உச்சயினிநகரமானது பூமிக்குப் பூஷணம் போன்றது. அது அளகாபுரியையும் பரிகசிக்கும் பெருமை வாய்ந்தது. அதில் விசுவேசர் மகாகாளர் என்ற பெயரு டன் வசித்து வருகின்றார். முன் அந்த உச்சயினி நகரத்தில் மகே ந்திரவர்மன் என்னுமோர் அரசனிருந்தான். அந்த மகேந்திரவர்ம னுக்கு அவனது குணவிசேஷங்களுக்குச் சமானமான ஒரு புத்தி ரன் பிறந்தான். அவனை மஹாஸேனனென்று அழைப்பார்கள். அவன் அந்த உச்சயினியைப் பரிபாலித்து வருங்கால், தனக்கேற்ற ஒரு கத்தியும் நற்குலத்துதித்த ஒரு மனைவியுமில்லாதது கருதி மிக்க விசனமுற்றுத் தேவியின் ஆலயம் சென்று நாடோறும் தேவியை மெய்யன்போடு ஆராதித்து வந்தான். சிலநாலம் உணவா திகளை நீக்கியும் ஆராதித்து வந்தான். அப்படியும் தேவி பிரத்தி யட்ச மாகாதது கண்டு பின் தன் தேகத்திலிருந்து மாமிசத் தைச் சேதித்து அக்னியில் ஹோமம் செய்தான். பிறகு அந்தச் சண்டிகாதேவி பரஸன்னமாக வந்து, அவனைப் பார்த்து, "மகா ஸேன! நான் சந்தோஷமடைந்தேன். சிறந்த இந்தக் கத்தியைப் பெற்றுக் கொள். இதன் மகிமையால் நீ எவரையும் வென்று புகழ் பெறுவாய்" என்று கூறி ஒரு கத்தியைக் கொடுத்துப் பின், "புத் திர! அங்காரகன் என்ற அசுரனுக்குப் புத்திரியும் நிகரற்றரூபவதி யுமாகிய அங்காரவதி யென்ற கன்னிகையை நீ மணம் புரிவாய். நீ என் சந்நிதியிலிருந்து கடுந்தவம் புரிந்து வந்தமையால் உன் பெயர் இன்று முதல் சண்டமஹாஸேனன் என்று வழங்கக் கட வது" என்று வரமளித்து மறைந்தாள். அந்த சண்டமஹாசேன னிடம் இக்கத்தியைத் தவிர நாடாகிரி என்ற மதயானையொன்று மிருக்கிறது. அந்தக் கத்தி இந்திரனுடைய வச்சிராயுதத்திற்குச் சமானமானது. யானை ஐராவதத்திற் கொப்பானது.

ஒரு சமயம் சண்டமஹாஸேனன் பெரும் வேட்டையாடக் கருதி ஒரு அரண்யத்திற்குள் புகுந்தான். அங்கே மிக வும் உயரமும் பருமனுமான ஒரு பன்றியைக் கண்டான். அப்ப ன்றி அகாரணமாக பகலில் திடீரென்று பேரிருள் சூழ்ந்ததுபோற் காணப்பட்டது. அதை அவன் பாணங்களாலடித்தான். அது அவனது பாணப் பிரயோகத்தைச் சிறிதும் இலக்ஷியம் செய்

யாமல் அவனை யெதிர்த்து அவன் இரதத்தைப் பல்லாலிடித்துப் பொடியாக்கிவிட்டு ஒரு பெருப்பிலத்துக்குள் புகுந்து விட்டது. அரசன் உடனே தன் வில்லை மட்டும் தனக்கு ஆயுதமாக எடுத்துக்கொண்டு அந்தப் பிலத்துக்குள் நுழைந்து பன்றியைத் தொடர்ந்து போனான். வெகுதூரம் போன பின் ஒரு பெரிய நகரத்தைக் கண்டான். கண்டதும் வியப்புற்று அங்குக் கொஞ்சநேரம் சஞ்சரித்துப்பின் அங்குக்காணப்பட்ட ஒரு குளத்தின் கரையில் உட்கார்ந்தான். அவன் உட்கார்ந்த சற்று நேரத்திற்கெல்லாம் அங்கே நூறு ஸ்திரீகள் தன்னைச் சூழ்ந்து வர ஒரு பெண் அவனுக்குச் சற்று தூரத்தில் வரக் கண்டான். அவள் மன்மதனுடைய வில் சஞ்சரிப்பது போல் விளங்கினாள். பின் சற்று நேரத்திற்கெல்லாம் அந்தப் பெண் அரசனுக்கருகே வந்து புன் முறுவலுடன் அவனைப்பார்த்து, "ஏ சுந்தர! நீயார்? என்ன காரியமாய் இப்போது இங்கே வந்தாய்?" என்று கேட்டாள். சண்டமஹாஸேனன், தன் வரலாறு முழுதையும் சொன்னான். கேட்டதும் அந்தப் பெண் இரண்டு கண்களினின்றும் நீர் பெருகிற்று. தைரியமிழந்தவள்போல் நின்ற விடத்திலேயே நின்று விட்டாள். அரசன் "பெண்ணே! நீயார்; ஏன் அழுகிறாய்?" என்று கேட்க, அவள் மன்மதனுடைய ஆக்ஞையை அனுசரித்தவள் போல், "சுந்தர! இங்கே பிரவேசித்த பன்றி அங்காரகன் எனப் பெயர் பூண்ட அசுரன். அவனுக்குப் புத்திரி நான். என் பெயர் அங்காரவதி. இதோ இருக்கும் நூறு பெண்களும் இராஜகுமாரிகள். இவர்களை அங்காரகன் என்ற என் தந்தை இராஜ அரண்மனைகளி லிருந்து பலாத்காரமாகக்கொண்டு வந்து எனக்குப் பரிவாரமாக ஏற்படுத்தியிருக்கிறான். இவன் சாபத்தால் இராக்கதனானான். இவன் பன்றியாயிருந்தபொழுது தாகத்தாலும் பசியாலும் மிகவும் வருந்தியபடியால் தங்களையடைந்தும் ஒன்றும் செய்யாமல் விட்டு விட்டான். இப்போது பன்றியுருவத்தை மாற்றிக்கொண்டு சிரம பரிகாரம் செய்து கொள்கிறான். சிரமந்தீர்ந்து வந்தானாகில் உண்மையில் உமக்குத்தீங்கு செய்வான். நிரபராதியான உமக்குத்தீங்குண்டாகப் போவதை நினைத்து வருத்தமுற்றேன்" என்றாள். அரசன் "பெண்ணே! என்னிடம் உனக்கு அபிமான மிருக்குமாயின் நான் சொல்லும் வார்த்தையைக் கேட்கவேண்டும்" என, அப்பெண்,

"தங்களுக்காவுப்படியே செய்கின்றேன்" என்றாள். அரசன் பெண்ணே! நீ தந்தை முன் சென்று அவன் சிரமம் தீர்ந்து தன் நிலைமையடைந்ததும் நீ அவனை நோக்கிய வாறிருந்து அழு; அப்பொழுது உன் தந்தை நீயேன் வருந்தப் படுகிறாய் என்று விசாரிப்பான்; நீ அதற்கு "பிதாவே! உமக்கு யாராலாவது தீங்கு நேரிடின் எனக்கு என்ன கதி யிருக்கிறது என்பதைப் பற்றிக் கருதி விசனப்படுகிறேன் என்று சொல். பிறகு உனக்கும் எனக்கும் வழிபிறக்கும்" என்றான். அப்பெண் "அப்படியே செய்கின்றேன்; நீங்கள் மாத்திரம் இதோ இந்த அறையில் ஒருவர் கண்ணுக்குந் தெரியாமலிருங்கள் என்று கூறி ஒரு அறைக்கழைத்துச் சென்று அரசனையங்கிருக்கும்படி செய்து உடனே தன்சேடிகளுடன் தந்தை இருக்குமிடம் சென்றாள். அச்சமயம் அவன் சிரமம் தீர்ந்து எழுந்தான். உடனே அப்பெண் அழுது கொண்டு தந்தை முன்வந்தாள். அப்படி யழுவதைக்கண்டதும் அவ்வசுரன் "அம்மா! குழந்தாய்! நீயேன் அழுகிறாய்? காரணமென்ன?" என்றான். அந்தப் பெண் அப்பா! தங்களையாராவது வதை செய்து விட்டால் பிறகு என் கதியாவதெப்படி? என்பதை நினைத்து அழுகிறேன்" என்றாள். அசுரன் புன்முறுவல் செய்து "பெண்ணே என்னைக் கொல்லுகிறவன் யாவன்". நான் வச்சிரமயமான சரீர முடையவனன்றோ? என் இடது கரத்தில் கெடுதியிருக்கின்றது. அதை நான் வில்லால் காப்பாற்றிக் கொண்டு வருகிறேன்" என்று சொல்லி இன்னும் பல விதமாகவும் சமாதானம் செய்தான். இந்தச் சம்பாஷணையை அடுத்தாப் போலிருந்த அறையில் மறைந்து கொண்டிருந்த அரசன் கேட்டுக்கொண்டிருந்தான். பிறகு அந்த அசுரன் எழுந்து ஸ்நானஞ் செய்து ஓரிடத்தில் உட்கார்ந்து பரமசிவனைப் பூசிப்பதற்கு யத்தனித்தான். அச்சமயத்தில் சண்டமஹாஸேனன் அவன் முன்னே வந்து வில்லை வளைத்துக் கொண்டு அவனைப் பலாத்காரமாக யுத்தத்திற்கழைத்தான். அவ்வசுரன் அச்சமயம் மௌன விருதத்துடனிருந்தமையால், தன் இடது கரத்தால் ஜாடைசெய்து ஓர் கணப் பொழுது காத்திருக்கும்படி தெரிவித்தான். அரசன் அதைக் கவனியாமல் அவ்வசுரனது மர்மஸ்தானத்தில் பாணத்தாலடித்தான். உடனே அந்த அங்காரகாசுரன் பயங்கரமாகச் சத்தஞ் செய்து கொண்டு புவிமீது விழுந்தான். பின் சற்று நேரத்திற்

கெல்லாம் ஜீவன் வெளிப்படும் சமயத்தில் அரசனை நோக்கி, "தாகத்தால் களைத்திருந்த என்னை எவன் அடித்தானோ அவன் எனக்குத் தண்ணீரளித்துத் திருப்தி செய்விக்காமற்போகக் கடவது. வருடந்தோறும் அவனுக்கு ஐந்து மந்திரிகள் மரணமடைய வேண்டும்" என்று சாபங்கொடுத்து மரணமடைந்தான். பிறகு அரசன் அவ்வசுரன் புத்திரியாகிய அங்காரவதியை அழைத்துக் கொண்டு உச்சயினி சென்று அங்கு வெகு ஆடம்பரத்துடன் அவளை மணம்புரிந்துகொண்டான். அவளுக்கு இரண்டு பிள்ளைகள் பிறந்தார்கள். ஒருவனுக்குக் கோபாலகன் என்றும், மற்றொருவனுக்கு பாலகன் என்றும் பெயரிட்டார்கள். இவ்வரசன் பிறகு இந்திரோற்சவம் செய்தான். அதனால் வாசவன் (இந்திரன்) மகிழ்ச்சியடைந்து அவன் கனவில் தோன்றி "மன்னா! எனதனுக்கிரகத்தால் உனக்கு ஒப்புயர்வில்லாத ஒரு புத்திரி உண்டாகப்போகிறாள்" என்று கூறிப் போய் விட்டான். பின் சிலநாளைக்கெல்லாம் அரசன் மனைவி கர்ப்பந்தரித்து ஒரு கன்னிகையை யீன்றாள். அந்தப் பெண் குழந்தை நிகரற்ற பேரெழிலோடு விளங்கியதைப் பார்த்தால், சந்திரனுடைய வேறொரு சரீரம்போல் விளங்கிற்று. அக்குழந்தை பிறந்த நேரத்தில் "இப்பெண் குழந்தைக்கு மன்மதனை அவதரித்தனனென்று சொல்லத் தக்க ஒரு புத்திரன் பிறக்கப் போகிறான். அவன் வித்தியாதரர்கள் யாவருக்கும் அதிபனாவான்". என்று ஒரு அசரீரிவாக்குண்டாயிற்று. சண்டமஹாஸேனன், தனக்கு வாசவனுடைய அனுக்கிரகத்தால் கிடைத்த அந்தப் பெண்ணுக்கு வாசவதத்தையெனப் பெயரிட்டு நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்த்து வந்தான். அந்த வாசவதத்தை இப்போது சண்டமஹாஸேனனுடைய அந்தப்புரத்தில் பாற்கடலைக் கடையும்போது அங்கிருந்த இலக்குமி தேவியைப் போலிருக்கிறாள். தேவ! அவ்வரசன் இவ்வளவு மகிமைவாய்ந்தவன். அவனை ஜயிக்க முடியாது. அவன் தன்னுடைய புத்திரியாகிய அந்த வாசவதத்தையை உனக்குக் கொடுக்க விருப்பங் கொண்டிருக்கிறான். மேலும் அவன் மானியானபடியால் கௌரவத்தை விரும்புகிறான். அந்த வாஸவதத்தையை மணஞ்செய்து கொள்ளத் தக்கவர் நீர்தான்" என்றான்.

இதைக் கேட்டதும் உதயனன், தன் மனதைவாசவதத்தையிடம் செலுத்தி அவளை யடைவதிலேயே கருத்துக் கொண்டான்.

—•◦◦•◦◦•—

# நான்காவது தரங்கம்.

முன் உதயனனனுப்பிய தூதன் சண்டமஹாஸேனனிடம் சென்று அவனிடம் நிருபத்தைக் கொடுத்தான். அவ்வரசன் அதை வாங்கிப் படித்துப் பார்த்து, "உதயனனோ மானமுடையவன்; அவன் எப்படியும் இங்கே வரமாட்டான்; நமது பெண்ணை நாம் அங்கு அனுப்புவது கூடாது. அனுப்பினால் மிகவும் கௌரவக் குறைவுண்டாகும்; ஆகையால் எந்த விதமேனும் ஓர் யுக்தி செய்து அவனை இங்கு கொண்டுவரவேண்டும்" என்று தீர்மானித்து, தன் மந்திரிகளுடன் கலந்து யோசனை செய்து யந்திரத்தால் சஞ்சரிக்கக் கூடிய ஒரு பெரிய யானை செய்ய உத்தரவிட்டு அது செய்து முடிந்ததும் அதனை விந்தியமலைக்குச் சமீபத்திலுள்ள காட்டிற்குக் கொண்டு போய் அங்கோரிடத்தில் வைத்து விட்டு வரும்படியாகவும், அதனுள் சில வீரர்கள் ஒளிந்திருக்கவும் ஏற்பாடு செய்தான்.

இங்ஙனம் யானை தயாரித்து வைக்கப்பட்ட சில நாளைக்கெல்லாம் உதயனனுடைய தூதர்களிற்சிலர் அந்த யானையைக் கண்டு உண்மையான யானை என்று கருதி உடனே அரசனிடம் வந்து "மகாராஜாவே! விந்தியமலைக்கருகே ஒரு பெரிய யானையைக்கண்டோம்; அதைப் போன்ற பெரிய யானையை இந்த பூலோகத்தில் எங்கும் காண்பதரிது. இதுவரையில் நாங்கள் ஒருவரும் பார்த்ததில்லை. அதனை, நடக்கும் விந்தியமலை யென்றேசொல்லவேண்டும்" என்று கூறி வியந்தனர்.

தூதர்கள் இங்ஙனம் கூறக்கேட்ட அரசன் மகிழ்ச்சியடைந்து அவர்களுக்கு நல்ல வெகுமதியளித்து, "நாடாகிரியென்னும் யானைக்குச் சமானமான அந்த யானையை நாம் எப்படியும் அடைவோம்; இது உண்மை. பின் சண்டமஹாஸேனன் நமக்குச் சுவாதீனனு

வான். வாசவதத்தையும் பிறகு நமக்கு மனைவியாவாள்; இதில் தடையில்லை" என்று ஆலோசனை செய்து கொண்டு மறுநாள் பொழுது புலர்ந்ததும் முன்வந்து செய்தி யறிவித்த அந்தத் தூதர்களை யழைத்துக்கொண்டு விந்தியமலைக் காட்டிற்குப் பிரயாணமானான். அவ்வரசனது மந்திரிகள் யோசித்துப் பார்த்து இப்பொழுது அரசன் வனத்திற்குச் செல்லக் கூடாதெனத் தெரிந்து பல சொல்லி அவனைத் தடுத்தார்கள். உதயனன் இவர்கள் என்ன சொல்லியும் செவியிற் கொள்ளாது காட்டிற்கே பிரயாண மானான். அரமனைச் சோதிடர்களும் இப்பொழுது அரசன் புறப்படும் வேளையானது காராகிருகவாசத்தையும் கன்னிகையின் லாபத்தையும் அளிக்கக்கூடியதெனச் சொன்னார்கள். அரசன் அவர்கள் வார்த்தையையும் ஏற்றுக்கொள்ளாது புறப்பட்டு போய்விட்டான்.

விந்திய மலையைச் சார்ந்த வனத்தைக் கிட்டியதும் அரசன், கூட்டமாகச் சென்றால் யானைகள் கலைந்து போய்விடும் என்று கருதித் தன் தூதர்களை வெகு தூரத்திற்கப்புறமே இருக்கும்படி சொல்லிவிட்டு, சில முக்கியமானவர்களை மட்டும் அழைத்துக் கொண்டு வீணாகானம் செய்தவாறே அந்தப் பெரும் வனத்திற் பிரவேசித்தான்.

வெகு தூரம் சென்றதும் விந்தியமலைக்குத் தென் பக்கமிருந்த அந்தயானையைத் தூதர்கள் காட்டினார்கள். அதைக் கண்டதும் உதயனன் மகிழ்ச்சியடைந்து தான் ஒருவனாகவே வீணாகானம் செய்துகொண்டு அந்த யானையைக் கட்டிப் பிடிக்க வேண்டிய வழிகளைச் சிந்தித்தவாறே அதன் அருகிற் சென்றான். அப்பொழுது சந்தியாகாலமானதாலும், கானத்தில் மிகுதியும் கவனம் செலுத்திய வண்ணமிருந்தமையாலும், அந்த யானை யந்திரசக்தியால் அமைத்ததென்று அரசனுக்கு தெரிந்துகொள்ள முடியவில்லை. அந்த யானையானது கானத்தைக் கேட்டு மகிழ்வது போல் அச்சமயம் செவிகளை அசைத்துக் கொண்டே அருகே வந்தது. இவனும் அதனருகே சென்றான். அப்பொழுது திடீரென்று அந்த யானையினின்றும் சில வீரர்கள் குதித்து அரசனைச் சூழ்ந்து கொண்டார்கள். அரசன் உடனே தன் கத்தியை உருவி அவர்களை

யெதிர்த்து அமர்புரிந்தான். அவர்களில் சில வீரர்கள் அரசனுக்குப் பின்பக்கமாகச் சென்று அவனைப் பிடித்துக் கொண்டார்கள். உடனே எல்லா வீரர்களும் ஒன்று கூடி அரசனைச் சூழ்ந்து கொண்டார்கள். அரசனால் ஒன்றும் செய்ய முடியவில்லை. அவன் தூதர்களும் வெகு தூரத்திலிருந்தமையால் இச்சமயம் அரசனுக்குதவிசெய்ய வந்து சேரவில்லை. ஆகையால் அந்த வீரர்கள் அரசனைச் சுளுவில் பிடித்தழைத்துக் கொண்டு தங்கள் அரசன் சண்டமஹாஸேனனிடம் கொண்டு போய்விட்டனர்.

சண்டமஹாஸேனன் அவனை அன்போடு வரவேற்று உபசரித்துத் தான் அவனைப் பிடித்துக்கொண்டு வந்த காரணந் தெரிவித்துச் சமாதானஞ் செய்து அவனிடம் தன் குமாரத்தி வாசவதத்தையை ஒப்புவித்து அவளுக்குச் சங்கீதங் கற்றுக்கொடுக்க வேண்டுமெனக் கேட்டுக் கொண்டனன். அந்த வாசவதத்தையைக் கண்டதும் உதயனன், சண்டமஹாஸேனன் மேற்கொண்டிருந்த கோபம் வந்தவழி தெரியாமற் போய்விட்டது. வாசவதத்தை யென்கிற அந்த மங்கையும் தன் நேத்திரத்தையும் மனதையும் அன்போடு உதயனனிடம் செலுத்தினாள். பிறகு நேத்திர மாத்திரம் வெட்கத்தால் அவனிடமிருந்து திரும்பிற்று. ஆனால் அவள் மனமட்டும் சிறிதும் திரும்பவில்லை. இது கண்ட உதயனனும் சந்தோஷமடைந்தான்.

பிறகு மறு நாள் சங்கீத சாலைக்குச் சென்று அங்கு வாசவதத்தைக்குக் கான சாஸ்திரம் கற்பிக்கத் தொடங்கினான். அரசனது மடியில் வீணையும் கண்டத்தில் சுருதியும் முன் புறத்தில் வாசவதத்தையும் இருப்பது அவனுடைய மனதிற்குப்பரமானந்தமாயிருந்தது. வாசவதத்தையும் அரசனிடம் மிகப் பிரியம் வைத்து அவனிட்ட பணிவிடையைச் செய்து வந்தாள். அவனை விட்டு ஒரு கணமும் பிரிவதில்லை.

இங்கிப்படியிருக்க, கௌசாம்பி நகரமானது, உதயனனைக் காட்டில் விட்டுப் பிரிந்த தூதர்கள் மூலமாக அரசன் பகைவர்களிடம் அகப்பட்டுக் கொண்டானென்பது கேட்டு அல்லோலகல்லோலப்பட்டது. மந்திரிகள் தங்கள் அரசனைப்பிடித்துக்கொண்டு

போனவன் சண்டமஹாஸேனன் என்று அவன் மீது மிகவும் கோபங்கொண்டு அவனுடைய நகரமாகிய உச்சயினியைத் தாக்குவதென்று யோசித்தார்கள். ஜனங்களும் அந்த யோசனைக்கு இணங்கினார்கள். அப்பொழுது ருமண்வான் என்பவன், ஜனங்களை நோக்கி, "சண்டமஹாஸேனனை சண்டையில் வெல்லமுடியாது. அவன் மிகவும் பெரியவன். ஆகையால் அவனது நகரத்தைத் தகர்ப்பது உசிதமல்ல. இதை வேறு விதத்தில் யோசனை செய்து முடிக்க வேண்டும்" என்று கூறித் தடை செய்தான். அப்பொழுது யௌகந்தராயணன் என்னும் மந்திரி, நமது நகரத்துப் பிரஜைகளோ அரசனிடம் அன்புடையவர்களாக விருக்கிறார்கள். இராஜ்யமோ பகைவர்களால் எதிர்க்கப் படவில்லை என்பது கருதிப் பிரஜைகளையும், ருமண்வான் முதலானோரையும் பார்த்து, "நீங்கள் யாவரும் எப்போதும் பிரயத்தினத்துடனிருங்கள். இந்த இராஜ்யத்தைக் காப்பாற்றுவதிலேயே கண்ணாயிருங்கள். சமயம்வரும்போது பராக்ரமத்தைக் காட்டத் தவறாதீர்கள். நானும் வசந்தனும் இப்போதே சென்று எங்களுடைய அறிவைக் கொண்டு நமது அரசனை விடுவித்துக் கொண்டு வருகிறோம்; இதில் நீங்கள் சிறிதும் சந்தேகப்பட வேண்டாம். ஜலத்தால் அடிபடுங்காலத்து இடியால் உண்டான அக்னிக்கு விசேஷகாந்தி யுண்டாவது போல், ஆபத்துக் காலத்தில் எவனுக்கு அறிவானது பிரகாசிக்கிறதோ அவனே தீரனாகிறான். பிராகாரங்களை இடிப்பது, விலங்கினைத் தெரிப்பது, மற்றுந்திருப்பது முதலான உபாயங்களை நானறிவேன் என்று கூறி ஜனங்கள் யாவரையும் ருமண்வானுடைய கையில் ஒப்புவித்து, வசந்தனுடன் உடனே புறப்பட்டான்.

பின்னர் யௌகந்தராயணனும் வசந்தனும் விந்திய மலைபடிவாரத்து வனத்தை அடைந்தார்கள். அந்த விந்தியமலைக்குக்கிழக்குப்பக்கம் வசிப்பவனும் வேடர்களுக்கு அரசனுமாகிய புளிந்தன் என்பவன் அங்கு வரக்கண்டார்கள். அவனிடம் சங்கதி தெரிவித்து அவனை இனி அந்தப் பாதை வழியே வரப் போகும் உதயனனைக் காப்பாற்றுவதற்காகப் பல சேனைகளுடனிருந்து வரும்படி திட்டப்படுத்தினார்கள். பிறகு இருவரும் அங்கிருந்து புறப்பட்டு உச்சயினி நகரத்து ச்மசான பூமிவந்து சேர்ந்தார்கள். அங்கே யோகேச்வரன்

என்னுமொரு பிரம்மராக்ஷஸ் இவர்களைக் கண்டு இவர்களுக்கருகே வந்து இவர்களுடன் சம்பாஷித்து சிநேகம் செய்து கொண்டது. பிறகு அந்தப் பிர்ம்மராக்ஷஸ் இவர்கள் அங்கு வந்த காரணத்தைத் தெரிந்து கொண்டு ஒரு மந்திரத்தை யவர்களுக்குபதேசம் செய்தது. அதனால் அவர்களில் யௌகந்தராயணன் விகாரரூபமுடைய கிழக்கூனனானான். இத்துடன் பைத்தியங் கொண்டவன் போலவும் பேசத் தொடங்கினான். வசந்தகன் பருத்த வயிறும், பயங்கரமும் விகாரமுமான உருவமும், மிகக் குட்டையுமான சரீரமுடைய வனானான்.

பின் யௌகந்தராயணன் முதலில் உச்சயினி நகரத்திற்குள் வசந்தகனை யனுப்பித் தான் பிறகு சென்றான். வசந்தன் அந்நகரத்துள் எதையுங் கவனியாது நேரே அரமனை வாசலுக்குப் போய்ச் சேர்ந்தான். பின்னர் சற்றுநேரத்திற் கெல்லாம் யௌகந்தராயணன் ஆடிக்கொண்டும் பாடிக்கொண்டும் அரமனை வாசலுக்கு வந்தான். அவனை அப்பட்டணத்தில் அநேக சிறுவர்களும் ஸ்திரீ புருஷர்களும் சூழ்ந்து நின்று வேடிக்கை பார்த்து நகைத்தார்கள். இச்சமயம் அவனை அரமனையைச் சார்ந்த சில ஸ்திரீகளும் சாளர வாயில் வழியே பார்த்து இந்த வேடிக்கையை வாசவதத்தைக்குத் தெரிவித்தார்கள். வாசவதத்தை உடனே யௌகந்தராயணனை தன்னுடைய சங்கீதச் சாலைக்குச் சேடியை யனுப்பி வரவழைத்தாள். யாவரும் யௌவனப் பருவத்தில் பரிகாசப் பேச்சுக் கேட்பதில் ஆவல் கொள்வார்களல்லவா?

இங்கே யௌந்தராயணன் உதயணனைக் கண்டதும் அவனைத் தெரிந்துகொண்டு விசனத்தினால் கண்களிலிருந்து ஜலம் பெருக்கினான். அரசனும் சற்று நேரத்திற் கெல்லாம் யௌகந்தராயணன் மாறுவேடம் பூண்டு வந்திருக்கிறானென்பதைத் தெரிந்து கொண்டான். உடனே யௌகந்தராயணன் அந்த வாசவதத்தைக்கும் அவளுடைய சேடிகளுக்கும் தென்படாமல் யறைந்தான். சேடிகளும் வாசவதத்தையும் எங்கே பைத்தியக்காரனைக்காணோம்; காணோமென்று கூறி ஆச்சரியப்பட்டார்கள். யௌகந்தராயணன் உதயணன் கண்ணுக்கு மாத்திரம் ஓரிடத்திலிருப்பது போற்கா

ணப்பட்டான். மற்றவர்களுக்குத் தென்படாமல் தன் கண்ணு க்கு மாத்திரம் புலப்படுவது கண்ட உதயனன் சற்று யோசித்து இவன் நம்மைத் தனிப்படச் சந்திக்க வேண்டுமென்பதை யறி விக்கும் பொருட்டு இப்படி யுக்தி செய்திருக்கிறான்; இவனுடைய யுக்தியே யுக்தி யென்று மகிழ்ந்து வாசவதத்தையை யழைத்து, "குழந்தாய்! நீ போய்ச் சீக்கிரம் ஸரஸ்வதி பூஜையை முடித்து வா; பைத்தியக்காரன் எங்கேயாவது போகட்டும்; அவனைப்பற்றி நமக்கென்ன" என்று சொன்னான். உடனே வாசவதத்தை தன் சேடிகளுடன் புறப்பட்டு ஸரஸ்வதி பூஜை செய்வதற்குப் போய் விட்டாள்.

பிறகு யௌகந்தராயணன் தனியேயிருக்கும் உதயனனி டம் தோன்றி அவனிடம் சற்று நேரம் சம்பாஷித்து, அவனுக்கு விலங்கைத் தெரிக்கும் உபாயம், மற்றும் வேறுபாயங்கள் யாவும் வாசவதத்தையின் வீணையின் தந்தியிலிருப்பதாகச் சொல்லிக் கொடுத்து, "அரசனே! தெருவில் அரமனை வாயிற் படிக்கருகில் வசந்தகன் கிழ அந்தணவேடத்துடன் வந்திருக்கிறான்; அவனை எந்த உபாயத்தாலாவது உன் அருகில் வரவழைத்து வைத்துக் கொள்ளுங்கள்; எப்பொழுது வாசவதத்தை தங்களிடம் நம்பிக் கைகொள்கின்றனளோ அப்பொழுது நான் தங்களுக்குச் சில உபா யங்கள் கூறுகிறேன். அவ்வாறு செய்யலாம். இப்போது இங்கேயே யிருங்கள்" என்று கூறித் துரிதமாக வெளிப் புறப்பட்டான் யௌகந்தராயணன்.

பின் வாஸவதத்தையும் ஸரவஸ்தி பூஜையை முடித்துக்கொ ண்டு அந்தக் கணத்திலேயே அங்கு வந்தாள். உதயனன் அவளைப் பார்த்து, "வாசவதத்தே! வெளிவாசலில் ஓர் அந்தணனிருக்கி றான்; அவனை இப்போது ஸரஸ்வதி பூஜையின் நிமித்தம் கொடு க்கப்போகும் தக்ஷிணை யளிப்பதற்காக வரவழை" என்றான். வாசவதத்தை அப்படிச் செய்கிறேன் என்று மறுமொழி தந்து உடனே தன் சேடிகளுள் ஒருத்தியை யனுப்பி அந்த வசந்தகனை அங்கு அழைத்து வரும்படி செய்தாள். வசந்தகன அரசனைக்கண் டதும் வருத்த முற்று மனங்கலங்கிக் கண்களிலிருந்து நீர் பெருக்

னான். உதயனன், அவன் நமக்காக விசனிக்கிறானென்பதறிந்து, "பிராமணோத்தம! விசனப்படவேண்டாம்; உமக்கு வியாதியால் ஏற்பட்ட விரூபத்தன்மையைப் பற்றி நானறிவேன். நீர் இங்கேயே இரும். உமது வியாதி சௌக்கியமாகும்" என்றான். அந்தணனாகிய வசந்தகன் "தேவ! அப்படிச் செய்வதால் உமக்குப் பெரும புண்ணிய முண்டாகும்; தங்களுத்தரவுப்படியே இங்கிருந்து வருகிறேன்" என்றான்.

பிறகு உதயனன் அந்த வசந்தகனை நோக்கி, புன்னகைகொண்டான். அதையறிந்த வசந்தகன் தன் தேகவிகாரத்தை இன்னும் அதிகப்படுத்திக் கொண்டான். அவனைக்கண்டு வாசவதத்தையும் நகைத்தாள். பிறகு உடனே அந்த வசந்தகனை நோக்கி, "அந்தணரே உமக்கு எந்த விஷயத்தில் அறிவுண்டு" என்று கேட்டாள் வாஸவதத்தை. எனக்குக் கதைகள் சொல்லத் தெரியுமென்றான் வசந்தகன். ஆனால் ஒரு கதை சொல்லும் பார்ப்போமென, வசந்தகன் கதை கூறுகிறான்—

இந்தப்புவியின்கண் மதுரை என்றொரு நகர மிருக்கிறது. அதில் ஸ்ரீகிருஷ்ணனிருந்து அரசு புரிந்து வந்தான். அப்பொழுது அந்த நகரத்தில் ரூபிணிகையென்ற பெயர்கொண்ட ஒரு வேசியிருந்தாள். அவள் மகாபிரஸித்தி பெற்றவள். அவளுக்குத் தாய் மகாதம்ஷ்ட்ரை என்று பெயர் கொண்டவள். இந்த ரூபிணிகை தன் அழகைக்கண்டு மோகித்துத் தன்னிடம் வரும் ஆடவர்களுடைய கண்களுக்கு விஷஜ்வாலையாக விருப்பாள்.

இவள் ஒரு சமயம் தன்னுடைய கட்டளையை நிறைவேற்றுவதன் பொருட்டுத் தேவாலயத்துக்குச் சென்றாள். அப்போது வெகு தூரத்தில் ஒரு புருஷனைக் கண்டாள். அந்த ஆடவனைக் கண்டதும் ரூபிணிகைக்கு அவள் தாய் செய்திருந்த உபதேசங்களனைத்தும் வெளியே போய்விட்டன. அந்த சுந்தரன் இவளுடைய உள்ளத்திற் புகுந்து கொண்டான். உடனே தன் சேடிகளுள் ஒருத்தியைப் பார்த்து, நீ ஓடிச் சென்று அதோ வரும் அந்தணனை இன்று இரவு நமது கிருகத்திற்கு நான் வரச் சொன்னதாகச் சொல்லி விட்டு வாவென, சேடி ஓடிப்போய் அவனிடம் விஷயங்

தெரிவித்தாள். அவன், சற்று யோசித்துச் சேடியை நோக்கி "நான் பிராமணன். லோஹஜங்கன் என்பது என் பெயர். என் கையில் ஒரு காசு கூடக் கிடையாது. ரூபிணிகையின் வீட்டுக்குப் பணமுடையவர்களல்லவா போகவேண்டும். நான் எப்படி அங்கே போவேன்?" என்றான். "பிராமணரே! என் எஜமானி உம்மிடம் பொருளை விரும்பவில்லை" என்றாள். பிறகு அந்தணன் சந்தோஷமடைந்து அவ்விதமே வருகிறேன் என்று ஒப்புக்கொண்டான். சேடி இச்செய்தியை ரூபிணிகைக்குத் தெரிவித்தாள். ரூபிணிகையும் மனமகிழ்ச்சி யடைந்து தேவாராதனை முடிந்ததும் வீட்டுக்குச் சென்று அந்தணனது வருகைக்கு எதிர்பார்த்த வண்ணம் இருந்தாள். பிறகு லோஹஜங்கன் குறித்த நேரத்தில் ரூபிணிகையின் வீடு போய்ச் சேர்ந்தான். ரூபிணிகை லோஹஜங்கனைக் கண்டதும் எழுந்து ஆதரவோடு வரவேற்று உள்ளே யழைத்துச் சென்றாள். அப்பொழுது ரூபிணிகை அந்த அந்தணனுடைய அழகாகிய ஐசுவரியத்திற்குச் சுவாதீனப்பட்டு "இந்தஜன்மத்தில் நாம் அடையத் தக்கது இதனினும் வேறென்ன விருக்கிறன்றது" என்று கருதினாள். லோஹஜங்கனும் தன்னையே தனக்கு ஆசைநாயகனாகக் கொண்டு வேறு புருஷனை மதியாதிருந்து வரும் ரூபிணிகையினிடம் மிகுந்த அன்பு பாராட்டியவனாய் அவள் வீட்டிலேயே சுகமாக இருந்து வந்தான்.

இவள் இப்படியிருப்பதைக் கண்ட மகரதம்ஷ்ட்ரை என்னும் தாய்க்கிழவி மிக்க வருத்தமடைந்து ரூபிணிகையைத் தனிப்படவழைத்து, "ஏ பெண்ணே! பொருளில்லாத வறியனாகிய இவனையேன் நீ சேவிக்கிறாய்? ஸாதுக்கள் பிரேதத்தைத் தொடார்கள். வேசிகள் பொருளில்லாதவனைத் தொடார்கள். அன்பு எங்கே? வேசியாக விருப்பது எங்கே? அதை யேனோ மறந்தாய்? அடி பெண்ணே! வேசி ஆசைகொள்வாளாகில் சந்தியாகாலம்போல் பிரகாசிக்க மாட்டாள். வேசியாயிருப்பவள் நடிபோல் மேனுக்கு அன்பைக் காட்டவேண்டும். ஆகையால் தரித்திரனாகிய இவனை விட்டு விடு. வீணே நாசமடையாதே" என்றாள். ரூபிணிகை, தன் தாயார் சொன்ன இவ்வார்த்தைகளைச் செவியுற்றதும், "அம்மா! நீ இப்படிப் பேசாதே; இவன் எனக்குப் பிராணனினும் பேலான

வன். நமக்கிருக்கும் பொருள் போதாதா? இனிச்சம்பாதித்து நாம் என்ன செய்யப்போகிறோம் அம்மா! மறுபடியும் இந்தச் சொல்லை என் செவியிற்போடாதே" என்று கோபமாகக் கூறினாள்.

மகரதம்ஷ்ட்ரை மனதிற்குள் கோபங்கொண்டு அந்த லோஹஜங்கனை அவ்வீட்டை விட்டுத் துரத்துவதற்கு உபாயத்தைத் தேடலானாள். ஒருநாள் அந்நகரத்தில் ஒருவழியில் இராஜகுமாரன் சிலரோடு தனியே செல்வதைக் கண்டாள் மகரதம்ஷ்டரை. அவனிடம் இவள் சென்று, வந்தனம் செய்து "என் வீட்டில் பொருளில்லாத ஒரு பாப்பான் புகுந்து என் மகளைத் தன் வசப்படுத்திக் கொண்டிருக்கிறான். அவனை என் வீட்டை விட்டுத் துரத்தவேண்டும். பிறகு என் குமாரியைத் தாங்களடையலாம்" என்று கூறினாள். இராஜகுமாரன் இதைக் கேட்டதும் அவ்வாறே செய்கின்றேனெனத் தெரிவித்து ரூபிணிகையின் வீடு வந்தான் அச்சமயம் ரூபிணிகை தேவாலயம் சென்றிருந்தாள். லோஹஜங்கனும் அச்சமயம் வெளியே சென்றிருந்தனன். பிறகு கணநேரத்திற்கெல்லாம் லோஹஜங்கன் வந்து சேர்ந்தான் அவனைத் தாய்க்கிழவி இராஜகுமாரனுடைய சேவகர்களுக்குக் குறிப்பிட்டுக்காட்டவே, அச்சேவகர்கள் அவனை நையப்புடைத்து வெளியே தள்ளினார்கள். அவன் அடி பொறுக்க மாட்டாது அவ்விடம் விட்டு ஓடிப்போய்விட்டான். பின்னர் கொஞ்ச நேரத்திற்கெல்லாம் ஆலயத்திலிருந்து ரூபிணிகை வந்தாள். அவள் லோஹஜங்கன் துரத்தப்பட்ட சங்கதி யறிந்து பெருந்துக்கத்தில் மூழ்கினாள்.

ஓடிப்போன லோஹஜங்கன் அந்த நகரத்தை விட்டு வெகு தூரம் சென்றதும் வெயிலினாலும் தான் பட்ட அவமானத்தினால் அடைந்த கோபத்தினாலும் மிகச் சிரமமடைந்து சற்றுத் தங்கிச் செல்ல ஒரு மரத்தின் நிழலைத் தேடினான். அங்கு அவனுக்குச் சமீபத்தில் மரத்தின் நிழல் எதுவுங் கிடைக்கவில்லை. களைப்போ மிகுதியும் உண்டாய்விட்டது. என்ன செய்வான் பாவம்! இன்னது செய்வதென்று தோன்றாது சுற்றும் மற்றும் பார்த்தான். அங்கே ஓரிடத்தில் ஒரு யானையின் உடலைக் கண்டான். அதனருகே சென்று அதைப் பார்க்க அது உள்ளே சிறிதும் மாமிசமேயில்லாது வெறுங் கூடாகவிருந்தது. அதனுள் லோஹஜங்கன்

புகுந்து படுத்துக் கொண்டு, படுத்த கொஞ்ச நேரத்திற் கெல்லாம் நித்திரை போய்விட்டான்.

அவன் தூங்கிக் கொண்டிருக்கையில் திடீரென்று வானத்தில் மேகந் திரண்டு பெருமழை பொழிந்தது. அதனால் அந்த யானைக் கூடு சுருக்கமடைந்து முன்னிருக்க துவாரங்களெல்லாம் மூடப் பட்டுப் போயின. பிறகு கொஞ்ச நேரத்திற்கெல்லாம் எங்கும் வெள்ளம் பெருகி யோடவாரம்பித்தது. இந்த யானைத் தோலிருக்கு மிடத்திலும் வெள்ளம் பெருகி அதை யடித்துக் கொண்டேபோய் கங்காநதியிற்கொண்டு போய்ச் சேர்த்து விட்டது. பிறகு கங்கையானது அதைக்கடலிற் கொண்டுபோய்ச் சேர்த்து விட்டது. அங்கே பருந்தின் இனத்தைச் சார்ந்த ஒரு பறவை அதைத் தான் உண்ணத்தக்க வஸ்து வென்று கருதித் தன் மூக்கிட்டுக் கொத்தித் தூக்கிக் கொண்டு பறந்து கரை கொண்டு வந்து சேர்த்து அந்தத் தோலை மூக்கினாற் கொத்திக் கொத்திக் கிழித்தது. உடனே அதினுள்ளிருந்து லோஹஜங்கன் வெளிப் பட்டான். அவனைக் கண்டதும், பயந்து அப்பறவை ஓடிப்போய் விட்டது. லோஹஜங்கன் தானொரு கடற்கரை மீதிருப்பதைக் ண்டு வியப்புற்று, இதென்ன இது; நாமிங்கிருக்கின்றோம் இது கனவுபோலிருக்கிறது என்று கருதினான். இச்சமயம் அவ்வழியே இரண்டு இராக்கதர்கள் போய்க் கொண்டிருக்கக் கண்டு மிகவும் அச்சமுற்றான். அவ்விராக்கதர்களும் இந்த மானிடனைக் கண்டு பயந்து முன் தாங்கள் இராமனாகிய மானிடனொருவனால் பட்ட அவமானத்தையும் கஷ்டத்தையுங் நினைத்துப்பார்த்து மீண்டும் அந்த இராமன் கடலைக் கடந்து வந்து விட்டனன் போலுமென்று ஒருவர்க் கொருவர் பேசிக்கொண்டார்கள். பின்னர் அவர்களுள் ஒருவன் அப்போதே விரைந்து சென்று தங்களுடைய மன்னனாகிய விபீஷணனுக்குத் தான்கண்டதைக் கூறினான். விபீஷணன் இராமபிரானது மகிமையை யறிந்தவனே யாயினும், மானிடனொருவன் வந்துள்ளான் என்பதைக் கேட்டதும் பயந்து இராக்கதனை நோக்கி, "அப்பா! நீ அந்த மானிடனிடம் சென்று எங்களுடைய கிருகத்திற்கு வந்து எங்களை யனுக்கிரகிக்கவேண்டும்" என்று அன்போடு தெரிவி என்று சொல்லி யனுப்பினான். இராக்கதன்

அவ்வாறே செய்கின்றேனென்று கூறி அங்கிருந்து புறப்பட்டுத் துரிதமாக லோஹஜங்கனிடம் வந்து தன் எஜமான் கூறியபடி வெகு பயபக்தியோடு தெரிவித்தான். லோஹஜங்கன் அதற்கிசைந்து அவ்விராக்கதனுடன் இலங்கைக்கேகினன்.

இலங்கையில் காணப்படும் ஸ்வர்ணமயமான பிராஸாதங்களைப்பார்த்து லோஹஜங்கன் அத்தியாச்சரியமடைந்தான். பிறகு அதியற்புதமாக விளங்கிய விபீஷணனது அரண்மனையிற் பிரவேசித்து அங்கே விபீஷணனைப் பார்த்தான். விபீஷணன் லோஹஜங்கனை அதிதியாக வரவேற்று உபசரித்துப் பூஜை செய்தான். லோஹஜங்கனும் அவனை ஆசீர்வதித்தான். பின்னர் விபீஷணன் "பிராமணசிரேஷ்டரே! நீர் இந்த இடத்திற்கு எப்படி வந்தீர்?" என்று கேட்டான். கர்வங் கொண்டவனாகிய இந்த லோஹஜங்கன், நான் பிராமணன். என் பெயர் லோஹஜங்கன். மதுரையில் வசிப்பவன். என்னுடைய வறுமை சகிக்கொணாது தேவாலயஞ் சென்று நாராயணமூர்த்தியின் சந்நிதியிலிருந்து தவம் புரிந்து வந்தேன். உணவாதிகளை வெறுத்துத் தவம் புரியும் என் கனவில் பகவானாகிய விஷ்ணு தோன்றி— "நீ விபீஷணனிடம் செல்; அவன் உனக்கு மிகுந்த பொருள் கொடுப்பான். அவன் என்னுடைய பரம பக்தன்" என்று கட்டளையிட்டார். அப்பொழுது நான் "விபீஷணன் எங்கேயிருக்கிறான்; எங்கேயிருக்கிறான்" என்று கேட்டேன். பிரபு "நீ இப்போது வெளியேபுறப்படு; விபீஷணனை நீ பார்ப்பாய்" என்று கூறி மறைந்துபோனார். நானும் உடனே கண்விழித்துக் கொண்டு பார்க்கும்போது சமுத்திரக்கரையிலிருக்கக்கண்டேன். இதையன்றி வேறெதையும் நானறியேன்" என்று தெரிவித்தான் லோஹஜங்கன். இதைக்கேட்ட விபீஷணன் இது தேவமகிமை யென்று கருதி லோஹஜங்கனை நோக்கி, "நீர் சற்று நேரம் இங்கிரும்; உமக்குப் பொருள் கொடுக்கிறேன்" என்றுரைத்து உடனே இரண்டு இராக்கதர்களை யனுப்பி அங்குள்ள ஸ்வர்ணமூலம் என்ற பர்வதத்திலிருந்து கருட வம்சத்திற்பிறந்த ஓர் பறவையை வரவழைத்து அதை லோஹஜங்கனுக்கு வாஹனமாகக் கொடுத்தான். லோஹஜங்கன் அதைச் சந்தோஷத்துடன் ஏற்றுக் கொண்டு அவ்விலங்கையை முழுதும் சுற்றிப்பார்த்து மகிழ்வுற்றான்.

பிறகு ஒரு சமயம் லோஹஜங்கன், சந்தோஷத்துடன் இராக்ஷஸ சிரேஷ்டனைப் பார்த்து, "இலங்கையில் பூமியெங்கும் மரங்களாகவே காணப்படுகின்றதே; இது எதனால்" என, விபீஷணன் அதன் விவரம் கூறுகின்றான்.

பிராமணோத்தம! உமக்குக் கேட்க விருப்பமிருக்குமாயின் கேளுங்கள், கூறுகின்றேன். முன்னம் விந்தை என்பவள் சர்ப்பங்களுக்கு ஊழியம் செய்வதாகப் பிரதிக்ஞை செய்து அவைகளுக்குக் கீழ்ப்படிந்து நடந்து வந்தாள். அந்த அடிமைத் தனத்தை நீக்குவதன் பொருட்டுக் கசியபரின் குமாரனாகிய கருடன் அமுதம் கொண்டுவர ஒப்புக்கொண்டான். தேவர்களிடமிருந்து அமுதம் கொண்டுவர வேண்டியதாயிருந்தமையால் அவர்களை வெல்வதற்குரிய வலுவை யடைவதன் பொருட்டுத் தன் தந்தையிடம் தனக்குத் தருந்த உணவைக் கொடுக்கும்படி வேண்டினான். கசியபர் "அப்பா! கருடா சாபத்தினால் வந்த பெரும் யானை யொன்றும் ஆமை யொன்று மிருக்கின்றன. அதைப் புசித்துவிட்டு நீ தேவலோகம் செல் என்றார். பின்னர் கருடன் தன் தந்தையின் உத்திரவுப்படியே அவர் குறித்த விடஞ்சென்று அங்கிருந்து யானையையும் ஆமையையும் அடைந்து அவைகளை யெடுத்துக்கொண்டு பறந்து ஒரு பெரிய கற்பகத்தருவின் கிளையிலுட்கார்ந்தான்: உட்கார்ந்தவுடன் அக்கிளையானது பாரந்தாங்காமல் முறிந்தது. அந்தக் கிளையில் வாலகில்லியர்கள் என்னும் முனிவர்களில் அநேகர் தலைகீழாகவிருந்து தவம் புரிந்து வந்தனராகையால், அவர்களுக்கு எதுவும் தீங்குறுவண்ணம் முறிந்த அக்கிளையை கருடன் தன் மூக்கில் கொத்திக்கொண்டு ஜனசஞ்சாரமில்லாத ஓரிடத்திற் கொண்டு போய் வைத்தான். அந்தக்கிளையின்மேற்பக்கம் இலங்கை ஏற்படுத்தப்பட்டது. அதனால் தான் இவ்விடத்தில் பூமி முழுதும் விருக்ஷங்களாகவே காணப்படுகின்றது என்றான் விபீஷணன். லோஹஜங்கன் இந்த வரலாறு கேட்டு மிகவும் மகிழ்ச்சி யடைந்தான். பிறகு சில நாளைக்கெல்லாம் தான் மதுரைக்கு வர விரும்பி விபீஷணனிடம் விடை கேட்டான். விபீஷணன் லோஹஜங்கனுக்கு விலையுயர்ந்த ஆபரணங்களையும் இரத்தினங்களையும் கொடுத்தான். இவையல்லாமல் மதுரையில் திருக்கோயில் கொண்டெ

ழுந்தருளியுள்ள ஸ்ரீ மகா விஷ்ணுவுக்குக் கொடுக்கும்படி ஸ்வர்ணமயமான பத்மம், கதை, சங்கு, சக்ரம் முதலியவைகளேயும் லோஹஜங்கனிடம் கொடுத்தான். லோஹஜங்கன் அவை யெல்லாவற்றையும் பெற்றுக்கொண்டு லக்ஷம் யோசனை செல்லக் கூடிய அந்தப் பறவையின் மீதேறிக்கொண்டு சிறிதும் சிரமமின்றி மதுரையம்பதி வந்து சேர்ந்தான். மதுரையில் ஜனப்புழக்கமில்லாத ஓரிடத்தில் ஆகாயத்திலிருந்து இறங்கி தன்னிட மிருந்த பொருள்களை வைத்து பத்திரப்படுத்திவிட்டுப் பறவையையும் ஓரிடம் கட்டி வைத்தான். பிறகு கையில் ஒரு ரத்தினத்தை மட்டுமெடுத்துக் கொண்டு மதுரைக் கடை வீதி சென்று அதைக் கிரயப்படுத்தி அப்பொருளைக்கொண்டு தனக்கு வேண்டிய துணிவகைகளை வாங்கிக்கொண்டு சந்தன முதலிய வாசனை வஸ்துக்களேயும் சேகரஞ் செய்துகொண்டான். பிறகு ஒரு சாப்பாட்டுக் கடைக்குச் சென்று அங்கு விலை கொடுத்து சாப்பாட்டையும் வாங்கிக்கொண்டு தானிறங்கின இடத்திற்கு வந்து அந்தச் சாப்பாட்டில் தன் வாகனமாகிய பறவைக்குச் சிறிது கொடுத்துப் பின் தானும் புசித்தான்.

அன்று சாயங்காலம் விலையுயர்ந்த வஸ்திரம், சங்கு, சக்ரம், கதை, பத்மம் முதலியவைகளை யணிந்துகொண்டு பறவையின் மீதேறி ஆகாயவழியே சென்று ரூபிணிகையின் வீட்டுக்கு நேரே வந்து நின்று அவள் தனித்திருக்கும் சமயம்பார்த்து அவள்செவிக்குமாத்திரம் படும்படி கம்பீரமான சத்தம் செய்தான். அச்சத்தஞ் செவியிற்பட்டதும் ரூபிணிகை வெளியே வந்து பார்த்து, நாராயணமூர்த்திபோல் விளங்கும் லோஹஜங்கனைக் கண்டாள். அச்சமயம் பார்த்து லோஹஜங்கன் "ஏ ரூபிணிகே! நான் நாராயணன்; உன்னைக் கருதி இங்கே வந்திருக்கின்றேன்" என்றான். ரூபிணிகை உடனே இருகரங்களேயுங் குவித்து வணங்கி "பிரபு தயை செய்யலாமே" என, உடனே லோஹஜங்கன் இறங்கிப் பறவையை ஓரிடத்தில் கட்டிவிட்டு அந்த மாதுடன் சயன கிருகம்சென்று அவளிடம் சுகமனுபவித்து விட்டு அங்கிருந்து வெளியே வந்து பறவையின் மீதேறிக்கொண்டு ஆகாயவழியே சென்றான்

பின் ரூபிணிகை அன்று பொழுது விடிந்ததும் "நான் தேவதை! விஷ்ணுவுக்கு மனைவியாகிவிட்டேன். இனிமானிடர்களுடன் நேரிற்பேசேன்" என்று சொல்லிக் கொண்டு எவருடனும் பேசாது மௌனமாக விருந்தாள். அதுகண்ட தாயாராகிய மகரதம்ஷ்ட்ரை அவளைப்பார்த்து "பெண்ணே! இவ்வாறேனிருக்கின்றாய்?" என்றுகேட்டாள். ரூபிணிகை பொன்றும் பேசவில்லை. மறுபடியும் மகரதம்ஷ்ட்ரை "ஏன் பேசாமலிருக்கிறாய்; காரணமென்ன?" என்றுகேட்டாள். பிறகு ரூபிணிகை, தன் தாய் நிர்ப்பந்தமாகக் கேட்பதனால் தனக்கு முன்னே ஒரு திரை போட்டுக் கொண்டு அதன் மறைவிலிருந்து நேற்றிரவு நடந்ததைக் கூறினாள்.

இந்தப் புதுமையைக் கேட்டதும் மகரதம்ஷ்ட்ரை ஆச்சரியமடைந்து அன்றிரவு வெகு நேரம் வரையில் விழித்துக் கொண்டிருந்து லோஹஜங்கன் கருடன் மீது சங்கு சக்ர, கதா தாரியாய் ஆகாய வழியே வந்திறங்கியதைக் கண்டு அவனை விஷ்ணுவென்றே கருதி மகிழ்ந்தாள். மறுநாள் பொழுது புலர்ந்ததும் மகரதம்ஷ்ட்ரை தன் மகள் ரூபிணிகையை யழைத்து "அம்மா! நீ தேவத்தன்மையை யடைந்து விட்டாய்; நான் உனக்குத் தாயாரல்லவா? அந்தப்பலனை நான் அடையும்படி செய்யவேண்டும். எனக்கோ வயதாய் விட்டது. இந்தச் சரீரத்துடன் நான் சொர்க்கம் போக விரும்புகின்றேன்; இந்த என் கோரிக்கையை பகவானுக்குச்சொல்லி எனக்கு அனுக்கிரகம் செய்யும்படி செய்யவேண்டும்" என்றாள். ரூபிணிகை அவ்வாறே செய்கிறேனென்று ஒப்புக்கொண்டு இரவில் கபடவேடதாரியாகியலோகஜங்கன்வந்ததும் அவனை நமஸ்கரித்து பக்தியுடன் தன் தாயின் பிரார்த்தனையைத் தெரிவித்தாள். லோஹஜங்கன், பெண்ணே! உன் தாய் செய்திருக்கின்ற பாபத்திற்கு அளவு கிடையாது. ஆகையால் அவள் பிரகாசமாகச் சொர்க்கத்திற்குப் போக முடியாது. ஏகாதசிபன்றுகாலையில் சொர்கக்கதவு திறக்கப்படும். அப்போது அநேக சிவபக்தர்கள் முன்னே செல்வார்கள். அவர்களுக்கு மத்தியில் உன் தாயையும் சேர்த்தனுப்பவேண்டும். அதற்காக உன் தாயும் அவர்களைப் போலவே வேடம் போட்டுக்கொள்ள வேண்டும். சரீரத்தில் ஒரு பக்கத்தில் மையையும் ஒரு பக்கத்தில் ஸிந்தூரத்தையும் பூசிக்கொள்ளவேண்டும். வஸ்திரம்

தரித்துக்கொள்ளக்கூடாது. இவ்வாறு வேடம்பூண்டு கொள்வாரா யின் உன் தாய் சொர்க்கம் செல்லப் பாத்திரமாவாள்" என்றான். ரூபிணிகை தங்கள் ஆக்ஞைப்படியே வேடம் பூண்டுகொள்ளும்படி செய்கின்றேன்; தாங்கள் அனுக்கிரகம் செய்ய வேண்டுமென்று எப்பொழுது பொழுது விடியுமென்று காத்திருந்து பொழுது விடி த்ததும் தன் அன்னையிடம் லோகஜங்கன் கூறியதைத் தெரிவித் தாள். மகரதம்ஷ்ட்ரையும் சொர்க்கம் செல்ல வேண்டுமென்கிற அவாவினால் அவ்வாறே வேடந்தரித்துக் கொள்ளச் சம்மதித்து இரவில் லோகஜங்கன் வருமுன்னமே வேடந்தரித்துக் கொண்டு காத்திருந்தாள். லோஹஜங்கன் எப்போதும் போல் இரவில் வந்து ரூபணிகையுடன் சற்றுப் பேசியிருந்து பிறகு விகார மான வேடம் பூண்டு வஸ்திரமில்லாதிருக்கும் மகரதம்ஷ்ட்ரையைத் தன் வாகனத்தின்மீது ஏற்றிவைத்துக் கொண்டு ஆகாயமார்க்கத்திற் கிளம்பிச் சென்றான். இவன் ஆகாயவழியே செல்லுகையில் ஒரு தேவாலயத்திற்கு முன்னே உயரமான கல்தூணைக் கண்டான். அந் தக்கல் தூணிற்கு நேரே யிறங்கி அதன்மீது உச்சியில்மகரதம்ஷ்ட்ரை யைவைத்து, "மாதே! இந்தத் தூணின்மீது சற்று நேரமிரு. நான் என்பக்தர்களிடம் சென்றுவருகின்றேன்" என்று கூறிமறைந்தான்.

அப்பொழுது அந்தத் தேவாலயத்தில் தங்கிக் கண் விழிப்ப தன் பொருட்டு யாத்திரை செய்வோர் அநேகர் அவ்வழியே ஆலய த்திற்குப்போய்க் கொண்டிருந்தார்கள். மகரதம்ஷ்ட்ரை அவர்களைப் பார்த்து, ஜனங்களே! எல்லோரையும் சங்கரிக்கும் மகமாயி உங்கள் மீது இப்போது விழப்போகிறாள். ஆகையால் எல்லோரும் மகாவி ஷ்ணுவைச் சரணமாக அடையுங்கள்" என்றாள். ஆகாயத்திலிருந்து திடீரென்றுண்டான இவ்வார்த்தையைக் கேட்டதும் எல்லோரும் பயந்து விஷ்ணுவைத்தியானம் செய்யலாயினர். அப்போது லோக ஜங்கனும் ஒருவருமறியாமல் ஆகாயத்திலிருந்து இறங்கித்தன் வாகனத்தை ஓரிடத்தில் கட்டிவிட்டுத் தன்சுயரூபத்துடன் வெளி ப்பட்டு ஜனங்களோடு கலந்து கொண்டு நின்றான். மகரதம்ஷ்ட்ரை யோ "ஐயோ! இன்னும் விஷ்ணு வரவில்லையே! நாம் சொர்க்கம் எப்போதடைவோம்" என்கிற பெருங்கவலையில் மூழ்கித் தான் இன்னது செய்வதென்பது தெரியாது தவிக்கின்றாள். அந்தத்தூண்

மீது அவளுக்கிருக்க முடியவில்லை. என்னசெய்வாள். இங்குமங்கும் கீழே பார்த்தாள். மனதிற் பெரும்பீதியுண்டாய்விட்டது. உடனே "ஐயோ! நான் விழுகின்றேன் நான் விழுகின்றேன்" என்று கூக்குர லிட்டாள்.

இச்சத்தம் கேட்டதும் ஜனங்கள் "பயமாயி விழப்போகிறேன் என்றுசொல்லுகிருள். விழுந்து விடுவாள். நாம் என்ன செய்யப் போகிறோம்" என்று ஒருவர்க்கொருவர் பேசிக்கொண்டு பெரிய வியாகுலமடைந்து உயரநோக்கிப் பார்த்து "ஓ தேவி! வேண்டாம் வேண்டாம், என்று கூறலாயினர். அன்றிரவு முழுவதும் அந்நகரத் தார் யாவரும்பெரும் பீதியடைந்திருந்தார்கள். சிறிதும் நித்திரை செய்தார்களில்லை.

பொழுது புலர்ந்ததும் யாவரும் தூணின்மீது இருப்பவள் மகரதம்ஷ்ட்ரையெனக்கண்டு பயம் நீங்கி நகைத்தார்கள். இந்தச் செய்தியரசனறிந்து அவனும் வந்து பார்த்தான்.

பிறகு ரூபிணிகையும் வந்து பார்த்து தூணின் மீதிருப்பவள் தன் அன்னையெனவறிந்து மிகவும் துக்கமும் வெட்கமுமடைந்து அவளை அத்தூணினின்றும் அங்குள்ள ஜனங்களைக் கொண்டு இற க்கிவிடும்படி செய்தாள். யாவரும் மகரதம்ஷ்ட்ரையைச் சூழ்ந்து கொண்டு இக்கதியுற்றதற்குக்காரணம் யாதெனக்கேட்கலானூர்கள். மகரதம்ஷ்ட்ரை அவர்களிடம் நடந்ததைக் கூறினள்.

இந்த ஆச்சரியத்தைக் கேட்டதும் ஜனங்கள் இது யாரே னும் ஒ, சித்தருடைய வேடிக்கையாயிருக்குமென்று கருதி அர சனுக்கறிவித்தார்கள். அரசனும் ஆச்சரியமடைந்து "வெகு பேர் களையடையக்கூடிய இம்மாதை எவன் வஞ்சித்தனனே அவன் பகி ரங்கமாக வரட்டும்; அவனுக்கு இந்த இராஜயத்தில் பாதி தரு கின்றேன்" என்று உடனே பறைசாற்றுவித்தான், அதுகண்ட லோஹஜங்கன் அரசன் முன் தோன்றி நடந்ததை விவரமாகக் கூறி தன்னிடம் விபீஷணன் கொடுத்த சங்கு சக்ரம் கதை பத்மம் முதலியவைகளைக் காட்டி அவைகளை மகாவிஷ்ணுவுக்குக் கொடுக்க வேண்டுமென்பதையுங் கூறினன்.

பிறகு அரசன் லோஹஜங்கனுக்குத் தன் ராஜ்யத்தில் பாதி ராஜ்யம் தந்து ரூபிணிகையையும் அவனுக்குச் சுவாதீனப்படுத்தினான். லோஹஜங்கன் ராஜ்யத்தையும ரூபிணிகையையும் மனமகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டு சுகமாகக் காலங் கழித்தான் என்ற இக்கதையை வஸந்தகன் கூற உதயனனும், அவனருகே யிருந்து கேட்டுக் கொண்டிருந்த வாஸவதத்தையும் மிகுந்த சந்தோஷமடைந்தார்கள்.

## ஐந்தாவது தரங்கம்.

இவ்வாறிருக்கையில் வாஸவதத்தை தன் தந்தையை மறந்து உதயனனிடம் மிகுந்த அன்புகொண்டு தன் அபிப்ராயத்தையும் தெரிவித்தனள். இச்சமயம் ஒரு நாள் யௌகந்தராயணன் என்னும் மந்திரி மறுபடியும் ஒருவரையும் அறியாமல் உதயனனிடம் வந்து பார்த்துச்சற்று நேரம் சம்பாஷித்துப் போனான். வஸந்தகன் மட்டிலும் அவ்வரசனிடமே யிருந்தானாகையால் அவன் தானும் அரசனும் தனித்திருக்கும் தருணத்தில் "அரசே! சண்டமகாஸேனன் தந்திரத்தால் தங்களைக் கட்டிக்கொண்டு வந்து விட்டான். அவன் இனி தன்குமாரியாகிய வாஸவதத்தையைக் கொடுத்துத் தங்களை விடுவிக்க விரும்பியுள்ளான். ஆகையால் அவன் அப்படிச் செய்யு முன்னரே நாமே இந்த வாஸவதத்தையை அவனை யறியாமல் நமது பட்டணத்திற்குக் கொண்டு போய் விடுவோம். அப்படிச் செய்வோமாகில் கர்வமுடைய இந்தச் சண்டமகாஸேனனுக்கு நாம் பதிற் செய்ததாகும். புருஷத்தன மில்லாமல் செய்த இந்த அற்பவெற்றியால் நமக்குத்தாழ்மைஏற்படாமலிருக்கும். இந்த வாஸவதத்தைக்குத் தந்தையாகிய சண்டமகாஸேனன் பத்ரவதி என்னும் பெயருடைய ஒரு பெண்யானையைக் கொடுத்திருக்கிறான். அந்தப் பெண்யானையின் வேகத்தை அனுசரிக்க நாடாகிரி என்ற

நமது யானையைத் தவிர வேறு எந்த யானையாலும் முடியாது. நாடாகிரியும் இந்த யானையைக் கண்டால் யுத்தம் செய்யாது. பத்ரவதி யென்ற இந்த யானையின் மாவுத்தன் ஆஷாடகன் என்பவன். அவனுக்கு நான் மிகுதியான பொருளைக் கொடுத்து என் வசப்படுத்தி யிருக்கிறேன். ஆகையால் வாஸவதத்தையுடன் பத்ரவதியின் மீதேறிக்கொண்டு ஒருவரையுமறியாமல் இராத்திரி வேளையில் இதை விட்டுப் புறப்பட்டு விடுவோம். இங்கிருக்கும் மகாமாத்திரன் என்பவன் யானைகளின் இங்கிதமறிந்தவன். அவன் இந்த யுக்தியை யறியாமலிருக்கும்படி மதுவைக் கொடுத்து மயக்கிவிட வேண்டும். நான் முந்தி இவ்விடமிருந்து புறப்பட்டு உமது நண்பனாகிய புளிந்தனுடைய வீட்டிற்குச் சென்று அங்கிருந்துகொண்டு உம்மை வழியில் காப்பாற்றுவதற்கான ஏற்பாடுகளைச் செய்கிறேனென்று கூறி அவ்விடம் விட்டுச்சென்றான் யௌகந்தராயணன்.

பிறகு யௌகந்தராயணன் சொன்னபடியே செய்வதெனத் தீர்மானித்து வாஸவதத்தை தன்னிடம் வந்ததும் சற்று நேரம் அவளுடன் அன்போடு சில சரித்திரங்களைச் சொல்லிக் கொண்டிருந்து தான் அதை விட்டுப் புறப்பட யோசித்திருக்கும் யுக்தியைத் தெரிவித்தான். அதைக்கேட்டதும் வாஸவதத்தை சம்மதித்து மாவுத்தனாகிய ஆஷாடகனை வரவழைத்து அவனைத் தயாரா யிருக்கும்படி செய்தாள். பிறகு தேவபூஜையென்ற உபாயத்தை வைத்துக்கொண்டு மகாமாத்திரனுக்கு மதுவைக் கொடுத்து அவனுக்கு மயக்கமுண்டாகும்படி செய்தாள். பின்னர் குறிப்பிட்ட வேளையில் ஆஷாடகன் மேகநாதம்போல் சப்திக்கும் பத்திரவதி யென்னும் யானையைக் கொண்டுவந்தான். அந்த யானை வந்து நின்றவுடன் ஒரு பெரிய சப்தம் செய்தது. அச்சத்தத்தை யானையின் பாஷையை யறியும் வல்லமை படைத்த மகாமாத்திரன் கேட்டான். அதனால் அவன் அப்பெண்யானை தான் இன்று நூற்றெண்பது யோஜனை தூரம் போகப் போகிறதாக தெரிவித்ததெனக்கண்டு கொண்டான். அப்பொழுது மகாமாத்திரன் மிகுந்த மயக்கங் கொண்டிருந்தானாகையால் யானையின் சப்தத்தின் பொருளறிந்தும் அவன் மனம் அதைப்பற்றி விசாரித்தற்குரியதாயில்லை. ஆகையால் யானை யறிவித்த இந்த இரகசியம் அங்குள்ள ஒருவராலும் அறிந்து கொள்ளப்படவில்லை.

பின்னர் உதயனன் தான் யௌகந்தராயணனிடமிருந்து தெரிந்துகொண்ட உபாயங்களால் கட்டுகளை யவிழ்த்துக்கொண்டு தனது வீணையையும் ஆயுதங்களையும் எடுத்துக்கொண்டு வாஸவதத்தை வஸந்தகன் இவர்களுடன் புறப்பட்டு பத்ரவதியின் மீது ஏறிக் கொண்டான். பின்னர் வாஸவதத்தையின் அந்தரங்கத் தோழியாகிய காஞ்சனமாலையும் பத்ரவதியின் மீது ஏறினாள். பிறகு ஆஷாடகன் யானையை நடத்த யாவரும் இடிந்துபோனகோட்டைச் சுவரின் மார்க்கமாக வெளிக்கிளம்பினார்கள். அப்பொழுது இவர்களை யெதிர்த்த கோட்டைக் காவலாளிகளாகிய வீரபாகு தாளபடன் இவ்விருவரையும் உதயனன் வதஞ் செய்தான். பின்னர் ஆஷாடகன் மாவுட்டியைப் பிடித்து பத்திரவதியை ஓட்ட அது வெகு விரைவில் சென்றது. உஜ்ஜயினி நகரப் பிராகாரக் காவலாளிகள் மரணமடைந்ததை யறிந்த நகரக் காவலாளிகள் மிகவும் ஆரவாரம் செய்துகொண்டு அன்றிரவே அரசனிடம் தெரிவித்தார்கள். அரசன் அதன் காரணத்தை யறியவேண்டி நெடுக விசாரித்துப் பார்க்கையில் உதயனன் வாஸவதத்தையை யபகரித்துக் கொண்டு போய் விட்டானென்று தெரிந்து கொண்டான். பட்டணமெங்கும் ஜனங்கள் பல படியாகவும் பேசி ஆரவாரித்தனர். இது கண்டு சகியாத சண்டமஹாஸேனனுடைய புத்திரன் பாலகன் என்பவன் நாடாகிரி யென்ற யானையின் மீதேறிக்கொண்டு உதயனனைத் தொடர்ந்து சென்றான். தன்னைத் தொடர்ந்து வருவது அரசன் புத்திரனாகிய பாலகனென வறிந்த உதயனன் பாணங்களாலடித்துத் தடுத்தான். நாடாகிரி யென்ற யானை பத்திரவதி என்னும் யானையின் அருகே வந்து பார்த்தும் அதை யொன்றும் செய்யவில்லை. இதற்குள் இந்தப் பாலகனுடைய சகோதரனாகிய கோபாலனென்பவன் வேறொரு யானையின் மீது அவிடத்திற்கு வந்து தன் தந்தை திரும்பி நகரத்திற்கு வரச் சொன்னானென்று தெரிவிக்கப் பாலகன் பின் சிறிதும் தாமதியாது அங்கிருந்து புறப்பட்டு விட்டான்.

பின் உதயனன் தன் யானையைச் செலுத்திக்கொண்டு புளிந்தனிருக்கும் அரண்யம் வந்தான், இங்கேவந்ததும்பொழுதுவிடிந்தது.

நூற்றெண்பது யோசனை தூரம் வந்த யானைக்குத் தாகம் அதிகரித்தமையால் அங்கிருந்த ஒரு குட்டையில் அந்த யானை நீரருந்தித் தாகந் தணித்துக்கொண்டது. பின் மறு கணத்திலேயே அந்தஜலத்திலேற்பட்டிருந்த ஏதோ தோஷத்தினால் அந்த யானை திடீரென்று தரையில் விழுந்து புரண்டு உயிர் துறந்தது. அதனால் உதயனன் பெருந்துக்கமடைந்து இன்னசெய்வதெனத் தோன்றாது மயங்கிநிற்கும்போது ஆகாயத்தில் "ஓ அரசனே! நான் மாயாவதியென்ற பெயர் படைத்த ஒரு வித்தியாதரமாது. எனக்கு முன்னால் ஏற்பட்ட சாபத்தினால் இதுகாலம் வரையில் நான் பெண் யானையாகப் புவியின்கண் ணிருந்தேன். இப்போது உனக்கு உபகாரம் செய்தேன். இனி உனக்குப் பிறக்கப்போகும் புத்திரனுக்கும் மறுபடியும் உதவி புரியப்போகிறேன். உனக்கு மனைவியாகிய இந்த வாஸவதத்தை மானிடமாதல்ல; தேவஸ்திரீ; ஏதோ காரண வசத்தால் இப்புவியில் அவதரித்திருக்கின்றாள்" என்று ஆகாயவாணிகூறிற்று. இதைச் செவியுற்ற உதயனன் வியப்பும் மகிழ்ச்சியுமடைந்து தன் நண்பனாகிய புளிந்தனிடம் வசந்தகனை யனுப்பித் தன் வரவை முன்னால் சென்று தெரிவிக்கும்படி செய்தான். பிறகு தானும் வாஸவதத்தையும் கால் நடையாகவே அந்தப் புளிந்தனிருக்குமிடம் நோக்கிச் சென்றார்கள்; இவனை வழியில் நூற்றைம்பது திருடர்கள் மடக்கிக் கொண்டார்கள். அவர்களை உதயனன் தன் கை வில்லாலடித்து நமனுலகுக்கு அனுப்பினான். அப்பொழுது அரசனுடைய நண்பனாகிய புளிந்தகன், யௌகந்தராயணன், வசந்தகன் இவர்கள் அங்கு வந்து சேர்ந்தார்கள். புளிந்தகன் உதயனனைவணங்கித் தன்னிருப்பிடத்திற்கு அன்போடு அழைத்துச் சென்றான். அங்கே வாசவதத்தையும் உதயனனும் தங்களுக்களிக்கப்பட்ட நல்ல உணவை உண்டு சிரமபரிகாரம் செய்து கொண்டார்கள்.

முதல் நாளே யௌகந்தராயணன் தூதனை அனுப்பியிருந்தானாதலால் சேனாதிபதியாகிய ருமண்வான் என்பவன் அன்று வந்து சேர்ந்தான். பிறகு உதயனன் அந்தவனமுழுதும் சுற்றிப்பார்த்துப் பின் விந்தியமலைக்கருகாமையிலுள்ள ஓரிடத்தில் உச்சயினி நகரத்தின் விருத்தாந்தத்தைத் தெரிந்துகொள்வதன் பொருட்டுத் தங்கியிருந்தான். அப்பொழுது உச்சயினியிலிருந்து யௌகந்தராயண

னுடைய நண்பனாகிய ஒருவியாபாரி வந்து "பிரபுவே! உமது மாமனாரா கிய சண்டமகாஸேனன் உம்மிடம் அன்புடன் இருக்கிறான். அவன் தங்களிடம் துவாரபாலகனை அனுப்பியிருக்கிறான். அவன் பின்னால் வருகிறான். நான் யாரையுமறியாமல் முந்தி இச்செய்தி தெரிவிக்க விரைவாக வந்தேன்" என்றான்.

இதைக்கேட்ட உதயனன் சந்தோஷித்து வாசவதத்தைக்கு ரைக்க அவளும் சந்தோஷமடைந்தாள். இவள் ஏற்கனவே பந்துக் களைத்துறந்து உதயனனை மணந்துகொள்ளக் கருத்துக் கொண்டி ருந்தமையால் இச்செய்தி கேட்டதும் மகிழ்வுற்றது மன்றி வெட்கமுமடைந்தாள். இப்படிக் கலக்கமுற்ற தன் மனம் சரியா வதன்பொருட்டு ஒருகதை கூறும்படி தன் அருகே யிருந்தவசந்தக னுக்குத் தெரிவித்தாள்.

வசந்தகன் சந்தோஷமடைந்து வாசவதத்தைக்குப் பதி பக்தி புகட்டக்கூடிய ஒருகதையை நினைவுக்குக் கொண்டுவந்து கூற லானான்.

தாம்பிரலிப்தி யென்றொரு நகரமுண்டு. அந்நகரத்தில் அளவ ற்ற ஐசுவரியம் படைத்த ஒருவியாபாரி யிருந்தான். அவனைத் தன தத்தனென்றழைப்பார்கள். அவனுக்கு மக்கட்பே றில்லாமையால் அநேக அந்தணர்களை வரவழைத்து அவர்களை வணங்கி "பிராம ணோத்தமர்களே! எனக்குப் புத்திரப் பேறுண்டாகுமாறு தருமத் தைச் செய்விக்கவேண்டும்" என்று கேட்டுக்கொண்டான்.

பிராமணர்கள் "ஓ தனதத்த! இக்காரியம் சிரமத்தாலாகத்தக்க தன்று. பிராமணர்கள் வேதத்திற் கூறியபடி கர்மங்களைச் செய்து எல்லாகாரியங்களையும் சாதகம்செய்வார்கள். இவ்விதமே முன்னொரு அரசனுக்குப் புத்திரப் பேறில்லாதிருந்தது. அவ்வரசனுக்கு மனைவி மாத்திரம் நூற்றைந்து பேர்களிருந்தார்கள். அவன் புத்திரகாமேஷ் டியாகம்செய்து ஒருபுத்திரனை அடைந்தான். அக்குழந்தை நல்லரூப முடையதாயிருந்தது. அது தவிழ்ந்து விளையாடும்போது ஒருநாள் ஒருஎறும்பு அதன் அடித்தொடையில் கடித்தது. அதனால் குழந்தை வீறிட்டு வீறிட்டு அழுதது. அதுகண்டு அந்தப்புரத்து ஸ்திரீகள் குழந்தைக்கு ஏதோ ஆபத்து வந்துவிட்டதெனநினைத்துக் கத்தினு

ர்கள். அரசனும் அச்சமுற்று மனங்கலங்கி வருந்தினன். பிறகு சற்று நேரத்திற்கெல்லாம் தொண்டையில் கடித்திருந்த எறும்பு விலகிற்று. குழந்தை அழுகையை நிறுத்திற்று. இதனால் அரசன் ஒரே புத்திரனிருப்பது துக்கத்திற்குக் காரணமென்று கருதி பிராமணர்களை வரவழைத்து "பிராமணர்களே! வெகு பிள்ளைகளுண்டாக ஏதேனும் உபாயமுண்டோ" வென்று மிகவும் பரிதாபத்துடன் கேட்டான்.

பிராமணர்கள் "பிரபுவே! உமக்குப் புத்திரனுண்டாக ஒரு உபாயமிருக்கிறது. அப்படிச்செய்தால் முடியும்" என அரசன் "அதென்ன உபாயம்; தெரிவித்தால் அப்படியே செய்கிறேன்" என்றான். பிராமணர்கள், "பிரபுவே! உமக்கிப்போதிருக்கும் இந்தக் குழந்தையைக் கொன்று அந்த மாம்சத்தை அக்னியில் ஹோமம் செய்யவேண்டும். அந்த வாசனையை உமது மனைவிகள் மோர்ந்து பார்த்தால் அவர்களொவ்வொருவருக்கும் ஒவ்வொரு புத்திரன் பிறப்பான்" என்றார்கள். அரசன் அதற்குச் சம்மதிக்கவே அந்தணர்கள் அந்த ஹோமத்தைச் செய்துமுடித்து அவனுக்குப் பல புத்திரனுண்டாகும்படி செய்தார்கள். ஆகையால் உமக்கும் ஹோமத்தால் புத்திரபாக்கியமுண்டாகும்படி செய்கின்றோம் என்றுகூற, அரசன், அந்த அந்தணர்களுக்கு தக்ஷிணை முதலியவைகளைக் கொடுத்து ஹோமத்தை நடத்தும்படி ஆக்ஞாபித்தான். பிராமணர்கள் ஹோமத்தை பரிஷ்காரமாகச்செய்து முடித்தார்கள். பின்னர் அரசனும் ஒரு புத்திரனை யடைந்தான். அவனுக்கு அரசன் குஹசேனன் என்று பெயரிட்டுச் செல்வமாக வளர்த்துவந்தான். அவன் தக்க வயதினையடைந்ததும் அவனுக்கு ஒரு பெண்ணைத் தேடி விவாகம் செய்விக்கக் கருத்துக்கொண்டான். அதன் நிமித்தம் அரசன் ஒரு வியாபாரிபோல் வேடந்தரித்துக் கொண்டு தீபாந்திரம் சென்று அங்கிருந்த ஒரு வியாபாரியைக் கண்டு அவனுடைய பெண்ணைத் தன் குமாரனுக்குக் கொடுக்கும்படி யாசித்தான். தர்மகுப்தன் எனனும் பெயர்கொண்ட அந்த வியாபாரியின் அருமையான பெண்ணை வெகு தூரத்திலிருக்கும் தாம்பிரலிப்திபுரத்திற் கொடுக்க மனமில்லாததினால் அந்தச் சம்பந்தஞ் செய்யச் சம்மதிக்கவில்லை. ஆனால் தேவஸ்மிதை யென்னும் அட்

பெண் குஹசேனனைக் கண்டு அவன் மீது ஆசைகொண்டு ஒருவரையும் அறியாமல் அவனுக்குத் தன் கருத்தை சமிக்ஞை செய்து காட்டினாள். குஹஸேனனும் அதைத் தெரிந்துகொண்டு சந்தோஷமடைந்தான். பின்னர், தேவஸ்மிதை, குஹசேனன், அவன் தந்தை தனதத்தன் மூவரும் அவ்வூரிலிருந்து ஒருவரையுமறியாமல் புறப்பட்டுத் தாம்ரலிப்திபுரத்திற்கு வந்து சேர்ந்தார்கள். தனதத்தன் தன் பெருமைக் கேற்றபடி தேவஸ்மிதைக்கு நல்ல ஆடையாபரணங்களைப் பூட்டி ஒரு சுபதினத்தில் குஹசேனனுக்கு மணஞ்செய்வித்தான். குஹசேனனும் தேவஸ்மிதையும் ஒருவர் மேல் ஒருவர் மிக்க அன்புபாராட்டிவந்தார்கள். பின் தற்செயலாகத் தனதத்தன் மரணமடைந்தான். அவன் பந்துஜனங்களெல்லோரும் குஹசேனனை கடாஹத்தீவிற்குச் செல்லும்படி கட்டாயப்படுத்தினார்கள். அதுகண்ட தேவஸ்மிதை தன் கணவன் தன்னை விட்டுப்பிரியின், அவனுக்கு ஒரு வேளை வேறு மாதர்களின் சேர்க்கையுண்டாகுமென்கிற சந்தேகங்கொண்டு அவனை அத்தீவுக்கனுப்பப் பிரியப்படவில்லை. பந்துஜனங்களோ அடிக்கடி கட்டாயப்படுத்துகிறார்கள். என்ன செய்வான் குஹசேனன்! இன்னது தான் செய்வது என்பது தெரியாது மயங்கினான். பின் இரண்டொரு நாட்கழிந்ததும் இந்தச் சந்தேகம் ஈசனாற்றான் தீரவேண்டுமெனத் தீர்மானித்து ஆலயஞ்சென்று அங்கு ஆகாரமின்றி விரதமிருந்து வந்தான். தேவஸ்மிதையும் கணவனை யனுசரித்து விரதத்தை யனுஷ்டித்து வந்தாள். பிறகு ஒருநாள் அவ்விருவருடைய சொப்பனத்திலும் பரமசிவன் தோன்றி தலைக்கு ஒரு செந்தாமரை மலரைக் கொடுத்து "உங்களிருவருள் யாரேனும் ஒருவர் வெகு தூரம் சென்று அங்கு ஒழுக்கத்தினின்றும் தவறுவீர்களாயின், ஒழுக்கத்தினின்றும் சிறிதும் தவறாதவருடைய மலர் வாட்டமுறும். இந்த அடையாளத்தைக் கொண்டு நீங்கள் தெரிந்துகொள்ளுங்க" ளென்று கூறி மறைந்தார்.

பின் உடனே இருவரும் விழித்துக்கொண்டார்கள். இருவருடைய மனமும் அவர்கள் கரத்திலிருக்கும் தாமரை மலர்போல் * ராகத்தை யடைந்தது.

* ராகம்—சிவப்பு, ஆசை.

பிறகு குஹசேனன் தாமரை மலரை யெடுத்துக்கொண்டு தனக்கு அவ்வூரார் கட்டளையிட்டபடி கடாஹத்தீவுக்குச் சென்றான். தேவஸ்மிதையோ தன் கையிலிருக்கும் தாமரை மலரை நோக்கியவாறே யிருந்துவந்தாள். குஹசேனன் கடாஹத்தீவை யடைந்ததும் அங்கேயிருக்கும் ரத்தின வியாபாரிகளுடன் சேர்ந்து அவனும் இரத்தினவியாபாரம் செய்து வந்தான். அங்குள்ள வியாபாரி ஒருவனுக்கு நான்கு புத்திரர்களிருந்தார்கள். அவர்கள் குஹசேனனுடைய கரத்திலிருக்கும் தாமரை மலர் வாடாதிருப்பதைக் கண்டு ஆச்சரியமடைந்து அதன் வரலாறு அறியப் பிரியப்பட்டுச் சமயம் பார்த்துக் கொண்டிருந்தார்கள். ஒரு சமயம் குஹசேனனைத் தங்கள் வீட்டுக்குக் கட்டாயப்படுத்தி யழைத்துச் சென்று மதுவைக் கொடுத்து அவன் குடித்துமயக்கமுற்ற பின் அந்த மலரைப்பற்றி விவரம் கேட்டார்கள். குஹசேனன் இச்சமயம் தன் வசமற்றிருந்தானாகையால் அவர்கள் கேட்டதும் உள்ளதை உள்ளபடியே தெரிவித்தான்; அதுகேட்ட அந்நால்வரும் "இவன் இங்கிருந்து இரத்தின வியாபாரம் செய்து திரும்ப வெகுநாட் செல்லும்; அதற்குள் நாம் தாம்பிரலிப்திபுரம் சென்று அங்கிருக்கும் இவன் மனைவியை யடைந்து அவளிடம் சுகமனுபவித்துத் திரும்பி விடுவோம்" என்று தீர்மானித்துக் கொண்டார்கள். பின் குஹசேனன் மயக்கந் தெளிந்து அவ்விடம் விட்டுச் சென்றதும் அந்நால்வரும் ஒருவரையும் அறியாமல் அங்கிருந்து புறப்பட்டுச் சில நாளையில் தாம்பிரலிப்திபுரம் வந்து சேர்ந்தார்கள்.

இங்கே வந்து தாங்கள் குறிப்பிட்டு வந்த தேவஸ்மிதையைத் தேடிக்கொண்டே அவ்வூர் ஆலயத்திற்குள் நுழைந்தார்கள். அங்கே யோககரண்டிகையென்னும் புத்தசன்னியாசினிஒருமரத்தடியில்வீற்றிருக்கக் கண்டு அவளிடம்சென்று அவளைப் பணிந்து "அம்மணீ! தாங்கள் எங்களுடைய மனோரதத்தை நிறைவேற்றுவீர்களாயின் தங்களுக்கு மிகுந்த பொருள் கொடுக்கின்றோம்" என்றார்கள். இந்த யோககரண்டிகை "பிள்ளைகளா! உங்களுக்கு யௌவனஸ்திரீகளிடம் விருப்பமுண்டோ கூறுங்கள்; எனக்குப் பொருளில் சிறிதும் ஆசை கிடையாது. எனக்கு சித்திகுரு என்று ஒரு மாணவியிருக்கின்றாள்.

அவள் மகா புத்திசாலி. அவளுடைய அனுக்ரகத்தால் எனக்குத் திரவியம் ஏராளமாக விருக்கின்றது என, அந்நால்வரும் சன்னியாசினியை நோக்கி, "அம்மணி! தங்களுக்கு அந்த மாணவியின் அனுக்ரகத்தால் மிகுதியான பொருள் கிடைத்தது எவ்விதம்? தயைசெய்து தெரிவியுங்கள்" என்றார்கள். சந்நியாசினி கூறுகின்றாள்.

புத்திரர்களே! அதைக் கேட்க விருப்பமிருக்குமாயின் கேட்கலாம். நான் அதை உங்களுக்குக் கூறுகின்றேன். முன்பு வடதேசத்திலிருந்து ஒரு வியாபாரி வந்திருந்தான். என் மாணவியாகிய ஸித்திகிரி என்பவள் அவனுடைய வீட்டில் மாறு வேடத்துடனிருந்து வேலைசெய்து வந்தாள். அந்த வியாபாரிக்கு இவளிடம் நல்ல நம்பிக்கையுண்டாயிற்று. ஆசையால் எதையும் நம்பி அவளிடம் ஒப்புவிப்பான். இப்படி இருந்து வருகையில் ஒருநாள் வீட்டில் யாருமில்லாத சமயம்பார்த்து ஸித்திகிரி யென்ற அந்த வேலைக்காரி அந்த வியாபாரியின் வீட்டிலிருந்து சொர்ணாபரணங்களிற் சிலவற்றை யெடுத்துக்கொண்டு வெளிப்பட்டாள். அவள் அப்படி வெளிப்படுவதைத் தோளில் மிருதங்கத்தைக் கட்டித் தொங்கவிட்டுக் கொண்டிருந்த ஒரு டொம்பன் கண்டு அப்பொருளைத் தான் அபகரிக்கக் கருதி அவளைத் தொடர்ந்தான். அது கண்ட அந்த வேலைக்காரி அங்கிருந்த ஒரு ஆலமரத்தடியில் மறைந்தாள். அந்த டொம்பனும் அந்த மரத்தை நோக்கி வந்தான். டொம்பன் தன்னை அணுகியதும் அவள் அவனைப் பார்த்து, "நல்ல குணமுடையவனே! நானிப்போது என் கணவனுடன் கலகஞ்செய்துகொண்டு வீட்டை விட்டுப் புறப்பட்டு வந்துவிட்டேன் இந்த மரத்தில் ஒரு கயிறு கட்டி அதிற் சுருக்கிட்டுக்கொண்டு உயிரை யிழக்க இங்கு வந்தேன். என் அப்பனே என் மீதிரக்கங்கொண்டு இந்த மரத்தின் கிளையில் ஒரு கயிறு கட்டித் தொங்கவிடவேண்டும்" என்று நயந்து கேட்டனள். டொம்பன், "இவள் தூக்கிட்டுக்கொண்டு சாகட்டும்; நாம் இவளிடமிருக்கும் பொருளை யபகரித்துக்கொண்டு போவோம்". என்று கருதி மரக்கிளையில் கயிற்றைக் கட்டினான். ஸித்திகிரி ஒன்று மறியாதவள் போல் டொம்பனைப் பார்த்து, "அப்பனே இதிலெவ்விதஞ் சுருக்கிட்டுக்கொள்வது? தயைசெய்து எனக்கதைக்

காட்டு பார்ப்போம்" என்று வேண்டினாள். டொம்பன் உடனே தன் தோளிலிருந்த மிருதங்கத்தைக் கீழேவைத்து அதன் மீதேறி நின்றுகொண்டு அந்தக் கயிற்றைத் தன் கழுத்தில் சுருக்கிட்டுக் கொண்டு இவ்விதந்தானென்றனன். உடனே ஸித்திகிரி அந்த மிருதங்கத்தைக் காலாலுதைத்துத் தள்ளிவிட்டாள். டொம்பன் சிறிது நேரத்தில் மரணமடைந்தான்.

இச்சமயம் தன்னுடைய பொருளைத் திருடிச்சென்றது சித்தி கிரிதானென்று தெரிந்துகொண்ட வியாபாரி அவளைக் கண்டு பிடிப்பதற்காகப் புறப்பட்டு வந்தான். அவன் வருவதை ஸித்திகிரி பார்த்து விட்டாள். ஸித்திகிரி இந்த மரத்தடியி லிருப்பதையும் வியாபாரி பார்த்து விட்டான். ஆகையால் உடனே ஸித்திகிரி வேறெங்குந் தப்பியோட வழி காணாது அம்மரத்தின் மீதேறிக் கொண்டு இலை யடர்ந்திருக்கும் ஒரு கிளையில் மறைந்து கொண்டாள்.

ஸித்திகிரியைப் பார்க்க, அந்த வியாபாரி உடனே தன் ஆட்களில் சிலரையு மழைத்துக்கொண்டு அந்த மரத்தடிக்கு வந்து பார்த்தான். அங்கே டொம்பன் கழுத்திற் சுருக்கிட்டுக்கொண்டு மரணமடைந்திருப்பதைக் கண்டு ஆச்சரியமும் பயமுமடைந்து சற்றுத் திகைத்து நின்றார்கள். பிறகு ஸித்திகிரியைத் தேடினார்கள். அப்பொழுது ஒருவன் அவள் இந்த மரத்தின் மீதிருப்பாள் என்று சொல்லி அதன் மீதேறித் தேடினான். அவனைக் கண்ட ஸித்திகிரி அவனை மெதுவா யழைத்து அவன் தன் பக்கம் திரும்பியதும் தன்னருகே வரும்படி கண்ணைக் காட்டினாள். வேலைக்காரன் ஏதோ இரகசிய மிருக்கிறதெனக் கருதி அவளிருக்கும் கிளைக்கேறி அவளருகே சென்றான். ஸித்திகிரி, "சுந்தரா! எப்போதும் எனக்கு உன்னிடம் மிகுந்த அன்புண்டல்லவா? நீயும் நல்லவேளையாய் வந்து சேர்ந்தாய்; இது நம்மிருவருக்குமுள்ள அன்பைக் காட்டுகிறது. நான் கொண்டுவந்திருக்கும் பொருள்கள் யாவும் உன்னுடையது தான் நான் உன்மேல் ஆசைகொண்டேனாதலால் நீ என்னை மனைவியாக வேற்றுக்கொள்ளவேண்டும்" என்று கூறி அவனைக் கட்டித் தழுவி முத்தமிட்டு அதரபானஞ் செய்தாள். அப்பொழுது அந்த வேலைக்காரனுடைய நாவைத் தன் கூரான பற்களால் ஸித்திகிரி

கடித்து இரண்டு துண்டமாக்கினாள். வேலைக்காரன் மிகுந்ததுன்ப மடைந்ததுமன்றி வார்த்தையொன்றும் பேசமாட்டாமல் லலல்ல! லலல்ல!! என்று கத்திக்கொண்டே நாவிலிருந்து இரத்தமொழுகக் கீழேவிழுந்தான். இதைக் கண்டதும் அந்த வியாபாரி நமது வேலைக்காரனைப் பூதம் அடித்து விட்டது என்று பயந்து மற்ற வேலைக்காரர்களுடன் ஓட்டம் பிடித்தான். பிறகு ஸித்திகிரி மரத்திலிருந்து கீழே யிறங்கித் தன் வீடு போய்ச் சேர்ந்தாள்.

புத்திரர்களே! என்னுடைய மாணவி இப்படிப்பட்ட அறிவுடையவள். அவளுடைய அனுக்கிரகத்தால் மிகுந்த பொருளை யடைந்தேன் என்று அந்தச் சன்னியாசினி சொல்லிக் கொண்டிருக்கும்போது ஸித்திகிரி வந்து சேர்ந்தாள். அவளை அந்த வியாபாரிகளுக்குக் காண்பித்தாள். புத்திரர்களே! உங்களுடைய கருத்தைத் தெரிவியுங்கள். ஸ்திரீயை நானிங்கே சீக்கிரத்தில் அழைப்பிக்கிறேன் என்றாள். வியாபாரிகள், "அம்மா! குஹஸேனனுடைய மனைவி தேவஸ்மிதையை நாங்களடையும்படி செய்யவேண்டும் என்றார்கள். சந்நியாசினி அவ்விதமே செய்கிறேனென்று கூறி அவர்கள் தங்குவதற்குத் தன்வீட்டையே குறிப்பிட்டுத் தன் மாணவியுடன் குஹஸேனனது வீட்டுக்குச் சென்றாள். அந்த வீட்டு வாசலில் சங்கிலியில் கட்டியிருந்த நாய் சந்நியாசினியை உள்ளே பிரவேசிக்க வொட்டாமல் தடைசெய்தது. அதையறிந்த தேவஸ்மிதை தன் சேடியை யழைத்துச் சந்நியாசினியை உள்ளேயழைத்து வரும்படி சொல்லியனுப்பினாள். சந்நியாசினி உள்ளே சென்றதும் ஆசீர்வசனங்கூறி கற்பிற் சிறந்தவளாகிய தேவஸ்மிதையைப் பார்த்து எப்போதும் உன்னைப் பார்க்கவேண்டுமென்கிற விருப்பமெனக்குண்டு. இப்போது கனவில் உன்னைக் கண்டேன். அதனால் சந்தோஷங்கொண்டு இங்கே வந்தேன். உனக்கேற்ற ஒரு கணவனை நீ யடையாதிருப்பது எனக்குப் பெரும் வருத்தத்தைத் தருகிறது. உனது ரூபமும் இளமையும் கணவனுடைய அநுபவம் பெறுதற்கின்றி வீணாக வல்லவா போகிறது— என்ற இவை போன்ற வார்த்தைகளைப் பேசிக்கொண்டிருந்து தன் வீடு திரும்பினாள் சன்னியாசினி.

பிறகு அடுத்த நாள் அந்தச் சந்நியாசினி மிளகாய்த்தூள் மிகுதியும் சேர்க்கப்பட்ட ஒரு இறைச்சித் துண்டை யெடுத்துக் கொண்டு மீண்டும் தேவஸ்மிதையின் வீட்டுக்கே வந்து தான்கையில் கொண்டுவரும் மாமிசத் துண்டத்தை யெடுத்து வாயிற்படியிலிருந்த நாய்க்குக் கொடுத்தாள். அந்த நாய் அதைப் புசித்தது. அதில் மிளகாய் மிகுதியும் சேர்க்கப்பட்ட குற்றத்தினால் அந்த நாயின் கண்களினின்றும் நீர்பெருகத் தொடங்கிற்று. மூக்கிலிருந்தும் நீர்த்துளிகள் சிந்தின. அப்போது யோககரண்டிகை என்னும் அந்தச் சந்நியாசினி தேவஸ்மிதையிடம் சென்று உட்கார்ந்து அழத் தலைப்பட்டாள். இதைக் கண்ட தேவஸ்மிதை காரணம் வினவ, பெண்ணே! வெளியே யிருந்து பதறும் இந்த நாயைப் பார். இந்தப் பெண் நாய் முன் ஜன்மத்தில் நான் அதனுடன் சேர்ந்திருந்தவளென்பது தெரிந்து அழ யத்தனித்துவிட்டது. அதைக் கண்ட எனக்கும் அழுகைவந்து விட்டது என்றாள். தேவஸ்மிதை வெளியே வந்து நாயைப் பார்த்தாள். அது அழுவதுபோல் காணப்பட்டது. அதை கண்டு "இதென்ன வாச்சரிய"மென்று கணப்பொழுது யோசித்தாள். யோககரண்டிகை யென்னும் சந்நியாசினி "ஓ பெண்ணே! நானும் இந்த நாயும் போன ஜன்மத்தில் ஒரு பிராம்மணனுக்கு மனைவிகளாக விருந்தோம். எங்கள் கணவன் அரசனுடைய உத்தரவுப்படி பல விடங்களிற் செல்வார். அப்படி அவர் ஒரு சமயம் வெளியூருக்குப் போயிருக்கையில் எனதிச்சைப்படி வேறு புருஷர்களை யடைந்து அவர்களுடன் சுகமனுபவித்து என் இந்திரியங்கட்குத் திருப்தி செய்வித்து வந்தேன். மாதே! இந்திரியங்கட்குத் துரோகம் செய்யாமலிருப்பதே சிறந்த தர்மமென்பது நிச்சயம். ஆதலாற்றான் இச்சென்மத்தில் முன் ஜன்ம விருத்தாந்தங்களை யுணரும் சக்தி பெற்றிருக்கின்றேன். இவள் சீலம் ஒன்றனையே அனுஷ்டித்து வந்தமையாற்றான் நாய் ஜன்மத்தை யடைந்திருக்கின்றனள். ஆயினும் முன் ஜன்மத்தை மாத்திரம் ஸ்மரித்துக் கொண்டிருக்கின்றாள் என்று கூறினாள்.

இதைக் கேட்டதும் சிரந்த புத்தியையுடைய தேவஸ்மிதை "இதென்ன தர்மம்! துஷ்டர்களுடைய கற்பனை யன்றோ இது"? எனச் சிந்தித்து, சொல்லுகிறாள்.

"ஓ! பகவதி? இவ்வளவு நாளாய் நான் இந்த தர்மத்தை யறியேன். ஆகையால் நீயே எந்தப் புருஷனுடைய சம்போகத்தை யேனும் எனக்குச் செய்விக்க வேண்டும்." என்றாள். பிறகு போககாண்டிகை "பெண்ணே! சிலர் தீவாந்தரத்திலிருந்து வந்திருக்கின்றனர். அவர்கள் வியாபாரியின் புத்திரர்கள். இங்கே தான் அவர்களிருக்கின்றனர். அவர்களை உன்னிடத்திற்கு அழைத்துக் கொண்டு வருகின்றேன்" என்று கூறி மனமகிழ்ச்சியோடு தன் வீடு சென்றனள்.

பின்னர் தேவஸ்மிதை யென்பவள் தன் சேடிகளை நோக்கி இப்போது சன்னியாசினி யழைத்து வரப்போகும் வியாபாரியின் குமாரர்கள், "என் கணவனுடைய கரத்திலிருக்கும் பத்மம் வாடாமலிருப்பதைப் பார்த்து; மயக்கத்தைத் தரும்படியான மதுவை யவருக்குக் கொடுத்து அவரிடமிருந்து என் வரலாறு தெரிந்துகொண்டு என் கற்பை யழிக்க இங்கு வந்திருக்கின்றனர். அந்த வஞ்சகர்களை இந்தத் துஷ்டை ஸன்னியாசினியை யனுப்பி யிருக்கின்றனர்." ஆகையால் அதி சீக்கிரத்தில் ஊமத்தங்காயுடன் கூடிய மதுவை இக்கணமே தயார்செய்யுங்கள். நாயின் காலைப்போல் இரும்பினால் ஒன்று செய்யுங்கள், என்றுக்கட்டளையிட்டாள். சேடிகள் அவ்வாறே தயாரித்தனள். பிறகு தேவஸ்மிதையின் ஆக்ஞைப்படி ஒரு சேடி, அவளைப்போல் வேடம் பூண்டுகொண்டு தயாராயிருந்தாள்.

சந்நியாசினி வியாபாரியின் புத்திரர்களை யழைத்ததும் அவர்கள் "நான்தான முந்திச் செல்வேன், நான்தான் முந்திச்செல்வேன்" என்று ஒருவர்க்கொருவர் வாக்குவாதம் செய்துகொண்டார்கள். பிறகு கடைசியில் எல்லாரும் ஒப்பி ஒருவனை ஒரு பெண்போல் வேடம்பூண்டு கொள்ளும்படி செய்து தேவஸ்மிதையின் வீட்டுக்கனுப்பினாள் சந்நியாசினி. வியாபாரியின் குமாரனைக் கண்டதும் தேவஸ்மிதையின் வேடம்பூண்ட சேடி அவனை வரவேற்று ஓராசனத்தில் வீற்றிருக்கச் செய்து முன்பே தயாரித்து வைத்திருந்த மதுவைக் கொடுத்தாள். அந்த மதுவை யருந்தியதும் அவன் பிரஞ்ஞையற்றுப் போனான். உடனே சேடிகள் அவனுடைய ஆடைகளைக் களைந்துகொண்டு திகம்பரனாகச் செய்து

முன்பே தயாராக்கப்பட்டிருந்த இருப்புநாய்க் காலேக்கொண்டு முகத்தில் ஒரு குறிவைத்து அவனை மலம் நிறைந்த குழியில் தள்ளிவிட்டார்கள்.

பிறகு அந்த வியாபாரியின் குமாரன், அதிகாலேயில் பிரஞ்ஞையடைந்து தான் மலம்நிறைந்த குழியில் கிடப்பதைக்கண்டு மிகவும் வருத்தமுற்று உடனே எழுந்து ஒருவரையு மறியாமல் ஒரு குளத்திற்குச் சென்று முழுகித் தேகத்தை சுத்தப்படுத்திக்கொண்டு யோககரண்டிகையின் வீடுவந்து சேர்ந்தான். இவன் தனக்கு நேர்ந்த அவமானம் மற்றவர்களுக்கும் கிடைக்கவேண்டுமென்ற எண்ணங்கொண்டு மற்றவர்களிடம், நான் அதி காலேயில் எழுந்து வந்தேன். அப்போது திருடர்கள் என்னை படக்கிக்கொண்டு என் ஆடைகளே யபகரித்துக் கொண்டுபோய் விட்டனர். இரவு நெடுநேரம் கண் விழித்துக் கொண்டிருந்தமையாலும் மிகுதியும் பானம் செய்துவிட்டமையாலும் எனக்குத் தலைநோயுண்டாய் இப்போது மிகுதியும் தொந்தரவா யிருக்கிறது என்று கூறி வஸ்திரத்தால் தலையை மூடிக்கொண்டு ஓரிடத்தில் படுத்துக்கொண்டான்.

இரண்டாவன் அன்று இராத்திரி தேவஸ்மிதையின் வீட்டுக்குச் சென்று மோசம்போனன். மறுநாட் காலேயில் வஸ்திரமில்லாமலே அவனும் சந்நியாசினி வீடுவந்து சேர்ந்தான். அவனைக் கண்டு மற்றவர்கள் காரணம் கேட்காத தன் முன்பே இவன் "நண்பர்களே! வழியில் திருட்டுப் பயமென்பது தெரிந்தே ஆபரங்களைத் தேவஸ்மிதை கிருகத்தில் வைத்துவிட்டுவந்தேன்; அப்படியாயிருந்தும் திருடர்கள் என் வஸ்திரத்தையும் அபகரித்துக்கொண்டுபோய் விட்டனர்" என்று கூறி இவனும் ஒருபக்கம்போய் தன் முகத்தைக் காட்டாமல் படுத்துக்கொண்டான். இவ்விதமே மற்ற இருவரும் அவமானமடைந்து அங்கிருக்க வெட்கமடைந்து, ஒருவருடனும் சொல்லாமலே அவ்வூரைவிட்டுப் புறப்பட்டுவிட்டனர்.

அடுத்த நாட் காலேயில் யோககரண்டிகை நாம்காரியசித்தி பெற்றோமென்கிற உற்சாகத்துடன் தன் மாணவியையுமழைத்துக் கொண்டு தேவஸ்மிதையின் வீடு போய்ச் சேர்ந்தாள். சந்நியாசினியைக் கண்டதும் தேவஸ்மிதை அன்புடையவள்போல் வரவேற்று உட்காரவைத்து ஊமத்தங்காய் கலந்த மதுவை அவளுக்குக் கொடுத்-

துப் பருகும்படி செய்தாள். அங்ஙனமே அவளுடைய மாணவிகைக் கும் கொடுத்தனள். அதை யருந்திய சற்று நேரத்திற்கெல்லாம் அவர் களிருவரும் பயக்கமடைந்து தங்கள் நினைவுதப்பிப் போயினர். அப் போது கற்பிற்றவறாத தேவஸ்மிதை இருவருடைய மூக்கையும் செவிகளையும் அறுத்துவிட்டதுமன்றி அவர்களை நான்கு சேடிமார் களைக் கொண்டு வெளியே கொண்டுபோய் மலம் நிறைந்த குழியில் தள்ளிவிட்டு வீடுதிரும்பினள்.

பிறகு தேவஸ்மிதை அங்கிருந்து ஒருவரையு மறியாமலோ டிப்போன வியாபாரிகள் தன் கணவனுக்கு ஏதேனும் தீங்கிழைக் கக் கூடுமெனப் பயந்து நடந்த விவரத்தைத் தன் மாமியாரிடம் தெரிவித்தாள். மாமி "அம்மா! நீ செய்தது மிகவும் உசிதமானதே. ஆனல் அவர்கள் என் புத்திரனுக்கு ஒரு சமயம் யேதேனும் கெடுதி செய்வார்களென்ற பயம் எனக்குண்டாகிறது" என்றாள். தேவஸ்மிதை "அம்மா! முன் சக்திமதி என்பவள் தன் கணவனை எவ்வாறு காப்பாற்றினளோ அவ்வாறு நானும் இரக்ஷிக்கின்றேன்" என்றாள்; அது கேட்ட மாமி "பெண்ணே! சக்திமதி தன் நாய கனை எவ்வாறு காத்தனள் அதைச் சொல்" என, தேவஸ்மிதை கூறுகிறாள்.

எங்களுடைய சீமையில் சிறந்த எங்கள் நகரத்தில் முன்னோர்கள், மணிபத்திரன் என்னும் ஒரு மகாயக்ஷனைப் பிரதி ஷ்டை செய்திருக்கிறார்கள். ஜனங்களெல்லோரும் அவரவர் மனோ ரதம் நிறைவேறப் பிரார்த்தனை செய்து கொள்வது வழக்கம். எவனொருவன் பிறர் மனைவியை விரும்பி அவளுடைய சேர்க்கை யைப்பெறுகிறானோ அவனையும் அவனுக்கிணங்கிய மாதையும் இராஜ தூதர்கள் அடித்து இந்த யக்ஷதேவனுடைய கர்ப்பக்கிருகத்தில் ஓரிரவு முழுதும் வைத்திருந்து பிறகு இராஜனது விசாரணைக்குக் கொண்டு வருவது வழக்கம்.

ஒரு சமயம் சமுத்ரதத்தன் என்னும் வியாபாரி பிறர் மனைவியு டன் சம்போகஞ்செய்து இராஜ தூதர்களிடம் அகப்பட்டு யக்ஷ தேவனுடைய ஆலயத்துக் கர்ப்பக கிரகத்தில தான் அனுபவித்த ஸ்திரீயுடன் அடைக்கப்பட்டான். அதனை யறிந்த மகா புத்தி சாலியும் பதிவிருதையுமாகிய அந்த சமுத்ரதத்தனுடைய மனைவி

தைரியமாய் மாறுவேடம்பூண்டு கையில் பூஜா திரவியங்களை யெடுத்துக்கொண்டு தன் சேடிகளுடன் யக்ஷதேவனுடைய ஆலயத்திற்கு வந்தாள். அங்கிருந்த குருக்கள் தனக்கேதேனும் தக்ஷிணை கிடைக்குமென்று கருதி அவள் ஆலயத்துள் செல்லக் கதவைத் திறந்துவிட்டான்.

சக்திமதி தன் புருஷன் பிறர்மனைவியுடனிருப்பது கண்டு உடனே அந்த வியபிசாரியிடம் சென்று அவளுக்குத் தன் உடுப்பை உடுத்தி வெளியே போய்விடும்படி சொன்னாள். அந்த வியபிசாரி தான் தப்புவதற்கு உபாயமேற்பட்டதற்கு சந்தோஷித்து வேறு பதிற் பேசாது வெளியே சென்றனள். பிறகு குருக்களும் கதவைத் தாளிட்டுக் கொண்டு தன் வீடுபோய்ச் சேர்ந்தான்.

பிறகு மறுநாட் பொழுது விடிந்ததும் இராஜதூதர்கள் வந்து கோயில் கதவைத் திறக்கச் செய்து உள்ளே பிரவேசித்து சமுத்திரதத்தனையும அவன் மனைவி சக்திமதியையும் வெளியே கொண்டு வந்தார்கள். சமுத்திர தத்தன் தன் மனைவியுடனிருக்கக் கண்ட யாவரும் வியந்தார்கள் எனினும் இராஜனுக்கு இந்த ஆச்சரியத்தைத் தெரிவிக்கும் பொருட்டு அரசனிடம், கொண்டு போனார்கள். அரசன் பார்த்து நகைத்துக் காவலாளிகளிடம் கோபங்கொண்டு அவர்களைத் தண்டித்து சமுத்திர தத்தனையும் அவன் மனவியையும் விடுவித்தான். இவ்வாறு சக்திமதி தன்புத்தி விசேஷத்தால் தன்னுடைய புருஷனைக் காப்பாற்றினாள்! அங்ஙனமே நானும் என்னுடைய யுக்தியால் என் பதியைக் காப்பாற்றுகிறேன் என்று தன் மாமியாரிடம் சொல்லிவிட்டு தேவஸ்மிதை சேடிகளுடன் ஒரு வியாபாரியைப் போல் வேடம் பூண்டு குதிரையின் மீதேறிக் கொண்டு தன் கணவன் இருக்கும் கடாஹத் தீவுக்கு வந்தாள். அத்தீவையடைந்ததும் அங்குள்ள வியாபாரிகளுக்கு மத்தியில்,தன் பிராணனே சரீரமெடுத்துள்ளது போல் வீற்றிருக்கும் தன் கணவனைக் கண்டாள். குஹஸேனனும், தன் மனைவியைப் போன்ற ரூபாகிருதிகளுடன் வரும் ஆடவனைக்கண்டு இவன் யார் என்று மனதில் ஆலோசிக்கலானான்.

பின்னர் சற்றுநேரத்திற் கெல்லாம் அவர்களிடம் அணுகுவதுபோற் சென்ற தேவஸ்மிதை அங்கிருந்து திரும்பி அந்நகரத்து அரசனிடம் சென்று. "மகாராஜாவே! இவ்வூர் வியாபாரி

கள் எல்லோரையும் வரவழைக்கவேண்டும்; அதனால் ஒருபெரிய இரகசியம் வெளியாகும்” என்று கூறினாள். அரசன் உடனே தூதர்களை யனுப்பி வியாபாரிகளெல்லோரையும் வரவழைத்தான். அப்பொழுது தேவஸ்மிதை அரசனை நோக்கி, “மகாபிரபுவே! இந்த வியாபாரிகளுக்குள் என் அடிமைகள் நால்வரிருக்கிறார்கள்! அவர்களை நான் அழைத்துப் போக உத்தரவளிக்கவேண்டும்” என்றாள். அரசன் ஆச்சரியமடைந்து “உன் அடிமைகளை நீ காட்டு” எனவே, தேவஸ்மிதை முன் தன்னிடம் வந்து அவமான மடைந்த வியாபாரிகள் நால்வரையும் காட்டினாள். அது கண்ட எல்லோரும் “இவர்கள் நால்வரும் இவ்வூரில் பெரிய வியாபாரியின் புத்திரர்களாயிற்றே; இவர்கள் இவளுக்கு எப்படி யடிமையாவார் கள்” என்று கூற அரசனும் ஆச்சரிய மடைந்து தேவஸ்மிதையைப் பார்த்து உனக்கு அவர்கள் எப்போது எப்படி யடிமையாயினர்? என்று கேட்டான். தேவஸ்மிதை நகைத்து, “மகாபிரபுவே! என் பேச்சில் உங்களுக்கு நம்பிக்கையில்லை போலிருக்கிறது; ஆனால் ஒரு அடையாளந் தெரிவிக்கின்றேன். அப்போதாவது நம்புகிறீர் களா பார்ப்போம்” என்று கூறி, “பிரபுவே! இவர்கள் நால்வருடைய நெற்றியிலும் நாய்க்காலின் அடையாள மிருக்கும் பாருங்கள். அது தான் என் அடிமைக்கடையாளம்” என்றாள். அரசன் உடனே அவர்கள் நால்வருடைய நெற்றியையும் பரிசோதிக்கச் செய்து பார்க்கையில் அவ்வாறே யிருக்கக் கண்டு பெரும் வியப்படைந்து தேவஸ்மிதையை அதன் காரணமென்னவென்று வினவினான்.

தேவஸ்மிதை நடந்த வரலாற்றை ஆதியோடந்தமாய்க் கூறினாள். யாவரும் நகைத்தார்கள். அரசன் இவர்கள் உண்மையில் உன் அடிமைகள் தான்; தடையில்லை யென்று கூறி அவர்களுக்குத் தக்க தண்டனை விதித்ததுமன்றி தேவஸ்மிதையின் சாமர்த்தியத் திற்கு மெச்சி அவளுக்கு நல்ல வெகுமதி யளித்தான்.

பிறகு தேவஸ்மிதை தன் கணவனுடனும் அரசனால் பரிசாகக் கொடுக்கப்பட்ட திரவியத்துடனும் எல்லோராலும் பூசிக்கப் பட்டுத் தன்னுடைய நகரமாகிய தாம்பரலிப்திக்கு வந்து சேர்ந் தாள். பிறகு குஹஸேனனும் தேவஸ்மிதையும் ஒருவரை விட்டு ஒருவர் பிரியாமல் சுகமாக வாழ்ந்து வந்தார்கள்.

தேவ! இவ்வாறு நல்ல குலத்துதித்த பெண்கள் பரிசுத்தமும் தீரமுமான நடத்தையால் பதியை ஆபத்திலிருந்தும் காத்து வருவதுமன்றித் தங்கள் நாயகனையன்றி வேறெதையும் சிந்தியாது அவர்களுக்குப் பணிவிடை புரிந்து வருகிறார்கள்.

இங்ஙனம் இக்கதையை வாசவதத்தை வசந்தன் முகமாகக் கேட்டு தந்தையின் வீட்டைவிட்டு நூதனமாகப் பிரிந்தவளாயினும் வெட்கமாகிய வீட்டையடைந்து, பதியாகிய உதயனனிடம் அளவிறந்த அன்புசெலுத்தி வந்தாள்.

# ஆறாவது தரங்கம்.

விந்திய மலைச் சாரலிலிருந்து வரும் உதயனனிடம் சண்டமஹாஸேனனுடைய ப்ரதீஹாரன் வந்தான். அவன் உதயனனை வணங்கி, "மன்ன! வாசவதத்தையைத் தாங்களழைத்து வந்தது உசிதமென்றும், அதற்காகத்தான் சண்டமஹாஸேனராஜன் தங்களை அங்கு அழைத்துச் சென்றதாகவும், ஆனல் தாங்கள் அவர் கருத்தைத் தெரிந்துகொள்ளாது அவசரப்பட்டு வாசவதத்தையை யழைத்துவந்து விட்டதைப் பற்றித் தாம் வருத்தப்படுவதாகவும், ஆயினும் சாஸ்திரவிதியை அநுசரியாது விவாகம் நடவாதிருக்கச் சற்றுத் தாமதிக்க வேண்டுமென்றும், தங்களிடம் தெரிவிக்க என்னை யனுப்பினர். அன்றியும் சீக்கிரமாகத் தமது குமாரன் கோபாலகனை இங்கு அனுப்பி விவாகத்தை இங்கேயே விமரிசையாகச் செய்விப்பதாகவும் தெரிவிக்கக் கட்டளையிட்டனர். இந்தச் செய்தியை வாஸவதத்தைக்கும் சொல்லவேண்டும்" என்று கூறினன்.

பின்னர் உதயனன் சந்தோஷமடைந்து தன் நகரமாகிய கௌசாம்பி நகரம் செல்ல மனங்கொண்டு சண்டமஹாஸேனனிடமிருந்து வந்த ப்ரதீஹாரனையும் தன் நண்பனான புளிந்தனையும் பார்த்து, "நீங்களிருவரும் கோபாலகன் வரும் வரையிலும் இங்கே

யிருங்கள். நான் கௌசாம்பி நகரம் செல்கிறேன். பிறகு நீங்கள் அவனுடன் கௌசாம்பி நகரம் வந்து சேருங்கள்" என்று கூறி அவர்களிருவரையும் அங்கேயே யிருக்கும்படி செய்தான்.

மறுநாள் விந்திய மலையின் பூன் பாகங்கள் அரசனிடத்துக் கொண்ட அன்பால் கூடவே செல்கின்றன என்று எண்ணத்தக்க பெரிய யானைகளுடனும், வந்திகள் ஸ்தோத்திரஞ் செய்கிறார்களென்று சொல்லும்படி குளம்புகளால் புவியில் சத்தஞ்செய்யும் பெரிய பெரிய குதிரைகளுடனும், இறக்கைகளுடன் கூடிய மலைகள் பிரகாசிக்கின்றன என்று இந்திரன் சந்தேகிக்கும்படி புழுதிகளை ஆகாயமார்க்கம் வரையில் எழுப்பும் சேனைகள் சூழவும், உதயசேனன் வாசவதத்தையுடன் தன்னகரத்திற்குப் பிரயாணமானான். பிறகு மூன்றுவதுநாள் கௌசாம்பி நகரத்திற்குள் பிரவேசித்தான். அப்பொழுது அந்நகரத்து ஜனங்களெல்லாரும் வழியிலேயே எதிர்கொண்டு உதயனனை வரவேற்றனர். அந்நகரத்து ஸ்திரீகளெல்லாரும் மகிழ்வுற்று மங்கள ஸ்நானம் செய்யவும் அலங்கரித்துக் கொள்ளவும் யத்தனித்தனர். அந்நகரமானது, வெகுநாள் வரையில் தன் பதியைவிட்டுப் பிரிந்த ஸ்திரீ மீண்டும் தன் பதியை யடைந்தபோது அடையும் மகிழ்ச்சியை யடைந்தது போல் விளங்கிற்று. மின்னலுடன் கூடிய மேகக் கூட்டங்களைப் பார்த்த மயில்களைப் போல் அந்நகரத்தார் யாவரும் சோகம் நீங்கப்பெற்றனர். அச்சமயம் சத்தம் விட்டு மேன்மாடியின் மீதிருந்த ஸ்திரீகள், ஆகாய கங்கையின் கரைமீது மலர்ந்திருக்கும் தாமரை மலரின் விலாஸமுடைய தங்களுடைய முகங்களால் ஆகாய மார்க்கத்தை மறைத்தனர். இந்த வைபவத்துடன் உதயனன வாஸவதத்தையோடு அரண்மனையிற் பிரவேசித்தனன். இந்த உதயனனைக் கண்டு வணங்கும் பொருட்டு வந்து குழுமியிருந்த அரசர்களாலும் மாகதர்களால் கானஞ் செய்யப்படும் மங்கள கோஷங்களாலும் விளங்கிய அரண்மனையானது அப்பொழுது நித்திரையினின்றும் எழுந்தது போற் காணப்பட்டது.

இங்ஙனம் உதயனன் கௌசாம்பியை யடைந்த இரண்டாவது நாள் கோபாலகன், புளிந்தன், ப்ரதீஹாரன் மூவரும் வந்து சேர்ந்தார்கள். உதயனன் கோபாலகனை யெதிர்கொண்டழைத்து மிகு

தியும் உபசரித்தனன். வாசவதத்தை மகிழ்ச்சியால் மலர்ந்த கண்களுடன் தன்னுடைய சகோதரனை ஆநந்தமே உருக்கொண்டு வந்து வரவேற்றதுபோல் வரவேற்று வணங்கி யுபசரித்தாள். அச்சமயம் அந்த வாஸவதத்தையின் கண்களிலிருந்து பெருகிய ஆநந்த பாஷ்பம், அவள் தன்னுடைய சகோதரனைக் காணும்போது வெட்கப்பட்டிருக்கக் கண்களை மறைத்ததுபோற் காணப்பட்டது. தந்தை சொல்லியனுப்பிய வசனங்களைக் கேட்டுப் பரமானந்தமடைந்தாள்.

அப்பால் மறுநாளை நல்லவேளையில் உதயணனுக்கும் வாசவதத்தைக்கும் விவாக மகோற்சவம் நடந்தது. அதில் கோபாலகன் விதிப்படி உதயனனை வரணம் செய்தான். பிறகு உதயனன் வாசவதத்தையின் அன்பாகிய கொடியினின்று புதுவதாகக் கிளம்பிய ஒளிபொருந்திய துளிர்போன்ற கையைப் பிடித்தான். கணவனுடைய கரமலர் தன் கையிற் பட்டதும் கண்களிலிருந்து ஆநந்த பாஷ்பமுண்டாகிக் கண்களை மறைத்தது. தேகத்தில் ஒருநடுக்கமுண்டாயிற்று. புளகாங்கிதமடைந்தாள். மலர்களைப் பாணமாகவுடைய மன்மதனால் அடிபட்ட அந்த வாசவதத்தை மோஹனம் வாயவ்யம், வாருணம் இவ்வகையான பாணங்களால் ஓயாமல் அடிபட்டவள்போல் அந்த க்ஷணத்தில் காணப்பட்டாள். கோபாலகன் தந்த இரத்தினங்களாலும் ஏனைய அரசர்கள் காணிக்கையாகத் தந்த திரவியங்களாலும் பொக்கிஷம் நிறையப் பெற்ற உதயனன் மன்னர்கள் மன்னன் என்பதை உண்மையாகச் செய்துகொண்டான். பிறகு தம்பதிகள் ஊர்வலம் வந்து அரமனை சென்றார்கள். இங்கே உதயனன் கோபாலகனுக்கும் புளிந்தனுக்கும் தக்க சம்மானஞ்செய்தான். பின்பு உதயனன் அரசர்களுக்கும் நகரத்து ஜனங்களுக்கும் சம்மானஞ் செய்வதற்கு யௌகந்தராயணனுக்கும் ருமண்வானுக்கும் உத்தரவிட்டான். யௌகந்தராயணன் ருமண்வானை நோக்கி, அரசன் நம்மிருவருக்கும் கஷ்டமான காரியத்தைச் செய்யக் கட்டளை யிட்டிருக்கின்றனர். ஏனெனில் ஜனங்களுடைய மனதைத் திருப்திப்படுத்துவது சிரமமல்லவா? சிறுவனாயினும் திருப்தியடையாவிடில் கோபங்கொள்வான். இது நிச்சயம்! { ஆகையால் ஓ நண்ப! பாலவினஷ்டகன் என்பவனுடைய சரித்திரத்தைக் கேள்.

ருத்ரசர்மன் என்று பிராம்மணனொருவனிருந்தான். இல்லற தர்மத்தை விரும்பிய அவ்வந்தணனுக்கு இரண்டு பத்தினிகளிருந்தார்கள். அவ்விருவரில் ஒருத்தி புத்திரனைப் பெற்று மரணமடைந்தாள். மரணமடைந்தவளுடைய குழந்தையை ருத்ரசர்மன் மற்றொருத்தியிடம் கொடுத்தான். அவள் அப்பிள்ளையிடம் பொறாமைகொண்டு அதற்குக் கடினமான ஆகாரங்களை யூட்டிக் கருத்தில்லாமல் வளர்த்து வந்தாள். அதைக் கண்ட ருத்ரசர்மன் அவளைப் பார்த்து ஏன் தாயில்லாத குழந்தையினிடம் அலக்ஷியமாயிருக்கின்றாய்? என்று கேட்டான். அவள் நான் அன்போடுதான் வளர்த்து வருகிறேன்; குழந்தை எக்காரணத்தாலோ இவ்விதமாகிறது; அதற்கு நானென்ன செய்வேன். என்றாள். அதைக் கேட்ட ருத்ரசர்மன் இக்குழந்தை இயற்கையிலேயே யிப்படித்தான் போலிருக்கிறதென் றெண்ணினான். வஞ்சகத்துடன் கூடிய மாதர்களுடைய பேச்சுகளை எவன் தான் பொய்யாக எண்ணுவான். இங்ஙனஞ் சிறுவயதிலேயே தீமையடைந்த அந்தச் சிறுவனுக்குப் பாலவிநஷ்டகன் என்று பெயருண்டாயிற்று. அவன் தன் மாற்றாந்தாய் தன்னைத் துன்பப்படுத்துவது பொறுக்கொணாது இவளுக்கு ஏதேனும் தீங்கு செய்யவேண்டுமெனத் தீர்மானித்தான். அவன் ஐந்து வயதிலேயே புத்தியிற் பெரியவனாகவிருந்தான்.

பின்னர் அரசனது அரமனையிலிருந்து வந்த தன் பிதாவைப் பார்த்து அந்தப் பாலவிநஷ்டகன் "அப்பா! எனக்கு உன்னைத் தவிர வேறு ஒரு அப்பா விருக்கிறார்" என்றான். அதைக்கேட்ட ருத்ரசர்மன் "செய்! முட்டாளே! பேத்தாதே" என்று கூறிச் சினந்தான். பிறகு அடிக்கடி அவ்வாறே சொல்லிவந்தான் பாலவிநஷ்டகன். அதனால் ருத்ரசர்மன் தன் மனைவி யாரேனும் ஒரு சோரநாயகனுடன் சிநேகம் செய்து வரவேண்டுமென நிச்சயித்து அவள் முகம் பார்த்துப் பேசாமலிருந்து வந்தான்.

இப்படித் தன் கணவன் தன்னோடு பேசாமலிருப்பதற்குக் காரணம் பாலவிநஷ்டகனுடைய சேஷ்டையாகத் தானிருக்கவேண்டுமென்று தெரிந்துகொண்டு ருத்ரசர்மாவின் மனைவி, ஒருநாள் பாலவிநஷ்டகனை யழைத்து அவனுக்கு எண்ணெய் தேய்த்து ஸ்நானஞ் செய்வித்து ஆடையுடுத்து ஆபரணங்களணிந்து நல்ல போஜனமளித்துத் தன் மடிமீதுட்காரவைத்துக் கொண்டு "அப்பா குழந்

தாய்! ஏன் இரண்டுமூன்று நாளாய் உன் அப்பா என்மீது கோப
மாக விருக்கிறார்? நீ அவரிடம் என்மீது ஏதேனும் புகார் சொல்லிக்
கொடுத்தாயோ" என்று கேட்டாள். அதற்கு அந்த பாலவிநஷ்ட
கன், "ஆமாம்! நான்தான் சொல்லிக்கொடுத்தேன்; நீயேன் என்மே
லில் எறிந்து விழுந்து அடிக்கடி கோபிக்கிறாய்? இனிமேலாவது
பிள்ளையாயிற்றே யென்கிற தயை காட்டாதிருந்தாயோ இன்னும்
சொல்லிக்கொடுத்து அப்பாவுக்கு உன்மேல் மிகுதியான கோபமுண்
டாக்குவேன்" என்றான்.

இதைக் கேட்ட அவன் மாற்றாந்தாய், அப்பா பாலவிநஷ்டகா!
"நான் இனிமேலுனக்கு எந்தக் கெடுதியும் செய்வதில்லை; இது சத்
தியம்; அப்பாவுக்கு என்னிடமிருக்கும் கோபந் தீரும்படி செய்"
என்று கூறிக் கெஞ்சிக் கேட்டுக்கொண்டாள். பிறகு பாலவிநஷ்ட
கன், தாயைப்பார்த்து, "அம்மா இன்றைக்கு அப்பா வெளியிலி
ருந்து வந்ததும் அவர் முகத்திற்கு நேரே நமது பணிவிடைக்காரி
களில் ஒருத்தி ஒரு கண்ணாடியைக் காட்டட்டும். பிறகு நான் எப்படி
யாவது அவர் கோபத்தைத் தணிக்கிறேன்" என்றான். தாயார் அவ்
வாறே செய்யும்படி செய்கின்றேன் என்று கூறி உடனே தன் வேலைக்
காரி ஒருத்திக்கு அவ்விதஞ் செய்வதற்குத் தரவிட்டாள்.

பிறகு ருத்ரசர்மா வெளியிலிருந்து வந்தான். அவனுக்கு
முன்னே தன் எஜமானி உத்தரவுப்படி ஒரு வேலைக்காரி ஒரு
கண்ணாடியைப் பிடித்துக்கொண்டு நின்றாள். அப்போது ருத்ரசர்
மாவின் அருகேயிருந்த பாலவிநஷ்டகன் அப்பா! "எனக்கு இன்
னொரு அப்பாவிருப்பதாகச் சொன்னேனே, அவர் யார் தெரியுமா?
இதோ பார் இங்கிருக்கின்றார்; நான் சொன்னபோது என்னை
முட்டாளைப் போல என்று திட்டினீர்களே" என்று கூறிக் கண்ணாடி
யில் தோன்றிய தன் தந்தையின் பிரதிபிம்பத்தைக் காட்டினான்.
இதைக் கேட்டதும் ருத்ரசர்மா மிகவும் மகிழ்ச்சி யடைந்து உண்
மை யுணர்ந்து தன் மனைவியின்மீது தப்பபிப்பிராயப்பட்டுக் கோபங்
கொண்டது தவறென்று நினைத்து அவளிடம் அன்றுமுதல்
முந்திய அன்பினும் பதின்மடங்கதிகமான அன்பு பாராட்டி வந்தான்.
ஆதலால் சிறுவனேயாயினும் அவன் மனங்கோணுமேயாகில் கோ
டங் கொள்ளாமை யென்பது திண்ணம். ஆகையால் ஜனங்களெல்லோரை

யும் நன்றாய் உபசரிக்கவேண்டும் என்றான் யௌகந்தராயணன். பிறகு இருவருமாகச் சென்று எல்லோருக்கும் தக்கபடி சம்மானஞ் செய்தனர். சம்மானம் பெற்றவர்கள் ஒவ்வொருவரும் யௌகந்தராயணன், ருமண்வான் இருவரையும் மனதார வாழ்த்தித் தத்தம் கிருகஞ் சென்றனர்.

பிறகு யௌகந்தராயணன், ருமண்வான், வஸந்தகன் இவர்களுக்கு உதயனன் தன் கையாலேயே வஸ்திரம், ஆபரணம், வாஹனம் முதலியவற்றை வெறுப்புற வளித்தான். இவையன்றி கிராமங்களையும் அவரவர்களுக்குத் தக்கபடி பரிசளித்தான். பிறகு உதயனன் தான வாஸவதத்தையை யடைந்ததே தன் மனோரதங்களின் பலனாகக் கருதினான். வாஸவதத்தைக்கும் உதயனுக்கும் பழக்கம் எவ்வளக்கெவ்வளவு மிகுதியாயிற்றோ அவ்வளவுக்கவ்வளவு புதிதுபுதிதாக அன்பும் பெருகிவந்தது.

இவர்களிப்படியிருந்து வருகையில் தந்தையின் ஆக்ஞைபெற்ற கோபாலகன் அந்நகரத்தை விட்டுப் பிரயாணமானான். அப்பொழுது உதயனன் தன் மைத்துனனை யன்போடு வழியனுப்பிவிட்டு இன்னொருமுறை சீக்கிரமாக வரவேண்டுமென்றுபசரித் தனுப்பினான்.

அப்பால் சிலகாலஞ் சென்றதும் கோபாலகன் தன்னுடைய புயவலுவால் ஒரு ராஜனை ஜயித்து அவனுடைய புத்திரியாகிய பந்துமதி என்பவளைச் சிறைப்படுத்திக் கொண்டுவந்து தன்சகோதரி வாசவதத்தைக்கு அவளை ஸ்தரீதனமாக அனுப்பினான். அவளை வாசவதத்தை மிகவும் அன்போடு நேசித்துத் தன்னுயிரினும் அரிய பாக்கியமாகக் கொண்டாள். இப்பொழுது ஒரு சமயம் உதயனனும் வசந்தனும் உத்தியானவனத்திற்கு உலாத்தச் சென்று சற்று உலாத்திய பின்னர் அங்கிருந்த லதாகிருகத்தில் வீற்றிருந்தார்கள்.

அப்பொழுது அங்கு யாது காரணமாகவோ வந்த பந்துமதியை அரசன் கண்டு அவள்மேல் ஆசைகொண்டு அவளை அங்கேயே காந்தர்வ விவாகஞ் செய்துகொண்டான். இச்செய்தி வாசவதத்தை கேட்டதும் அவள் இந்த விவாகம் வசந்தனாலேற்பட்டிருக்கிறது என்று அறிந்து முதலில் அவனைச் சிறைப்படுத்தினாள். பிறகு அரசனிடமும் பேசாது மிகுந்த கோபத்துடனிருந்தாள்.

பின்னர் உதயனன் வாசவதத்தையின் தந்தையின் இருகத்தி லிருந்து வந்த ஸாங்கிருத்தியாயினி யென்னும் பெயருடைய சன்னியாசினியான வாஸவதத்தையின் தோழியிடம் சென்று முறையிட்டான். அவள் வாஸவதத்தையைச் சமாதானப் படுத்தினாள். பந்துமதியை வாசவதத்தையிடம் கொடுக்கும்படி அரசனுக்குத் தெரிவித்தாள். அரசன் அவ்வாறே பந்துமதியை வாஸவதத்தையிடம் அனுப்ப, அவளை வாஸவதத்தை மீண்டும் அரசனிடம் தானே மனமுவந்து ஒப்புவித்தாள். பதிவிருதைகளின் மனம் மகாபாவனதல்லவா? பின்னர் வாஸவதத்தை வசந்தகனைச் சிறையினின்றும் விடுவித்தாள். வசந்தகன் அந்தக்ஷணமே வாஸவதத்தையின் முன்னே வந்து மந்தஹாஸம் செய்து, "தேவி! தமக்கு அபராதம் செய்தவள் பந்துமதியல்லவா? நானென்ன தங்களுக்குக் குற்றஞ் செய்தேன். ஸர்ப்பத்தின் மீது கோபங்கொண்டவன் இருதலைப் பாம்பை யடிப்பது போலன்றோ விருக்கிறது"? என்றான்.

இதைக் கேட்டதும் வாஸவதத்தை நகைத்து, எங்கே; நீ கூறிய உபமானத்தைப் பற்றி விஸ்தாரமாகத் தெரிவி பார்ப்போம் என்றாள். வசந்தகன், சொல்லுகிறான்.

முன்னொரு காலத்தில் ருரு என்னும் பெயருடைய ஒரு முனிவர் குமாரன் தான் தனியே சஞ்சரித்துக் கொண்டிருக்கையில் மகா ரூபவதியாகிய ஒரு கன்னிகையைக் கண்டான். அக்கன்னிகை மேனகை யென்ற அப்ஸர ஸ்திரீயிடம் ஒரு வித்தியாதரனுக்குப் பிறந்தவள். அக்கன்னிகையை ஸ்தூலகேசர் என்ற முனிவர் தமதாசிரமத்தில் வளர்த்து வந்தார். அவளுக்கு ப்ரமத்வரை யென்பது பெயர். ருருவின் மனதை அவள் கொள்ளை கொண்டாள். ருரு அவளை எவ்விதத்திலேனும் அடையவேண்டுமென்கிற விருப்பங்கொண்டு அவளை வளர்த்துவரும் ஸ்தூலகேச முனிவரிடம் சென்று யாசித்தான். அந்த ஸ்தூலகேச முனிவர் அந்த ருருவின் விருப்பத்திற் கிணங்கிப் ப்ரமத்வரையைக் கொடுக்க இசைந்தனர்.

பின்னர் விவாக சமயமும் நெருங்கிற்று. அப்பொழுது ஆசிரமத்திற்கு வெளியே வந்த ப்ரமத்வரையை ஒரு ஸர்ப்பம் தீண்டிற்று. அதுகண்ட ருரு மிக்க துக்கங்கொண்டான். அச்சமயம் ஆகாயத்திலிருந்து "இந்த ப்ரமத்வரையை பிழைக்கும்படி செய்துகொள்"

என்று ஒரு வாக்குண்டாயிற்று. அதைக்கேட்ட ருரு அப்பொழுதே அந்தக் கன்னிகைக்குத் தன் ஆயுளில் பாதியை யளித்தனன் ப்ரமத்வரை உடனே உயிர்பெற்றெழுந்தாள். பின்னர் ருரு மனமகிழ்ச்சியோடு அவளை விவாகம் செய்துகொண்டனன். பிறகு அந்த ருரு எந்த விடத்தில் சர்ப்பத்தைக் கண்டாலும் அந்த ஸர்ப்பத்தைக் கொன்று வந்தான். இப்படியிருந்து வருகையில், ஒரு சமயம் ஒரு இருதலைப் பாம்பைக் கண்டான். அந்தப் பாம்பையும் அடிக்க யத்தனித்தான். அது ருருவைப் பார்த்து, "ஸர்ப்பங்களிடம் கோபங்கொண்டு ஏன் இருதலைப் பாம்புகளை யடிக்கின்றீர்? ஸர்ப்பங்களுக்கு விஷமுண்டு, இருதலைப் பாம்பிற்கு விஷங்கிடையாது. அப்படியிருக்கையில் ஏன் அடிக்கவேண்டு" மென்று மானிட வாக்கினால் கேட்டது. ருரு ஆச்சரியமடைந்து, அந்தப் பாம்பைப் பார்த்து "நீயார்?" என்று கேட்டான். அதற்கு அந்தப் பாம்பு "முனிவரே! நான் ரிஷி சாபத்தால் பாம்பாக விருக்கிறேன். உம்முடன் சமவாதம் ஏற்படும் வரையில் அந்தச் சாபத்தின் சம்பந்தம் எனக்கிருக்கும். பிறகு விடுபட்டுப் போமாதலால் இனி நான் விடுபட்டேன்" என்றுரைத்தது. இதன் பிறகு ருரு அந்தப் பாம்புகளைக் கொல்வதை யொழித்தான். தேவி! "அதனால் தங்களிடம் அந்த உபமானத்தை இச்சமயம் எடுத்துக் கூறினேன்" என்று வசந்தகன் கூறி, மகிழ்ந்தனன். வாஸவதத்தையும் அவனிடம் சந்தோஷங் கொண்டாள்.

இப்படிப்பட்ட வாஸவதத்தையினிடம் அன்புவைத்து அவளோடு இல்லறம் நடத்திச் சுகங்களை யனுபவித்து வந்தான் உதயனன். அவன், தன்னிடம் அன்பு பாராட்டி வந்தவனும் இனிமையாகச் சம்பாஷிப்பவனுமாகிய வசந்தகனுடன் ஆநந்தமாகக் காலங் கழித்தான்.

---

கதாமுக லம்பகம்.

முற்றிற்று.

# லாவாணக லம்பகம்.

## முதலாவது தரங்கம்.

உலகத்தைச் சிருஷ்டி செய்யுமுன்னர் அக்காரியம் விக்னமின்றி நிறைவேறும் பொருட்டு பிர்மதேவர் எவருடைய அநுக்கிரகத்தைப் பிரார்த்தித்தனரோ அந்த விக்னேசுவரருக்கு நமஸ்காரம். எவனுடைய ஆக்ஞைபால் பரமசிவன் பிரியமான பார்வதியை ஆலிங்கனஞ் செய்துகொண்டு பிரபஞ்சத்தை நடுங்கச் செய்கிறாரோ அந்த மன்மதன் ஜயமடைகின்றான்.

இங்ஙனம் வாஸவதத்தையை யடைந்த அந்த உதயனன் தன் மனைவியிடம் மிகுந்த அன்பு பாராட்டி அவளிட்டதே சட்டமாக நடந்து வந்தான். மகா மந்திரியாகிய யௌகந்தராயணன், சேனாபதியாகிய ருமண்வான் இருவரும் இராஜ்ய பாரத்தை வகித்துப் பரிபாலித்து வந்தார்கள்.

இப்படி யிருந்து வருகையில் ஒரு சமயம் யௌகந்தராயணன் ருமண்வானைத் தன் வீட்டிற்கழைத்துவந்து மிகுந்த கவலையுடன் அவனைப் பார்த்து, இந்த உதயனன் பாண்டவர்களின் வம்சத்திலுதித்தவன். பரம்பரையாக இந்த பூமி முழுதும் அவர்கட்கே உரியது. அவர்கள் வம்சத்திற்குப் பிரதான நகரம் அஸ்தினபுரம். இந்த உதயனன் தனக்குரிய பூமிமுழுதையும் ஜயங்கொள்ள விரும்பாது சும்மா விருக்கின்றான். அன்றியும் ஸ்திரீகளிடமும் மதுபானத்திலும் வேட்டையாடுவதிலும் ஆவல்கொண்டு கவலைபற்றவனாக விருக்கிறான். நாமே கவலைகளனைத்தையும் வகிக்கும்படியா யிருக்கிறது. ஆகையால் இந்த அரசன் அவனுடைய குலமுறையாக வந்துகொண்டிருக்கும் பூமி முழுவதையும் அடைவதற்குத் தக்க மார்க்கத்தை நாம் தேடவேண்டும். அவ்விதம் நாம் செய்வோமேயாயின் அரசனுக்கு நம்மீது மிகுந்த பிரியமுண்டாகும் நமது யோசனையும் நிறைவேறும். மனிதன் தன் அறிவால் எதையும் சாதிக்கக்கூடுமன்றோ? அதற்கு ஒரு கதை கூறுகின்றேன் கேள் என்று கூறுகிறான்.

முன் ஒரு காலத்தில் மகாசேனன் என்றொரு அரசன் இருந் தான். அவ்வரசனை மிகவும் பலசாலியாகிய மற்றொரு அரசன் எதிர் த்தான். அப்பொழுது மகாசேனனுடைய மந்திரிகள் தமது பக் கம் அபஜெப முண்டாகுமென அறிந்து தங்களுடைய அரசனை எதிரிக்கு வணங்கிப் போகும்படி செய்தார்கள். அந்த மகாசேன னும் அவ்விதமே சத்துருவை முதலில் வணங்கினானாயினும் மானியா கையால் மிகுந்த வருத்தமடைந்தான். நாமேன் சத்துருவுக்கு வணங் கினோமெனச் சிந்திக்கலானான். அவ்வரசனுக்கு அதனால் வயிற்றில் குன்மவியாதி உண்டாயிற்று. கடைசியில் அவன் அதே வியாதியால் மரணம் அடையும் நிலைமைக்கு வந்துவிட்டான்.

அது கண்ட மகா புத்திசாலியாகிய ஒரு வைத்தியன், இந்த குன்மரோகம் ஔஷதங்களால் தீரத்தக்கதல்ல என்று தீர்மானித்தி ருந்த் அரசனிடம் வந்து "பிரபுவே? தேவியாகிய தங்கள் மனைவி காலஞ்சென்றனள்" என்று பொய்யாகச் சொன்னான். அதைக் கேட் டதும் அரசன் பூமியில் விழுந்து துக்கித்தான். அப்பொழுது அவ்வ ரசனுக்குண்டான வலுவாகிய துக்கத்தின் படபடப்பால் அந்தகுன் மரோகமாது னதானே தெரித்துவிட்டது.

பிறகு அரசன் அந்த வியாதி யென்பது சிறிதுமில்லாமல் சுக மடைந்து தன் மனைவியோடு சுகமாக இல்லறம் நடத்திவந்தான். பிறகு தன் சத்துருக்களையும் ஜெயித்தான். ஆகையால் அந்த வைத் தியன் எப்படித் தன் அறிவால் அரசனுக்கு நன்மையைச் செய்தா னே அவ்வாறே நாமும் நமது அரசனுக்கு நமது புத்தியால் சௌக் கியத்தைத் தேடவேண்டும். அதாவது இந்த பூமியை நமது அரச னுக்குச் சொந்தமாக்கவேண்டும். இது சம்பந்தமாய் மகததேசத் தரசனாகிய ப்ரத்யோதன் என்பவனே பகைவனுசுக் கிளம்புவான். அவனுக்குத்தக்க பக்கபலமுண்டு. அவனைச் சிநேகஞ் செய்துகொள் ளவேண்டும். அதற்காக அவன் பெண் பத்பாவதி யென்பவளை நமது உதயன மகாராஜனுக்குக் கொடுக்கும்படி கேட்போம். இதற் குமுன் நாம் செய்யவேண்டிய தொன்றுண்டு. அதாவது வாஸவதத் தையை ஓரிடத்தில் மறைந்திருக்கச் செய்துவிட்டு அவளிருக்கும் கிருகத்தில் தீயைவைத்துக் கொளுத்திவிட்டு அவள் அதிலகப்பட்டு இறந்துவிட்டதாக எங்குந் தெரிவித்துவிட வேண்டுவதவசியம். இப்

படிச் செய்யாவிடில் மகதாதிபன் தன் குமாரத்தியைக் கொடுக்க இசையான். நான் முன்னொரு சமயம் மகதாதிபனிடம் சென்று நமதரசனுக்குப் பத்மாவதியைக் கொடுக்கும்படி கேட்டேன். ப்ரத்யோதன் "யௌகந்தராயணா! என் உயிரினும் பெரிய பத்மாவதியை உங்களரசனுக்குக் கொடுக்கமாட்டேன். அவன் தான் ஏற்கனவே மணந்துள்ள வாசவதத்தையினிடம் மிகுந்த அன்புவைத்திருக்கிறான்" என்று சொன்னதுண்டு. இதுவன்றி நமது அரசனும் வாசவதத்தையிருக்கும்போது மற்றொரு மாதை மணக்கவிசையான். வாசவதத்தை தீயிலகப்பட்டிறந்துவிட்டாள் என்ற சங்கதி எங்கும் பரவிவிட்டால், யாவும் முடிவுபெறும். இந்த விவாகம் நிறைவேறுமாயின் மகதாதிபதி நமதரசனுக்கு மாமனாய் விடுவானாதலால் அவனுக்கு நம்மீது பகை ஏற்படாது. சகாயஞ் செய்யவே பார்ப்பான். ஆகையால் கீழ்த்திசையை ஜயிக்கும்பொருட்டுச் செல்வோம். பின்னர் முறையே மற்றத்திசைகளை ஜயிப்போம். நாமிங்ஙன முயற்சிப்போமாயின், அரசன் பூமி முழுதுக்குமுரியவனாவனென்பதிலையமில்லை. "இதைப்பற்றி ஆகாய வாக்கொன்று முன் உண்டாயிருக்கிறது" என்றான்.

மந்திரி யௌகந்தராயணன், இங்ஙனங் கூறியதும் ருமண்வான் "யௌகந்தராயணா! இந்தப் பத்மாவதியின் நிமித்தம் நாம் செய்ய யோசித்த யுக்தி ஒரு சமயம் நமக்கே கெடுதியைக் கொடுக்கத் தக்கதாக வந்து சம்பவிக்கும். அதைப்பற்றி யொன்று கூறுகின்றேன்.

கங்காநதிக்கரையில் மாகந்திகையென்னும் நகரமிருக்கின்றது; அங்கே முன் ஒரு துறவியிருந்தான். அவன் மௌன விருதமுடையவன். பிக்ஷையெடுத்துப் புசிப்பவன். அவனை அநேக துறவிகள் சூழ்ந்துகொண்டிருப்பர். அவன் எப்போதும் அவ்வூர் ஆலயத்தின் மடத்துக்குள்ளிருப்பன்; அவன் ஒரு சமயம் பிக்ஷக்காக ஒரு வியாபாரியின் வீடுசென்றான். அங்கே பிக்ஷயிடுவதற்காக அவ்வீட்டிலிருந்து வெளியே வந்த ஒரு கன்னிகையைக் கண்டான். அந்தக் கன்னிகை அதியற்புதமான ரூபமுடையவள். அவளைக் கண்டதுறவி அவள் தந்தை செவியிற்படும்படி ஆ! ஆ!! கஷ்டம்! கஷ்டம்!! என்று கூறிப் பிக்ஷயை வாங்கிக்கொண்டு தன்னிருப்பிடம் சென்றான். பின்னர் அந்த வியாபாரி துறவியிடம் வந்து ஆச்சரியத்துடன் அவனை நோக்கி, "ஏன் இப்பொழுது அகாரண

மாக மௌன விருதத்தைவிட்டீர்?" என்று கேட்டான். துறவி "அப்பா! உமது பெண் துர் அதிர்ஷ்டமுடையவள். எப்பொழுது இந்தப் பெண்ணுக்கு மணவினை முடிகிறதோ அப்பொழுதே உனக்கு உன் பிள்ளை மனைவிகளுடன் மரணமுண்டாகும். இது நிச்சயம். அப்படிப்பட்ட கன்னிகையைக் கண்ட எனக்குப் பெருந் துக்கமுண்டானமையால் ஆ கஷ்டம்! கஷ்டம்!! என்று எனது மௌன விருதத்தையும் பாராது கூறினேன். நீ யெனக்குப் பக்தனன்றோ? அதை நிவர்த்திக்க ஒரு யுக்தி சொல்லுகிறேன் கேள். இன்றிரவே உன் பெண்ணை ஒரு பெரிய பெட்டிக்குள்ளிருக்கச் சொல்லி அந்தப் பெட்டியில் ஒரு தீபத்தை வைத்து அதைக் கங்கையில் விட்டுவிடு" என்றான். இது வஞ்சகமென்பதை யுணராத அந்த வியாபாரி "சுவாமி! அவ்விதமே செய்கிறேன்; தங்கள் கிருபை யிருக்கவேண்டும்" என்று கூறி வீடுவந்து அன்றிரவே பெண்ணைப் பெட்டியில் வைத்து அதன்மீது விளக்கிட்டுக் கங்கையிற் கொண்டுபோய் மிதக்கவிட்டு ஒருவரையும் அறியாமல் வீடுவந்து சேர்ந்தான். மனதில் பயமடைந்தவர்கள் யோசிப்பது முண்டோ?

பின்னர் அச்செய்தியறிந்த துறவி தன் அருகேயிருந்த சிலரை யழைத்து நீங்கள் இப்பொழுது கங்காநதிக்குச் சென்று பாருங்கள்! அங்கே ஜலத்தில் ஒரு பெட்டி அதன்மேல் ஒரு தீபத்தோடு மிதந்து கொண்டு போகும். அதை இரகசியமாக இங்கே எடுத்து வாருங்கள். அந்தப் பெட்டியினுள் என்ன சத்தங் கேட்டாலும் அதைத் திறந்து பார்க்காதேயுங்கள் என்றுசொல்லியனுப்பினான். துறவியைச் சார்ந்தவர்கள் கங்கையையடையுமுன்னரே அங்கொரு ராஜகுமாரன் வந்து கங்கையில் பெட்டி ஒரு தீபத்தோடு மிதந்துசெல்வதைக் கண்டு அதைத் தன் ஆட்களை யேவிக் கொண்டுவரும்படி ஆஜ்ஞாபித்தான். அவர்கள் உடனே நதியில் நீந்திச் சென்று கொண்டுவந்தார்கள். அதை இராஜகுமாரன் உடனே திறந்துபார்த்தான். அதில் தன் மனதைக் கவரக்கூடிய பேரெழில் வாய்ந்த ஒருசிறுமி யிருக்கக் கண்டு அவள் மீது மோகமடைந்து அங்கேயே காந்தர்வ விவாகம் செய்து கொண்டான். பின் இராஜகுமாரன் உடனேஒரு வானரத்தைப் பிடித்து வரச்செய்து அதை அந்தப் பெட்டியில்விட்டு மூடி அதன் மேல் முன்போல் தீபமெரியும்படி செய்து கங்கையில் மிதந்து போகவிட்டு அக்கன்னிகையுடன் தன் அரண்மனை திரும்பினான்.

பிறகு அந்தத் துறவியின் மாணாக்கர்கள் கங்கைக்கு வந்துசேர்ந்து அங்கே தன் ஆசிரியர் குறித்தபடி பெட்டிமிதக்கக் கண்டு அதை வெகு சிரமப்பட்டு எடுத்துத் தூக்கிக்கொண்டு துறவியிடம் சென்றார்கள். துறவி அந்தப் பெட்டியைக் கண்டதும் மிகுந்த சந்தோஷங்கொண்டு மாணாக்கர்களைப்பார்த்து, நீங்களெல்லாம் இன்றிரவு முழுதுப் தனியே யிருக்கவேண்டும். நான் இந்தப் பெட்டியை வைத்துக்கொண்டு அதன் முன்னிலையில் ஜபம் செய்யவேண்டியதாயிருக்கின்றது என்று கூறினான். சீடர்கள் தங்கள் குருவின் வாக்கியத்தை மெய்யென நம்பி, அவ்விதமே வேறிடஞ் சென்றனர்.

பிறகு துறவி அந்தப் பெட்டியை சிரமப்பட்டு மேன்மாடிக்குத் தூக்கிச்சென்று அங்கு திறந்தான். அந்தப் பெட்டியிலிருந்த குரங்கு, அந்தத் துறவியின் அநியாயமே பிரத்தியக்ஷத்தில் தோன்றியதுபோல் வெளிப்பட்டு துறவியின்மேற் பாய்ந்து குற்றத்திற்குத் தக்க தண்டனை குரங்கு மறிந்துள்ள தென்றுசொல்லும்படி அவன் மூக்கையும் காதையும் பிய்த்து ரத்தம் பெருகும்படி செய்துவிட்டது. பிறகு துறவி மாடியிலிருந்து கீழே யிறங்கிவந்து தன்னிடத்தில் படுத்துக்கொண்டிருந்தான். மறுநாள் காலையில் அவனுடைய மாணவர்கள் வந்து பார்த்து தங்கள் ஆசிரியன் செய்த அறிவீனமான செய்கையை யறிந்து நகைத்தார்கள். பிறகு ஊராருமறிந்து நகைத்தார்கள். வியாபாரியும் தெரிந்து தான் அவன் பேச்சை நம்பி மோசம்போனதைக் குறித்து வருந்தியதுமன்றி அந்தமோசம் வெளிப்பட்டது பற்றிச் சந்தோஷமுமடைந்தான். அன்றித் தன் மகள் இராஜகுமாரனை யடைந்ததற்கு அளவிறந்த சந்தோஷமடைந்தான். கடைசியில் அந்தத் துறவி ஊராருடைய பரிகாசத்திற் கிடமாக விளங்கினான். ஆகையால் ஒரு காரியத்தைச் செய்ய யத்தனிப்பது பெரிதல்ல; அதை முடிப்பதுதான் பெரிது; இல்லாவிடில் வீண் பரிகாசத்திற் கிடமாகும். வாசவதத்தையை விட்டு அரசன் பிரிந்திருப்பது அசாத்தியமான காரியமாகும்" என்று ருமண்வான் கூறினான்.

யௌகந்தராயணன், நீ சொல்வது உண்மையே; ஆயினும் முயற்சி வீண்போகுமா? போகாதல்லவா? முயற்சி யில்லாதிருந்தால் காரிய சித்தி கிடைப்பது பரிதன்றோ? அரசன் சேவம் சாமி

யாயிருந்தால் ஏற்கனவே யுள்ளதும் போய்விடும். நாம் சிறந்த மந்திரிகளெனப் பெயர் பெற்றிருந்தோமாயினும் நாமும் வேறுவித மாகிவிடுவோம். நாம் அரசனைக் கௌரவப் படுத்துவதிலிருந்தும் அதிக்ரமித்து விடுவோம். ஒரு அரசனுக்கு அவன் ஸ்வாதீனத்திற்குட்பட்ட காரியஸித்தி பெறுவதற்கு அவன் அறிவே உபகரணமாகிறது. மந்திரிகளுக்கும் அவ்விதமே யாகும். மந்திரிகள் உற்சாக மில்லாதவர்களாயின் ராஜ்யலக்ஷ்மிக்குத் தர்ப்பணம் செய்து விடவேண்டியதுதான். வாசவதத்தையின் தந்தையாகிய சண்ட மகாஸேனனும் அவன் குமாரனும் அவன் மனைவியும் என் சொல்லைத் தட்டமாட்டார்கள். ஆகையால் அவர்களைப்பற்றி யோசிக்க வேண்டாம் என்றான்.

இங்ஙனம் கூறிய தீரர்கள் தீரரான யௌகந்தராயணனைப் பார்த்து பிரமாதமேற்படுமோ வென்ற பயத்துடன் "அறிவாளி யாயிருப்பினும் தன்னன்பிற்குரிய மனையாளைவிட்டுப் பிரிய நேரிடின் துன்பப்படாமலிரான். நமது உதயனனைப்பற்றி கேட்கவேண்டுமா? இது சம்பந்தமாக நான் ஒரு கதை கூறுகின்றேன் கேள்-

சிராவஸ்தி என்ற நகரத்தில் தேவசேனனென்ற அரசன் ஒருவன் இருந்தான். அவன் அறிவாளிகளுக்குள் சிறந்தவன். அந்த நகரத்தில் ஒரு வர்த்தகன் இருந்தான். அவன் மிகுந்த ஐசுவரிய முடையவன். அவனுக்கு ஒரு மகள் இருந்தாள். அவளுடைய ரூபத்தைப் பார்த்து ஜனங்கள் யாவரும் பிரமைகொள்ளும் காரணத்தினால் அவள் உன்மாதினி யென்னும் பெயரை யடைந்தாள். அந்த வர்த்தகன் தன் மகள் உன்மாதினியைப் பற்றி அரசனுக்குத் தெரிவியாமல் பின்னொருவனுக்கு மணஞ்செய்து கொடுக்கின், அரசன் கோபிப்பான் என்று கருதி, நெடுநேரம் யோசனைசெய்து, பிறகு அரசனிடம் சென்று வணங்கி, "பிரபுவே! எனக்கு நல்ல இலக்ஷணமுள்ள ஒரு பெண் இருக்கிறாள்; அவள் தங்களுக்குப் பிரயோஜனப்படுவாளாயின், பெற்றுக்கொள்ளலாம்" என்றான்.

இதைக்கேட்ட தேவசேன ராஜன், உடனே நம்பிக்கையுள்ள சில அந்தணர்களை வரவழைத்து உன்மாதினி யென்னும் அந்தப் பெண்மணியின் இலக்ஷணம் தெரிந்து வரும்படி யனுப்பினான். பிராமணர்கள் அரசன் ஆக்ஞையைச் சிரமேற்கொண்டு வர்த்தகனுடைய வீட்டுக்குச் சென்று, அக்கன்னிகையை வரவழைத்துப் பார்த்து,

அவளுடைய ரூபலாவண்ணியத்தில் மோகங்கொண்டு ஒருவருக்கொருவர் கலகஞ் செய்துகொண்டார்கள். பின் இந்த உன்மாதினியை அரசன் மணம் புரிந்து கொள்வானாகில் அவன் அவளிடமே மனமுடையவனாகி ராஜகாரியங்களைக் கவனியா தொழிவான். அப்பொழுது எல்லாம் நாசமடையும்; ஆதலால் அரசனுக்கு இக் கன்னிகையால் ஏதும் பயனுண்டாகாது" என்ற தீர்மானத்தை யடைந்து அரசனிடம் வந்து "பிரபுவே! அக்கன்னிகை அவ்வளவு லக்ஷணமுடையவளல்ல; சமுகத்துக்கு உரியவளாகாள்" என்று பொய் கூறி, அரசனது எண்ணத்தை மாற்றிவிட்டார்கள்.

அப்பால் வர்த்தகன் அரசன் தன் பெண்ணைப் பற்றி ஏதும் அபிப்பிராயம் இல்லாதிருக்கிறான் என்று தெரிந்து, தன் மகள் உன்மாதினியை அவ்வரசனது சேனாதிபதிக்கு விவாகம் செய்து கொடுத்தான்.

இவ்விதம் விவாகம் நடந்தேறிய சில காலத்திற்குப்பின், உன்மாதினி தன் கணவனது கிரகத்தின் உப்பரிகையின் மீது ஒருநாள் நின்றுகொண்டிருந்தனள். அப்பொழுது அவ்வழியே வரநேரிட்ட அரசன் உன்மாதினியைக் கண்டு வியப்புற்று "ஓஹோ! உலகமுழுதும் மோகிக்கச் செய்யும் மன்மதன் அனுப்பிய கொடிபோன்ற சரீரமுடைய இவள் யார்? வர்த்தகன் மகளாகிய உன்மாதினியாகத் தானிருக்கவேண்டும். இவளை யடைந்தவனல்லவோ புண்ணியவான்" என்றெண்ணி மயக்கங்கொண்ட மனமுடையவனாகித் தன் அரமனை வந்து சேர்ந்து அதே சிந்தனையால் துன்பமடைந்தான்.

பிறகு இந்த உண்மையை யறிந்த சேனாதிபதி அரசனிடம் சென்று "பிரபுவே! இதற்காக வருந்தவேண்டாம்; நான் உன்மாதினியை ஆலயத்தில் விட்டு விடுகிறேன்; அப்பொழுது அவள் தாசிக் கோப்டாகிறாள்; பின்னர் நீங்கள் அவளை யடையலாம்; அதனாலொன்றும் பாதகமில்லை" என்று கூறினான். அவ்வாறு தெரிவித்த சேனாதிபதியை, அரசன் பார்த்து, "நீ அவளை விட்டுவிட்டாலும் நான் பரஸ்திரீயை அடைய மனங்கொள்ளேன். அதனால் உனது தர்மம் கெடுகிறது. என்னுடைய தண்டனைக்கும் நீ பாத்திரவானாவாய்" என்று மறுத்து அதே வியாதியால் மரணமடைந்தான் அவ்வரசன். தீரனான தேவசேனன் கதியே இங்ஙன முடிந்திருக்க, நமது உதயனனுடைய கதியைப் பற்றிப் பேசவும் வேண்டுமோ? என்றான்

பின்னர் யௌகந்தராயணன், ருமண்வானை நோக்கி, காரிய சித்தியில் கண்ணுடையவர்கள் அதனால் வரும் வருத்தத்தையும் சகித்துக் கொள்வார்கள். தேவர்கள் ராவண வதம் நடைபெறுவதன் பொருட்டுச் சீதாதேவியை இராமனை விட்டுப் பிரித்தார்களல்லவா? இராமன் அந்த விரக வேதனையைச் சகித்திருக்க வில்லையா?'' என்றான். இதைக் கேட்ட ருமண்வான், "அந்த ராமன் முதலியவர்கள் தேவர்கள்; அவர்கள் மனம் எதையும் பொறுக்க வல்லது; மானிடர்களின் மனம் அப்படியல்ல, அதற்கோர் சிறிய கதை யிருக்கிறது, அதைச் சொல்கிறேன் கேள்.

இந்தப் பூதலத்தில் மதுரை யென்றொரு பிரசித்தமான நகரமிருக்கின்றது. அந்த நகரில் யயில்லகன் என்னுமோர் வர்த்தகனிருந்தான். அவனுக்கு அன்பான மனைவியொருத்தியிருந்தாள். மனதிற்கிசைந்த தன் மனையாளோடு இல்லறம் நடத்தி வந்த அந்த வர்த்தகன், ஒரு சமயம் தீவாந்தரம் செல்ல நிச்சயித்துத் தன் மனைவியிடம் யோசிக்கும்போது அவளும் அவனுடன் போக விரும்பினாள். இயற்கையில் ஸ்திரீகளுடைய மனம் அனுராகமுடையதாயின், வியோகத்தைச் சகிக்காதல்லவா? பிறகு அந்த வர்த்தகன் மங்களஸ்நானஞ் செய்து நல்ல போஜனமுண்டு, தீவாந்தரத்திற்குப் பிரயாணப்பட்டான். அப்பொழுது அவன் மனைவியுங்கூட வரப்பிரியப்பட்டாளாயினும், வர்த்தகன் அவளைத் தன்னுடன் அழைத்துக்கொண்டுபோகவில்லை. அந்த ஸ்திரீ தன் கணவன் வீட்டைவிட்டுப் புறப்பட்டுச் செல்லும் பொழுது மிக்க விசனத்துடன் தன் வீட்டுத் தலைவாயிற்படியினின்று அவன் தன் கண்ணுக்கு மறையும் வரையில் பார்த்துக்கொண்டிருந்து பிறகு சகிக்கொணாத் துயரத்தோடு உள்ளே போய் அன்னம் தண்ணீரின்றிச் சில நாள் படுத்திருந்து பின் உயிர் துறந்தனள்.

இச்செய்தியைச் சிறிது தூரம் சென்றது மறிந்த வர்த்தகன் மீண்டும் தன் வீட்டுக்கு வந்து, பிணமாய்க் கிடக்கும் தன் மனைவியைப்பார்த்து மிகுந்த துக்கங்கொண்டான். அதிசுந்தரமும் வெளுத்ததுமான காந்தி, அலங்கோலமான கேசம் இவற்றையுடையவளும் நித்திரை புரியும் தருணத்தில் ஆகாயத்தினின்று நழுவிப் புவியில் விழுந்த சந்திரனைச் சார்ந்தசோபை போன்றவளுமாகிய அவளையெடுத்து மடிமீது வைத்துக்கொண்டு மிகுதியும் கதறினான். அப்

பொழுது அவன் பிராணன் துக்கமாகிய அக்கினியால் தகிக்கப்படும் சரீரத்திலிருக்கப் பயந்தது போல் வெளியேறிற்று. ஒருவரை விட்டு ஒருவர் பிரிந்திருக்கச் சகிக்கொணுது அத்தம்பதிகள் இவ்வாறு நாசமடைந்தனர். ஆகையால் இந்த உதயனனுக்கும் வாசவ தத்தைக்கும் பிரிவு ஏற்படாமல் காப்பாற்றவேண்டும் என்ருன்.

ருமண்வான் இவ்விதங்கூறிச் சந்தேகத்தோடு பேசாமலிருந்தான். அப்பொழுது மகா புத்திசாலியும் ஒப்புயர் வில்லாத் தைரியம் படைத்தவனுமாகிய யௌகந்தராயணன் நான் இவ்விதமாக நிச்சயித்து விட்டேன். இராஜாக்களின் காரியங்கள் இப்படியே ஏற்படுகின்றன. இது சம்பந்தமான ஒரு கதையைக் கேள்.

முன்னெரு காலத்தில் "உச்சினி நகரத்தில் புண்யசீலன் என்ெருரு அரசனிருந்தான். அவன் வலுவுடைய மற்ெருரு அரசனேடு அமர்புரிந்து அவமான மடைந்தான். பின் அந்த அரசனுடைய மந்திரிகள் தங்கள் அரசனுக்குப் பகைவன் வெல்வதற்கரிய பலமுடையவனென்பதை யறிந்து ஒரு யுக்தி செய்து கொண்டு, புண்யசேன மகாராஜன் இறந்துவிட்டான் என்னும் வதந்தியுலாவும் படி செய்தார்கள். அரசனை எவரும் அறிய முடியாத ஓரிடத்தில் மறைத்து வைத்தார்கள். பின் பகைவனுகிய அவ்வரசனுக்குத் தூதனை யனுப்பி அரசனில்லாதிருக்கும் தங்கள் இராஜ்பத்துக்கு அவனை அரசனுகும்படி தெரிவித்துக் கொண்டார்கள். அந்த அரசன் அது கேட்டதும் மகிழ்வுற்று அவ்வாறே இருந்து வருகிறேனென்று ஒப்புக்கொண்டான். பின் அந்த ராஜ்ப மகுடாபிஷேகமும் செய்து கொண்டு அரசு புரிந்து வந்தான். அந்த அரசன் அரசுரிமை பெற்ற சில நாளைக்கெல்லாம் மந்திரிகள் இங்குவருவதற்கு முன் அவனுக்கிருந்த சேனைகளைத் தங்கள் வசமாக்கிக் கொண்டார்கள். இப்பொழுது புண்யசீலன் இருமடங்கு சேனுபலமுடையவனுனமையால் அவனை வெளிப்படுத்திப் பகைவனை யெதிர்த்து ஜயமடைந்தார்கள். இராஜகாரியங்கள் இப்படிப்பட்டவை. ஆகையால் நாம் யோசித்தபடி தைரியமாகக் காரியத்தை முடித்தல் வேண்டும்" என்ருன்.

இதைக்கேட்ட ருமண்வான் "அப்படியே செய்வோம்; ஆனுல் நாம் இப்பொழுது வாசவதத்தையின் சகோதரனுகிய கோபாலகனை வரவழைத்து அவனேடு கலந்துகொள்ளவேண்டும். பின் நமது யோசனை செவ்வையாய் முடியும்" என்ருன். யௌகந்தராயணன்

அதற்குச் சம்மதித்தான். பின் மறுநாள் கோபாலகனுக்குத் தூதனை யனுப்பி வரவழைத்து, அன்றிரவில் அவனிடம் தாங்கள் செய்திருக் கும் யோசனையைத் தெரிவித்தார்கள். கோபாலகன், அந்த யோசனை தன் சகோதரிக்குச் சிறிது கஷ்டத்தைக் கொடுப்பதாயினும் அரச னுடைய நன்மையை விரும்பி அதற்கொப்புக்கொண்டான். சாதுக் கள் சொல்லும் வார்த்தைகளைக் கேட்பது நியாயமாகு மன்றோ?

ருமண்வான் மற்றவர்களைப் பார்த்து நாம் யோசனை செய் தது முற்றும் சரியே, ஆயினும் ஒன்று தடைசெய்கிறது; தேவி யாகிய வாசவதத்தை மாண மடைந்தாளெனக் கேட்டதும் மன் னன் பிராணனை விடுவானாகில் நாமென்ன செய்கிறது? அதிலிருந்து நாமெப்படி அரசனைத் தப்புவிப்பது? நாம் செய்த மந்திராலோசனை யில் நல்ல உபாயங்களிருந்தாலும் கெடுதிவரின் அதைத் தடை செய்து கொள்ளவேண்டுமென்பது முக்கிய மல்லவா? ஆகையால் இதைப்பற்றி ஆலோசிக்கவேண்டும் என்றான். யௌகந்தராயணன் சொல்லுகிறான். இதற்காக ஆலோசிக்க வேண்டாம். தேவியாகிய வாசவதத்தை இந்த கோபாலனுக்குப் பிரியமான சகோதரியென் பதை அரசன் அறிவான். கோபாலகன் உண்மையை யறிவானாதை லால் அவனுக்கு அதிக விசனமுண்டாகாது. அதைப்பார்த்து அரசன் தன் புத்தியைக் கொண்டு ஊகிப்பானானால் வாசவதத்தை உயிருடனி ருக்கிறாள்; ஏதோ யுக்தியை முன்னிட்டு இப்படி வதந்தியை யுண் டாக்கி யிருக்கிறார்கள் நமது அமைச்சர்கள் என்று கருதி அதிக விச னத்திற்குள்ளாக மாட்டான் என்றான்.

பிறகு பின் வருமாறு யோசனை செய்தார்கள். வாஸவதத்தை யுடனும் அரசனுடனும் நாம் லாவாணகம் செல்லவேண்டும். அந்த லாவாணகமானது மகத தேசத்திற்கு அருகேயுள்ளது. அது வேட்டையாடுவதற்கேற்ற இடம். ஆகையால் அரசன் சென்றதும் வேட்டையாட அடிக்கடி காட்டிற்குப் போய்விடுவான். அங்கு அந்தப்புரத்தைக் கொளுத்தி வாசவதத்தை அதிலகப்பட்டிறந்தா ளென்று வதந்தி பரவும்படி செய்து நினைத்த காரியத்தை முடிப் போம். அங்கோர் யுத்தி கண்டுபிடித்து வாசவதத்தையைப் பத் மாவதியின் கிருகத்திலிருக்கும்படி செய்து விடவேண்டும். அவள் வாசவதத்தையின் நற்குணத்தைக் கவனிக்கவும் இடமுண்டாகும் என்று இவ்விதம் மந்திராலோசனை செய்து கொண்டார்கள்.

மறுநாள் யௌகந்தராயணன் முதலிய மூவரும் அரண்மனை சென்று அங்கு அரசனைப் பார்த்து, "தேவ! நாம் லாவாணகம் போய்ச்சிலகாலம் வசித்து வருவோம். அந்தத் தேசம் வாசயோக்கியமானது. தேக சௌக்கியத்தைத் தரக்கூடியது. அந்தத் தேசத்தை மகத தேசாதிபதி உபத்திரவிக்கின்றான். அதைக் காப்பாற்றுவதற்காகவும் போய் வரவேண்டும்" என்றார்கள். உதயனன் லாவாணகம் செல்ல ஒப்புக்கொண்டான். மறுநாள் பிரயாணப்படுவதாக நிச்சயித்தார்கள். நல்லவேளையும் பார்த்தாய் விட்டது. இப்படியிருக்கையில் அன்றையதினம் அகாரணமாக நாரத முனிவர் வந்து சேர்ந்தார். இவர் மகாதேஜஸ்வி. இவர் ஆகாயத்திலிருந்து இறங்கி வந்தது, தன் குலத்துப் பிறந்த அரசனிடம் அன்பு கொண்டு சந்திரன் வருவதற்கொப்பாக விருந்தது. அவர்வரவு எல்லோருடைய நேத்திரத்திற்கும் உற்சாகத்தைக் கொடுத்தது. முனிவரைக் கண்டதும் உதயனன் அதிதிகளுக்குச் செய்வதற்குரிய பூஜையைச் செய் துபசரித்தான். அந்த நாரத முனிவர் அரசனது உபசாரணையில் மகிழ்ச்சியடைந்து பாரிஜாதமலரால் செய்யப்பட்ட மாலையொன்றை அவனுக்குக் கொடுத்தார். வித்யாதரர்கட்கு அதிபனும் மன்மதனுடைய அம்சமுமாகிய சுந்தரன் உனக்குப் புத்திரனைகப் பிறப்பான் என்று ஆசீர்வசனமும் கூறினர். வாசவதத்தையையும் ஆதரவொடு கொண்டாடினர்.

பிறகு அரசனை நோக்கி, அரசனே! இந்த வாசவதத்தையைக் கண்டதும் எனக்கொரு ஞாபகம் வருகிறது. ஆச்சிரியமானது. அது! முன் உனது பிதாமகர்களாகிய தர்மபுத்திரர் முதலிய ஐந்து பேருக்கும் திரௌபதி யென்பவள் ஒருத்தியே மனைவியாக விருந்தாள். அது தோஷ மென்றெண்ணிய நான் அவர்களைப் பார்த்து, பாண்டவர்களே! ஸ்திரீமூலமாக ஏற்படும் விரோதத்தைப்பற்றி அதிஜாக்கிரதையா யிருக்கவேண்டும். அந்த விரோதம் ஆபத்திற்கிடமானது. அது சம்பந்தமான கதை யொன்று கூறுகின்றேன் கேளுங்கள்—

முன் காலத்தில் ஸுந்தன் உபசுந்தன் என்ற பெயர் கொண்ட இருவரிருந்தார்கள். அவர்களிருவரும் அண்ணன் தம்பிகள். பராக்கிரமத்தினல் மூவுலகத்தையும் ஜயித்தவர்கள். எவர்களாலும் ஜயிக்க முடியாதவர்கள்.

இவர்களிருவரையும் நாசஞ் செய்ய விரும்பிய பிர்மதேவர், விசுவ கர்மாவிற்கு ஆக்ஞை செய்து அவனைக்கொண்டு திலோத்தமையென் கிற ஒரு பெண்ணை யுண்டாக்கினுர். அந்தப் பெண்ணை பிர்மதேவர் கைலாயமலையின் சாரலி லிருந்த ஸுந்தன் உபஸுந்தன் என்பவர்களை நாசஞ் செய்வதற்காக அனுப்பினுர். திலோத்தமை பிர்மதேவருடைய உத்தரவுப் படியே அங்குச் சென்றுள். ஸுந்தோபஸுந்தர்க ளிருவரும் தங்களை நோக்கி வரும் ஸுந்தரியாகிய திலோத்தமையைக் கண்டதும் காமத்தால் மோகமடைந்து, அவள் அருகே வருகிறவரையில் காத்திருந்து, வந்ததும் அவள் கரங்களைப்பிடித்துக் கொண்டார்கள். அப்போது இருவருக்குள்ளும் விரோத முண்டாயிற்று. உடனே இருவரும் சண்டை போட ஆரம்பித்து வெகுநேரம் அகோரமான சண்டை செய்து உயிர்துறந்தனர். இந்தக் கேடு ஏற்பட்டது ஸ்திரீயின் காரணமாகவல்லவா? ஆகையால் உங்களைவருக்கும் திரௌபதி ஒருத்தி மனைவியாக யிருக்கிறுளே! ஸ்திரீயின் நிமித்தமாக எந்தக் கெடுதியும் உண்டாகாமலிருக்க நீங்கள் காத்துக்கொள்ள வேண்டும். அதற்கு நான் சொல்கிறபடி திரௌபதியிடம் நடந்து கொள்ளுங்கள். அதாவது, மூத்தவனுடைய சமீபத்தில் இந்தத் திரௌபதி யிருக்கும்போது இளையவன் அவளைத் தாயாகப் பாவித்து நடக்கவேண்டும். இளயவனுக் கருகே திரௌபதி யிருக்கும்போது மூத்தவன், அவளை மருமகளாக நினைக்கவேண்டும் என்று கூறினேன். அன்று முதல் பாண்டவர்கள் அவ்விதமே திரௌபதியிடம் நடந்து வந்தார்கள். அந்தப் பாண்டவர்கள் எனக்குப் பரமமித்திரர்கள். அவர்களிடம் கொண்ட அன்பினுல் உன்னைப்பார்ப்பதற்கு இப்போது வந்தேன். என் வார்த்தையை நீ எவ்விதம் கௌரவப்படுத்துவாயோ அவ்விதமே உன் மந்திரிகளின் வார்த்தையைக் கௌரவப்படுத்தி வருவாயாயின் நீ சீக்கிரமாக நல்ல ஐசுவரியம் பெறுவாய்; சிலகாலம் வரையில் உனக்குத் துக்கம் ஏற்படும். அப்போது நீ மிகுதியும் வருத்தப்படக் கூடாது. அது முடிவில் சுகமாக ஏற்படும் என்றுகூறி உடனே நாரதர், "நான் போய் வருகிறேன்;" என்று அந்தர்த்தானமாயினர். இவ்வாறு முனிவர் கூறியதைக்கேட்ட மந்திரிகள் தங்களுடைய யோசனை சித்தியாகுமென மகிழ்ச்சியடைந்தனர். பின் தங்கள் யோசனையை முடிப்பதில் மிகுந்த முயற்சி யெடுத்துக் கொண்டனர்.

# இரண்டாவது தரங்கம்.

அப்பால் முதலில் யோசித்த யுக்தியின்படி யௌகந்தராயணன் முதலியவர்கள் அந்த உதயனனை லாவாணக தேசத்திற்கு அழைத்துச் சென்றார்கள். மந்திரிகளின் கோரிக்கை சித்தியடையும் என்பதைச் சொல்வதுபோல் விளங்கானின்ற அந்தத் தேசத்திற்கு உதயனன் பெருஞ்சேனையுடன் சென்றான். சேனைகளுடன் உதயனன் வந்திருப்பதையறிந்த மகததேசாதிபதி நடுங்கினான். இவன் நம்மை ஆக்ரமித்து விடுவானோ எனவும் கருதி, யௌகந்தராயணனிடம் ஒரு தூதனை யனுப்பினான். எல்லாவற்றையும் அறிந்த அந்த மந்திரி, வந்த தூதனை யுபசரித்தனுப்பினான். உதயனன் அந்த லாவாணக தேசத்தில் இருந்துகொண்டு நாடோறும் வேட்டையாடுவதற்கு காட்டுக்குச் செல்வதை வழக்கமாகக் கொண்டான்.

உதயனன் வழக்கம்போல் காட்டிற்குச் சென்றிருக்கையில் யௌகந்தராயணன் தான் உத்தேசித்திருக்கும் காரியத்திற்குத் தக்கபடி சில யுக்திகளை யோசித்துக்கொண்டு ருமண்வான், கோபாலகன், வஸந்தகன் இவர்களுடன் வாசவதத்தையிடம் சென்றான். முன்னமேயே சகோதரனாகிய கோபாலகன் போதனை செய்திருந்தமையால், இராஜ காரியத்தில் உதவி செய்வதன் பொருட்டு தக்க வார்த்தைகளைப் பேசி வாசவதத்தையைப் பிரார்த்தித்தான். வாசவதத்தை தான் விரகவேதனைக்குட்பட நேரிடக்கூடியதா யிருந்தும் அதற்கு ஒப்புக் கொண்டாள். கணவனிடம் பக்தியுடைய சில ஸ்திரீகள் எதைத்தான் செய்யமாட்டார்கள். பின்னர் யௌகந்தராயணன், உருவத்தை மாற்றிக் கொள்ளத் தக்க உபாயங்களை வாசவதத்தைக்குக் கூறி பிராமண ஸ்திரீ வேடம்பூண்டு கொள்ளும்படி செய்தான். வசந்தகனை பிர்ம்மசாரி வேடந்தரித்துக் கொள்ளும்படி செய்தான். தானொருவயோதிக அந்தண வடிவங் கொண்டான். பிறகு மகா புத்திசாலியாகிய யௌகந்தராயணன் வாசவதத்தையை யழைத்துக் கொண்டு வஸந்தகனுடன் மகத தேசத்திற்குச் சென்றான். வாசவதத்தை வீட்டை விட்டு வெளிப் புறப்பட்டு மனதில் கணவனை ஸ்மரித்துக் கொண்டே சென்றாள். பின் ருமண்வான் வாசவதத்தை

வீட்டில் தீயிட்டுக் கொளுத்தி "ஐயோ! ஐயோ!! வசந்தகனும் வாசவதத்தையும் நெருப்பிலகப்பட்டு இறந்து விட்டார்களே" என்று கத்தினன். பிறகு எல்லாரும் கூக்குரலிட ஆரம்பித்தனர். வீடு முழுதும் எரிந்தொழிந்த பின் அக்கினி தணிந்தது. ஆனால் ஊரார் சத்தமட்டும் ஓயவில்லை.

இங்கிப்படியாக, யௌகந்தராயணன், வாசவதத்தை, வசந்தகன் மூவரும் மகத்தேசத்தை யடைந்து அந்நகரத்து அரசன் புதல்வி யாகிய பத்மாவதி யிருக்கும் உத்யானவனத்தில் காவலாளிகள் தடுத்துங் கேளாது பிரவேசித்தனர். பிராமண ஸ்திரீ வேடம் பூண்டிருந்த வாஸவதத்தையைக் கண்டதும் பத்மாவதியின் நேத்திரங்களுக்குப் பரமானந்தமுண்டாயிற்று. உடனே அவள் காவலாளரைத் தடுத்து அந்தணவேடத்துடன் வந்திருக்கும் யௌகந்தராயணனைத் தன் அருகே வரவழைத்து, அந்தணரே! இந்த மங்கை உமக்கென்ன உறவாகவேண்டும்? நீங்கள் இங்கே வந்த தன் நோக்கமென்ன? என்று கேட்டாள். யௌகந்தராயணன், "அம்மா இவள் என் குமாரத்தி; இவள் பெயர் ஆவந்திகை. இவள் கணவன் ஏதோ ஒரு வருத்தத்தை மனதிற்கொண்டு இவளைவிட்டுப் பிரிந்து எங்கேயோ போயிருக்கின்றான். இவளை இப்போது உன்னிடத்தில் ஒப்புவிக்கிறேன். நீ பார்த்துக்கொள். நான் போய் இவளுடைய புருஷனை யழைத்து வருகின்றேன். இந்த பிர்மசாரி இவளுக்குச் சகோதரன். இவன் இவளருகேயிருக்கட்டும்; இவனருகே யிருப்பானுகில் இந்தப் பெண் தான் தனியே யிருப்பதைப் பற்றி துக்கப்படமாட்டாள்." என்று கூறினன்.

பத்மாவதி அதற்குடன்பட்டாள். பின் யௌகந்தராயணன் பத்மாவதியிடம் விடைபெற்று லாவாணக தேசம் சென்றான். பத்மாவதி ஆவந்திகையென்று சொல்லப்படும் வாசவதத்தையையும் அந்த பிர்மசாரியையும் அழைத்துக்கொண்டு தன் அரண்மனை வந்து சேர்ந்தாள். வாசவதத்தை அந்த அரண்மனையில் பிரவேசித்ததும் அங்கு சுவர்களில் வரையப்பட்டிருந்த சித்திரங்களைப் பார்த்துக் கொண்டே வந்து இராமச்சந்திரனையும் சீதையையும் ஓரிடத்தில் வரைந்திருக்கக்கண்டு துக்கசமனம் செய்து கொண்டாள்.

ஆகிருதி, சயனம், போஜனம், நீலோத்பலம் போன்ற வாசனை யுடைய சரீரம் இவைகளால் அந்த வாசவதத்தையை உத்தம ஸ்திரீ

யெனவறிந்த அந்த பத்மாவதி நன்றுயுபசரித்துக் கௌரவப்படுத்தினுள். பிறகு பத்மாவதி இன்னுங் கவனித்து வந்தபோது "இவள் யாரோ தெரிய வில்லை; முன் திரௌபதை விராடனது நகரத்தில் மறைந்து கொண்டிருந்தது போல் மறைந்து கொண்டிருக்கிருள் போலிருக்கிறது" என்றும் கருதினுள்.

இப்படி யிருக்கையில் ஒரு நாள் வாசவதத்தை பத்மாவதிக்கு வாடாத பூ மாலையைச் சூட்டி திலகப் பொட்டிட்டு அலங்காரஞ்செய்தாள். இப்படிச் செய்ய வாசவதத்தை உதயனனிடம் அப்பியாசஞ் செய்து கொண்டவள். இவ்வித அலங்காரத்தோடு தன்னிடம் வந்த பத்மாவதியை அவள் தாயார் பார்த்து, இந்த மாலையைச் சூட்டித் திலக மிட்டது யாரென்று கேட்டாள். பத்மாவதி அம்மா! ஆவந்திகை யென்ற ஒருத்தி சில நாளைக்குமுன் என்னிடம் வந்தாள். அவள் இப்படி அலங்காரஞ் செய்தாள் என்றுள். அதைக்கேட்ட தாயார், அம்மணீ! அப்படியா! ஆனல் அவள் மானிட ஸ்திரீ யல்ல; தெய்வலோகத்து மாதாக விருக்கவேண்டும்; ஏனெனில் இந்த அறிவு மானிட ஸ்திரீக்கு ஏற்படாது. சாதுக்களுடைய வீட்டில் தேவர்களும் முனிவர்களும் மறைவாக வசிப்பதுண்டு. அதற்கொரு கதையுண்டு அதைக்கேள்.

முன் காலத்தில் போஜன் என்றொருவ அரசனிருந்தான். அவன் வீட்டுக்குத் துர்வாசவ முனிவர் வந்திருந்தார். அவருக்குப் பணி விடை செய்வதற்காக போஜன் தன் பெண் குந்தி யென்பவளை ஏற்படுத்தினுன். குந்தி யென்கிற அந்தப் பெண் பயபக்தியுடன் அந்த முனிவருக்குப் பணிவிடைபுரிந்து வந்தாள். ஒரு சமயம் அந்த முனிவர் அந்தப் பெண்ணைப் பரீக்ஷை செய்வதற்கெண்ணி "பெண்ணே!/ அந்த முனிவரிப்படியாக இருந்தார். அதுபோல் இந்த ஆவந்திகையும் இருக்கிருள். ஆகையால் இவளை நீ நன்றுயுபசரித்துவா என்றுள். அன்று முதல் பத்மாவதி வாசவதத்தையாகிய ஆவந்திகையை வெகு மானித்துவேண்டிய உபாசாரங்களைச் செய்து அவளிடம் மிக்க அன்பு பாராட்டி வந்தாள். வாசவதத்தையோ தன் கணவனைவிட்டுப் பிரிந்திருப்பதுபற்றி இரவில் தாமரை ஓடைபோல் வருத்தத்துட னிருந்தாள். பிராமணச் சிறுவனுக வந்திருக்கும் வசந்தகன் சிறுவர்களுக்கேற்றபடி பலபல விளையாட்டுகளைச் செய்து

பேச்சுக்களையும் பேசி வாசவதத்தைக்கு அந்த வருத்தம் மேலிடாமற் செய்து வந்தான்.

இது நிற்க; உதயனன் காட்டுக்கு வேட்டையாடச் சென்றுனென்று கூறினோமன்றோ? அவன் நெடுநேரம் வேட்டையாடிக் கொண்டிருந்து பிறகு மாலைப்பொழுதில் லாவாணகம் வந்து அங்கு தன் அந்தப்புரம் எரிந்து சாம்பலாயிருப்பதைக்கண்டு காரணமென்ன வென்று தன் மந்திரிகளை விசாரித்தான். மந்திரிகள் "காரணந் தெரியவில்லை; எப்படியோ பற்றியெரிந்துவிட்டது. அந்தப்புரம் அழிந்ததுமல்லாமல் தங்களுயிர்க் காதலியாகிய வாசவதத்தையும் வசந்தகனும் அக்கினியி லகப்பட்டிறந்து விட்டார்கள்" என்றூர்கள்.

இச்செய்தி செவியுற்ற உதயனன் உடனே ஆ! ஆ! வென்றலறி வெட்டுண்ட மரம்போல் பூமியிற் சாய்ந்துவிட்டான். பின் ஒரு கண நேரத்தில் பிரக்ஞையடைந்து, வாசவதத்தையை தகித்த அக்கினியை இருதயத்தில் அடைந்ததுபோல் துக்கப்பட்டான். பின் தன் சரீரத்தைத் தியாகம் செய்ய எண்ணங்கொண்டான். பிறகு ஒரு கண நேரத்திற்கெல்லாம், முன் ஒரு சமயம் நாரதமுனிவர் தன்னிடம் வந்து வித்யாதரர்களுக்கிறைவன் வாசவதத்தைக்குப் புத்திரனுகப் பிறக்கப்போகிறு னென்று சொன்னது நினைப்புவந்தது. உடனே ஓகோ! நாரத முனிவர் வார்த்தை பிழைபடாது. மேலும் அவர் சிலகாலம் வரையில் துக்க முனக்குண்டென்றும் கூறினூல்லவா? இதனுல் வாசவதத்தை எப்படியும் பிழைத்திருப்பாளென்கிற நம்பிக்கை ஏற்படுகிறது; இன்னும் பார்ப்போமென்றெண்ணித் தான் கொண்ட எண்ணத்தை நிறுத்தினுன். பிறகு மந்திரிமார்களும் பல பல படியாக உபசாரங்களும் நீதிகளும் கூறி உதயனனைச் சமாதானப் படுத்தினூர்கள்.

லாவாணகத்தில் நடந்த இந்தச் செய்தியை சாரர்கள் மகதராஜனிடம் சென்று தெரிவித்தார்கள். மகதராஜன் அச்செய்தி கேட்டதும் தன் புத்திரி பத்மாவதியை உதயனனுக்குக் கொடுக்க விரும்பினுன். இதற்கு முன்பே அந்த அரசனது மந்திரிகள் பத்மாவதியை உதயனனுக்குக் கொடுக்க நிச்சயித்திருந்தனர். இப்போது அரசனது விருப்பம் அதற் கொத்துப்போனது பழம் நழுவிப் பாலில் விழுந்தது போலாயிற்று. உடனே உதயனனுக்கும் யௌகந்தராயணனுக்கும் தூதனையனுப்பினூர்கள். தூதன் வந்து செய்தி தெரி

வித்ததும் யௌகந்தராயணன் தன் சம்மதந் தெரிவித்தான். அந்தப் படியே அரசனும் ஒப்புக் கொண்டான். இதற்காக வாசவதத்தையை மறைத்து வைத்திருக்கக் கூடுமென்றும் கருதினன். யௌகந்தராயணன் உடனே ஜோதிடரைக் கொண்டு நல்ல நாள் பார்த்து அதில் முகூர்த்தம் நிச்சயித்து பின் வருமாறு ஒரு கடிதம் வரைந்து அதைத் தூதன் மூலமாக மகதராஜனுக்கு அனுப்பினன்.

க்ஷேமம்

ம—ா—ா—ஸ்ரீ மகதாதிபதியவர்களுக்கு—

தங்கள் விருப்பப்படியே விவாகத்தை ஒப்புக்கொண்டோம். இன்றைக்கு எழாவது நாள் உதயனமகா ராஜன் அங்கு வருவார். எமது அரசர் தமது மனைவியாகிய வாசவதத்தையை எவ்விதம் மறந்து விடுவாரோ அவ்விதமாக விவாகத்தை நடத்தி முடிக்க வேண்டும்.

இங்ஙனம்

தங்கள் அன்பன்

யௌகந்தராயணன்.

இந்தக்கடிதத்தைத் தூதன் மகதாதிபதியிடம் கொடுத்தான். மகதாதிபதி கடிதத்தைக் கண்டதும் கரைகடந்த உவகையுள் மூழ்கினன். இச்செய்தியை வாசவதத்தை யறிந்ததும் மிகுந்த துக்கப் பட்டாள். அவள் முகத்தின் ஒளி குன்றியது. துக்கம் முன்னினும் அதிகரித்தது. வாசவதத்தை துக்கப்படுவதை யறிந்த வசந்தகன் தேவீ! விசனப்படவேண்டாம். அரசர் பகைவனுயிருக்கும் இந்த மகதாதிபதியை மித்திரனுக்கிக் கொள்ளவே இந்த விவாகத்தை முடிக்கிறார். தாங்கள் யோசிக்கவேண்டாம் என்று கூறிச் சமாதானப் படுத்தினன்.

பிறகு பத்மாவதிக்கு விவாக நாள் கிட்டியது. அப்பொழுது வாசவதத்தை முன்போல் பத்மாவதிக்கு வாடாதமாலையைச் சூட்டி திலகத்தையிட்டு அலங்கரித்தாள். அது கண்டு யாவரும் சந்தோஷமடைந்தனர். பின் குறித்த முகூர்த்த நாளில் உதயனன் தன் மந்திரிகளுடன் விவாகம் செய்து கொள்வதன்பொருட்டு மகத தேசம் வந்தான். பிரஜைகளுடைய நேத்திரோற்சவமாக விளங்கும் உதயனனை மகத ராஜன் உதயகிரியிலுதிக்கும் சூரியனை சமுத்திரராஜன்

வரவேற்பதுபோல எதிர்கொண்டு சென்று வரவேற்ருன். உதயனன் முகமலர்ச்சியுடன் அந்த நகருள் பிரவேசித்தான்; அப்பொழுது அவனைக் கண்ட அந்த நகரத்து மாதர்கள் இரதிதேவியில்லாமல் தனியே வ்ரும் மன்மதனே வென்று ஐயமுற்றனர். எல்லாரும் உதயனனை நோக்கியவாறே யிருந்தனர். இப்படியாக உதயனன் மகதாதிபதியின் அரண்மனை யடைந்து திருமண மண்டபத்துக்குச் சென்ருன். அங்கே, அதியற்புத அலங்காரஞ் செய்து கொண்டிருக்கும் பூர்ண சந்திரனை யொத்த திருமுகமுடைய பத்மாவதியைக் கண்டான். அவள் அணிந்து கொண்டிருக்கும் மாலையிலும் திலகத்திலும் அவனுக்குச் சந்தேகமுண்டாய், இவ்விரண்டையும் இவள் எப்படியடைந்தாள்? இவையிரண்டும் நம்மைச் சேர்ந்தவையல்லவா? என்றெண்ணியவாறே மணமேடைசென்று மங்கள வாத்தியமுழங்க அந்தணர்கள் ஆசிகூறப் பத்மாவதியின் கரத்தைப் பிடித்தான்.

இதுவே பூமியின் கையைப் பிடிப்பதற்கு யத்தனம் போற்கண்டது. ஆனல் உதயனன் மனம் வாசதத்தை யினிடம் சென்றிருந்தமையால் அவன் முகம் சிறிது வாட்டமுற்றது. அக்கினியை வலம் வரும்போது சிவந்தது போற்கண்ட பத்மாவதியின் முககமலமானது கணவனது உள்ளக் கருத்தை யறிந்து கோபத்தால் வியாகுலமுற்றதெனக் காணப்பட்டது. விவாகம் முடிந்த பின் உதயனன் பத்மாவதியின் கரத்தை விட்டான். ஆனல் மனதிலிருக்கும் வாசவதத்தையைக் கணப்போதேனும் விட்டானில்லை.

பிறகு மகதாதிபதி தன் மருமகனுகிய உதயனனுக்கு பூமியானது இரத்தினங்களைக் கறந்து சூன்யமானதென்று சொல்லும்படி அளவிறந்த இரத்தினங்களைக் கொடுத்தான். அச்சமயத்தில் யௌகந்தராயணனென்னும் உதயனனுடைய மந்திரி, மகதாதிபதியினிடம் உதயனனுக்கு என்றும் துரோகம் செய்வதில்லை யென்ற ஒரு சத்திய வாக்கை அக்கினி சாட்சியாகப் பெற்ருன். பிறகு எல்லோருக்கும் வஸ்திரங்களும் பொருள்களும் தானஞ்செய்யப்பட்டன. சாரணர்கள் கானஞ் செய்தனர்; மாதர்கள் நிருத்தனம் செய்தார்கள். இவ்விதமாக விவாகம் நிறைவேறிற்று.

இந்த வைபவத்தைப்பார்த்துக்கொண் டிருந்த வாசவதத்தை கணவனுடைய நன்மையை நாடி நித்திரை செய்பவள் போலிருந்தாள். பிறகு உதயனன் தனக்கென்றேற்படுத்தி யிருந்த மாளிகைக்கு வந்

தான். இங்கே வந்த மறுநாள் யௌகந்தராயணன், "இன்னும் இந்த ஊரில் தாமதிப்போமாகில் அரசன் வாசவதத்தையைக் கண்டு கொள்வான்; பிறகு மந்திராலோசனைக்குப் பங்கமுண்டாகும்; இனி யிங்கிருக்கலாது" என்று தீர்மானித்து உடனே மகதாதிபதியினிடம் சென்று, "பூபதியே! இன்று எமதரசன் தமது நகரம் செல்லப் பிரயாணமாயிருக்கிறார்; அனுப்பிவைக்க வேண்டும்" என்றான். மகதாதிபதி, அவ்விதமே செய்ய ஒப்புக்கொண்டான். பின் யௌகந்தராயணன் உதயனனிடம் வந்து இன்று நமது நகரத்துக்குப் பயணப் படவேண்டும் எனவே, உதயனன் அவனுடைய வார்த்தைப்படி புறப் படத் தயாரானான். பின் பரிவாரங்கள் எல்லோரும் போஜனம் செய்தானவுடன் உதயனனும் போஜனமுண்டு பத்மாவதியுடன் தன்மந்திரிகளும் சேனைகளும் புடைசூழ மங்களவாத்திய முழங்க, அந்நகரத்தினின்றும் புறப்பட்டான். வாசவதத்தையும் பத்மாவதியின் உத்தரவுப்படி தனக்களிக்கப்பட்ட ஒரு இரதத்தின் மீதேறிக் கொண்டு வசந்தகனுடன் பின்னே பிரயாணமானாள்.

இப்படியாக எல்லோரும் லாவாணக நகரம் சென்றதும் உதயனனும் பத்மாவதியும் தங்கள் அரண்மனையிற் பிரவேசித்தார்கள். வாசவதத்தையோ தன்னோடு வந்த சிலரை அரசனரமனைக்கே யனுப்பிவிட்டுத் தான் மாத்திரம் ராத்திரிவேளையில் அங்குள்ள தன் சகோதரன் கோபாலகனுடைய மாளிகை சென்றாள். அங்கே கோபாலகனைக் கண்டதும் கண்களில் நீர் பெருக அவன் கழுத்தைக் கட்டித் தழுவிக் கொண்டாள். அவனும் அச்சமயம் மிக்க விசனமுற்றான்.

வாசவதத்தையை விட்டுப் பிரிந்தவர்கள் உதயனனுடைய அரண்மனைசென்று அங்கே பத்மாவதியைப் பார்த்து 'தேவி' நம்மோடு வந்த ஆவந்திகை இப்போது எங்களை விட்டுப் பிரிந்து இராஜ குமாரனாகிய கோபாலகனுடைய கிருகத்திற்குள் போய் விட்டாள் என்று தெரிவித்தார்கள். பத்மாவதி உடனே அவர்களைப் பார்த்து, அவள் ஏன் அங்கே சென்றாள்; அவள் என்னிடம் அடைக்கலமாகக் கொடுக்கப்பட்ட வளல்லவா? நான் எங்கே யிருக்கிறேனோ அங்கல்லவா அவளுமிருத்தல் வேண்டும். ஆகையால் இங்கேயே வரலாம் என்று கூறுங்கள் என்று சொல்லி யனுப்பினாள்.

பிறகு பத்மாவதியும் உதயனனும் தனித்திருக்கையில் உதயனன் பத்மாவதியைப் பார்த்து இந்த மாலையும், திலகமும் உனக்கு

எப்படி வந்தன ? என்று கேட்டான். பத்மாவதி, பிராணபதியே! ஒரு அந்தணன் என்னிடம் ஆவந்திகை யென்ற ஒரு ஸ்திரீயை அடைக்கலமாக வைத்து விட்டுச் சென்றார். இது அவள் செய்த சிறந்த அலங்காரம். அவள் தான் இப்போது இராஜ புத்திரனுடைய மாளிகை சென்றனள் என்று சொல்லக்கேட்டோமே அவள்என்றாள்.

இதைக் கேட்டதும் அரசன் அவள் வாசவதத்தையாகத் தானிருக்கவேண்டு மென நிச்சயித்து, உடனே கோபாலகன் மாளிகைக் கேகினன். அங்கே வாசவதத்தை, கோபாலகன், யௌகந்தராயணன், ருமண்வான், வஸந்தகன் இவர்களிருந்தார்கள். இவ்வளவு நாள் வரையில் தனித்து வசித்து வந்த வாசவதத்தையை கிரகணத்திலிருந்து விடுபட்ட சந்திரகலையைப் போல் கண்டான் உதயனன். உடனே சோகமுற்றுத் தளர்ந்து மயங்கிக் கீழே விழுந்தான். வாசதத்தையும் மனதில் பெரும் பீதி யடைந்தாள். உடனே அவளுடைய அவயவங்கள் வெளுத்தன. பிறகு அவளும் மயங்கித் தரையில் விழுந்தனள். தான் செய்த செய்கையைப்பற்றி நிந்தித்துக் கொண்டு புலம்பினாள்; அது கண்ட யௌகந்தாாணனும் மனங் கலங்கினன். இப்படி இங்கே அலங்கோலப்படுவதைக் கேட்ட பத்மாவதிமனவிசாரத்துடன் இங்கே வந்தாள். பிறகு நடந்த விஷயங்களைத் தெரிந்துகொண்டாள். உதயனனும் வாசவதத்தையும் எவ்வளவு துக்கமடைந்தார்களோ அவ்வளவு துக்கமடைந்தாள் பத்மாவதியும். உத்தம ஸ்திரீகள் தங்களிடம் அன்புடையார் பால் ஈடுபடுவரல்லவா ?

வாசவதத்தை இது வரையில் கணவனுக்குத் துக்கத்தை கொடுத்த இந்த உயிரால் நாமடையும் பலனென்ன வென்று அடிக்கடி கதறினாள். பிறகு யௌகந்தாயணன் உதயனனைச் சமாதானப்படுத்தி "தேவ! மகதேச்வரன் குமாரத்தியை மணம் புரிந்தால் தமக்கு ஸாம்பிராஜ்யம் கிடைக்குமென்று நான் செய்த காரியமிது. வாசவதத்தையின் மீது சிறிதும் குற்றமில்லை. இது நாள் வரையில் பரவசமாகவிருந்த சமயம் தேவி தன் நடத்தையிற் சிறிதுந் தவறாதிருந்தனளென்பதற்கு இந்த பத்மாவதியே சாட்சியாயிருக்கிறாள்—என்று தைரியமாகக்கூறினன். உடனே பத்மாவதி சிறிதும் மாற்சரியமற்றமனதுடன் வாசவதத்தை பரிசுத்தமானவள் என்பதற்கு நான் இப்பொழுதே தீயில் குதிப்பேன் என்று கூறினாள். உதயனனும்

உடனே இந்த வாசவதத்தை என் பொருட்டன்றோ இவ்வளவு நாள் பெருந் துக்கத்தைச் சகித்துக்கொண்டிருந்தனள். அதனால் நான் தான் குற்றம் செய்தவனாகின்றேன்" என்றான். இவ்வாறான சம்பாஷணையைக் கேட்டதும் வாசவதத்தை தன் மனதைத் திடப் படுத்திக்கொண்டு எனது பரிசுத்தத் தன்மையை அரசருக் கறிவிக்க நானே தீயில் குதிக்கின்றேன் என்றாள்.

பிறகு புண்யவான்களுக்குள் சிறந்தவனாகிய யௌகந்தராயணன் ஆசமனம் செய்து கீழ்த்திசையை நோக்கி நின்று நான் உதயன மகா ராஜனுக்கு இதஞ்செய்தவனா அல்லவா என்பது பற்றியும் வாசவதத் தை பரிசுத்தமான நடத்தையுடையவளா அல்லவா என்பது பற்றி யும் ஓ லோகபாலகர்களா! நீங்கள் உண்மையைக் கூறுங்கள். இல்லா விடில் நான் இந்த சரீரத்தை இப்போதே விட்டு விடுகின்றேன் என்று கூறி மௌனமாயிருந்தான். அப்போது "அரசனே நீ கிரு தார்த்தன். உனக்கு மந்திரியோ யௌகந்தராயணன். மனைவியோ முன் ஜன்மத்தில் தேவதையாக யிருந்தவள். இந்த வாசவதத்தை மீது சிறிதும் தோஷமில்லை என்று ஆகாயவாக்குண்டாயிற்று. அந்த வார்த்தையைக்கேட்டு அவர்க ளனைவரும் உயரப்பார்த்த பார்வை யுடன் வெகு நேரமிருந்து சந்தோஷமடைந்தார்கள். உதயன னும் கோபாலகனுடன் யௌகந்தராயணன் செய்த காரியத்தைப் பற்றிப் புகழ்ந்தான். பூமிமுழுதும் தன்கையி லிருப்பதாகவே கருதி னான். பின் அந்த உதயனன் பிரத்தியக்ஷமாக வந்த ரதி, நிர்விருதி, இவர்கள் போன்றவர்களும் அருகே யிருப்பவர்களுமாகிய தன் இரண்டு மனைவியர்களையும் அன்புடனேற்றுக்கொண்டு பரமானந்த பரிதனானான்.

## மூன்றாவது தரங்கம்.

அப்பால் உதயனன் வாசவதத்தை, பத்மாவதி இவர்களுடன் அநேக விளையாட்டுகளைச் செய்துகொண்டு வெகு சுகமாக விருந்து வந்தான். கோபாலகன், ருமண்வான், யௌகந்தராயணன் இவர்க ளுடனும் பலபல கதைகளைப் பேசிக்கொண்டும் பலபல யோசனை களைச் செய்துகொண்டு மிருந்தான், ஒருநாள் உதயனன் தான்

வாசவதத்தையைவிட்டுப் பிரிந்திருந்தபோது நடந்த வரலாறை எல்லோரும் சேர்ந்து பேசிக்கொண் டிருக்கும் சமயம், உதயனன் பின்வருமாறு ஒரு கதை சொல்லலானான்.

பூர்வம் புரூரவஸ் என்ற பெயருடன் கூடிய ஒரு அரசனிருந்தான். அவன் பரம வைஷ்ணவன். அவன் புவியில் எங்கும் தடையின்றிச் சஞ்சரித்து வருவதுபோல் சொர்க்கலோகம் முதலியவைகளிலும் சஞ்சரிக்கக்கூடியவனா யிருந்தான். ஒரு சமயம் அந்த அரசன் சொர்க்கலோகம் சென்று ஒரு நந்தவனத்தையடைந்து அங்கே சஞ்சரித்துவந்தான். அப்பொழுது அப்ஸர ஸ்திரீயு ளொருத்தியாகிய ஊர்வசி யென்பவள் கண்டாள். அவள் மன்மதனது மற்றொரு மோகனாஸ்திரம் போன்றவள். புரூரவஸ்ஸைக் கண்டவளவில் அவள் பிரஞ்ஞையற்றவளானாள். அவள் அப்படி பிரஞ்ஞையற்றுப் போனதைக் கண்டு அவளுடைய தோழிகளாகிய அரம்பை முதலியவர்கள் மிகவும் பயமடைந்தார்கள். புரூரவஸ் என்னும் அந்த அரசனும் லாவண்ய (அழகு) ரஸத்தின் ப்ரவாஹம் போல் விளங்கும் ஊர்வசியைக் கண்டு மூர்ச்சையடைந்தான்.

இங்கிப்படியிருக்க, பாற்கடலிற் பள்ளிகொண்டுள்ள பரந்தாமன், தம்மைத் தரிசிப்பதன் பொருட்டு அங்கு வந்த தேவரிஷி யாகிய நாரதரைப் பார்த்து தேவரிஷியே! புரூரவஸ் என்ற மகா ராஜன் நந்தவனத்தில் ஊர்வசியின் பால் ஈடுபட்டு விரகம் சகிக்கமுடியாது வருந்துகின்றான்; ஆகையால் நீர் அங்கு சென்று நான் கூறியதாக இந்திரனுக்குந் தெரிவித்து ஊர்வசியை அவ்வரசனடையும் படி செய்யும் என்று கட்டளையிட்டார்.

நாரதர் அவ்விதமே செய்கின்றேன் என்று தெரிவித்துப் பரந்தாமனை வணங்கி விடை பெற்றுச் சென்று நந்தவனமடைந்து மூர்ச்சை போய்க்கிடக்கும் புரூரவஸ்ஸை யெழுப்பி “அரசனே! எழுந்திரு; உனக்காக நாராயணமூர்த்தி என்னையனுப்பி யிருக்கின்றார். கபடமில்லாத பக்தர்களுக்கு ஆபத்து நேரிடின் பகவான் உபேக்ஷை செய்யமாட்டார்” என்று கூறி அவனையுமழைத்துக் கொண்டு தேவேந்திரனிடம் சென்றார்.

இந்திரன் நாரதரைக் கண்டதும் விரைவில் தன் ஆசனத்தை விட்டெழுந்து அவரை வணங்கி அன்போடு வரவேற்றுபசரித்தான். புரூரவஸ்ஸையும் உபசரித்துட்காரும்படி ஆசனமளித்தான். பின்

நாரதர் இந்திரனுக்கு பரந்தாமனது கட்டளையைத் தெரிவித்து புரூரவஸுக்கு ஊர்வசியைக் கொடுக்கும்படி செய்தார். அவ்விதம் செய்தது சொர்க்கலோகத்திற்கு ஜீவனற்றது போலும் ஊர்வசிக்கு மிருத சஞ்சீவிபோலுமாயிற்று.

பிறகு புரூரவஸ் பூலோகம் வந்து இங்குள்ளோரெல்லோரும் தேவலோகத்து ஸ்திரீயைப் பார்த்து ஆச்சரிய மடையும்படி செய்தான். ஊர்வசியும் புரூரவஸும் ஒருவர்க்கொருவர் நேத்திரமாகிய கயிற்றால் கட்டுண்டாற் போலிருந்து வந்தார்கள்.

இப்படி யிருந்துவருகையில் இந்திரனுக்கும் அசுரர்களுக்கும் யுத்தம் நடந்தது. அப்பொழுது உதவிக்காக இந்திரன் புரூரவஸை யழைத்தான். புரூரவஸ் உடனே சொர்க்கம் சென்று இந்திரனை யெதிர்த்த மாயாதான் என்ற அசுரனை வதஞ்செய்தான். அந்த ஜயத்தைக் குறித்துத் தேவேந்திரன் ஒரு உற்சவஞ் செய்தான். அப்பொழுது அப்ஸர ஸ்திரீகள் நர்த்தனம் செய்தனர். அவர்களுள் அரம்பையும் நர்த்தனம் செய்தாளாதலால், அவள் செய்த அபிநயம் சிறிது மாறிற்று. அதைக் கண்ட புரூரவஸ் ஆசிரியனாகிய தும்புரு முன்னிலையில் நகைத்தான். அரசன் நகைத்ததையறிந்த அரம்பை அசூயையுடன் அரசனை நோக்கி, "மானிடனே! இது தேவர்களின் நர்த்தனம்; நான் அறிவேன். உனக்கு என்ன தெரியும்" என்று கேட்டாள். அதுகேட்ட புரூரவஸ் "உன் ஆசிரியனாகிய தும்புருவுக்கும் தெரியவராத தெதுவோ அதையும் நான் ஊர்வசியின் சம்பந்தத்தால் அறிவேன்" என்றான். தும்புரு உடனே கோபமடைந்து, "நீ கிருஷ்ணனைப் பூசிக்கும் வரையில் உனக்கு ஊர்வசியின் வியோகமுண்டாகக்கடவது" என்று புரூரவஸுக்குச் சாபங்கொடுத்தார். அந்தச் சாபத்தைப் பெற்ற புரூரவஸ் பின்பு அங்கிருந்து தன் நகரஞ்சென்று அக்காலத்தில் இடி விழுந்ததற் கொப்பான சாபவரலாற்றை ஊர்வசிக்குத் தெரிவித்தான்.

அப்பால் சில நாளைக்கெல்லாம் யாதொரு காரணமுமில்லாமலே கந்தர்வர்கள்புரூரவஸ்ஸின் அரண்மனைக்குள் அந்த அரசனை அறியாமல் பிரவேசித்து, ஊர்வசியை யபகரித்துக்கொண்டுபோய் விட்டனர். அது தும்புருவின் சாபத்தினால் விளைந்ததென்த் தெரிந்துகொண்ட அந்தப் புரூரவஸ் உடனே பதரிகாசிரமம் சென்று மகாவிஷ்ணுவைப் பூசித்தான். ஊர்வசியும் அரசனைவிட்டுப் பிரிந்ததற்கு மிகவும் துக்க

மடைந்து கந்தர்வ தேசத்தில் மரணமடைந்தவள் போலவும்,நித்திரை புரிபவள், போலவும் சித்திரத்தி லமைக்கப்பட்டவள் போலவுமிருந்து வந்தாள். சாபவிமோசனம் ஒருநாள் ஏற்படுமென்ற நம்பிக்கையினால் பிராணனை விடாதிருந்தாள். இராக்காலங்களில் புருஷனுடைய பிரிவாற்றாது பெண் சக்ரவாகப் பக்ஷியைப்போ லிருந்து வந்தாள். புரூரவஸுவோ வெனில் அரியதவம் புரிந்து அச்சுதனைச் சந்தோஷப்படுத்தினான். அதனால் புரூரவஸுக்கு நாராயணனுடைய அனுக்கிரகம் பரிபூர்ணமாய்க் கிடைத்தது. பிறகு கந்தர்வர்கள் ஊர்வசியைத் தாங்கள் எப்படி எடுத்துச்சென்றார்களோ அப்படியே கொண்டுவந்து சேர்த்துவிட்டார்கள். சாபத்தின் முடிவில் கிடைத்த அந்த ஊர்வசியுடன் புரூரவஸ் தான் புவியிலிருப்பவனே யாயினும் தேவலோகத்துப் போகங்களை யனுபவித்தான் என்று உதயனன் கூறிய இக்கதையை வாசவதத்தை கேட்டதும் தான் தன் பதியை விட்டுப் பிரிந்ததை எண்ணிப்பார்த்து அது ஒரு ஆச்சரியமல்லவென்பதை யறிந்துமனதில் வெட்கமுமடைந்தாள். அதை யறிந்த யௌகந்தராயணன் கூறுகிறான்:—

அரசனே! நான் இப்போதொரு கதை சொல்லுகிறேன், கேட்கலாம்; இப்புவியில் திமிரை யென்றொரு பட்டணமுண்டு. அது இலக்ஷிமிதேவிக்கு இருப்பிடம் போல்வது. அந்நகரத்தில் விகிதசேனன் என்றொரு அரசனிருந்தான். அவனுக்கு நல்ல கீர்த்தி ஏற்பட்டிருந்தது. அவன் மனைவி தேஜோவதி யென்றழைக்கப்படுவாள். அவள் பூமண்டலத்திற்கு அப்ஸர ஸ்திரீபோலிருந்தனள். விகிதசேனன் தேஜோவதியின் ஆலிங்கனத்திலேயே எண்ணமுடையவன். இப்படிப்பட்ட அரசனுக்கு ஒரு சமயம் தேக அசௌக்கியமுண்டாயிற்று. அப்பொழுது வைத்தியர்கள் தேஜோவதியின் சேர்க்கை கூடாதென்று தடை செய்திருந்தார்கள். அதனால் அரசன் எந்த ஔஷதத்தினாலும் நிவர்த்திசெய்ய முடியாத மனோவியாதியை யடைந்தான். அப்பொழுது வைத்தியர்கள் மந்திரிகளுடன் இரகசியமாக ஒரு கூட்டங்கூடி யோசித்து, அரசனுக்குண்டா யிருக்கும் மனோவியாதியை ஒரு துக்கத்தையாவது பயத்தையாவது காட்டித் தீர்க்கவேண்டும்; துக்கமேனும் பயமேனுமுண்டாகும் பக்ஷத்தில் மனோவியாதியானது இருந்த இடந்தெரியாமற் போய்விடும் என்றார்கள். அதுகேட்ட மந்திரிகள், அரசனோ தன் முதுகின்மீது ஸர்ப்பம்

விழுந்த சமயமும் பயப்படவில்லை; அதுவுமன்றிப் பகைவர்கள் சைன்னியம் அந்தப் புரத்தில் பிரவேசித்தபோதும் பயப்படவில்லை. அப்படிப்பட்டவனை நாம் எப்படிப் பயத்திற்குள்ளாக்குவதென்று வெகு நேரம் யோசித்துப் பின் அரசனுடைய மனைவி தேஜோவதியை மறைத்து வைத்துவிட்டு அவள் மரணமடைந்தாள் என்று கூறுவதெனத் தீர்மானித்து, தேஜோவதியிடம் சென்று தாங்கள் செய்துள்ள தீர்மானத்தைத் தெரிவித்தார்கள். தேஜோவதி எப்படியேனும் நமது நாயகன் குணமடைந்தாற் போதுமென்று நினைத்து அவர்கள் கருத்துக்கிசைந்து மறைந்திருந்தனள். மந்திரிகள், அரசனிடம் வந்து "ஐயயோ தேவி தேஜோவதி மரணமடைந்து விட்டாள்" என்றார்கள். அதைக் கேட்டதும் அரசன் நெஞ்சம் பிளக்கப்பட்டவனாகி மிகவுந் தளர்ச்சியடைந்து துக்கக்கடலில் மூழ்கினான். அதனால் மனோ வியாதி மாயமாகப் பறந்துவிட்டது. பிறகு மந்திரிகள் வியாதி ரூபமான விபத்தினின்றும் விடப்பட்ட அரசனிடம் சுகரூபமான ஸம்பத்து போன்ற தேஜோவதியைக் காட்டி உண்மையைக் கூறினார்கள். அரசன் தனக்குப் பிராணனைக் கொடுத்த தேஜோவதியைப் புகழ்ந்து மகிழ்ந் தான். அவன் மகா புத்திசாலி யாகையால் மறைந்திருந்த மனைவியினிடங் கோபங் கொள்ள வில்லை. பரலோகத்திற்கு வேண்டிய சாதனங்களைத் தேடுபவளே தேவி யெனப்படுவாள். இகலோகத்திற் குரியனவற்றை மாத்திரம் தேடுகிறவள் தேவி யென்ற தன்மையைப் பெறாள். மந்திரி யென்பவன் ராஜகாரியத்தை மாத்திரம் கவனிப்பது போதாது. அத்துடன் அரசனுடைய மனப்பாங்கையும் அனுசரித்தவனாக இருக்கவேண்டும். ஆகவே நாங்கள் சத்ருவாகவிருந்த மகதராஜனுடன் சந்திப்புண்டாகும்படி செய்து இந்தப் புவிமுழுவதையும் ஜயிக்கவேண்டுமென்றே இவ்வித முயற்சி யெடுத்துக்கொண்டோம். தேவி உமக்கு அபராதம் செய்தவளன்று. உபகாரத்தையே செய்தவள் என்று கூறினான்.

மகாபுத்திசாலியாகிய மந்திரி இப்படிக்கூறியது கேட்ட உதயனன் தான் குற்றஞ்செய்து விட்டதாக நினைத்தான். சந்தோஷத்தையு மடைந்தான். பின் மந்திரிகளை நோக்கி, "நான் இதை யறிவேன்; நீதியே உருவங்கொண்டு வந்ததென்று சொல்லத்தக்க இந்த வாசவதத்தை உங்களுடைய பிரேரபணையின் பேரில் எனக்குப் பூமியைக் கொடுத்தாள். ஆயினும் எனக்கேற்பட் டிருந்த மிகுந்த

விசுவாதத்தின் காரணமாக இப்படிப்பட்ட வார்த்தைகளைப் பேசி விட்டேன். அன்பின் மிகுதியால் மயங்கிய மனமுடையாருக்கு, விசாரத்தைச் சகிப்பதெனில் சாத்தியப்படாத காரியம்! என்று கூறியது மன்றி இப்படி இன்னும் பலவாறு சம்பாஷித்துக்கொண் டிருந்து அன்றைப் பொழுதையும், வாசவதத்தை யடைந்திருந்த வெட்கத்தையும் போக்கினன்.

அடுத்த நாள் இந்த விஷயங்களையறிந்து கொண்ட மகத தேசாதிபதியினிடமிருந்து ஒரு தூதன் வந்து உதயனனைக்கண்டு வணங்கி, ஒரு கடிதங்கொடுத்தான். அதில், "உமது மந்திரிகளால் நாங்கள் மோசஞ்செய்யப்பட்டோம்; நமக்கு அவர்கள் துக்கசொரூபமாக ஏற்படாதவழி யெதுவோ அந்தப்படி நடக்கவேண்டும்" என்று எழுதியிருந்தது. அதைப்பார்த்த உதயனன் அந்தக் கடிதத்தை மறுபடியும் தூதனிடம் கொடுத்து அவனைப் பத்மாவதியிடம் அனுப்பினன். தூதன், பத்மாவதியை வாசவதத்தையின் சமீபமிருக்கக் கண்டு வணங்கிக் கடிதத்தை நீட்டினன். அவள் அதைப் படித்துப் பார்த்துத் தூதனிடம், "நற்குணமுடையவனே! நான் சொல்லுகிறபடி என் பெற்றோரிடம் தெரிவியுங்கள். அவர்கள் ஏன் விசனப்பட வேண்டும்? என் கணவன் என்னிடம் மிகவும் கருணையுள்ளவராகவே யிருக்கிறார். தேவியாகிய வாசவதத்தையும் தன் கூடப்பிறந்த சகோதரி போலவே என்னிடம் அன்புபாராட்டி வருகிறாள். ஆகையால் என் தந்தை மகதாதிபதி எப்படித் தமது சத்திய மொழிகள் நிலைத்திருக்க விரும்புகிறாரோ அப்படியே என் பிராணனும் நிலைத்திருக்கவேண்டுமானால், என் புருஷனிடம் கெட்ட எண்ணங் கொள்ளாம லிருக்கவேண்டும். இவ்வளவு தான் நான் சொல்லத்தக்கது" என்றாள்.

இவ்விதம் பத்மாவதி உசிதமாகக் கூறியதும் வாசவதத்தை மகிழ்ந்து தூதனுக்குத் தக்கசம்மானம் அளித்தனுப்பினாள். தூதன் சென்றதும் பத்மாவதி தன் பிறந்த வீட்டை நினைத்துக் கொண்டு சிறிது மனவருத்தப்பட்டுக் கொண்டிருந்தாள். அது கண்ட வாசவதத்தை அவள் மனதிற்கு உற்சாக முண்டாக்கு வதற்காக வசந்தகனை யனுப்பினாள்.

வசந்தகன் பத்மாவதியின் பக்கத்தில் வந்து "அம்மா! இந்தக் கதையைக் கேளுங்கள்; மனதிற்கு இன்பமுண்டாக்கும்" என்று கூறலானன்.

பாடலிபுத்திரம் என்றொரு நகரமுண்டு. அந்த நகரம் பூமிக்கோர் ஆபரணம் போல்வது. அங்கே தர்மகுப்தன் என்னுமொரு வர்த்தக னிருந்தான். அந்தத் தர்மகுப்தனுக்குச் சந்திரப்பிரபை யென்னுமொரு மனைவி யிருந்தாள். அவள் கர்ப்பந்தரித்து சகல இலட்சணங்களோடுங்கூடிய ஒரு பெண்ணைப் பெற்றாள். அப்பெண் பிறந்தவுடன் நன்றாய்ப் பேசிற்று. எழுந்து உட்கார்ந்தது. அது கண்ட அந்த வீட்டிலுள்ள ஸ்திரீகள் ஆச்சரியத்தையும் நடுக்கத்தையு மடைந்தார்கள். தர்மகுப்தனும் அதைப்பார்த்துப் பயந்தான். பிறகு தனியே அந்தப் பெண்குழந்தை யினிடம் சென்று வணங்கி, "ஓ பகவதி! என் வீட்டில் அவதரித்த நீ யார் என்று தெரிவிக்கவேண்டும்" என்று கேட்டான். அப்பெண்குழந்தை "பிதாவே! நான் இந்தக் கிருகத்திலிருந்து என்றும் நன்மையைக் கொடுப்பதற்காகப் பிறந்திருக்கிறேன். நீங்கள் யாருக்கும் என்னை விவாகம் செய்து கொடுக்கவேண்டாம். மற்றவிவரம் உங்களுக்கு எதற்கு?" என்று கூறிற்று.

இதைத் தர்மகுப்தன் கேட்டுப் பயந்து அந்தப் பெண்ணை தன் வீட்டில் தனியே வைத்திருந்தான். வெளியில் அப்பெண் இறந்து விட்டதாகப் பிரசித்தியாகும்படி செய்து விட்டான். அந்தப் பெண்ணுக்கு ஸோமப்பிரபை யென்ற பெயர் வைத்து வளர்த்து வந்தான். அப்பெண்ணின்தேகம் மானிடதேகம் போலிருந்தது. காந்தி மாத்திரம் தேவர்களைப்போலிருந்தது.

இப்படியிருக்கும் அப்பெண் பருவமடைந்தாள். ஒரு நாள் உப்பரிகை மீதிருந்து வஸந்தோற்சவத்தைப் பார்த்துக் கொண்டிருந்தாள். அவளை அச்சமயம் குகசந்திரன் என்றவன் கண்டான். அவன் ஒரு வர்த்தகனின் குமாரன். அவன் உடனே மனதில் மோகமடைந்து மூர்ச்சித்தான். பின் நடக்கமாட்டாமல் நடந்து வீடுபோய்ச் சேர்ந்தான். வீட்டில் காமநோயால் மிகவும் வருந்தலானான். அவன் பெற்றோர் அவன் அப்படி வருந்துவதற்குக் காரணமென்னவென்று நிர்ப்பந்தமாய்க் கேட்க அவன் தன் நண்பன் மூலமாகத் தன் மனதிலுள்ளதைத் தெரிவித்தான். பிறகு அவன் தந்தை குஹஸேனன் என்பவன் தர்மகுப்தனிடம் சென்று என் பிள்ளைக்கு உன் பெண்ணைக் கொடுக்கவேண்டுகிறேன் என்று கேட்டான். தர்மகுப்தன், "என்ன ஓய் இப்படிக் கேட்கின்றீர்? எனக்

கேது பெண்" என்று கூறி நகைத்தான். பிறகு குஹஸேனன் அப் பெண்ணைத் தர்மகுப்தன் மறைத்து வைத்துக்கொண்டு இப்படிப் பேசுகிறானென்பது தெரிந்துகொண்டு வீடு சென்று, காமவேதனை யால் துன்பப்படும் தன் மகனிடம் நடந்ததைக் கூறிப் பின் "அப்பா! நீ வருத்தப்படாதே! நான் அரசனிடம் இதைத் தெரிவித்து அரசனையாசிக்கின்றேன்; அரசன் பெண்ணை உனக்குக் கொடுக்கும் படி வர்த்தகனுக்கு உடனே ஆக்ஞை செய்வான். சந்தேகப்பட வேண்டாம்" என்று தேற்றி அரசனிடம் சென்று ஒரு உயர்ந்த இரத்தினத்தை அவனுக்குக் கொடுத்து தன் எண்ணத்தைத் தெரிவித்தான். அரசன் அவனுக்குதவி செய்ய வெண்ணி சேனாதிபதியை யழைத்து "நீ இந்தக் குகஸேனனோடு வர்த்கன் வீடு சென்று அவன் மகளை இவன் பிள்ளைக்குக் கொடுக்கும் படியான ஏற்பாடு செய்து விட்டுவா" என்று உத்தர வளித்தான். சேனாதிபதி அவ் வாறே செய்கிறேனென்று ஒப்புக்கொண்டு குஹஸேனனுடன் வர்த்தகன் வீடுவந்து "தர்மகுப்தா! உன்குமாரியை இந்தக் குஹஸேனனுடைய புத்திரனுக்குத் தட்டாமற் கொடு; அரசனதாக்ஞை அப்படி ஏற்பட்டிருக்கிறது" என்று கூறினான். சேனாதிபதியே வந்து தெரிவித்தமையால் வர்த்தகன் பயந்து இன்ன செய்வதென்று தோன்றாது நின்றான். அப்பொழுது அந்த சந்திரப்ரபை, "பிதாவே! என் பொருட்டு நீங்கள் சங்கடப்பட வேண்டாம்; என்னை வர்த்தகனுடைய மகனுக்கே கொடுத்து விடும். ஆனால் கொடுக்கு முன்பு சேனாபதிக் கெதிரிலேயெ, என் குமாரியை அவளுக்கு நாயகனாக வருபவன் படுக்கையில் ஏறும்படி செய்யக்கூடாது;" இது ஒரு நிபந்தனை; இந்த நிபந்தனைக் குட்படுவதானால் விவாகஞ் செய்து கொள்ளட்டும் என்று கூறி, "இதற் குட் படுவானாயின் என்னைக் கொடுங்கள்; யோசிக்க வேண்டாம்" என்றாள். பிறகு தர்மகுப்தன் குஹஸேனனிடம் நிபந்தனையைத் தெரிவித்தான். குஹஸேனன் தன் புத்திரனுக்கு எவ்விதமேனும் விவாகம் நடந்தால் போதுமென் றெண்ணி அந்த நிபந்தனைக்கு ஒப்புக்கொண்டான். பின் விவாகம் முறைப்படி முடிந்தது. குகஸேனன் குமாரன் குஹசந்திரன் ஸோமப்ரபையை யழைத்துக்கொண்டு தன் வீடுபோய்ச் சேர்ந்தான்.

பிறகு ஒருநாள் படுக்கைக்குப் போகுந்தருணத்தில் குஹஸேனன் தன் புத்திரனைப் பார்த்து, "உன் மனைவியைப் படுக்கைக்கு

அழைத்துக்கொண்டு போ" என்றான். அதைக் கேட்டதும் ஸோமப்பிரபை தன் மாமனாரைப் பார்த்து, யமனது ஆக்ஞையென்றெண்ணும்படி தன்னுடைய ஆள்காட்டி விரலைச் சுழற்றினாள். மருமகளின் விரலைப் பார்த்ததும் வர்த்தகனுக்குப் பிராணன் போய்விட்டது. அது பார்த்ததும் மற்றவர்களும் பயந்தார்கள். தன் தந்தை உயிர் துறந்ததைப்பார்த்த குகசந்திரன் மாரியென்கிற தேவதையே நமக்கு மனைவியா யிருக்கிறாள் போலிருக்கிறது என்றெண்ணினான். அது முதற் கொண்டு மிகுந்த கவலைக்குள்ளாகி வருந்தினான். போகத்திலும் ஸம்பத்திலும் வைராக்கிய மடைந்தான். விரதத்தை யநுஷ்டிக்கலாயினன். பிராமணர்களுக்குப் போஜனம் செய்வித்து வந்தான். ஸோமப்பிரபை யென்கிற அவன் மனைவியும் தேவ உருவங் கொண்டு பிராமண போஜனஞ் செய்யும் வரையிற் காத்திருந்து மௌனநியமத்தோடு நாடோறும் அவர்களுக்குத் தக்ஷிணை கொடுத்து வந்தாள்.

இப்படி யிருந்து வருகையில் ஒரு சமயம் ஒரு கிழப் பிராமணன் போஜனத்திற்காக வந்தான். அவன் ஸோமப்பிரபயைப்பார்த்து ஆச்சரியமடைந்து "இந்தப் பாலையார்? உனக் கென்ன வேண்டு" மென்று குகசந்திரனைக் கேட்டார். உடனே குகசந்திரன் மிக்க வருத்தமடைந்தான். இன்னது தான் சொல்வதென்று தோன்றாமல் வருந்தினான். பிராமணன் வற்புறுத்திக் கேட்கலானான். அதனால் குகசந்திரன், ஸோமப்பிரபயைப்பற்றிய வரலாறு முழுதுங் கூறினான். அதைக் கேட்டதும் அந்தக் கிழப்பிராமணனுக்கு குகசந்திரனிடம் தயையுண்டாயிற்று. உடனே அந்த குகசந்திரனுக்கு அவன் கோரிக்கை நிறைவேறுவதன் பொருட்டு அக்னியைப் பூசிக்கும் மந்திரத்தை உபதேசித்தான்.

குகசந்திரன் அந்த மந்திரத்தைத் தனிமையாக உட்கார்ந்து ஜபஞ்செய்து வந்தான். அப்போது அக்கினியின் நடுவிலிருந்து ஒரு புருஷனுண்டாய் குகசந்திரன் முன்பு நின்றான். குகசந்திரன் அந்தப் புருஷனை அக்கினிதேவனென வறிந்து நமஸ்கரித்தான். அந்தப் புருஷன், குகசந்திரனைப் பார்த்து, "குகசந்திரா, இன்று உன் வீட்டிலேயே நான் போஜனம் செய்யப்போகிறேன். இன்றிரவு இங்கிருந்து உனக்கு உண்மையை வெளிப்படுத்தி மனோரதத்தை நிறைவேற்றுகின்றேன்" என்றுகூறி அன்று குகசந்திரன் வீட்டிலேயே

எல்லா பிராமணரோடும் போஜனஞ்செய்துவிட்டுப் பின் இரவில் குக சந்திரனோடு படுத்து ஒரு ஜாமம் வரையில் நித்திரை செய்தான்.

எல்லோரும் அயர்ந்து நித்திரை செய்யும் சமயத்தில் ஸோமப் பிரபை வீட்டைவிட்டு வெளிப்புறப்பட்டாள். அவள் வெளியே போனதும் குகசந்திரனை அக்கினி தேவனாகிய புருஷன் எழுப்பி "வா என் பின்னே" என்றுகூறி அவனை யோகவல்லமையால் வண்டாகும்படி செய்து தானுமொரு வண்டுருவங்கொண்டு வீட்டிற்கு வெளியே வந்து, "அதோ பார் ஸோமப்பிரபை போகிறாள்" என்று அவள் போவதைக் காட்டினான். அதைக்கண்டு குக சந்திரன் ஆச்சரியமடைந்தான். வண்டுருபங்கொண்ட இருவரும் ஸோமப்பிரபையைத் தொடர்ந்து சென்றார்கள். ஸோமப்பிரபை ஊருக்கு வெளியே வெகு தூரம் சென்று அங்கோரிடத்திலிருந்து ஒரு பெரிய ஆலமரத்தருகே சென்று நின்றாள். அங்கே அந்த மரத்தினடியில் வீணை, வேணு முதலிய வாத்தியத் தொனிகேட்டது. அந்த மரத்தின் ஒரு பெருங்கிளையில் ஒரு கன்னிகை வீற்றிருந்தனள். அவள் மகா ரூபவதியாயிருந்தாள். அவளுக்கிருமருங்கும் இரண்டு ஸ்திரீகளிருந்து வெண்சாமரை வீசிக்கொண் டிருந்தனர். ஸோமப்பிரபையும் அம்மரத்தின் மீதேறி அக்கன்னியின் சமீபத்தில் உட்கார்ந்தாள். இந்தக் காட்சியை குஹசந்திரன் பார்த்தான். மிகவும் வியப்படைந்தான். அன்று இரவு மூன்று சந்திரனையுடையது போற் காணப்பட்டது. அப்பொழுது குஹசந்திரன், இது கனவா அல்லது பிரமமாயென்று மயங்கினான். இவன் இப்படி மயங்கி நிற்கையில் ஸோமப்பிரபையும் மற்றவளும் பழவர்க்கங்களைப் புசித்து மதுவையும் பருகிமகிழ்ந்தார்கள்.

பிறகு சற்று நேரத்திற்கெல்லாம் ஸோமப்பிரபை, மற்றவளை நோக்கி, அக்கா! என்கிரகத்திற்கு மிகுந்த தேஜஸ்வாய்ந்தவொரு அந்தணன் வந்திருக்கிறான். என்மனம் சந்தேகப்படுகிறது. நான் சீக்கிரம் போகவேண்டும் என்று கூறி மரத்திலிருந்து பரபரப்போடிறங்கினாள். அது கண்டதும் குகசந்திரனும் அக்கினி புருஷனும் அவளுக்குமுன் வீட்டிற்கு வந்து முன் போலவே படுத்துக் கொண்டார்கள். பிறகு ஸோமப்பிரபையும் ஒருவரையும் அறியாமல் வீட்டிற்கு வந்து சேர்ந்தாள். அதன் பின் சிறிதுநேரம் மௌனமாயிருந்து அக்கினி புருஷன் குஹசந்திரனைப் பார்த்து, "பார்த்தாயா?"

இந்த ஸோமப்பிரபை மானுட ஸ்திரீ அல்ல; தேவ ஸ்திரீ; மரத்திலிருந்த மற்றொருத்தி இவள் சகோதரி; தேவஸ்திரீ மானிடனுடன் எவ்விதம் சேரவிரும்புவாள்? விரும்பாளல்லவா? ஆயினும் நானொரு மந்திரம் உபதேசிக்கிறேன். அதை உன் வீட்டுவாயற்படியிலெழுதிவை; அதிலும் ஒரு யுக்தியிருக்கிறது. அக்கினி பரிசுத்தமுடையதே யாயினும் ஜ்வலிக்கும் தன்மையையுடையதா யிருக்கிறது. அதோடு சுழல்காற்றும் சேர்ந்துவிடின் கேட்கவேண்டுமா? அதுபோல மந்திரத்தோடு யுக்தியுமிருந்தால் விசேஷமல்லவா என்று கூறி குஹசந்திரனுக்கு மந்திரத்தை யுபதேசித்து அதற்குரிய யுக்தியையும் சொல்லிக்கொடுத்து மறைந்தான் அந்தப் புருஷன்.

மறுநாட் காலையில் குஹசந்திரன் எழுந்ததும் அந்த மந்திரத்தை வாயிற்படியிலெழுதினன். அன்று மாலையில் அந்த யுக்தியையும் உபயோகித்தான். நன்றாய் அலங்காரஞ் செய்துகொண்டு வெளியே சென்று வேறொரு அழகான ஸ்திரீயோடு ஸோமப்பிரபை பார்த்துக்கொண்டிருக்கும் போதே உள்ளே பிரவேசித்து அவளோடு பேசிக்கொண்டிருந்தான். அதைக்கண்ட ஸோமப்பிரபை குஹசந்திரனையழைத்து முகத்தைச் சுளித்துக்கொண்டு இவள் யார்? என்று கேட்டாள். குஹசந்திரன், இவள் என்னிடம் விருப்பங்கொண்டவள். நான் இன்னும் சற்றுநேரத்திற் கெல்லாம் இவளுடைய வீட்டிற்குப் போகப்போகிறேன் என்று பொய் சொன்னன். அது கேட்ட ஸோமப்பிரபை, ஒருகண் பார்வையாகப்பார்த்து, புருவத்தை நெறித்து, அவனை இடது கையால் தடுத்து, ஹா! அறிந்தேன்; இதற்காகவா இந்த வேஷம்; அங்குச்செல்லவேண்டாம். இவளால் நீ என்ன பயனை யடையப்போகிறாய்? என்னையே ஏற்றுக்கொள்ளும்; நானல்லவா உமக்கு மனைவி என்று கூறினள். பிறகு குஹசந்திரன் மகிழ்வுற்று ஸோமப்பிரபையோடு மனோரதங்களால் ஸ்பரிசிக்கமுடியாத சுகத்தை யனுபவித்தான். பிறகு மந்திரசித்தியால் ஸாதிக்கப்பட்டவளும் தேவர்களுக்குரிய நிலையை விட்டவளுமாகிய அந்த ஸோமப்பிரபை குஹசந்திரனிடம் அன்புள்ளவளா யிருந்து வந்தாள்.

சாபத்தால் மானிடதேகம் பெறும் தேவஸ்திரீகள், யாகஞ்செய்தல், தானமளித்தல் முதலிய நல்ல செய்கையையுடைய ஸாதுக்களுக்கு மனைவியாகிறார்கள். தேவர்களையும் ஸாதுக்களையும் பூசிப்பது ஸாதுக்களுக்குக் காமதேனுவாகிறது. அவ்வாறு பூசிப்பதால்

ளதுதான் பெறுவது அரிதாகும்? உயர்ந்த பிறப்பையடைந்து தேவத் தன்மையுடையவர்கட்குப் பாபமானது, புஷ்பங்களுக்குப் பெருங் காற்றுப்போல் நரகத்தில்விழ முக்கிய காரணமாகிறது. இவ்வாறு சந்தகன் இராஜகுமாரத்திக்குச் சொல்லிப்பின், இன்னொரு கதையைக் கேளுங்களம்மணியென்று அகல்யையின் சரித்திரத்தைக் கூறுகின்றான்.

முன் காலத்தில் கௌதமர் என்ற ஒரு முனிவரிருந்தார். அவர் மகாஞானி. மூன்று காலங்களையும் அறியவல்லவர். அந்த முனிவருக்கு அஹல்யையென்ற மனைவியிருந்தாள். அவளழகில் அப்ஸரஸ்திரீகளிலும் மேன்மையுடையவளா யிருந்தாள். ஒரு சமயம் இந்திரன் அவள்மே லாசைகொண்டு அந்த முனிவர் வெளியே போயிருக்குந் தருணம் பார்த்து அவர் ஆச்சிரமத்தை யடைந்து, அகல்யையைக் கண்டு தனக்கிணங்கும்படி பிரார்த்தித்தான். சில பிரபுக்களின் அறிவு ஐசுவரிய மதத்தினால் கெட்டு தீயவழியிற் செல்லுகிறதல்லவா? அதுபோல் அகல்யையும் தன்னறிவை யிழந்து காமவெறியடைந்து இந்திராணியின் கணவனாகிய இந்திரனுக் கிணங்கினாள். வெளியே சென்றிருந்த கௌதமர் தவத்தின் வலிமையால் இதனை யறிந்து ஆச்சிரமம் வந்தார். அவர் வருகையை யறிந்த இந்திரன் பயந்து ஒரு பூனையுருவங்கொண்டு மறைந்தான். கௌதமர் வந்தவுடன் அகல்யயைப் பார்த்து, "இங்கிருப்பவன் யார்?" என்றுகேட்டார்.

அப்பொழுது ஸத்தியத்தையே அநுசரித்தவளாகிய அகல்யை ஈனக்குரலொடு இவன் என்னுடைய சோர புருஷன் என்றாள். கௌதமர் நகைத்து, ஓ பாபசுபாவமுடையவளே! அரண்யத்தில் சஞ்சரித்து வரும் இராமரது தரிசனம் பெறும்வரையில் நீ சிலையாக விருக்கக்கடவாய் என்று சாபமிட்டார். உடனே பூனையாக விருக்கும் இந்திரனைப் பார்த்து, இரகஸ்ய ஸ்தலத்தில் விருப்பங்கொண்ட உன் தேகத்தில் ஆயிரம் பெண்குறிகளுண்டாகக் கடவது என்று சாபந்தந்து அவ்வாயிரம் பெண்குறிகளும் விச்வகர்மாவால் சிருஷ்டிக்கப்படும் திலோத்தமையைக் கண்டதும் ஆயிரம் கண்களாக மாறும் என்று சாபவிமோசனமும் கூறினார். பிறகு முனிவர் தவம் புரியச் சென்றார்.

அகல்யையும் சிலையுருவமடைந்தாள். இந்திரன் தேகத்திலும் பெண்குறிகள் தோன்றின. கெட்ட நடத்தையானது எவனுக்குத்

தீங்குதராது ? ஆகையால் கெட்ட செய்கையானது எப்போதும் அதன் பலனைக் கொடாமற்போகாது. எவன் எந்த விதையை விரைக்கிருனே அவன் அதன் பலனையே அடைவான். ஆகையால் சிறந்த மனமுள்ளவர்கள் பிறருக்கு விரோதமான செய்கையில் உற்சாக மடைய மாட்டார்கள். இது உத்தமமான சத்துவ குணமுடையவரது விதி ஸித்தமான சிறந்த விரதம். நீவிர் இருவரும் முன் ஜன்மத்தில் தேவ ஸ்திரிகள். சகோதரிகள். சாபத்தால் மானுட தேக மடைந்தவர்கள். உங்களிருவருடைய மனமும் மாறுபடாது. என்றும் ஒன்று போலவே யிருக்கும். இதத்தையே செய்யும் என்முன்.

இந்த விவரம் கேட்ட வாஸவதத்தையும் பத்மாவதியும் ஆசூயை யென்கிற வார்த்தையையும் மறந்தார்கள். தேவியாகிய வாசவதத்தையும் நன்மைசெய்ய வேண்டு மென்கிற நோக்கத்துடன் பத்மாவதியிடம் சாதாரணமான அன்புவைத்திருக்கும் உதயனனைத் தன்னிடம் வைத்திருக்கும் அன்பை அவளிடம் காட்டும்படி செய்துவந்தாள். மகதேசுவரனும் பத்மாவதி தூதனிடம் எழுதி விடுத்த கடிதத்தைப்பார்த்து, மனதில் கொண்டிருந்த கோபத்தைவிட்டுச் சந்தோஷ மடைந்தான்.

பின் மறுநாள் மந்திரி யௌகந்தராயணன், உதயனனை நோக்கி, வாஸவதத்தையின் அருகே மற்றவர்களும் வீற்றிருக்கும் அச்சமயம் கூறுகிருன்.

ஓ தேவ! உத்தியோகத்தைக் கருதி இப்போதேன் கௌசாம்பி நகரம் செல்லக்கூடாது. மகததேசத்ததிபன் நம்மால் வஞ்சிக்கப் பட்டவனே யாயினும் அவனிடம் தாங்கள் சந்தேகங்கொள்ள வேண்டாம். அவ்வரசன் கன்னிகையின் சம்பந்தம் என்ற ஸாமோபாயத்தால் கட்டுப்பட் டிருக்கிருனல்லவா? நம்முடன் விரோதங் கொண்டு பிராணனிலும் மேலான தன் புத்திரியை இழக்க எப்படித் துணிவான் ? அல்லாமலும் அவன் சத்தியத்தைக் காப்பாற்றிக் கொள்வான். உம்மால் அவன் மோசம் போனனில்லை. இந்தச் செய்கையை நானே செய்தேன். இது அவனுக்குத் தீமைதரத்தக்க தல்லவே ? அவ்வரசன் நம்மீது எந்த விரோதத்தையுங் கொள்ளவில்லை. எப்போதும் போலவே யிருக்கிருன் என்பது நான் சாரர்கள் மூலமாகத் தெரிந்துகொண்டேன். நாமிங்கே தங்கினது இதற்காகத் தான் என்முன்.

இவ்வாறு யௌகந்தராயணன் காரியத்தை நிச்சயித்துப் பேசிக் கொண்டிருக்கையில் மகதேசாதிபதியின் தூதுவனொருவன் அங்கே வந்தான். அவன் வருகையை வாயிற் காப்போன் வந்து தெரிவித்தான். உடனே தூதுவனும் உள்ளே பிரவேசித்து வந்தனஞ் செய்து உட்கார்ந்தான்.

தூதன் பின்வருமாறு அரசனைநோக்கி கூறுகிறான்.

பிரபுவே! தேவி பத்மாவதி எழுதி யனுப்பிய திருமுகங் கண்ட எமதரசன் மகததேசாதிபதி செய்தி சொல்லி யனுப்பி யிருக்கிறார். அதாவது "நான் எல்லாவற்றையுந் தெரிந்து கொண்டேன். அதனால் மிகவும் மகிழ்ச்சி யடைந்தேன். எந்த யத்தினம் செய்யப் பட்டதோ அதைத் தடையின்றிச் செய்யலாம். நாங்கள் வணங்குகிறோம்." என்று கூறுகிறார் என்றான்.

யௌகந்தராயணனைச் சார்ந்த நீதியென்கிற விருக்ஷத்தின் மலர் போன்றதும் ஸ்பஷ்டமுமான தூதனுடைய வார்த்தையைக் கேட்டு மகிழ்வுற்றான் உதயனன். பிறகு அந்தத் தூதனுக்கு நல்ல வெகுமதி தந்தனுப்பினான் அரசன். அப்பால் சண்டமாகாஸேனனுடைய தூதன் வந்து உள்ளே பிரவேசித்து அரசனடிபணிந்து, அவனைப் பார்த்துக் கூறுகிறான்.

தேவ! அரசன் நடந்த காரியத்தின் உண்மையை யறிந்துகொண்டான். அவர் சந்தோஷத்தால் சொல்லி யனுப்பியதாவது.

தமது மேன்மை அளவு கடந்தது. தமக்கு மகா புத்திசாலியாகிய யௌகந்தராயணன் மந்திரியாக விருப்பதனால் தமக்கென்றும் ஒரு குறைவும் வாராதென்பது நிச்சயம். வாசவதத்தையும் கிருதார்த்தையானாள். எனக்கு வாஸவதத்தை யெப்படியோ அப்படியே பத்மாவதியும் ஆகிறாள். அவள் எனக்கு வேறல்ல" என்று சொல்லுகிறார் என்றான்.

மாமனார் இவ்விதஞ்சொல்லி யனுப்பிய செய்திகேட்ட உதயனன் மகிழ்வுற்று யௌகந்தராயணனிடமும் வாஸவதத்தையினிடமும் மிக்க அன்புடையவனானான்.

பின் உதயனன் தனது மந்திரிமார்களுடன் கூடி மந்திராலோசனை செய்து கௌசாம்பி நகரத்திற்கு யாத்திரைபோகத் தீர்மானித்தான்.

# நான்காவது தரங்கம்.

அடுத்தநாள் உதயனன் தன் மந்திரிகளுடனும் மனைவிமார்களுடனும் லாவாணகத்திலிருந்து கௌசாம்பி நகரத்திற்குப் பிரயாணமானான். அப்பொழுது அவ்வரசன் சேனைகள் புவிமுழுதும் பரவும்படி சத்தமிட்டுக்கொண்டு சென்றன. அச்சேனைகள் பிரளயமல்லாத காலத்துக் கடல் நீர்போல் பரவி யிருந்தன. சிறந்ததோர் யானையின் மீது செல்லும் அவ்வரசன் ஆகாய வீதி வழியே சூரியன் ஓர் யானையின் மீது ஏறிச் சென்றாலெப்படியோ அப்படிக் காணப்பட்டான். உதயனன் வெண்குடை நிழலில் சூரியன்போல் செல்வது, சூரியனிடமிருந்து தேஜஸ்ஸை யடைந்த சந்திரன் சந்தோஷித்துச் சேவிப்பது போலிருந்தது. மகாதேஜஸ் வாய்ந்தவனும் எல்லோருக்கும் மேலாக விளங்குபவனுமாகிய அவ்வரசன் தன்னைச் சுற்றிலும் சிற்றரசர்கள் சூழச் செல்வது துருவமண்டலத்தைக் கிரகங்கள் சூழ்ந்து செல்வது போலிருந்தது. வாஸவதத்தை பத்மாவதி இவ்விருவரும் பெண் யானைகளின் மீதேறிச் செல்வது பிரத்தியக்ஷமாகவே ஸ்ரீதேவியும் பூதேவியும் அரசனை யனுசரிப்பதுபோல் காணப்பட்டது. மார்க்கத்தில் குதிரைகளின் கால் குளம்புகளின் அடையாளம் படிந்திருப்பது, அவ்வரசனால் பூமிதேவி அனுபவிக்கப்பட்டவள் போலிருந்தது.

இவ்வாறு வந்திமாகதர்கள் ஸ்தோத்திரஞ்செய்யப் பிரயாணமான அரசன் சில நாளைக்கெல்லாம் மகோற்சவம் கொண்டாடப்படும் கௌசாம்பி நகரம் வந்தான். அந்நகரமாகிய மாது யாத்திரைபோய்த் திரும்பி வரும் தன் பதியாகிய உதயனனை துவஜங்களாகிய சிவப்பு வஸ்திரத்துடனும், கவாக்ஷங்களாகிய விழித்த விழியுடனும், வாயிற்படியிற் காணப்படும் பூர்ணகும்பங்களாகிய ஸ்தனங்களுடனும், ஜனங்களுடைய கோலாகலமாகிய ஆநந்த சம்பாஷணையுடனும், உப்பரிகையாகிய ஹாஸ்யத்துடனும் வரவேற்பவளாக விளங்கினாள்.

இரண்டு மனைவிமார்களுடன் கௌசாம்பி நகரத்திற்குள் பிரவேசித்த அவ்வரசனைத் தரிசித்த அந்நகரத்தாரது சந்தோஷமானது வர்ணிக்கமுடியாத தாயிற்று. மனதைக் கவரத்தக்க மாதர்களின் முகங்கள் மிகுதியாக ஆகாயத்தில் நிறைந்தது. அது இவ்விருதேவிகளின் முகங்களால் ஜயிக்கப்பட்ட சந்திரனுடைய சேனைகளின்

தோற்றம் போற் காணப்பட்டன. காவாடத்தினருகே வந்து இமைகொட்டாது நிற்கும் ஸ்திரீகள், விமானத்துடன் வந்திருக்கும் அப்ஸர ஸ்திரீகளோ வென்றெண்ணும்படி நின்றார்கள். கவாடங் களிலும் சாளரங்களிலும் சம்பந்தப்பட்ட நேத்திரமுடைய சில மாதர்கள் மன்மதனுடைய நாராசங்களை யொழித்தவர்கள் போற் காணப்பட்டார்கள்.

அப்போது அரசனைப் பார்ப்பதில் மிகுந்த பிரீதியை யடைந்த ஒரு மாதின் நேத்திரமானது அவ்வரசனைப் பாராத செவிக்குச் சொல் லும் பொருட்டு அதனருகே சென்றதுபோல் காணப்பட்டது. அர சனைப் பார்க்க விரைந்தோடி வந்த ஒரு ஸ்திரீயின், பெருமூச்சோடு கூடிய ஸ்தனங்கள் கஞ்சுகத்தி னின்றும் ஆசையோடு வெளிப்புறப் பட்டனபோல் காணப்பட்டன. பரபரப்புடன் வரும்போது மற் றொரு மாதின் ஹாரங்களினின்று உதிரும் முத்துக்கள் அம்மாதின் மனதிலுள்ள ஆநந்த பாஷ்பத்தின் திவலைகள் சிதறுவதுபோற் காணப் பட்டன. சில ஸ்திரீகள் இந்த வாஸவதத்தைக்கு லாவாணகத்தில் அக்கினி பகவான் கெடுதி செய்திருப்பானாகில் அவன் பிரகாசமுள்ள வனை யாயினும் உலகத்தில் பேரிருளைத் தான் உபயோகிப்பானென்று சொல்லிக்கொண்டார்கள். பத்மாவதியைப் பார்த்த மற்றொரு மாது அவளுடைய தோழியிடம், 'தோழி'! சந்தோஷம்! இந்த பத்மா வதி தன் சக்களத்தியைத் தன் தோழியாகப் பாவித்திருக்கிறாள் என்றுகூறி வியப்படைந்தாள். மற்று மங்குள்ள சில மாதர்கள் "ஓகோ! பரமசிவனும் பத்மநாபனும் இவ்விருதேவிகளின் அழகைப் பார்த்தார்களில்லை. இது நிச்சயம்! பார்த்திருப்பார்களாகில் அவர் கள் உமாதேவியையும் லக்ஷ்மிதேவியையும் வெகுமானத்துடன் ஏன் அடைகிறார்கள் என்று பேசிக்கொண்டார்கள்.

இவ்வாறு உதயனன் வெகு ஜனங்களுடைய நேத்திரங்களுக்கு உற்சாகத்தைக் கொடுத்துக்கொண்டு தேவிமார்களுடன் தன் அரண் மனையிற் பிரவேசித்தான்.

காலைநேரத்தில் தாமரைத் தடாகத்திலும், சந்திரோதய காலத் தில் கடலிலும் எவ்விதம் பிரகாசமுண்டாகுமோ அவ்விதம் அச்சம யம் அரசனதரண்மனையில் பிரகாசமுண்டாயிற்று. அவ்வரண்மனை சிற்றரசர்களுடைய காணிக்கைகளால் அக்கணமே நிறைந்தது.

பிறகு உதயனன் இந்த அரசர்களுக்குச் சம்மானமளித்து அந்தப்புரம் சென்ருன். இரதிதேவிக்கும் பிரீதிதேவிக்கும் மத்தியிலிருக்கும் மன்மதனைப்போல் உதயனனும் வாசவதத்தை பத்மாவதி இவ்விருதேவிகளுக்கும் மத்தியிலிருந்து பலவித லீலைகளோடு அன்றைப்பொழுதைக் கழித்தான்.

மறுநாள் வழக்கம்போல் ஆஸ்தானமண்டபம் வந்து வீற்றிருந்தான் உதயனன். அப்பொழுது ஒரு பிராமணன் மந்திரியினிடம் வந்து "பிரபுவே! பாவிகளாகிய கோபாலர்கள் ஆரண்யம் சென்றிருந்த என் மைந்தனைக்காரணமில்லாமலே காலை வெட்டிவிட்டார்கள். விசாரிக்கவேண்டும் ஐயனே!" என்று முறையிட்டான். இது அரசன் செவிக்கெட்டியதும் அரசன் இரண்டு மூன்று கோபாலர்களை வரவழைத்து விசாரித்தான். அவர்கள் "மகாராஜாவே! நாங்கள் ஜனசஞ்சாரமே யில்லாத இடத்தில் விளையாடிக்கொண் டிருக்கிரும். எங்களுக்குள் தேவஸேனன் என்ற பெயருடைய ஒரு கோபாலன் இருக்கிருன். அவன் சில சமயம் ஒருயர்ந்த ஆசனத்தமர்ந்து நான் உங்களுக்கு அரசனுய் விட்டேன்" என்று கூறுவான். அப்போது எங்களுள் எவனும் அவனுத்தரவை மீறி நடப்பதில்லை. இப்படிப் பட்ட சமயத்தில் இந்த அந்தணனுடைய மைந்தன் அந்த வழியே சென்ருன். அவன் அந்த அரசனை மதியாமலும் வணங்காமலும் சென்ருன். அப்பொழுது நாங்கள் எமது அரசனுக்கிணைப்படி "பிள்ளாய்! அரசனை வணங்காமற் செல்லாதே" என்று சொன்னேம். அவன் எமது பேச்சுக்குச் செவிகொடாமல் மந்தகாசஞ் செய்தவாறே சென்ருன். அதனுல் எமதரசன் வணக்கமில்லாதவனுகிய "இவன் காலை வெட்டுங்க"ளென உத்தரவிட்டான். பிரபுவே! நாங்கள் அவ்வாறே இவனையோடிப் பிடித்து இவன் காலைவெட்டினேம்; பிரபுவின் உத்தரவை மீறுவதெப்படிச் சாத்தியமாகும்? என்ருன்.

இதைக்கேட்டுக்கொண் டிருந்த மந்திரி யௌகந்தராயணன் அரசனைத் தனிமையில் ஓரிடத்திற்கு அழைத்துச் சென்று கூறுகிருன். மகாராஜாவே! இந்தக் கோபாலர்கள் இப்போது பேசியதால் அந்த ஆரண்யம் நிதி நிறைந்ததாகும் என்று தோன்றுகிறது. அங்கே போய் வரலாம் என்ருன். பிறகு உதயனன் மந்திரி யௌகந்தராயணன் சொல்லியவாறே ஆரண்யம் செல்லப்புறப்பட்டான். கோபாலர்களையே முன்னிட்டுக்கொண்டு சேனைகளுடனும் வேண்

டிய உபகரணங்களுடனும் ஆரண்யம் போய்ச் சேர்ந்தான். அங்கே பூமியைப் பரீக்ஷித்துப் பார்த்து ஆட்களைக் கொண்டு வெட்டும்படி செய்தான். ஆழமாக வெட்டியதும் அங்கிருந்து யக்ஷனொருவன் தோன்றினன். அவன் அரசனைப் பார்த்து " உமது பிதா மகனுல் புதைக்கப்பட்ட நிதியிங்கிருக்கிறது ; நீ யெடுத்துக்கொள் " என்றான். அரசன் அந்த யக்ஷனை நல்ல பூஜை செய்தான். யக்ஷன் அரசனிடம் பூஜையைப் பெற்றுக்கொண்டு மறைந்தான். பிறகு அந்தப் பள்ளத்தில் பெரும் நிதி கிடைத்ததுமல்லாமல் ரத்தின ஸிம்மாஸன மொன்றும் கிடைக்கப் பெற்றான் உதயனன். அபிவிருத்தியாவதற்குக்காலம் வந்து விட்டால் மேலும் மேலும் வரிசையாக மங்களமே உண்டாகுமல்லவா ? பிறகு உதயனன் அவைகளை யெடுத்துக்கொண்டு கோபாலர்களை ஒழுங்குப் படுத்தி அழைத்துக் கொண்டு தன்னகரம் வந்தான்.

அந்த ஸிம்மாஸனத்திலுள்ள ரத்தினங்களின் காந்தி நாலாபக்கமும் பரவி நின்றது. அது உதயனனது வீரியத்தின் அபிவிருத்தியைக் காட்டுவதற் கொப்பாகவிருந்தது. அந்த ஸிம்மாஸநத்தைக் கண்ணுற்றாரனைவரும் ஆநந்தமடைந்தார்கள். பிறகு மந்திரிகள் மகாராஜனுக்கு ஜயமுண்டாகுமெனத்தீர்மானித்து உற்சவங் கொண்டாடினர்கள். ஆரம்பமுதலாக மங்களமே உண்டாய் வருவது காரியசித்தியைக் காட்டுகிறதல்லவா ? உதயனன் தன்னை வந்து யாசித்தவர்களுக்கு மேகம் மழை வருஷிப்பதுபோல் சொர்ணத்தை வழங்கினன்.

மறுநாள் மந்திரி யௌகந்தராயணன் அரசனது மனோபாவத்தை யறிந்துகொள்வதன் பொருட்டுச் சொல்லுகிறான்.

வள்ளலே ! " உமக்குக் கிடைத்திருக்கும் இந்த ஸிம்மாஸனம் வம்ச பரம்பரையாக யெல்லாராலும் அனுபவிக்கப்பட்டு வந்திருக்கிறது. ஆகையால் இதில் வீற்றிருந்து இதை யலங்கரிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன் " என்றான். அரசன் நீ சொல்வதுண்மைதான் ; எனது பிரபிதாமகர்கள் புவிமுழுவதையும் ஜயித்துப்பின் இந்த ஸிம்மாஸனத்தில் வீற்றிருந்தனர். அப்படி யிருக்கத் திசைகளெல்லாவற்றையுமே ஜெயிக்காத நான் இதில் வீற்றிருப்பதெனில் எப்படிப் பொருந்தும் ? சமுத்திரத்தை எல்லையாகக்கொண்ட இந்த பூமி

முழுவதையும் ஜயித்துப் பின் இந்தச் சிம்மாஸனத்தில் வீற்றிருப்பேன்; அல்லது இப்போது வீற்றிருக்கத் தகாது என்றான். நல்ல வம்சத்திற் பிறந்தவர்களுக்கு அபிமானம் என்பது தானே ஏற்படும்.

நிற்க; பிறகு யௌகந்தராயணன், பிரபுவே! நல்லது முதலில் கீழ்த்திசையை ஜயிக்க யத்தனிப்போம் என, அரசன் யௌகந்தராயணரே! வடக்கு முதலிய திசைகளிருப்பவர்கள் முதலில் கீழ்த்திசைக்குப் பிரயாணமாகிறார்களே அதன் நோக்கமென்னவென்றான். யௌகந்தராயணன், "தேவ! வடதிசை குபேரனைச் சார்ந்ததேயாயினும் மிலேச்சர்களின் சம்பந்தத்தால் கெட்டுப்போயிருக்கிறது. சூரியன் முதலியன அஸ்தமனமாகிறபடியால் மேற்றிசையும் சரியானதல்ல. தென்றிசையோ வெனில் அத்திசை சமீபத்தில் அரக்கர்களுக்குச் சொந்தமாயிருந்தது. அல்லாமலும் அத்திசையில் யமதரும ராஜனிருக்கிறான். கீழ்த்திசையிலோ சூரியன் உதயமாகிறான். இந்திரன் அங்கிருக்கின்றான்; கங்கையும் அங்கே செல்லுகிறாள். ஆகையால் கீழ்த்திசையே மற்றவைகளுட் சிறந்ததாகிறது. விந்தியமலைக்கும் கங்கைக்கும் மத்தியிலுள்ள தேசங்களில் எந்தத் தேசங்கள் கங்கையின் பாய்ச்சல் வசதியை யுடையனவோ அவைகளே சிறந்தனவென்று நிச்சயிக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் சுகம் பெற விரும்பிய அரசர்கள், முதன் முதலில் கீழ்த்திசையை நோக்கிச் செல்கிறார்கள். கங்கையைச் சார்ந்த தேசங்களில் வசிப்பதும் அதனாலே தான். தங்களுடைய முன்னோர்களும் கிழக்கு முதலாகத் தான் ஜயித்து வந்தார்கள். கங்கைக்குச் சமீபத்துள்ள ஹஸ்தினாபுரிதான் அவர்கள் வசித்து வந்த நகரம். இந்தக் கௌசாம்பி நகரம் வெகு சுந்தரமாக விருந்தது கண்டு சதானீகன் இந்நகரிற்குடி கொண்டு வசித்து வந்தான். ஸாம்ராஜ்யமானது புருஷ பிரயத்தினத்திற்குச் சுவாதீனமானதென்று கருதியே தேசத்தை ஒரு காரணமாகக் கருதவில்லை" என்றான். அரசன், யௌகந்தராயணரே! ஸாம்ராஜ்யம் பெற தேசநியமம் காரணமல்லவென்பது துண்மையே! நல்ல வலுவுடையவர்களுக்கு ஐசுவரிய விஷயத்தில் அவர்களுடைய பௌருஷமே தான் முக்கிய காரணமாகிறது. வலுவுடையான் வேறொரு ஆச்ரயமில்லாத ஒருவனே யாயினும் சம்பத்தையடைகிறான். வலுவுடைய வொருவன் வரலாறு நீங்கள் கேட்டதில்லை போலும்! என்றான்.

மந்திரிகள் அந்தக் கதையைச் சொல்லவேண்டுமென்று பிரார்த்தித்தார்கள். அரசன் வாஸவதத்தையும் பத்மாவதியும் அருகேயிருக்கும்போது அந்தக் கதையைச் சொல்லுகிறான்.

உச்சயினி யென்றொரு நகரமுண்டு. அது பூமியில் மிகவும் பிரசித்திபெற்றது. ஆதித்தியசேனன் என்றவொரு அரசன் அந்நகரத்தைப் பரிபாலித்து வந்தான். இவன் பராக்ரமத்திற்கு இருப்பிடம் போன்றவன். இவன் ஏகசக்ராதிபதியாக விருந்தமையால் சூரியனுடைய ரதம்போல் இவன் ரதமும் தடைபடுவதில்லை. பனிபோன்ற நிறமுள்ள இந்த ஆதித்யசேனனுடைய குடையானது விரித்துப் பிடித்தவுடன் அப்படியே ஆகாயம்போல் விளங்கும்; மற்றவர்களுடைய குடை திரும்பிவிடும். ஜலத்திற்குச் சமுத்திரம் பாத்திரமாக விருப்பதுபோல் இந்த அரசன் பூமியிலுள்ள ரத்தினங்களுக்கெல்லாம் பாத்திரமாக விருந்தான்.

இந்த பூபதி ஒரு சமயம் யாத்திரையாகப் புறப்பட்டுத் தன் சேனைகளுடன் கங்காநதிக்கரைக்கு வந்தான். அதையறிந்த அந்தப் பிரதேசத்துக்கே பிரபுவாகவிருந்த குணவர்மன் என்றவன் தன் பெண்ணைக் காணிக்கையாக அழைத்துக்கொண்டு அரசனிடம் வந்து அவனை வணங்கி "மகாராஜாவே! மூவுலகுக்கும் இரத்தினம் போன்ற இக்கன்னிகை என் வீட்டிற் பிறந்திருக்கிறாள். இவளுக்குத் தகுதியான நாயகன் தாங்களே யன்றி வேறெவருமில்லை" என்று சொல்லிப் பெண்ணைக்காட்டினான். அந்த அரசன், தன்தேக காந்தி திசைகளெங்கும் பரவ விளங்குபவளும், மதனனுடைய கிருகத்திற்குரிய இரத்தின தீபஜ்வாலை போன்றவளுமாகிய தேஜஸ்வதியென்ற அழகிய பெயர் கொண்ட அந்த யுவதியைக் கண்டான். அரசன் அவளுடைய தேஜஸில் ஈடுபட்டுக் காமாக்கினியால் தாப மடைந்தான். ஆகையால் அந்தப்பெண்மணியை யப்பொழுதே ஏற்றுக்கொண்டு குணவர்மனைச் சந்தோஷப்படுத்தினன். பிறகு அந்த ஸ்திரீரத்தினத்தை மணம் புரிந்துகொண்டு உச்சயினி நகரம் வந்து சேர்ந்தான்.

அப்பால் தேஜஸ்வதியினிடம் ஒரே நோக்க முடையவனாகி இராஜ காரியங்களையுங் கவனியாமல் அவளிடம் மிகுந்த அபிமானம் வைத்தான். அதனால் அவ்வரசனுடைய செவியானது, அருகே பிரஜைகள் கூக்குரலிட்டாலும் தேஜஸ்வதியின் மதுரமான சம்பாஷணையைவிட்டுத் திரும்பாமல் முளையடித்தவா றிருந்தது.

அந்த அரசன் அந்தப்புரம் சென்று வெகுகாலமாயும் வெளிப் புறப்படவே யில்லை. இப்படிச் சிலகாலமிருந்த பிறகு தேஜஸ்வதியி னிடம் அவ்வரசனுக்கு ஒரு குழந்தை பிறந்தது. பிறகு சத்துருக் களை ஜயிக்கவேண்டுமென்ற விருப்பமுண்டாயிற்று. தேஜஸ்வதிக் குப் பிறந்த பெண் சிறந்ததும் அற்புதமுமான ரூபமுடையவள். மூவுலகத்தையும் திருணமாக மதிக்கும்ரூபமுடையவள்போற் காணப் பட்டாள். தன் காந்தியால் தந்தைக்குச் சந்தோஷத்தையுண்டுபண்ணி னாள். அரசனதுள்ளத்தில்எழுந்த ஜயிக்கவேண்டும் என்ற எண்ண மானது அவனுக்குப் பராக்ரமத்தைக் கொடுத்தது.

இப்படி யிருக்கையில் ஒரு சிற்றரசன் இந்த ஆதித்யஸேனனை ஜயிக்கக்கருதிக் கர்வங்கொண்டு இவனை மதியாதிருந்தான். இதை யறிந்த ஆதித்யன், உச்சயினியிலிருந்து புறப்பட்டான். உடனே தேஜஸ்வதி யானைமீதேறி ஸேனைக்கு அதிதேவதைபோல் கூடவே புறப்பட்டாள்.

கர்வத்தில் யமதேவனை நிகர்த்த சிறந்ததோர் குதிரையின் மீது ஆதித்யசேனன் ஏறிக்கொண்டான். அந்தக் குதிரையானது வில்வ மரங்களுடன் கூடிய பெரிய தொரு மலைபோலிருந்தது. அது கழுத் தைத் தூக்கிக்கொண்டு கண்களால் பார்க்கும்போது என் வேகத் திற்கு இந்த பூமியானது போதுமானதாவெனப் பார்ப்பது போற் காணப்பட்டது. இப்படிப்பட்ட குதிரையின் மீது ஏறிக்கொண்டு சென்ற ஆதித்யசேன பூபதி சிறிது தூரஞ்சென்று சமமான பிர தேசத்தை அடைந்ததும் தேஜஸ்வதி பார்த்துக்கொண்டிருக்கக் குதி ரையை வேகமாகத் துரத்தினான். அப்பொழுது அதன் விலாப்புறத் தில் விழுந்த சவுக்கடியால் அது யந்திரத்திலிருந்து விடுபட்ட பாணம் போல் ஜனங்கள் ஒருவர் கண்ணுக்கும் புலப்படாமல் வெகு வேக மாக எங்கேயோ போய்விட்டது. அதுகண்ட சைன்னியம் தளர் வுற்றது. ஆயிரக்கணக்கான குதிரைவீரர்கள் அரசனைத் தொடர்ந் தோடினார்கள். அப்படியும் அரசனைக் கண்டுபிடிக்கமுடியவில்லை. அதனால் அரசனுக்கு என்ன நேரிடுமோவெனப் பயந்த தேஜஸ்வதி மிகுந்த வருத்தமடைந்து கண்களிலிருந்து நீர் பெருகக் கதறினாள். அப்படிக் கதறும் தேஜஸ்வதியை மந்திரி முதலானவர்கள் தேற்றி உச்சயினி நகரத்திற்கே மீண்டு மழைத்துச் சென்றார்கள்.

இங்கே வந்ததும் மந்திரிகள் நகரத்து ஜனங்களைச் சமாதானப் படுத்தியதுமல்லாமல் நகரத்தைச் சூழ நாலா பக்கங்களிலும் பகைவர் பிரவேசியாதவாறு தக்க காவலர்களை ஏற்படுத்திவிட்டு அரசனது வரலாறு அறிந்துகொள்ள முயற்சிக்கலாயினர்.

இங்கிப்படி யிருக்க, மனோவேகமாகச் சென்ற குதிரையானது சிங்கங்கள் சஞ்சரிப்பதும் சிரமத்தின்மேல் செல்லக்கூடியதுமாகிய விந்தியமலைச் சாரலுக்கு அருகே போய் தெய்வ வசத்தால் நின்றது. அரசன் உடனே குதிரையினின்று கீழே யிறங்கி அந்த அரண்யத்தை நாலாபக்கமும் பார்த்தான். திசை தெரியாது மயங்கினான். அதனால் பயந்து வியாகுலமடைந்தான். வேறு கதியெதுவும் காணாமற் கலங்கினான். இப்படிச் சிறிது நேரங்கழியவே மனதைத் திடப்படுத்திக் கொண்டு சிறந்த அந்தக் குதிரையை வணங்கி, "அசுவமே! நீ தேவனென்பதை நானறிந்துகொண்டேன். உன்னைப் போன்றவர்கள் யஜமானனுக்குத் துரோகம் செய்வது தகுமா? உன்னைச் சரணமடைந்தேன். என்னை நல்ல மார்க்கத்திற்கு அழைத்துக்கொண்டு போகவேண்டும்" என்றான். அது கேட்டதும் குதிரை தன் பூர்வ விருத்தாந்தத்தை நினைத்துக்கொண்டு அநுதாபமடைந்து தன் அறிவால் அதைக் கிரகித்துக்கொண்டது. உத்தமமான குதிரையானது தெய்வமல்லவா? பிறகு ஆதித்யஸேனன் குதிரையின் மீது ஏறிக் கொண்டான். குதிரை உடனே விரைந்து சென்று நிர்மலமும் குளிர்ச்சியுமான நீர்நிலயங்கள் அங்கங்கு காணப்படுவதும் சிரமத்தைப் போக்கக்கூடியதுமாகிய ஒரு நல்ல வழியிற்கொண்டுவந்து விட்டது. பிறகு அன்று மாலை உச்சயினி நகரத்திற்கு அருகே வந்தது. அப்பொழுது சூரியன் அஸ்தமன கிரியையடைந்தான். அது, அந்த அரசனது குதிரையின் வேகத்தைக்கண்டு சூரியனது ஏழு குதிரைகளும் வெட்கமடைந்து மறைந் தொளிந்தனவோ வென்றெண்ணக் கூடியதாயிருந்தது. உடனே இருளும் பரவ ஆரம்பித்தது. உச்சயினி நகரத்துக் கோட்டை வாயில்கள் மூடப்பட்டிருப்பதைக் கண்டான் அரசன். அவனது குதிரையும் அந்த வாயில்களைப் பார்த்து பயங்கரமான வெட்ட வெளியிலிருந்த மயானத்தையும் பார்த்தது. பிறகு குதிரையானது அரசனை பிராமணர்களுக்குரிய ஒரு மடத்திற் கொண்டு வந்து சேர்த்தது. அரசன் அன்றிரவை அந்த மடத்தில் கழிக்க வேண்டுமென்று கருதிக் குதிரையினின்று கீழே யிறங்கி அந்த மடத்திற்

பிரவேசித்தான். அங்கே வாசஞ்செய்யும் அந்தணர்கள் இவன் மயானங்காப்பவனோ திருடனோவெனச் சந்தேகித்து, எல்லோரும் சேர்ந்து அரசனை மடத்திற்குட் செல்லவொட்டாமற்றடுத்தார்கள். அப்போது அவர்களுக்குள் கலகமேற்பட்டு எல்லோரும் அங்கிருந்து வெளிப் புறப்பட்டார்கள். வேதமோதுபவராகிய பிராமணர்களின் கோபம் பயத்திற்கு ஆஸ்பதமானதல்லவா? அங்ஙனம் வெளிப்புறப்பட்ட பிராமணருள் விதூஷகனென்பவன் ஒருவன். அவன் அக்கினி தேவதையை உபாசிப்பவன். ஆகையால் அவன் அதை நினைத்தான். அந்தத் தேவதையை நினைத்ததும் அது பிரத்தியக்ஷமாய் வந்து நின்றது. அதனிடமிருந்து அந்த விதூஷகன் ஒரு கத்தியையடைந்தான். அவன் தீரனாகிய ஆதித்தியசேனனை யாரோ ஒரு தேவன் மறைந்துவந்திருக்கிறான் போலிருக்கிறது என்று கருதி மற்ற அந்தணர்களை அப்புறப் படுத்திவிட்டு அரசனை மடத்திற்குள் பிரவேசிக்கும்படி செய்தான். பிறகு அரசன் சிரமபரிகாரம் செய்துகொண்டதும் விதூஷகன் அவனுக்கு நல்ல ஆகாரத்தைக் கொடுத்துபசரித்தான். அசுவமும் சிரம பரிகாரஞ் செய்துகொண்டது. பிறகு விதூஷகன் அரசனைப் பிரபுவே! நான் பக்கத்திலிருந்து உம்மைக் காத்துவருகிறேன்; நீங்கள் சுகமாகப்படுத்து நித்திரை செய்யுங்கள் என்று கூறி ஒரு படுக்கை விரித்துக்கொடுத்தான். அரசனுடைய குதிரையின் மீதிருந்த ஜேணங்களை இறக்கி அதை நல்ல இடத்திற் பிடித்துக் கட்டிப் புல் போட்டான்.

பிறகு விதூஷகன் தனக்குக் கிடைத்த கத்தியைக் கையில் வைத்துக்கொண்டு அரசனிடமிருந்து காவல்புரிந்து வந்தான். அப்பால் விடியுந்தருணத்தில் அரசன் விழித்துக்கொண்டான். அது கண்டவிதூஷகன் அரசனிடம் தெரிவிக்காமலே குதிரைக்கு ஜேணம் முதலியன பூட்டிப்பிரயாணத்திற்குத் தயார் செய்தான். பிறகு ஆதித்தியசேனன் விதூஷகனிடம் விடைபெற்றுக்கொண்டு குதிரையின் மீதேறிப்புறப்பட்டு உச்சயினி நகரத்திற்குள் சென்றான். அரசனது வரவையறிந்த அந்நகரத்து ஜனங்கள் யாவரும் கரைகடந்த களிப்பெய்தினர். இராஜாங்கத்தாரனைவரும் அரசனை யெதிர்கொண்டு சென்று அழைத்தனர். அரசனும் மிக மகிழ்ச்சியுடன் தனதரண்மனை யடைந்தான். தன் புருஷனைக் கண்ட தேஜஸ்வதி தான் பிறந்தது முதல் என்று மடையாத சந்தோஷ மடைந்து ஆலிங்கனம் செய்து கொண்டாள்.

அன்று பொழுது கழிந்ததும் மறு நாள் ஆதித்யஸேனன், மடத்திலிருந்த விதூஷகனையும் மற்றுமுள்ள அந்தணர்களையும் வரவழைத்துத் தான் அங்கு வந்து தங்கி இரவு நடந்ததைச் சபையில் வெளிப்படுத்தி அதே நிமிஷத்தில் தன்னை அன்போடு வரவேற்றுபசரித்து விதூஷகனுக்கு நூறு கிராமங்களை வெகுமதியாகக் கொடுத்தான். அல்லாமலும் அவனைப் புரோகிதனுகவும் ஏற்படுத்திக்கொண்டான். இச்செய்தி யறிந்த நகரத்தாரனைவரும் சந்தோஷமடைந்தார்கள். அந்த விதூஷகன் அப்போதே ஸாமந்தராஜனுக ஆனுன். பெருந்தன்மையுள்ளார்க்குச் செய்த உபகாரம் வீணுவதுமுண்டோ!

அப்பால் விதூஷகன் தான் அரசனிடமிருந்து சம்மானமாகப் பெற்ற நூறு கிராமங்களையும் மடத்திற்கு எல்லோருக்கும் பயன்படும்படி கொடுத்துவிட்டான். தான் ஆதித்தியஸேனனிடம் சுகமாக விருந்து வந்தான்.

இப்படிச் சில காலஞ்சென்றதும் மடத்து வேதியர்களனைவரும் பணக்கொழுப்பில் கருவங்கொண்டு அந்த விதூஷகனை மதியாது தங்களிச்சைப்படி நடந்தார்கள். ஏழு கிரகங்கள் ஒரே ஸ்தானத்திலிருந்து ஒன்றுக்கொன்று பேதமடைந்து துன்பப்படுத்துவதுபோல் இவர்கள் தங்களுக்கிடையே யகப்பட்ட கிராமத்தைச் சீர்குலையும்படி செய்தார்கள். இவ்வாறு அவ்வந்தணர் மரியாதை தவறி நடந்து வருகையில் விதூஷகன் அவர்களைச் சிறிதும் லக்ஷியம் செய்வதில்லை. தைரிய முடையவர்களுக்கு அற்பமான விஷயங்களில் மதிப்பு வையாதிருத்தலே அழகாகுமல்லவா?

ஒரு சமயம் அவ்வந்தணர்களுக்குள் ஒரு கலகமுண்டாயிற்று. அப்பொழுது சக்ரதன் என்ருேர் அந்தணன் அவர்களிடம் வந்தான். அவன் மகாகொடியவன். பிறருக்கு நீதிபோதிப்பதில் குருடன். நல்ல வாக்குடையவன். இவன் அவ்வந்தணர்களை நோக்கி, "வஞ்சகர்களே! பிச்சையெடுக்கும் உங்களுக்கு இந்த ஸம்பத்துக்கிடைத்திருக்கிறது. இதைக் காப்பாற்றுவதைவிட்டு ஏன் ஒருவர் மேல் ஒருவர் கொண்ட பொருமையால் கிராமங்களை நாசஞ்செய்கிறீர்கள். உங்களுக்கு அதிசீக்கிரத்தில் பிச்சையெடுக்கும் தொழில் சித்திக்கும். நாயகனில்லாதிருந்த போதிலும் தெய்வாதீனமாக விருத்திக்கு வரக்கூடிய தாயின் அதுவே சிலாக்கியம். நாயகர்கள் பலராகவிருந்து அவர்களுள் ஒற்றுமையின்றிப் பொருள் வீணுவது சிலாக்கியமல்ல. ஆகையால்

உங்களுக்குக் கிடைத்திருக்கும் சம்பத்து நல்ல திறமையுள்ளோரால் இரக்ஷிக்கப்பட்டு அதனால் நீங்கள் பயன் பெறவேண்டுமாயின் என் சொற்படி ஒரு நாயகனை நீங்கள் ஏற்படுத்திக்கொள்ளுங்கள்" என்று கூறினான்.

இதைக்கேட்டதும் அவ்வந்தணர்கள் "நான் நாயகனாக விருப்பேன்; நான் நாயகனாக விருப்பேன்" என்று போட்டிபோட்டுக் கொண்டார்கள். சக்ரதன் அவர்களைப் பார்த்து நீங்கள் போட்டி போட்டுக் கொள்ளவேண்டாம்; நானொரு விஷயம் சொல்லுகிறேன். அப்படிச் செய்வீர்களா வென்றான். அவர்கள் அதென்ன, சொல்லுங்களென, சக்ரதன், இதோ அந்த மயானத்தில் மூன்று திருடர்கள் சூலத்திலேற்றப்பட்டு உயிர் துறந்து சவமாய்க் கிடக்கிறார்கள். அங்கே இரவில் சென்று அம்மூவருடைய மூக்கையும் எவனொருவன் நறுக்கிக்கொண்டு வருகிறானோ அந்தத் தைரிய சாலியே உங்களுக்கு நாயகனாக விருந்து வரட்டும் என்றான். அப்போது அங்கிருந்த விதூஷகன் பிராமணர்களைப்பார்த்து இதை நீங்கள் யாராவது செய்யலாமே; இதிலென்ன தோஷம்? என்றான். வேதியர்கள் "அப்படிச் செய்ய எங்களாலாகாது; எவன்திறமையுள்ளவனோ அவன் செய்யட்டும்" என்றார்கள். பிறகு விதூஷகன், "அந்தணர்களே! நான் இரவில் மயானம் செல்கிறேன்; அம்மூவருடைய மூக்கையும் நறுக்கிக்கொண்டு வந்து உங்களுக்குக் காட்டுகிறேன்" என்றான். அந்தணர்கள் "நீர் அப்படிச் செய்வீரே.யாயின் நாங்கள் தங்களையே எங்களுக்கு யஜமானனாக ஏற்றுக் கொள்கிறோம்" என்று வாக்களித்தார்கள்.

பிறகு அன்றிரவில் விதூஷகன் அந்தணர்களிடம் சொல்லிக் கொண்டு மயானம் சென்றான். முன் தனக்கு அக்னிபகவான் கொடுத்த கத்தியை நினைத்தான். உடனே அக்கத்தி அவன்கைக்கு வந்தது. அப்பால் வீரனாகிய விதூஷகன், டாகினிகள், கழுகுகள், காக்கைகள், இவற்றின் சத்தமுடையதும், கொள்ளிக் கட்டையை முகத்திலுடைய மிருகங்கள் காணப்படுவதும், அந்தக் கொள்ளிக் கட்டையின் அக்னியால் பிரகாசிப்பதும், ஜதைகளில் மூண்டெரியும் தீயின் பிரகாச முடையதும், பயங்கரமானது மாகிய மயானத்தின் நடுவே சென்று அங்கு சூலத்திலேற்றப்பட்டுள்ள மூவரையுங் கண்டான். அவர்கள் முகமானது மேல் நோக்கியவாறிருந்தது. எங்கே

யாரேனும் மூக்கை நறுக்கி விடுவார்களோ வெனப் பயந்துதான் அவர்கள் அவ்வாறிருக்கிருர்களோ வெனக் காணப்பட்டது. அவர்களின் அருகே விதூஷகன் சென்றுன். வேதாளங்களை யதிஷ்டானமாக வுடைய அவர்கள் விதூஷகனைத் தங்கள் கையையோங்கி யடித்தார்கள். விதூஷகனும் அப்பொழுது அஞ்சாமல் அசைவற்றிருந்து தன் கைக் கத்தியால் அவர்களைத் தொந்தரவு செய்தான். தீரர்கள் மனதிற்கொண்ட பிரயத்தினமானது பயத்திஞல் குறைவடைவதுண்டா?

இவ்வாறு தைரியமாய்ப் போராடவே வேதாளங்கள் பயந்து விலகின. பின் அவர்களின் மூக்கைச் சுளுவாக அறுத்து வஸ்திரத்தில் மூடியெடுத்துக்கொண்டு திரும்பினுன். அப்போது வழியில் ஒரு துறவி ஒரு பிணத்தின் மீதுட்கார்ந்திருந்து தவம்புரிவதைக் கண்டான். அவனது மர்மமறிய எண்ணங்கொண்ட விதூஷகன் அவனை யறியாமல் அவனுக்குப் பின்புறம் சென்று மறைந்திருந்தான்.

பிறகு ஒரு கணப்போதுக்கெல்லாம் துறவிக்குக் கீழே யிருந்த சவமானது பூத் என்று சத்தஞ்செய்தது. அதன் முகத்திலிருந்து ஜுவாலையுண்டாயிற்று. நாபியிலிருந்து கடுகுகள் வெளிப்பட்டன. அவைகளைத் துறவி யெடுத்துக் கொண்டு எழுந்திருந்து கையால் பிணத்தையடித்தான். உடனே வேதாளத்தின் அதிஷ்டானமான அந்தப் பிரேதம் பனைமரம் போன்ற ஆகிருதியோடு எழுந்தது. அப்பால் அந்தத் துறவி அதன் தோளின் மீதேறிக் கொண்டான். உடனே பிரேதம் நடந்தது. அதை விதூஷகன் பின் தொடர்ந்தான். சிறிது தூரம் சென்றதும் அங்கொரு காத்தியாயனியின் ஆலயம் காணப்பட்டது. துறவி அந்த ஆலயத்தையடைந்ததும் வேதாளமாகிய அந்தப் பிரேதத்தின் தோளி விருந்து இறங்கி ஆலயத்திற்குள் நுழைந்து கர்ப்பகிரகம் சென்றுன். வேதாளம் உடனே பூமியில் விழுந்தது. விதூஷகன் இவற்றை யெல்லாம் வெகு ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொண்டிருந்தான்.

கர்ப்பகிரகம் சென்றதுறவி தேவியைப் பார்த்து, கைகுவித்து நின்று, "உனக்கு மகிழ்ச்சி யுண்டாயிருந்தால் நான் கோரும் வரனை யளிக்கவேண்டும். அப்படியில்லையாயின் என் சரீரத்தை உனக்குப் பலியாகத்தந்து உன்னைத் திருப்தி செய்து வைக்கிறேன்" என்றுன். இப்படிக் கர்வத்துடன் பேசியதற்குக் கர்ப்ப கிரகத்திலிருந்து ஒரு

விடை யளிக்கப்பட்டது. அஃதென்னவெனில், "ஆதித்யஸேன மகாராஜனுடைய கன்னிகையைக் கொண்டுவந்து இங்கே பலி கொடுப்பாயாயின் உன் மனோபீஷ்டம் நிறைவேறும்" என்பதே.

இதைச் செவியுற்ற துறவி உடனே அங்கிருந்து புறப்பட்டு வேதாளத்தினருகே வந்து அதைக் கையால் தட்டினான். அது உடனே பூத்காரம் செய்துகொண் டெழுந்தது. உடனே அதன் மீது துறவி யேறிக்கொண்டான். ராஜகுமாரியைக் கிரகித்துக் கொண்டு வரக் கருதி ஆகாயமார்க்கமாகச் சென்றான்.

இவற்றைக் கவனித்துக் கொண்டிருந்த விதூஷகன், ஆச்சரிய மடைந்து இவன் எப்படி ராஜ குமாரத்தியைக் கொண்டுவந்து இங்கு பலி கொடுக்கிறான் பார்க்கிறேன்; என் உயிர் இருக்கையில் இந்தத் துஷ்டபுத்தியுடைய துறவியின் இப்படிப்பட்ட பிரயத்தினமும் முடிந்து விடுவதா? பார்க்கிறேன் இங்கிருந்தே என நினைத்து அங்கேயே யிருந்தான்.

ஆகாய வழியே சென்ற துறவி அரசனதரண்மனை யடைந்ததும் சாளரத்தின் வழியே உள்ளே பிரவேசித்து அங்கு நித்திரை புரிந்து கொண்டிருந்த இராஜ குமாரத்தியைக் கிரகித்துக் கொண்டு ஆகாய மார்க்கமாகவே வந்தான். இருள்மயனாகிய இராகு சந்திரனைக் கிரகித்தது போலிருந்தது அது. அந்தக் கன்னிகை ஆகாய வழியில் விழித்துக் கொண்டா ளாதலால் தானிருக்கும் நிலைமை இன்னதென்றறிய வொண்ணாது பயந்து ஆ! அம்மா! அம்மா! என்று கதறத் தொடங்கினாள். துறவி அதைப் பொருட் படுத்தாது கணநேரத்தில் ஆலயத்துக்குக்கொண்டு வந்திறக்கி தேவியின் சன்னிதியின் முன்பு நிறுத்தி அக்கன்னிகையைக் கொல்ல யத்தனித்தான்.

இப்போது விதூஷகன் சரேலென்று தன் கைக் கத்தியுடன் ஆலயத்திற்குட் சென்று "அடா பாவி! மாலதீபுஷ்பத்தைக் கல்லாலடிக்கப் பார்க்கிறாயே! மதியீனா! துஷ்டா! என்றுரைத்துத் துறவியின் மயிரைப் பிடித்திழுத்து அவன் சிரசைத் தன் கைக் கத்தியால் சேதித்தான். அது கண்ட இராஜகுமாரி அஞ்சி நடுங்கினாள். பிறகு சற்று நிதானித்துச் சமாதானப் படுத்தினான். பிறகு அந்த த்தீரன் ஆ! இந்த இராஜ கன்கைனியை நான் எவ்வாறு அரண்மனை கொண்டு போய்ச் சேர்ப்பே னென்று ஆலோசித்தான். அப்போது, "ஓ விதூஷக! நீ இந்தத் துறவியை வதஞ் செய்தாயன்றோ? இவன்

ஏறிவந்த வேதாளமொரு ஸித்த புருஷன். இந்தத் துறவி கடுகுகளை யும் ஸித்த புருஷனையும் தன் சுவாதீனப் படுத்திக் கொண்டான். பிறகு இந்தத் துறவிக்குப் புவியிலுள்ள இராஜ்யத்திலும் இராஜ குமாரிகளிடத்திலும் விருப்ப முண்டாயிற்று. அந்த ஸித்த புருஷ னாகிய வேதாளத்தால் இந்தத் துறவி மோசம் போனான். ஓ வீர! இவனிடமிருக்கும் கடுகுகளை நீ கிரகித்துக்கொள்; அதனால் இந்த ஓரிரவு மாத்திரம் உனக்கு ஆகாயவழியே செல்லத்திறமையுண்டாம்" என்று ஆகாயவாக்குண்டாயிற்று. இதைக் கேட்டதும் விதூஷகன் பரமாச்சரியமும் சந்தோஷமு மடைந்தான். மகாமகிமை வாய்ந் தவர்களுக்குத் தேவதைகளு மனுக்கிரகம் செய்யுமன்றோ?

பிறகு விதூஷகன் அந்தத் துறவியின் வஸ்திரத்தின் நுனியில் முடிந்திருந்த கடுகுகளைக் கிரகித்துக் கொண்டான். உடனே இராஜ கன்னிகையை யழைத்துக் கொண்டு வெளியே வந்தான். அப் போது "ஓ விதூஷக! நீ இம்மாதக் கடைசிக்குள் மறுபடியும் இந்த ஆலயத்திற்கு வரவேண்டும், இதனை மறக்கக்கூடாது" என்றோர் ஆகாயவாக்குண்டாயிற்று. விதூஷகன் "ஆகா அவ்வாறே செய்கி றேன்; மறப்பதில்லை" என்று கூறி இராஜ குமாரியை எடுத்துக் கொண்டு தேவியை ஸ்மரித்தான். உடனே ஆகாயமார்க்கத்தில் கிளம்பி அவ்வழியே அரண்மனையடைந்து இராஜகுமாரத்தியை முன் பவள் சயனித்திருந்த படுக்கையிற்கிடத்திவிட்டு அவளைச் சமாதானஞ் செய்து, "அம்மணீ! பொழுதுவிடியுமாயின் நான் ஆகாயமார்க்கத் தின் வழியே செல்லமுடியாது; விடிந்த பின் நானிங்கிருந்து செல் வேனேயாயின் என்னை யெல்லோரும் கண்டுகொள்வார்கள். அது நல்ல எண்ணத்துக்கு இடந்தராது. ஆகையால் நான் இப்போதே செல்கிறேன் என்றான்.

இவ்வாறு விதூஷகன் கூறவே பாலையாகிய அந்த இராஜ கன்னிகை பயந்து, நீர் இவ்விடம் விட்டுச் செல்வீரேயாயின் என் பிராணன் அக்கணமே என்னுடலை விட்டுப் பிரிந்து விடும். மகா பாக்கியசாலியே! நீர் போகவேண்டாம். மீண்டும் எனக்கு உயிர்ப் பிச்சை தாரும்; சரணம் புகுந்தவர்களது காரியத்தைக் கவனிப்பது சாதுக்களின் கடமையல்லவா? என்றாள். விதூஷகன் நாம் இந்த அரண்மனையை விட்டுச் செல்வோமாயின் இந்த இராஜ கன்னிகை பிராணனை விடுவாளென்பது நிச்சயம்; அப்படி நேரிடின் நாம் அரச

னிடம் விசுவாசம் வைத்திருக்கிறோ மென்பது ஏற்படுமோ? ஒருக்காலும் ஏற்படாது; ஆகையால் நாமிங்கிருக்கத் தான் வேண் டும் என்று நிச்சயித்து அங்கேயே யிருந்தான். இது வரையில் மிகுந்த சிரமப்பட்டு இப்படிப் பட்ட வீரச் செயல்களையெல்லாம் செய்ததனால் படுத்துச் சிறிது நேரத்திற் கெல்லாம் நித்திரை போய் விட்டான். இராஜகன்னிகைக்கோ அன்றிரவுமுழுதும் நித் திரை பிடிக்கவில்லை. பிறகு பொழுது நன்றாய் விடிந்தது. அப் பொழுதும் விதூஷகன் விழித்துக் கொள்ளவில்லை. இராஜ குமாரி யும் இவர் நம் பொருட்டு வெகு சிரமப்பட்டிருக்கிறார்; சிரமம் நீங்க நித்திரைபுரியட்டுமென்று எழுப்பாமலிருந்து விட்டாள். பின் அந்தப்புரத்து ஸ்திரீகள் அங்குவந்து விதூஷகன் படுத்து நித் திரைபுரிவதைக்கண்டு இவன் இங்கே எப்படி வந்தானென்கிற ஆச் சரியத்துடன் அரசனிடம் சென்று தெரிவித்தார்கள். அரசன் அத னுண்மை தெரிந்துவரத் துவாரபாலகனை யனுப்பினான். துவாரபால கன் வந்து பார்த்து விதூஷகன் இங்குவரக் காரணமென்ன வென்று யோசித்துக் கொண்டிருக்கையில் இராஜகுமாரி நடந்ததை நடந்தபடி யவனிடம் தெரிவித்தாள். துவாரபாலகன் அச்செய்தி கேட் டதும் ஆச்சரியமடைந்து அரசனிடம் வந்து இராஜகுமாரத்தி தெரி வித்தபடி சொன்னான். அரசன் அதைக்கேட்டதும் இதென்ன அதி யற்புதமாக விருக்கிறதென்று மனதிற் பிரமங்கொண்டான்.

பிறகு சற்றுப் பொறுத்ததும் அந்தப் புரத்திலிருந்த விதூஷ கனை வரவழைத்தான். அவனைப் பார்த்து "நடந்த செய்தியென்ன? எதுவும் விடாமல் தெரிவிக்கவேண்டும்" என்றான். விதூஷகன் ஆதிமுதல் நடந்ததெதையும் விடாமல் அரசனிடம் தெரிவித்துத் தான் வஸ்திரத்தில் முடிந்துவைத்திருந்த திருடர்களின் மூக்கையும் துறவியினிடமிருந்து எடுத்த கடுகுகளையுங் காட்டினான். இவற்றைப் பார்த்த ஆதித்தியஸேனன் விதூஷகன் தெரிவிப்பது உண்மையென நம்பி மடத்து அந்தணர்க ளனைவரையும் வரவழைத்து அவர்களை விசாரித்து அவர்கள் கூறிய வாக்குமூலத்தையும் பெற்றுக்கொண் டான். உடனே தானே மயானம் சென்று அங்கு மூக்கில்லாம லிருந்த திருடர்கள் மூவரையும் பார்த்தான். அதமனாகிய துறவி யின் தலைவெட்டுண்டு கிடப்பதையுங் கண்டான். பிறகு விதூஷக னிடம் விசுவாசங்கொண்டான், பரமாச்சரியமடைந்தான். தன்

பெண்ணுக்குப் பிராண பிச்சை தந்த அந்த விதூஷனுக்கே அவளை விவாகஞ்செய்து கொடுத்தான். உபகாரம் செய்தவரிடம் சந்தோஷ மடைந்தவர்களுக்குக் கொடுக்கக்கூடாத பொருளுமொன்றுள்ள தாகுமோ?

விதூஷகன் இராஜ குமாரியின் கை பிடித்தவுடன் இலக்ஷ்மியை யடைந்தவன் போலானான். இதனால் அந்த இராஜ குமாரத்தியின் கரத்தைத் தாமரை மலராகக் கருதி அங்கு இலட்சுமி வசித்து வந்தா ளெனத் தெரிகிறது. சிறந்த கீர்த்தி பெற்ற அந்த விதூஷகன் தன் மனைவியுடன் அந்த அரசனது அரண்மனையிலே வெகு சுகமாக வசித்து வந்தான்.

இப்படியிருந்து வருகையில் ஒரு நாள் இரவில் இராஜகுமாரத்தி விதூஷகனைப்பார்த்து "நாதா! இம்மாதக் கடைசியில் என் ஆலயத் திற்கு வா வரத்தவறாதே" என்று ஆகாயவாக் கொன்று ஆலயத்தி லுண்டானது தங்களுக்கு நினைவிலில்லை போலிருக்கிறது? மாசம் ஆய்விட்டதே. தாங்கள் மறந்து போய் விட்டீர்கள் என்றாள். அது கேட்ட விதூஷகன் சமயத்தில் நினைப் பூட்டியதனால் மிகுதி யும் சந்தோஷமடைந்து, சுந்தரி! உனக்கு நல்ல ஞாபகமிருக்கிறது. நான் அதைமறந்தே போய்விட்டேன் என்று சொல்லி ஆலிங்கனஞ் செய்து கொள்வதாகிய சிறந்த வெகுமதியை யளித்தான். பிறகு இராஜகுமாரி நித்திரை போய் விட்டாள். அப்பால் விதூஷகன் கையில் கத்தியை யெடுத்துக்கொண்டு காளி கோயிலுக்குச் சென்று தேவி! அடியேன் விதூஷகன் வந்திருக்கின்றேன் என்றான். உடனே உள்ளே போகலாமென்று யாரோ சொன்னது விதூஷகன் செவியிற் பட்டது. பிறகு விதூஷகன் உள்ளே சென்று திவ்யமான வாஸஸ் தானமும் அதில் தேவ சௌந்தரிய மமைந்த வொரு கன்னிகையு மிருக்கக் கண்டான். அவள் இரவில் பிரகாசிக்கும் சந்திரிகை போலிருந்தாள். பரமசிவனுடைய கோபத்திற் கிலக்காகிச் சாம்ப லான மன்மதனை யுயிர்ப்பிக்கச் செய்யும் ஔஷதிபோன்றிருந்தாள். அக்கன்னிகையை விதூஷகன் கண்டதும் கரைகடந்த ஆச்சரியம் அடைந்தான். அந்தக் கன்னிகை விதூஷகனைப்பார்த்ததும் "உமது வரவு நல் வரவாகுக" என்று கூறிவரவேற் றுபசரித்துக் கூறுகிறாள்.

நானொரு வித்தியாதர ஸ்திரீ. என் பெயர் பத்ரை. நான் என் விருப்பப்படி சஞ்சரிக்கும் இயல்புடையவள். ஆகையால் முன்பொரு

சமயம் தங்களை நான் இங்கே பார்த்தேன். அப்பொழுதே உமது குணங்களுக்கு ஈடுபட்டவளானேன். உமக்காகவே நானிங்கேயிருக்கிறேன். ஓ சுந்தர! இச்சரீரத்தை உமக்கே கொடுக்கிறேன். நீர் என்னை மணம்புரிந்துகொள்ள வேண்டும் என்ருள். விதூஷகன் அவ்வாறே செய்கிறேனென்று கூறி அப்போதே காந்தர்வ விதிப்படி மணஞ்செய்துகொண்டான். அங்கேயே தேவபோகத்தை யடைந்தான். தனது பௌருஷத்தின் பலனின் பெருமை போன்ற அந்த பத்ரையுடன் அன்றிரவைச் சந்தோஷமாகக் கழித்தான்.

இங்கிப்படி யிருக்க, விடியுந்தருணத்தில் இராஜகுமாரத்தி விழித்துக்கொண்டு அருகே யிருந்த விதூஷகனைப் பார்த்தாள். அவனைக் காணுமல் மிகுந்த துக்கமடைந்து அங்கிருந்து தன் தாயாரிருந்த இடத்திற்கு வந்து, உண்மை பேசினுல் எங்கே தாய் கோபிப்பாளோ வென்று பயந்து "அம்மா! என் கணவன் இராத்திரி எங்கேயோ போய்விட்டா" ரென்று கூறிக் கண்கலங்கினுள். பிறகு இச்செய்தி ஆதித்தியஸேனன் செவிக்கெட்டியது. அவன் அதனுல் மிகுந்த வருத்தமடைந்து விசாரிக்கத் தொடங்கினுன்.

அப்பொழுது இராஜகுமாரத்தி, "பிதாவே! மயானத்திற் கப்பாலுள்ள தேவியின் ஆலயத்திற்குச் சென்றிருப்பார் என்றெண்ணுகின்றேன்" என்ருள். அரசன் அந்த ஆலயத்திற்குச் சென்று தேடினுன். வித்யாதர ஸ்திரீயின் வித்தையின் மகிமையில் மறைந்திருக்கும் அந்த விதூஷகன் அரசன் கண்ணுக்ககப்பட வில்லை. அரசன் பிறகு விசனத்துடன் திரும்பிச் சென்ருன். தன் தந்தை விசனத்துடன் திரும்பியதையறிந்த இராஜ குமாரத்தி மிகுந்த துக்கமடைந்து தன் தேகத்தைத் தியாகஞ்செய்வதற்கு எண்ணினுள்.

அப்பொழுது ஒரு ஞானி அங்கே ப்ராப்தமாகிக் கூறுகிருர். "பெண்ணே! கெட்ட எண்ணங்கொள்ளவேண்டாம். உன்கணவன் சுகமாக இருக்கிருன். தேவபோகத்தை யனுபவித்துக் கொண்டிருக்கிருன். விரைவில் உன்னருகே வருவான்" என்று கூறிச் சென்ருர். இவ்வார்த்தையைக் கேட்டதும் இராஜகுமாரத்தி "பர்த்தா வருவார்" என்கிற எண்ணத்திஞல் தடைபட்ட உயிரை விடாது தரித்திருந்தாள்.

இங்கிப்படி யிருக்கட்டும். இனி விதூஷகனைக் கவனிப்போம். அவன் பத்ரை என்ற வித்யாதர ஸ்திரீயுடனிருக்கும்போது அங்கு

யோகேசுவரி என்னும் பெயர்கொண்ட பத்ரையின் தோழி வந்து அவளைத் தனிப்பட அழைத்துச் சென்று, "தோழி! நீ மானிடனோடு சம்பந்தப்பட்டமையால் உன்னிடம் வித்தியாதரர்கள் கோபங் கொண் டிருக்கிறார்கள். உனக்குக் கெடுதிசெய்ய யத்தனித்திருக் கிறார்கள். ஆகையால் இங்கிருந்துபோய் விடலாம். கிழக்குச் சமுத் திரக்கரையில் கார்க்கோடகம் என்றவொரு நகரமிருக்கிறது. அந் நகரத்திற்கப்பால் சீதோதை என்றொரு நதியோடுகிறது. அந்த நதி யைத்தாண்டி யப்பாற் சென்றால் உதயம் என்ற ஒரு மலைகாணப்படும். அதில் ஸித்தர்கள் வசிக்கிறார்கள். அங்கே வித்தியாதரர்கள் போக முடியாது. நீ இப்போது அங்கே போனால் தப்புவாய் மானிடனாகிய இந்தப் புருஷன் நிமித்தமாக நீ கவலைகொள்ளாதே. இவற்றை யெல் லாம் மானிடனாகிய விதூஷகனுக்குத் தெரிவித்த பிறகே நீபோ. பிறகு மகா தைரியவானாகிய இந்த விதூஷகன் அங்கே எப்படியும் வந்து சேருவான்" என்று கூறினாள்.

இவ்வாறு தோழி சொல்லியதும் பத்ரை பயந்து விதூஷகனிடம் அன்புள்ளவளேயாயினும் அவ்விதமே செய்கிறே னென்று தன் தோழியினிடம் ஒப்புக்கொண்டு விதூஷகனிடம் வந்து எல்லா வற் றையும் தெரிவித்து தன் மோதிரத்தை அவனிடம் கொடுத்து விட்டு விடியற் காலவேளையில் அந்தர்த்தானமாயினள். அவள் சென்றதும் விதூஷகன் தன்னை முன் தான் கண்ட தேவியின் ஆல யத்திருலிருக்கக் கண்டான். தான் கண்டகிருகத்தையும் பத்ரையை யும் பார்க்க வில்லை. முன் தான் பார்த்தவைகளும் நடந்ததும் ஏதோ வித்தையின் மகிமையா லேற்பட்டன வென்றறிந்தான். தன்கையில் மோதிர மிருப்பதைப்பார்த்து துக்கமும் ஆச்சரியமுமடைந்தான். அந்த பத்ரை கூறியது அவனுக்குச் சொப்பனம் போலிருந்தது. அதனால் விதூஷகன், இந்தப் பத்ரை தான் உதயமலைக்குப் போவ தாக நம்மிடம் தெரிவித்தே சென்றிருக்கிறாள். நாம் விரைவில் அவளையடைய அங்குச் செல்லவேண்டிய தவசியம். அதற்கு நாமொரு உபாயஞ்செய்யவேண்டும். எல்லாரையும் போல் நாமிருக்க லாகாது. அப்படி யிருந்தால் நம்மை ஆதித்தியசேனன் எங்கும் போகவிடமாட்டான் என்று நினைத்து உடனே அங்கிருந்த பழைய துணி யொன்றை யுடுத்துக்கொண்டு உடம்பெல்லாம் புழுதியைப் பூசிக்கொண்டு ஆ! பத்ரே! பத்ரே! என்று சொல்லிக்கொண்டே

ஆலயத்திலிருந்து வெளிப்பட்டான். அந்நகரத்தி லிருப்பவர்களெல்லாரும் விதூஷகன் பைத்திக்காரன்போல் வருவதைக்கண்டு ஆச்சரியமடைந்து ஆ! விதூஷகன் ஆ! விதூஷகன் வருகிறான்; இதென்ன இக்கோலமா யிருக்கிறான்? என்று கூறினார்கள். இச்செய்தி ஆதித்தியஸேனனுக்கெட்ட அவன் விதூஷகன் திரியுமிடத்திற்கு வந்து அவனிருக்கும் கோலத்தைக் கண்டு விசனமடைந்து அரமனைக்கழைத்துச் சென்றான்.

அங்கே விதூஷகனைக் கண்டபிருத்யர்களும் அரசனது பந்துக்களும் ஆச்சரியமும் விசனமுமடைந்து சில கேள்விகள் கேட்கத்தொடங்கினார்கள். அதற்கெல்லாம் அவன் ஆ! பத்ரே! பத்ரே! என்றே உத்தரங்கூறிவந்தான். வைத்தியர்களிடம் காட்டினார்கள். அவர்கள் தலைக்குத் தைலந்தேய்க்கும்படி கூறினார்கள். தைலந்தேய்த்த அக்கணமே விதூஷகன் சாம்பலையும் புழுதியையும் பூசிக்கொண்டான். இராஜகுமாரத்தி ஏதேனும் ஆகாரங்கொண்டு வந்து கொடுத்தால் அதை அவன் காலாலுதைத்துத் தள்ளிவந்தான். சில சமயம் தான் உடுத்துக் கொண்டிருக்கும் வஸ்திரத்தைக் கிழித்தெரியவும் தலைப்பட்டான்.

இப்படிச் சிலமாதங்கள் கழிந்தன. விதூஷகன் ஒன்றாலும் குணமடையாமை கண்ட ஆதித்யசேனன் "இவனுக்குச் சிகிச்சை செய்வதில் எந்தக்குணத்தையும் காணோம்; நாம் வீணாகச்சிரமப்படுத்துவது சரியல்ல. இப்படியே யிருந்து திடீரென்று உயிர் துறந்தானேயாகில் நமக்கு பிர்மஹத்தி தோஷமல்லவா வந்து சேரும். ஆகையால் இவனை இவனிச்சைப்படி விட்டு விடுவோம். அப்போது காலக்கிரமத்தில் தெய்வ வசத்தால் குணமேற்படக்கூடும்" என்று கருதி அவனை விட்டு விட்டான். பிறகு அந்த விதூஷகன் அங்கிருந்து வெளிப் புறப்பட்டு எப்போதும் போல் பிராமண உடுப்புடுத்துக் கண்டவிடமெல்லந் திரிந்தான்.

பிறகு அவன் தனக்குப் பத்ரை கூறியபடி கீழ்த்திசையைக் குறித்துச் சென்றான். வெகு நாள் வெகு தூரஞ் சென்ற பிறகு வழியில் பௌண்டர வர்த்தனம் என்னு மொரு நகர மிருக்கக் கண்டான். அந்நகரத்துள் பிரவேசித்துப் பார்க்கையில் அங்கொரு கிழ பிராமண ஸ்திரீயைக் கண்டு "அம்மா! நான் யாத்திரை செல்லும் அந்தணன்.

இன்றிரவு இங்குத்தங்க உத்தேசிக்கிறேன்" என்று கூறி அவள் வீட்டில் தங்கினன்.

அந்தக் கிழவி விதூஷகனுக்கு அதிதிகளுக்குரிய உபசாரங்களைச் செய்து பின் பவனருகே துக்கத்துடன் வந்து ஓ "குமாரா! இந்த கிருஹமும் இதிலுள்ளவை யாவற்றையும் உனக்கே கொடுத்தேன்" அதை நீ பெற்றுக்கொள். இனி நான் உயிருடனிக்கப்போகிறதில்லை என்றாள். விதூஷகன் கேட்டு ஆச்சரியமடைந்து ஏன் இவ்விதம் சொல்லுகிறாய் என்று வினவ, அந்த அந்தண ஸ்திரீ "ஓ குமாரா! கேட்கலாம்" என்று மறுபடியும் கூறுகிறாள்.

இந்த நகரத்தில் தேவசேனன் என்ற ஒரு அரசனிருக்கின்றான். அவ்வரசனுக்கொரு பெண் இருக்கிறாள். அப்பெண் இந்தப் புவிக்கொரு பூஷணமாக விளங்குகிறாள். அவளுக்கு அரசன் துக்கலப்திகை யென்று பெயரிட்டிருந்தான். அவன் அப்பெயரிட்டதற்குக் காரணம், அப்பெண் அரசன் துக்கங்கொண்டிருந்த சமயம் பிறந்தது தான் என்று சொல்லிக்கொள்கிறார்கள். அந்த துக்கலப்திகையை யரசன் கஜப தேசத்தரசனுக்கு விவாகம் செய்துகொடுத்தான். அவ்விறைவன் ஒரு நாள் சயனகிருகம் சென்று அங்கு யாதுகாரணத்தாலோமரணமடைந்தான். பிறகு தேவசேனன் மிகுந்த துக்கமடைந்து துக்கலப்திகையை வேறொரு அரசனுக்குக் கொடுத்தான். அவனும் அவ்வாறே மரணமடைந்தான். இந்தப் பயத்தால் வேறெந்த அரசர்களும் அந்த துக்கலப்திகையை மணஞ்செய்து கொள்ள விரும்பவில்லை.

இதனல் அரசன் மிகுந்த கவலையுடையவனாகித் தன் சேனாதிபதியை வரவழைத்து "நமது தேசத்துள்ள ஒவ்வொரு மானிடனையும் நாளுக்கொருவனாகத் தருவிக்கவேண்டும்; வருபவன் வேதியனாயினும் சரி, க்ஷத்திரியனாயினும் சரி, அவனை துக்கலப்திகையின் சயனகிருகம் சென்றுவரும்படி செய்யவேண்டும். அப்பொழுது எவ்வளவு பேர்கள் மரணமடைகிறார்கள்; எவ்வளவுகாலம் இந்தத் துன்பமிருக்கிறது. எவன் இந்தத் துக்கத்தைத் தொலைக்கிறான் என்று அறிந்து கொள்ளலாம். பிறகு எவன் இந்தச் சங்கடத்தைத் தீர்க்கிறானோ அவனுக்குத் துக்கலப்திகையைக் கொடுத்து நல்ல வெகுமதியும் கொடுக்கலாம்" என்று கூறினன். அற்புதமான செய்கையுடைய விதியின் கதியை தடுக்க யாவரோ திறமையுள்ளவர்கள்?

இவ்வாறு தேவசேனன் கட்டளையிட, சேனபதி ஒவ்வொரு நாளும் இவ்வூரிலுள்ள வீடுகடோறுஞ் சென்று ஒவ்வொரு வீட்டு ஆடவனையும் அரண்மனைக் கழைத்துப் போகிறான். அப்படி அரண்மனை சென்றவருள் ஒருவனாவது திரும்பி க்ஷேமமாக வந்து சேரவில்லை. எல்லாரும் இறந்துபோயினர். இந்த வாரத்தில் சேனாதிபதி என் வீட்டுக்கு வருவான், எனக்கு ஒரு பிள்ளை யிருக்கிறான். அவனிறந்து விட்டால் நானென்ன செய்வேன். எனக்கு வேறு கதியில்லையாகையால் என் பிள்ளை இறந்த செய்தி என் செவியிற் பட்ட அந்த க்ஷணமே நான் அக்கினிப் பிரவேசஞ் செய்யத் தீர்மானித்து விட்டேன். அப்படி நேரிடின் இந்த வீடு முதலியவற்றை யாரேனும் அடைய நேரிடும். நானிறந்த பின் ஒருவர் என் சொத்துக்களையடைவதைக் காட்டிலும் என் முழுமனதோடு இப்போது உனக்குக் கொடுக்க நான் மிகுதியும் விரும்புகின்றேன் என்றாள்.

இவ்விதங் கூறிய அக்கிழவியைப் பார்த்து விதூஷகன். "அம்மா! நீங்கள் இதற்காக விசனமடைய வேண்டாம். உங்களுடைய பிள்ளைக்குப் பதிலாக நான் சேனாதிபதியோடு அரண்மனை செல்கிறேன்; இவனை யெப்படி அரண்மனைக்கு அனுப்புவதென்கிற கருணை தாங்கள் என்னிடம் கொள்ளவேண்டாம். எப்படியாவது காரியம் சித்தியாவதைக் கவனியுங்கள். நான் எப்படியும் இதில் சித்தி பெறுவேன். அந்த யோக வல்லமை யென்னிடமிருக்கிறது. எனக்கு ஆங்கே பயங்கிடையாது" என்றான். கிழவி "அப்பா! நல்லது. என்னுடைய புண்யத்தினால் நீ இந்த ஆபத்திற்கு வந்துதவினாய். எனக்குப் பிராணனைக் கொடு. நீயும் நன்மையைத் தேடிக்கொள்" என்று கூறினாள். பிறகு அன்று மாலை சேனாதிபதியினால் அனுப்பப்பட்ட இராஜ கிங்கரர்கள் கிழவியின் வீட்டிற்கு வந்து இராஜனது உத்தரவைக் காட்டினார்கள். கிழவி விதூஷகனைக் காட்ட, விதூஷகன் கிழவியின் அனுமதியின் பேரில் அவர்களோடு சென்றான்.

எல்லோரையும்போல் விதூஷகனையும் அரசன் அவன் குமாரத்தியிருக்கும் அந்தப் புரத்திற்கு அனுப்பினான். அந்தப் புரத்தில் நல்ல கொழுப்புடனிருக்கும் இராஜகன்னிகையைக் கண்டான். புஷ்பம் நிறைந்தகொடியானது பிறரால் புஷ்பம் எடுக்கப்படாவிடின் எவ்வாறிருக்குமோ அவ்வாறிருந்தாள் அந்தக் கன்னிகை. அப்பெண்மணியைக்கண்ட விதூஷகன் சந்தோஷமடைந்தான். பிறகு இருவரும்

ஏற்கெனவே அலங்கரிக்கப்பட் டிருக்கும் மஞ்சத்தின் மீது சயனித்துக்கொண்டார்கள். படுத்துச் சிறிது நேரத்திற்கெல்லாம் இராஜ கன்னிகை நித்திரை போய்விட்டாள். விதூஷகன் அக்கினி பகவானை நினைத்தான். உடனே முன்பொரு சமயம் அவனுக்குக் கிடைத்த கத்தியை யடைந்தான். விதூஷகன் அதைப் பக்கத்தில் வைத்துக்கொண்டு "இங்கே யார் வந்து தினந்தோறு மானிடனைக் கொலை செய்கிறவன்; பார்க்கிறேன் அவனை" என்கிற யோசனையோடு விழித்துக்கொண் டிருந்தான்.

நல்ல நிசிவேளையாயிற்று. நகரத்து ஜனங்களெல்லோரும் நித்திரைபோய் விட்டார்கள். நிச்சப்தமா யிருந்தது. அப்போது ஒரு அரக்கன் கதவைத்திறந்து கொண்டு வாயிற் படியினருகே வந்து நின்று, அநேகமானிடர்களை நாசஞ்செய்த யமதண்டம் போன்ற தன் நீண்ட கரத்தை உள்ளே நீட்டினன். அது கண்ட விதூஷகன் சரேலென் றெழுந்து தன் கைக் கத்தியால் அவன் கரத்தைத் துண்டித்தான். அரக்கன் "நம்மை விட பலசாலி இங்கொருவனிருக்கிறான், இதிற் சந்தேகமில்லை; அவன் இத்தோடு நம்மைவிடாமல் துரத்தினால் என்ன செய்வ" தென்று பயந்து ஓட்டம் பிடித்தான். உடனே இராஜ கன்னிகை விழித்துக் கொண்டு ஒரு அரக்கன் கை வெட்டுண்டு கிடக்கக் கண்டு ஆச்சரியத்தையும் பயத்தையும் மகிழ்ச்சியையும் அடைந்தாள்.

பின் பொழுது புலர்ந்தது. அரசன் வழக்கம் போல் தன் பெண்ணின் அந்தப்புரம் வந்து பார்த்தான். அங்கே வாயிற் படிக்கருகில் இங்கே இனிவேறெவரும் நுழையக் கூடாது என்று விதூஷகன் பரிகம் என்ற ஆயுதத்தால் அடையாள மிட்டதற் கொப்பாகக் கிடக்கும் அரக்கன் கரத்தை அரசன் கண்டு ஆச்சரியமடைந்தான். பிறகு உள்ளே சென்று விதூஷகனைக் கண்டு அவனுடைய புத்திசாலித் தனத்திற்கும் சாமர்த்தியத்திற்கு மெச்சித் தன் குமாரத்தியை அவனுக்குக் கொடுத்ததுமல்லாமல் ஏராளமான திரவியத்தையும் கொடுத்தான். எல்லோரும் விதூஷகனை வாழ்த்தினார்கள்.

இலக்ஷ்மி தேவியே உருவமெடுத்து வந்ததற்குச் சமானமாகவிருக்கும் அந்த இராஜ கன்னிகை யோடு சில காலம் வசித்து வந்தான். பின் ஒரு நாளிரவு அவன் நித்திரை செய்கையில் விதூஷகன் பத்ரையை நினைத்துக் கொண்டு அக்கணமே ஒரு வருடனும் சொல்

லாமல் அங்கிருந்து பிரயாணமாய்ப் போய் விட்டான். காலையில் துக்கலப்திகை என்னும் அந்த இராஜ கன்னிகை மிகுந்த துக்க மடைந்து தன் தந்தையிடந் தெரிவித்தாள். அரசன் அது கேட்டு விசனப்பட்டானாயினும் அதை வெளிக்குக் காட்டாமல் துக்கலப் திகையிடம் "அம்மா! வருவான் உன் கணவன்; விசனப்படாதே" என்று கூறி அவளைத் தேற்றினான்.

விதூஷகன் நாடோறும் முன்போல் நடந்து சென்று கீழ் சமுத் திரக்கரையிலிருக்கும் தாம்பிரலப்திகை யென்னும் நகரத்திற்குப் போய்ச் சேர்ந்தான். அந்நகரில் அவனுக்கு ஸ்கந்ததாஸன், என்னு மொருவர்த்தகன் நண்பனானான். அவனுடன் சில நாளங்கிருந்தான். பின் ஒரு சமயம் அவன் கப்பற் பிராயணஞ்செல்லப் புறப்பட்டான். அப்போது அவன் விதூஷகனையும் தன்னோடு அழைத்துக்கொண்டான். வர்த்தகன் ஏராளமான திரவியத்தோடு கப்பலில் ஏறிச் செல்கை யில் நடுச் சமுத்திரத்தில் கப்பல் ஓரிடத்தில் எவனாலோ தடைசெய்யப் பட்டதுபோல் யாதொரு காரணமுமின்றி நின்று விட்டது. எந்தவித முயற்சியினும் கப்பல் இருந்த இடம் விட்டு அசையவில்லை. அப் பொழுது அந்த வர்த்தகன் மிக்க விசனமுற்று "எவன் இந்தக் கப் பலை இந்த இடத்திலிருந்து நகர்த்தி யோட்டுகிறானோ அவனுக்கு இதிலுள்ள பொருளில் பாதியையும் என் குமாரத்தியையும் தருகின் றேன்" என்று பிரதிக்ஞை செய்தான். ஸ்கந்ததாஸன் என்னும் வர்த்த கன் இவ்விதங்கூறக் கேட்ட விதூஷகன், வர்த்தகனைப் பார்த்து "அப்பா! நான் இந்தக் கடலுள் மூழ்கிக் கப்பல் இங்குத் திடீ ரென்று நின்றதற்குக் காரணந்தெரிந்து அதை நிவர்த்தித்து கப்பல் முன்போற் செல்ல முயற்சிக்கிறேன். என்னிடையில் ஒரு கயிறு கட்டி நீங்கள் பிடித்துக்கொள்ளுங்கள்; கப்பல் நகரத்தொடங்கியதும் என்னை மேலே இழுத்துக் கப்பலில் சேர்த்துக்கொள்ளுங்கள்" என்றான்.

ஸ்கந்ததாஸன் சந்தோஷமடைந்து அவ்வாறே செய்கிறேனென, கப்பலோட்டிகள் உடனே விதூஷகனிடுப்பில் கயிற்றைக் கட்டிச் சமுத்திரத்திலிறக்கினார்கள். விதூஷகன் சமுத்திரத்தில் மூழ்கிக் கப்பலின் அடிப்பக்கம் வரையிற் சென்று அங்கே கப்பலைத் தடுத்துக் கொண்டிருந்த பருத்த சரீரமுடைய ஒரு புருஷனின் காலைத் தன் கைக் கத்தியால் துண்டித்தான். தீர புருஷர்கள் எப்படிப்பட்ட

சமயம் வந்தாலும் கலங்கமாட்டார்கள் அல்லவா? உடனே கப்பல் நகரத் தொடங்கிற்று. வர்த்தகன், தான் பிரதிக்ஞை செய்தபடி பொருளையும் கன்னிகையையும் கொடுக்க மனம் வராமல் பேராசை கொண்டு விதூஷகனைத் தூக்கிக் கப்பலிற் சேர்ப்பதை விடுத்து அவன் இடையில் கட்டியிருந்த கயிற்றை யறுத்தெறிந்து விட்டுக் கப்பலை நடத்திக்கொண்டு போய்விட்டான்.

விதூஷகன் இடையில் கட்டியிருக்கும் கயிற்றின் பிடிப்பு நழுவியது கண்டு வர்த்தகன் நம்மை மோசஞ்செய்து விட்டானென்று தெரிந்து சிறிது கிலேசமுற்றான். ஆயினும் கொஞ்ச நேரத்தில் தைரியமடைந்து "செய்த நன்றியை மறந்தவர்களும்" பொருளில் பேராசைகொண்டு குருடாகிய துஷ்டர்களும் உபகாரஞ் செய்வதில் எண்ணமுடையவர்களாகார்கள்; இச்சமயம் அதைரியப்படலாகாது. ஆபத்து மிகவும் அற்பமேயாயினும் சத்துவ குணங்குறைந்தால், அந்த ஆபத்தைக் கடக்க முடியாது, என நினைத்து, முதலில் தான் வெட்டிய புருஷனுடைய காலின் மீதேறிக்கொண்டான். அது அவனுக்கு அச்சமயம் ஜலத்தில் நீந்துவதற்குதவி யாயிற்று. அந்த உதவியையும் தன் பலத்தையுங்கொண்டு கடலைக் கடந்தான். ஸத்வ குணமுடையவர்களுக்குத் தெய்வம் எந்த ஆபத்திலும் உதவி செய்யுமல்லவா?

ராமகாரியத்தின் பொருட்டுக் கடற்கரை வந்த வாயு புத்திரனாகிய மாருதி போன்ற பல சாலியாகிய அந்த விதூஷகனின் சம்பந்தமாய் அப்போது ஒரு ஆகாயவாக்குண்டாயிற்று. அதாவது, "நல்லது நல்லது; உன்னைத் தவிர பலசாலி வேறுயாரிருக்கிறான்? உன் தைரியத்தைக்கண்டு சந்தோஷமடைந்தேன். இப்போது நான் சொல்வதைக்கேள். நீ வந்திருக்கும் இத்தேசம் நக்னர்களுக்குரியது. இங்கிருந்து ஏழுநாளில் கார்க்கோடகநகரம் செல்லப்போகிறாய்; பிறகு உன் மனோதைரியத்தால் நீ உத்தேசித்துப் புறப்பட்ட இடஞ்சென்று உன் காரியசித்தி பெறுவாய்; நான் உன்னால் பூசிக்கப்படும் அக்னி பகவான். என் வரத்தின் பலத்தால் உனக்கு இப்போது பசி தாக முதலியன உண்டாகா? ஆகையால் காரியசித்திபெறுவதன் பொருட்டுத் தைரியமாகப் போகலாம்" என்றேறப்பட்டது.

விதூஷகன் இவ்வசனங்களைச் செவியுற்று மகிழ்ச்சியடைந்து, அக்கினி தேவனை வணங்கித் துதிபுரிந்து அங்கிருந்து பிரயாணட்

பட்டு ஏழாவது நாளில் கார்க்கோடக நகரஞ் சென்றான். அந்நகரில் ஒருமட மிருக்கக்கண்டு அதிற் பிரவேசித்தான். அந்த மடமானது பெரியவர்களிருந்து வருவது. அங்கு யாத்திரிகளாகிய அந்தணர் களுக்கும் மற்றவர்களுக்கும் வேண்டிய உபசாரங்கள் செய்துபூசித்து போஜனமிடத்தக்க ஏற்பாடுகள் செய்யப்பட் டிருக்கின்றன. அது ஆரிய வர்மனென்ற அரசனால் கட்டப்பட்டதோர் அழகியமடம். சகல ஐசுவரியங்களும் நிறையப்பெற்றது. மனோஞ்ஞமானது. தேவால யங்களுடன் கூடியது. அந்தத் திவ்ய மடத்திலுள்ளா ரனைவரும் விதூஷகனைக் கண்டதும் மிகுந்த அன்போடு வரவேற்றுபசரித்தார் கள். விதூஷகன் அவர்க ளுபசாரணையைப்பெற்று மிகவும் மகிழ் வுற்று அன்று அங்கேயே தங்கினான். அன்றுமாலை இராஜபடர்கள், "இராஜகுமாரத்தியை நாளைக் காலையில் விவாகஞ்செய்து கொள்ள விரும்புகிறவன், பிராமணனோ, க்ஷத்திரியனோ யாராயிருப்பினுஞ் சரி அவன் இன்றிரவு இராஜகுமாரத்தியின் கிருகத்தில் வசிக்கலாம்" என்று பறை யறை வித்தார்கள்.

இதைக் கேட்ட விதூஷகன். இதில் ஏதோ காரணமிருக்கிற தென்று கருதி ஸாகஸ காரியத்தில் விருப்பமுள்ளவனாகையால், இராஜ குமாரத்தியின் அரண்மனைக்குச் செல்லவிரும்பினான். அதனை யறிந்த அந்த மடத்துப் பெரியோர்கள், "ஓ பிராமண! ஸாஹஸம் செய்யவேண்டாம். அது இராஜ குமாரத்தியின் அரண்மனையல்ல; நமனுடைய அகண்டவாய் என்று சொல்லவேண்டும். அங்கே இரா வில் பிரவேசிப்பவன் பிழைப்பதில்லை. உம்மைப்போல் ஸாஹஸஞ் செய்து அநேகர் நாசமடைந்தனர். போக வேண்டாம்" என்றார்கள். இவ்வாறு அவ்வேதியர்கள் சொல்லியும் அவர்களின் வார்த்தையைக் கேட்காது இராஜ படர்களை முன்னிட்டுக்கொண்டு அரண்மனை சென் றான் விதூஷகன். ஆரியவர்மனென்னும் அரசன் விதூஷகனைக் கண்ட தும் மகிழ்வுற்றுக் கொண்டாடி அன்போடு வரவேற்றுபசரித்தான். பின் அன்றிரவு அரசனதுத்தரவுப்படி அவன் குமாரியின் அந்தப்புரத் தில் பிரவேசித்தான். அங்கே அநுராகத்தோடும் ஆசையில்லாததால் மனோற்சாகமின்றி யிருக்கும் இராஜ குமாரியைக் கண்டான். அவள் கண்களிலிருந்து நீர் பெருகிக் கொண்டிருக்கப் பார்த்து வியப்படைந் தான். அவளோடு எதுவும் பேசாது அங்கோரிடத்தில் வீற்றிரு ந்து நித்திரைபோகாமல் விழித்துக்கொண்டு அக்கினி பகவானைப்

பிரார்த்தித்துக் கொண்டிருந்தான். விதூஷகன் அக்னி பகவானை நினைத்த நிமிஷமே முன்னொரு முறை அவனடைந்த கத்தி கிடைக்கப்பெற்று அதைக் கையில் வைத்துக் கொண்டிருந்தான். அப்பொழுது நடுராத்திரியில் ஒரு அரக்கன் வாயிற்படியண்டை வந்து நிற்கக்கண்டான். முன்னொரு தடவை விதூஷகனிடம் அகப்பட்டு வலது கையையிழந்தவன் இந்த அரக்கனே யாதலால், இடது கரத்தை நீட்டினான். அது கண்ட விதூஷகன் இவன் முன் பௌண்டிரவர்த்தன பட்டணத்தில் நம்மிடத்திலகப்பட்டுக் கையை யிழந்த அரக்கனே யென்று நிச்சயித்து இவனை இப்போது முன்போல் கரத்தை மாத்திரம் துண்டித்து விட்டு விடக்கூடாது; இவனைக்கொன்றுவிட வேண்டும் என்று தீர்மானித்து, அரக்கனிடம் ஓடி அவனைப்பிடித்திழுத்துக் கழுத்தை வெட்டப்போனான். அப்பொழுது அரக்கன் மிகவும் பயந்து, விதூஷகனைப் பார்த்து, "என்னைக் கொல்லவேண்டாம்; கொல்லவேண்டாம்; நீ மிகவும் பராக்கிரமசாலி யென்பதை யறிந்தேன். கிருபைபுரியவேண்டும்" என்று வேண்டினான். விதூஷகன் அவன் மயிரைவிட்டு அவன் முகம்பார்த்து நின்று "நீ யார்? உன் பெயரென்ன? உனக்கேனிந்த சேஷ்டை?" என்று கேட்க, அரக்கன், நான் யமதம்ஷ்டரன் என்ற பெயருடையவன். பௌண்டிரவர்த்தன நகரிலிருக்கும் இராஜகுமாரத்தியும் இந்நகர் ராஜகுமாரத்தியும் என் புத்திரிகள். இவ்விருவருக்கும் வீரியமில்லாத புருஷனுடைய சேர்க்கை யேற்படாமல் காப்பாற்றவேண்டுமென்பது பரமசிவன தாக்ஞை. முன் பௌண்டிரவர்த்தன நகரத்தில் ஒருவனால் எனது புயம் வெட்டப்பட்டது. இப்போது உன்னால் ஜயிக்கப்பட்டேன். என் எண்ணம் நிறைவேறிற்று, என்றுகூறினான். இதுகேட்டதும் விதூஷகன் நகைத்து, பௌண்டிரவர்த்தன நகரத்தில் கையை வெட்டியவன் நான்தான் என்றுகூற, அரக்கன், "அப்படியா! ஆனால் நீ மானிடனல்ல, தேவாம்சமுள்ளவனே. சிவபெருமானது ஆக்ஞையின் அநுக்கிரகமானது எனக்கு இவ்வாறேற்பட்டதென்றெண்ணுகிறேன். ஆகையால் நீ இப்போது எனக்கு நண்பனாய் விட்டாய். என்னை நீ எப்போது நினைக்கின்றாயோ அப்பொழுது உன் காரியசித்தியின் பொருட்டு நான் உன்னிடம் வருகின்றேன்" என்று கூறி விடைபெற்றுக்கொண்டு மறைந்தான் அரக்கன். அன்றிரவு முழுதும் விதூஷகன் இராஜ குமாரியுடனிருந்தான். மறு நாள் ஆரியவர்ம

ராஜன் விதூஷகனைக் கண்டு என்று மடையாத ஆநந்தங்கொண்டு விதூஷகனுடைய சாமர்த்தியத்திற்குப் புகழ்ந்து அவனுக்குத் தன் குமாரத்தியை ஒரு நல்ல முகூர்த்த நாளில் விவாகஞ்செய்து கொடுத்தான். குணங்களெல்லாம் வாய்க்கப் பெற்றவளும் இலக்ஷ்மிதேவி போன்றவளுமாகிய அந்த இராஜ குமாரியுடன் அங்கே சில மாதகால மிருந்தான். பின் ஒரு நாளிரவு பத்ரையை நினைத்துக் கொண்டு திடீரென்று பிரயாணமானான். தேவாமிர்த முண்டவன் வேறெந்த ரஸவஸ்து விலேனும் பிரியப்படுவானா? அந்நகரத்தைவிட்டு வெளியே வந்ததும் யமதம்ஷ்டா ராக்ஷஸனை நினைத்தான். உடனே அவ்வரக்கன் எதிர்தோன்றி வணங்கினான். அவனைப் பார்த்து, "யமதம்ஷ்டா! உதயமலையில் ஸித்தர்களிருக்கும் க்ஷேத்திரத்தில் பத்ரை யென்கிற வித்யாதர ஸ்திரீயிருக்கின்றாள். அங்கே நான் போகவேண்டும். ஆகையால் என்னை அந்த இடத்திற்கொண்டு போய்ச் சேர்க்க வேண்டும்" என, யமதம்ஷ்டான் அவ்வாறே கொண்டுபோய்ச் சேர்க்கின்றேன்; என் தோளின் மீது ஏறிக் கொள், என்றான். விதூஷகன் உடனே அவனுடைய தோளின்மீதேறிக் கொண்டான். அன்றிரவு எவராலும் போகமுடியாத அறுபதுயோசனை தூரஞ்சென்று அப்பால் சீதோதை யென்னும் நதியைத் தாண்டிச் சிரமமின்றி உதய மலையின் அருகே சென்றான்.

அங்கே அரக்கன், "விதூஷக! இதோ இங்குத் தெரிகிறதே உனக்கு முன்னே, இதுதான் உதயமலை; இதற்குமேலே ஸித்த க்ஷேத்திரத்தில் நான் போகமுடியாது" என்றுகூறி விதூஷகனிடம் விடைபெற்றுக்கொண்டு மறைந்தான். பிறகு விதூஷகன் சிறிது தூரஞ்சென்று பார்த்தான். அங்கே மனோஞ்ஞமான ஒரு வாவியைக் கண்டான்.

அந்த வாவியின் மலர்களில் தேனுண்டு வண்டுகள் சப்தித்தன. அப்படிச் சத்தமிடுவது விதூஷகனை வரவேற்பது போலிருந்தது. அது கண்டு மனமுவந்து அந்த வாவிக்கரையி லுட்கார்ந்தான். அங்கே சில ஸ்திரீகளின் பாத அடையாள மிருக்கக் கண்டான். அது இது தான் நீ பத்ரையை அடைவதற்கு வழியென்று காட்டுவது போலிருந்தது. அதனால் மகிழ்வுற்றான் விதூஷகன். பிறகு இந்த மலையோ மானிடர்களால் கடக்க முடியாதது. ஆகையால் இங்கே சிறிது நேரமிருந்து பார்ப்போம். இங்கே யாரேனும் இந்த

வாவியில் ஜல மெடுக்க வருவார்களென்று தெரிகிறது. அவர்கள் யாரென்று பாரப்போம் என்று நினைத்து இன்னும் என்னவோ யோசித்த வாறிருந்தான்.

பின் சற்று நேரத்திற் கெல்லாம் சுவர்ணக் குடங்களை யெடுத்துக் கொண்டு மங்களகுணமுள்ள ஸ்திரீகளிற் சிலர் ஜலமெடுப்பதற்கு அங்கே வந்தார்கள். அவர்கள் ஜலமெடுத்துக் கொண்டு செல்லும்போது அவர்களைப் பார்த்து "மாதர்களே! நீங்கள் யாருக்காக ஜல மெடுத்துக் கொண்டு போகிறீர்கள் என்று கேட்டான். அவர்கள் நாங்கள் இந்தப் பர்வதத்திலிருக்கும் பத்ரை யென்னும் வித்யாதர ஸ்திரீக்காக ஜலமெடுத்துக்கொண்டு போகிறோம் என்றார்கள். ஆச்சரியமும் கம்பீரமுமான காரியத்தில் பிரயத்தினம் செய்யும் தீரர்களுக்குத் தெய்வமும் சமயத்திற் கேற்ற சாமர்த்தியத்தைச் சேர்த்து வைக்கின்றது. இது தான் தெய்வாநுகூல மென்பது.

நிற்க; ஜலமெடுத்துக் கொண்டு செல்லும் அந்த ஸ்திரீகளுக்குள் ஒருத்தி தன் இடுப்பில் குடத்தைத் தூக்கிவிடும்படி கேட்டுக் கொண்டாள். விதூஷகன் அதற்கிசைந்து அவளிடம் சென்று குடத்தை அவளிடுப்பில் தூக்கி விட்டான். அப்போது அவன் தன்கையில் அணிந்து கொண்டிருந்த பத்ரையின் கணையாழியை அதில் போட்டு அனுப்பி விட்டான். பிறகு முன்னிருந்த இடத்திற்கு வந்துட்கார்ந்து கொண்டான்.

ஜலமெடுத்துச் சென்ற அந்த ஸ்திரீகள் பத்ரையினிடம் சென்று அவளுக்கு ஸ்நானஞ் செய்வதற்காக ஜலந்தந்தார்கள். பத்ரை ஜல மெடுத்துக் கொண்டாள். அப்போது அந்த மோதிரம் விழுந்தது. அதைப்பார்த்து ஆச்சரியமடைந்து, தன் தோழிகளைப் பார்த்து, "தோழிமார்களே! நீங்களொருமானிடனைக் கண்டீர்களா" வென்று கேட்டாள் பத்ரை. தோழிகளுள் ஒருத்தி, "யௌவனப் பருவமுடைய ஒரு மானிடனை நாங்கள் கண்டோம். அவன் வாவிக்கரையிலிருந்தான். அவன் இந்தக் குடத்தை என் இடுப்பில் தூக்கிவிட்டான்" என்று பதில் கூறினாள். பத்ரை "ஸகிகளே! நீங்கள் விரைவில் சென்று அந்தப் புருஷனுக்கு ஸ்நானமும் அலங்காரமும் செய்வித்து இங்கு அழைத்து வாருங்கள். அவர் என்னுடைய கணவன். இங்கு வந்திருக்கிறார் என்றாள்.

பத்ரை இவ்விதம் சொன்னதும் அந்த மாதர்கள் மலையிலிருந்து கீழே யிறங்கி வந்து விதூஷகனைக்கண்டு நடந்த வரலாறு தெரிவித்து அந்த விதூஷகனுக்கு ஸ்நானம் அலங்காரங்களைச் செய்வித்து பத்ரை யிடம் அழைத்துச் சென்றார்கள்.

வெகு காலமாக எதிர் பார்த்திருந்த பிராண நாயகியை விதூஷ கன் கண்டு கரை கடந்த சந்தோஷ மடைந்தான்.

அந்த பத்ரையும் விதூஷகனைக் கண்டு மகிழ்வுற்று உடனே எழுந்தாள். ஆனந்த பாஷ்பம் அவள் கண்களிலிருந்து பெருகிற்று. அது தன் நாயகனுக்கு அவள் அர்க்யம் கொடுப்பது போலிருந் தது. அந்த பத்ரை கொடி போன்ற புஜமாகிய புஷ்பமாலையைக் கணவன் கழுத்திலிட்டுத் தழுவிக்கொண்டாள். இவனும் ஆலிங்கனம் செய்து கொண்டான். அப்பொழுது வேர்வையுண்டாயிற்று. அது வெகு காலமாக இருந்த ஸ்னேகமானது பெருகுவது போல் தோன் றிற்று.

பிறகு இருவரும் உட்கார்ந்தார்கள். ஒருவரை யொருவர் பார்த்துக் கொள்ளுவதில் திருப்தியில்லா மலிருந்தார்கள். ஏற்கெ னவே இருந்த அன்பானது நூறு மடங்கு அதிகமாயிற்று.

அப்பொழுது பத்ரை ஓ. நாதா! இந்த விடத்திற்கு எவ்விதம் வந்தீர்கள்? என்று வினவினாள். விதூஷகன் "பிராணநாயகி உன் னுடைய ஸ்னேகத்தை ஆச்ரயித்து பல படி உயிருக்கும் துணிந்து இங்கு நான் வந்து சேர்ந்தேன். ஸுந்தரி! நான் வேறு என்ன சொல்லப் போகிறேன்" என்றான்.

பத்ரை அதைக் கேட்டு விதூஷகனுக்குத் தன்னிடம் தன் உயி ரையும் வெறுக்கும் படியான அன்பிருப்பதைப் பார்த்து மிகுந்த நேச முடையவளாகிச் சொல்லுகிறாள்.

ஆர்யபுத்ர! "தோழிகளாலும் யோக ஸித்திகளாலும் எனக்கு யாதொரு பயனுமில்லை. நீர் எனக்குப் பிராணன் போன்றவர். உமது குணங்களால் விலைக்கு வாங்கப்பட்ட உமது தாஸி நான்" என்றாள்.

பிறகு விதூஷகன் ஓ கண்மணி! ஆனால் நீ இந்த தேவபோகத் தை விட்டு உஜ்ஜயினியில் வஸிப்பதற்கு வா. போகலாம் என்றான்.

உடனே அவ்வாறே செய்கின்றேன் என்று ஒப்புக்கொண்டாள் பத்ரை. விதூஷகன் மகிழ்வுற்று அன்று முழுதும் அங்கிருந்து சிரம

பரிகாரஞ்செய்து கொண்டான். பத்ரையின் தோழியாகிய யோகே சுவரி விதூஷகனுக்கு மிகுந்த உபசாரம் செய்து மகிழ்வித்தாள். மறுநாட் காலையில் அந்த மலையிலிருந்து பத்ரையுடன் இறங்கி யமதம்ஷ்டரான் என்னும் அரக்கனை மனதில் நினைத்தான் விதூஷகன். யமதம்ஷ்டரான் அக்கணமே எதிர் தோன்றினன். அவனிடம் தாங்களிருவரும் போகவேண்டிய வழியின் கிரமத்தைத் தெரிவித்தான் விதூஷகன். பிறகு முதலில் அவன் தோளின்மீது பத்ரையை ஏற்றி உட்காரவைத்துத் தானும் ஏறிக்கொண்டான். அரக்கனுடைய தோளில் ஏறியுட்காருவதா லுண்டாகும் பயத்தைப் பத்ரை பாராட்டினளில்லை. ஸ்திரீகள் ஆவலுடன் பிறருக்கு ஸ்வாதீனப்படுவார்களாயின் எதைத்தான் பொறுக்கமாட்டார்கள்! அரக்கன் சிறிது நேரத்திற்கெல்லாம் அவர்களைக் கார்க்கோடகநகரம் கொண்டுவந்து சேர்த்தான். அங்கிருந்த ஜனங்கள் அரக்கனைக்கண்டு பயந்து நடுங்கினர்கள். பிறகு விதூஷகன் ஆர்ய வர்மராஜனிடம் சென்று தன் மனைவியைத் தன்னேடு அனுப்பும்படி கேட்டான். ஆர்ய வர்மன் மனமகிழ்ச்சியுடன் தன் புத்திரியை விதூஷகனிடம் ஒப்புவித்தான். விதூஷகன் அந்த இராஜகுமாரத்தியையும் அரக்கன்மீது ஏற்றிக் கொண்டு அந்நகரத்திலிருந்து புறப்பட்டான். பின் இவன் தான் முன்பு எந்தக் கடற்கரை வழியே சென்றுனே அந்தக் கடற்கரையைக் கண்டதும் அங்கே இறங்கித் தன்னை முன் கடலில் மூழ்கச் சொல்லிக் கயிற்றை யறுத்துவிட்ட வஞ்சகனுகிய வர்த்தகன் வீட்டிற்குச் சென்று அவனைக் கண்டான். அவனிடம் முன்தான் செய்து கொண்ட பந்தியத்தின்படி அவன் குமாரத்தியை அடைந்தது மன்றி அவனுடைய பொருள்களையும் கைப்பற்றிக்கொண்டான். அந்த வஞ்சகனுகிய வர்த்தகனுடைய பொருளைக் கைப்பற்றியதையே அவனை வதைப்பதாக வெண்ணினன் விதூஷகன். லோபிகளுக்குப் பொருளே சிறந்த பிராணனுகிறதல்லவா ?

அரக்கனுகிய இரதத்தின் மீது மூன்று பெண்களையு மேற்றிக் கொண்டு அங்கிருந்து ஆகாயவழியே புறப்பட்டு நெடுகத் தன் மனைவிகளுக்குக் கடலின் அதிசயத்தைக் காட்டிக்கொண்டே கடலைக்கடந்து முன் தான்வந்துதங்கின பௌண்டரவர்த்தனம் என்னும் நகரத்திற்கே போய்ச் சேர்ந்தான். அந்நகரத்தா ரனைவரும் அரக்கனை வாகனமாகக்கொண்டு ஆகாய வழியே வந்த விதூஷகனைக்கண்டு பர

மாச்சரிய மடைந்தார்கள். இங்கே வெகு நாளாகத்தன் வரவை எதிர் பார்த்துக்கொண்டிருக்கும் தேவசேன மகாராஜனுடைய புத்திரியைக்கண்டான் விதூஷகன். அவள் விதூஷகனைக் கண்டதும் கரை கடந்த சந்தோஷமடைந்தாள். அந்தத் தேவசேனராஜன் விதூஷகனைத் தன்னுடைய நகரத்திலேயே இருக்கும்படி கட்டாயப்படுத்தினான். விதூஷகன் தன் நகரமாகிய உச்சயினிக்குச் செல்வதிலேயே மிகுந்த ஆவலுடையவனா யிருந்தமையால், தேவஸேன ராஜனுடைய வேண்டுகோளுக் கிணங்காது அங்கிருந்து புறப்பட்டு துக்கலப்திகையென்னும் அந்த மாதுடனும், உச்சயினி நகரம் போய்ச் சேர்ந்தான். ஓஷதிகளால் ஜ்வலிக்கும் உதயமலையின் சிகரத்தில் உதயமாகும் சந்திரனைப்போல் அரக்கன் மீது மாதர்களுடன் விளங்கும் விதூஷகனைக் கண்ட அந்நகர ஜனங்கள் நடுக்கத்தையும் பயத்தையு மடைந்தார்கள்.

இச் செய்தியை அரசனாகிய ஆதித்யஸேனன் அறிந்து விதூஷகனை யழைக்கப் புறப்பட்டு வந்தான். அரசனைக் கண்ட விதூஷகன் அரக்கன் தோளின் மீதிருந்திறங்கி அரசனிடம் வந்து அவனை வணங்கினான். அரசனும் அவனைத் தழுவிக்கொண்டு புகழ்ந்து மகிழ்ந்தான். பின் விதூஷகன் அரக்கனுடைய தோளின் மீதிருக்கும் மனைவிமார்களைப் பூமியிலிறக்கிவிட்டு அரக்கனைப்பார்த்து "இனி நீ உன் இஷ்டப்படிசஞ்சரிக்கலாம்" என்று சொல்லி யனுப்பி விட்டான். அரக்கனும் விதூஷகனை அன்போடு வணங்கி அவனிடம் விடைபெற்றுக்கொண்டு சென்றான். பிறகு விதூஷகன் தன் மனைவிமார்களுடன் அரசனதரண்மனை சென்றான். அங்கே இவன் வரவுக்கு வெகு வருடகாலமாக எதிர் பார்த்துக் கொண்டிருந்த ஆதித்திய சேன ராஜன் குமாரியாகிய தன் முதல் மனைவியை யடைந்து மனமகிழ்ந்தான். பிறகு ஆதித்யஸேனன் விதூஷகனை நோக்கி, "இவ்வளவு பேர் மனைவிகளையும் எவ்வாறடைந்தாய்? இப்போது உங்களைச் சுமந்துவந்த அரக்கன் யார்?" என்று கேட்டான். விதூஷகன் நடந்த விருத்தாந்தங்களை சவிஸ்தார மாகக்கூறக் கேட்டு ஆநந்தமடைந்தான் ஆதித்ய சேனன். பிறகு, காரிய மறிந்தவனாகிய அவ்வேந்தன் விதூஷனுக்குத்தன் இராஜ்யத்தில் பாதியைக் கொடுத்து அவனையரசனாக்கினான். அப்பொழுது நகரமுழுதும் சந்தோஷங் கொண்டாடினார்கள். மங்கள வாத்தியங்கள் முழக்கப்பட்டன.

இவ்வாறு இராஜைசுவரியத்தையடைந்த விதூஷகன் காலக்ரமத்தில் பூமிமுழுதுக்கும் அரசனுகித் தன் மனைவிமார்களுடன் சுகமாக வாழ்ந்து வந்தான்.

இவ்வாறு தெய்வம் அனுகூலமாக விருப்பின் தீரர்களுக்கு அவர்களின் தைரியமே லக்ஷ்மியை விரைவில் அடைவதற்கு, சித்தி பெற்றதும் மிகுந்த மோகத்தைக் கொடுப்பது மாகிய அஸ்திரத்தின் தன்மையைப் பெறுகிறது என்றான்.

இவ்வாறு உதயனன் கூறிய விசித்திரமான இக்கதையை அருகே வீற்றிருந்த மந்திரிகளும் உதயனன் மனைவியார்களும் கேட்டு மிகுந்த ஆநந்த மடைந்தார்கள்.

# ஐந்தாவது தரங்கம்.

இக்கதை பேசி முடிந்ததும் யௌகந்தராயணன், உதயனனைப் பார்த்து, "இராஜனே! உமக்குத் தெய்வாநுகூலமும் பராக்ரமமுமிருக்கின்றன. நாங்களும் நீதிமார்க்கத்திற் சிறிது அப்பியாசப்பட்டிருக்கிறோம். ஆகையால் முன் நாம் யோசித்தபடி திக்விஜயம் செய்ய விரைவாக முயற்சி செய்யவேண்டும் என்றான். மந்திரி இவ்வாறு கூறவே உதயனன், இருக்கட்டும் நல்ல காரியங்களுக்கு அநேக இடையூறுக ளுண்டாகும். அவ்வாறெதுவும் இடையூறு நேரிடாதிருக்கப் பரமசிவனைக் குறித்துத் தவம்புரிந்து பூசிக்கின்றேன். அவருடைய அநுக்ரகமின்றி யெதுவும் நிறைவேறுதல்லவா என்றான். மந்திரிகள், முன் சமுத்திரத்தில் அணைகட்ட முயற்சித்தபோது வானர சிரேஷ்டர்கள், ஸ்ரீராமச்சந்திரனுக்குச் சம்மதந் தந்ததுபோல் அவ்வாறே தவம் புரியலாமென்று கூறிச் சம்மதந் தந்தார்கள். பிறகு உதயனன் தன் இரண்டு மனைவிகளுடனும் மந்திரிகளுடனும் மூன்றுநாள் உபவாஸமிருந்து தவம் புரிந்தான். அப்பொழுது சங்காமூர்த்தி அவன் கனவில் தோன்றி "உதயன! உன்னிடம் சந்தோஷமடைந்தேன். உனக்கெந்த இடையூறும் நேரிடாது. நீ உன் காரியத்தில் ஜயம் பெறுவாய். வித்யாதரர்கள் யாவருக்கும் பிரபுவாகிய புத்திரனையும் சீக்கிரம் அடைவாய் என்று கூறி மறைந்தார். பின் உதயனன் விழித்துக் கொண்டு பரமசிவனுடைய

அநுக்கிரகத்தை நினைந்து மகிழ்வுற்று, இனிக்கவலை யில்லை; சிர மம் நீங்கிற்று என்று நினைத்துப் பொழுது புலர்ந்ததும் மந்திரிக ளிடம் தான் கண்டகனவைக் கூறி அவர்களைச் சந்தோஷப் படுத்தினன். உதயனன் மனைவிமார்களிருவரும் மிகவும் மகிழ்ச்சி யடைந்தார்கள். அவ்விருமாதர்களும் தாங்கள் தவமிருந்ததால் அடைந்த சிரமத்தை அந்தக் கனவைப்பற்றிப் பேசி வர்ணிப்பதனாலே யே தீர்த்துக் கொண்டார்கள். அது ஒரு ஔஷதம் போலாயிற்று. உதயனனும் முன்னோர்கள் எவரும் அடையாத மகிமையை இந்தத் தவத்தினாலடைந்தான். அவன் மனைவிமார்களிருவரும் பதிவிருதை களுக் குரிய பெருமையை யடைந்தார்கள். நகரத்திலுள்ள ஜனங் களெல்லாரும் இச்செய்தி கேட்டு உற்சவங் கொண்டாடினார்கள்.

இப்படி யன்றைய தினம் செல்லவே மறுநாள், யௌகந்தரா யணன், உதயனனைப் பார்த்து, "தாங்கள் கிருதார்த்தர்களானீர்கள்? தங்களுக்குப் பார்வதி காந்தனாகிய பரமசிவன் பிரசன்னமாகி வர மளித் திருக்கின்றனரல்லவா? இப்போது பகைவர்களை வென்று லக்ஷ்மியை யடையலாம். அப்படியடையப்படும் இலக்ஷ்மியே அர சர்களின் பரம்பரையில் ஸ்திரமாக விருப்பாள். தன்னுடைய முயற்சி யால் தேடப்படும் பொருளுக்கு எப்பொழுதும் அழிவுண்டாகாது. அவ்வாறே முன்னோர்கள் தேடிய நிதியானது வெகு காலமாகப் பூமியிலிருந்து இப்போது உமக்குக் கிடைத்திருக்கிறது. இது சம் பந்தமான கதை யொன்றிருக்கிறது சொல்லுகின்றேன் கேள்.

பாடலிபுத்ரகம் என்னும் நகரத்தில் தேவதாஸனென்னு மொரு வர்த்தகனிருந்தான். அவன் பெரும்பொருள் படைத்த வம்சத்திற் பிறந்தவன். அந்தத் தேவதாஸன் பௌண்டர வர்த்தன நகரத்திலி ருந்த ஒரு வர்த்தகனுடைய பெண்ணை மணஞ் செய்து கொண்டிருந் தான். இவன் தன்தந்தை இறந்த சில வருடகாலங்களுக்குள் சூதாடிப் பொருள்களை யெல்லா மிழந்து விட்டான். ஆதலால் இவன் மனைவி மிகவும் துக்கமடைந்து எப்போதும் வருத்தப்பட்டுக் கொண் டிருந்தாள். அப்போது அவளுடைய தந்தை பாடலி புரத்திற்கு வந்து தன் பெண்ணின் வருத்தத்தையும் அவள் தரித்திர நிலைமையி லிருப்பதையும் கண்டு உடனே தன் நகரத்திற் கழைத்துச் சென் றான். பிறகு தேவதாஸன் சூதாட்டத்திற் பொருளிழந்தத னால் தானடைந்த நிலைமையை யுணர்ந்து தன் பரம்பரைத் தொழிலா

கிய வர்த்தகத்தைச் செய்ய வெண்ணி, அதற்கு வேண்டிய மூல தனத்திற்காகப் பௌண்டர வர்த்தன நகரம் வந்தான். அப்பொழுது சூரியாஸ்தமனமாகும் சமயமாயிருந்தது. நாம் எப்படியிருக்கிறோம் என்று தன் தேகத்தைப் பார்த்துக் கொண்டான். தேகமுழுதும் தான் வெகு தூரம் நடந்து சென்றதால் புழுதி படிந்திருப்பதையும் தன் வஸ்திரத்தில் அழுக்குப் படிந்திருப்பதையும் பார்த்து—

ஆ! இந்தக் கோலத்தோடு நான் எப்படி என் மாமன் வீட்டிற் குப் போவேன்? மானமுடைய ஒருவனுக்குத் தன்னைச் சார்ந்தவர் களிடம் தன் தீனத்தன்மையைக் காட்டுவதைப் பார்க்கிலும் மரண மடைவது மேலன்றோ! என்று யோசித்து அந்த நகரத்துக் கடைத் தெருவில் ஒரு வீட்டுத் திண்ணையில் இராத்திரியில் தாமரைமலர் குவிந்து சுருங்குவதுபோல் சுருண்டு படுத்துக்கொண்டான். இவன் படுத்த கணநேரத்திற்கெல்லாம் அந்த வீட்டிற்குள் ஆடவனொருவன் சென்றான். பின் ஒரு அரைக்கணத்திற்கெல்லாம் ஒரு மாது நடக் கும் சத்தம் சிறிதும் காட்டாமல் அந்த வீட்டிற்குள் சென்றாள். அந்த வீட்டிற்குள் தீபம் வெகு பிரகாசமாக வெரிகிறது. அப் பொழுது தேவதாஸன் தற்செயலாய் அவ்வீட்டுச் சாளரத்தின் வழியே உள்ளே பார்த்தான். சற்றுமுன் உள்ளே சென்ற மாது தன் மனைவியா யிருக்கக்கண்டு இவளெங்கே இந்த வீட்டிற்கு வந்தா ளென்று கவனித்துக் கொண்டிருந்தான். ஆனால் இவனுக்கு ஆட வன் இன்னானென்று தெரியவில்லை. இவனுக்குப் பெரிய சந்தேக முண்டாய் விட்டது. பின் சற்று நேரத்திற்கெல்லாம் சாளரக்கதவை யும் சாத்திக்கொண்டார்கள். தேவதாஸன் தன் மனைவி பர புரு ஷனோ டிருப்பது கண்டு மனம் பொறாமல் துக்கமென்கிற வஜ்ரா யுதத்தால் அடிபட்டவனாகி, "ஆ! உலகத்தில் எவனுக்குச் செல்வ மில்லையோ அவன் தன் தேகத்தையும் பரிகொடுக்கிறான். அப் படி யிருக்க ஸ்திரீகளைப் பற்றிக் கேட்க வேண்டுமா? ஸ்திரீக ளுடைய பேராசை மின்னலின் சபலத் தன்மையை யல்லவா ஒத்ததா யிருக்கிறது. துக்கக் கடலில் மூழ்கியவர்களுக்கு இது ஒரு பெரிய விபத்துத் தான். ஒரு ஸ்திரீ சுவதந்திரமாகத் தகப் பன் வீட்டிலிருப்பாளே யாகில் அவளுக்கு இந்தக் கதிதானுண்டா கும்." என்று யோசித்தவாறே அவர்கள் உள்ளிருந்து சம்பாஷித் துக்கொண்டிருப்பது கேட்டு அதைக் கவனித்தான். அப்பொழுது

தேவதாஸன் மனைவி தன் ஆசை நாயகனிடம், "ஆசைக் கிசைந்த நேசா! நான் சொல்வதை அன்புடன் கேள். என் புருஷனுக்குப் பிரபிதாமக னொருவனிருந்தான். அவனுக்கு வீரவர்மன் என்று பெயர். அவன் வர்த்தகத்தில் ஏராளமான திரவியத்தைத் தேடி அதைத் தன் வீட்டு அங்கணத்தின் நான்கு மூலைகளிலும் புதைத்து வைத்து விட்டு இறந்து போனான். இறக்குந்தருணத்தில் அவன் அதைத் தன்மனைவியிடம் சொல்லிவிட்டுப் போனான். அவள், கடைசிக்காலத்தில் தன் மருமகளிடஞ் சொல்லி இறந்தாள். அவள் தன்னுடைய மருமகளாகிய என் மாமியிடம் அதைத் தெரிவித்து இறந்து போனாள். கடைசியில் அந்த இரகசியத்தை என் மாமி என்னிடம் சொன்னாள்.

இவ்வாறு இந்த இரகசியமிருந்து வருகிறது. என் புருஷன் வறியோனாயினும் இதை நான் அவனுக்குச் சொல்லவில்லை. ஏனெனில் அவன் சூதாடிச் சகல சொத்தையு மிழந்து எனக்குப் பகைவனாய் விட்டான். ஆகையால் நீ அந்நகரஞ்சென்று என்னாயகனிடம் அந்த வீட்டைப் பொருள் கொடுத்து விலைக்கு வாங்கி அதிலுள்ள பொருளைக் கைப்பற்றிக்கொண்டால் பிறகு நாமிருவரும் எந்தக்குறையுமின்றி சுகமாக விருக்கலாம் என்றாள்.

இவ்வாறு அந்த ஸ்திரீ கூறியதும் அவள் சோரநாயகன் எதுவும் சிரமமில்லாமலே நமக்கு ஏராளமான பொருள் கிடைத்துவிட்டது என்று நினைத்து மிகவும் மகிழ்ந்து தானொரு தனிகனாய் விட்டதாக அப்பொழுதே எண்ணிக்கொண்டான். தேவதாஸனோ இந்த ஆச்சரியத்தைக் கேட்டதும், சிறிதும் அங்குத் தாமதியாது அப்பொழுதே புறப்பட்டு பாடலிபுத்ரகம் வந்து சேர்ந்து தன்னுடைய மனைவி குறிப்பிட்ட இடங்களில் வெட்டிப் பார்த்து அவள் தெரிவித்தவாறே அங்கு திரவியம் புதைக்கப்பட் டிருக்கக்கண்டு வியப்புற்று அதை யெடுத்து வேறிடத்தில் பத்திரப்படுத்தி விட்டான்.

பிறகு சிலநாள் கழிந்ததும், தேவதாஸன் மனைவியின் ஆசை நாயகன் பொருளில் தான் கொண்ட அவாவினால் வர்த்தகமென்கிற உபாயத்தை மேற்கொண்டு பாடலிபுத்ரம் வந்து தேவதாஸனைக் கண்டு அவன் வீட்டை விலைக்குக் கேட்டான். தேவதாஸன் அவனிடமிருந்து அந்த வீட்டின் கிரயத்திற்குமேல் பதின்மடங் கதிகமான பொருளை வாங்கிக்கொண்டு வீட்டை அவனுக்கு விற்றான்.

பிறகு அந்நகரத்தில் அழகான ஒரு வீட்டைத் தனக்கு வாங்கிக் கொண்டு மாமன் வீட்டிலிருந்து தன் மனைவியை வரவழைத்தான். தேவதாஸன் வீட்டைக் கிரயத்திற்கு வாங்கியவன், அந்த வீட்டில் எங்கும் பொருள் கிடைக்காதது கண்டு மறுபடியும் தேவதாஸனிடம் வந்து, "அப்பா! உன் வீடு ஜீர்ணமாக விருக்கிறது. எனக்கு அது பிடிக்கவில்லை. வீடு எனக்கு வேண்டாம். என் பணத்தை எனக்குக் கொடுத்துவிடு" என்று கேட்டான். அதன்மேல் இருவருக்கும் பெரு வழக்குண்டாயிற்று. அரசனிடம் முறையிட்டான் ஆசையால் மோசம் போன முட்டாள். அரசன் தேவதாஸனை வரவழைத்து விசாரித்தான். தேவதாஸன் தன் மனைவியை அவன் அடைந் தனுபவிக்கிறனென் பதையும் அவள் அவனுக்கு அன்று தன் வீட்டில் பணம் புதைக்கப் பட்டிருந்த இரகசியத்தை வெளியிட்டு அதைக்கைப்பற்ற உபாயங் கூறியதையும் சவிஸ்தாரமாகக்கூறினன். பிறகு அரசன் தேவதாஸன் மனைவியை வரவழைத்து விசாரித்தான். அவள் அரசனுக்குப் பயந்து நடந்ததைச் சிறிதும் ஒளியாமற் சொல்லவே, அரசன் பிறர் மனைவியை விரும்பிய அந்தப் பாதகனுடைய சொத்தைப் பறி முதல் செய்து அவனுக்குத் தக்கதண்டனை விதித்தான். தன் புருஷனை அவமதித்துச் சோரநாயகனிடம் சென்ற அந்தத் தேவதாசன் மனைவியையும் மூக்கையறுத்து, நகரத்திற்கு வெளியே துரத்தி விடும்படி ஆக்ஞாபித்தான் அரசன். பின் தேவதாஸன் வேறு மனைவியைத் தேடி விவாகம் செய்துகொண்டு சுகமாகவிருந்தான். ஆகையால், தர்மமாகத் தேடிய பொருள் வீணுகாது. அது எவ்விதத்திலும் பரம்பரையாக அனுபவிக்கப்பட்டே வரும். வேறு விதமாகத் தேடப்படும் பொருள் ஜலத்தில் விழுந்த பனித்திவலை போல் அழிந்து போகும். ஆகையால் மனிதர்கள் தர்ம மாகப் பொருள் தேடவேண்டும்; தர்மவிரோதமில்லாமலே அரசனும் பொருள் தேட முயற்சிசெய்யவேண்டும். ஏனெனில் ராஜ்யமாகிய விருக்ஷத்திற்குப் பொருளானது வேர் போலாகிறது. ஆகையால் நாம் உத்தேசித்துள்ள காரியம் நிறைவேறுவதன் பொருட்டு மந்திரிகளுக்குத்தக்க சம்பான மளித்துத் தர்ம மார்க்கத்தில் திரவியத்தைச் சேகரிக்கத் திக் விஜயஞ் செய்யுங்கள். தங்களுடைய மாமனிருவருடைய பந்துக்களில் வெகு பேர் பிரஸக்தானு பிரஸக்தியாக விருப்பதால் அவர்கள் அபகாரம் செய்யமாட்டார்கள். மன்னர்களும் ஒன்று சேர்வார்கள். காசியிலிருக்கும் பிரமதத்தனென்னும்

அரசன் எப்போதும் நமக்கு விரோதி; அவனை முதலில் ஜயிக்க வேண்டும்; பிறகு கீழ்த்திசையிலிருந்து வரிசையாக எல்லாத்திசைகளையும் ஜயிக்க வேண்டும்; பாண்டு மகா ராஜாவின் மகிமையை ஆம்பல் மலர் போல பிரகாசப்படுத்த வேண்டும் என்றான்.

இவ்வாறு யௌகந்தராயணன் கூறியதும், உதயனன் அவ்வாறே செய்வோமென ஒப்புக்கொண்டு யாத்திரை புறப்படுவதற்குச் செய்ய வேண்டிய ஒழுங்குகளைக் கவனிக்கும்படி தன் மந்திரிகளுக்குக் கட்டளையிட்டான். தன் கூடவர ஒப்புக்கொண்ட தன்மைத்துனனுக்கு விதேஹ தேசத்தில் இராஜ்யத்தைக் கொடுத்தான். பத்மாவதியின் தமையன் தன் கூட வர ஒப்புக் கொண்டமையால் அவனுக்கு சேதி தேசத்தைச் சம்மானமாகத் தந்தான். தனக்கு மித்திரனும் வேடர்களுக்கு இராஜனுமாகிய புளிந்தனை வரவழைத்தான். அவனுடைய சேனைகள் திசைகளெங்கும் வருஷகாலத்து மேகங்கள் போல் வியாபித்துக் கொண்டு நின்றன. மகா பிரபு வாகிய அந்த உதயனனுடைய இராஜ்ய மெங்கும் இராஜன் யாத்திரை புறப்படப் போகிற பிரஸ்தாபம் பாவி நின்றது. பகைவர்களுக்கெல்லாம் மனதில் வியாகுலம் பெருகிற்று.

இப்படி யிருக்கையில் யௌகந்தராயணன், பிரமதத்த ராஜனுடைய சமாசாரந்தெரிந்து கொள்ளும் பொருட்டு முதலில் வாரணாசிக்குச் சாரர்களை யனுப்பினான். பிறகு உதயனன் பிரமதத்த ராஜனிருக்கும் கீழ்த்திசைக்குச் செல்ல நல்ல சுபவேளையில் பிரயாணமானான். உதயனன், உயர்ந்த குடையுடன் ஜயத்தைத் தரும் பெரிய யானையின் மீது ஏறிக்கொண்டான். மலர்ந்த புஷ்பங்களுடன்கூடிய தனி மரமொன்றுள்ள மலைமீது சிங்கம் ஏறியதுபோற் காணப்பட்டான் யானையின் மீது வீற்றிருக்கும் உதயனன். காரியசித்திபெறும்படி செய்யத்தக்க தூதுவன்போல் சரத்காலம் வந்தது. நதிகளில் ஜலம் குறைந்தது. வழி வெகு அழகாகக்காணப்பட்டது. சேனைகளெல்லாம் ஆரவாரித்தன. அந்த ஆரவாரமானது அகாரணமாக மேகமில்லாமலே மழை பொழிவதுபோ லிருந்தது. அதனால் திசைகள் தோறும் எதிரொலி யுண்டாயிற்று. திசைகள், சேனைகளின் ஆரவாரத்தால் ஏற்பட்ட பயத்தை ஒன்றுக்கொன்று தெரிவித்துக் கொவ்வதுபோற் கேட்டது அந்த எதிரொலி. சொர்ணமயமான ஆபரணங்களால் சூரியன் போன்ற காந்தியுடைய குதிரைகள் அநே

கம் புறப்பட்டன. வெண்மை நிறமுடைய செவிகளாகிய சாமரமுடைய அநேகம் யானைகள் புறப்பட்டன. அவற்றின் கபோலங்களிலிருந்து பெருகும் மதஜலங்களால் மார்க்கமானது நீர் தெளித்துச் சுத்திசெய்யப்பட்டது போலாயிற்று. அரசனது ஆக்ஞைக்குப் பயந்து மலைகளெல்லாம், சரத்கால வெண்மேகங்களை யடையாளமாகக் கொண்டவைகளும் தாதுரஸங்களையும் அருவிப் பெருக்கையு முடையனவுமாகிய தங்கள் குமாரர்களைத் துணைவலியாக அனுப்பியது போலிருந்தன அங்கிருந்த யானைக் கூட்டங்கள். பூமியிலிருந்து அச்சமயம் கிளம்பிய தூளியானது சூரியனுடைய தேஜஸையும் மறைத்து நின்றது. வாஸவதத்தை, பத்மாவதி இருவரும் அரசனுடைய நீதிக்கு ஈடுபட்டவர்களாகி, இருபுறமும் கீர்த்தி, ஜயமாகிய இரண்டு இலக்ஷ்மியும் தொடர்ந்து செல்வதுபோல் சென்றார்கள். சேனைகளில் அங்கங்குள்ள துவஜங்கள் காற்றினால் விரிவதும் மடங்குவதுமாயிருப்பது "ஓ பகைவர்களே! எங்கள் அரசனை வணங்குங்கள் அல்லது ஓடுங்கள்" என்று குறிப்பிடுவதுபோற் காணப்பட்டது.

இங்கிப்படி யிருக்கையில், முன் யௌகந்தராயணன் அனுப்பிய சாரர்கள் கபாலிகர்கள்போல வேடம் பூண்டு வாரணாசியிற் பிரவேசித்தார்கள். அந்த வேடதாரிகளுள் கபடனொருவன், தான் அந்தக் கபாலிகளுக்கு ஞானி யென்கிற தன்மையிலிருந்து அவர்கள் எல்லோருக்கும் ஆசிரியனானான். மற்றவர்களெல்லாரும் அவனுக்குப் பரம சீடர்கள் போலிருந்தார்கள். கபட குரு இங்கு மங்குஞ் சென்று பிக்ஷை யெடுத்துப் புசித்து வந்தான். அப்பொழுது அவனுடைய மாணாக்கர்கள் இவர் பிரமஞானி, திரிகாலங்களையு முணர்ந்தவர் என்று அந்நகரமெங்கும் பிரஸித்தப் படுத்தி வந்தார்கள். அதனால் அந்த குரு மிகுந்த பிரஸித்தி யடைந்தான்.

இப்படி யிருக்கையில் ஒரு சமயம் அந்த குரு ஒருவனைக்கண்டு அவனொடு சிநேகஞ்செய்து கொண்டான். அவன் இராஜ குமாரனுக்குப் பரமமித்திரன். அவன் இந்தக் கபட குருவை சிநேகித்த சில நாளைக் கெல்லாம் தன்னுடைய அற்பமான ஒரு காரிய சித்தியை யடைந்தான். அதனால் இந்தக் கபட குருவினிடம் அவனுக்கு அத்தியந்த விசுவாச முண்டாயிற்று.

பிறகு உதயனன் படை யெடுத்து வருகிறான் என்ற பேச்சு எங்கும் பரவியது. இதற்கு கபடகுரு தன்னை யடுத்துள்ளவன் மூல

மாக பிரமதத்த ராஜனுடைய இரகசியங்களை யெல்லாந் தெரிந்து கொண்டான். அந்த பிரமவர்த்த ராஜனுடைய மந்திரி, உதயனனுக்கும் அவன் படைகளுக்கும் இடையூறு செய்யக் கருதி வழியே குளங்களிலும், விருக்ஷங்களிலும், மலர்களிலும், கொடிகளிலும், புற்களிலும் விஷங்கலந்து வரும்படி அநேகம் வேசிகளை யனுப்பினான். இந்த இரகசியத்தைக் கபாலி குரு தெரிந்து கொண்டான். உடனே தன் மாணவர்கள் மூலமாக யௌகந்தராயணனுக்குத் தெரிவித்து விட்டான். யௌகந்தராயணன் வழியில் அங்கங்குள்ள குளங்களையும், கொடிகளையும், மரங்களையும், மலர்களையும் விஷங்கலந்திருக்கிறதோவெனப் பரீக்ஷித்துப் பார்த்துத் தெரிந்துகொண்டு தன்னுடைய சைன்னியங்களுக்கு மத்தியில் அன்னிய ஸ்திரீகள் யாவரும் பிரவேசிக்க வொட்டாமற்காக்க ஏற்பாடு செய்தான். பின் பிரமதத்த ராஜனுடைய மந்திரி உதயனனுடைய சைன்னியங்களைக் கபடமாகக் கொல்லும்படி அநேகரையனுப்பினான். இந்த இரகசியத்தையும் கபாலிகுருவின் மாணவர்கள் யௌகந்தராயணனுக்குச் சொல்லி விட்டார்கள். ஆகையால் யௌகந்தராயணனும் ருமண்வானும் அப்படிக் கபடமாகத் தங்கள் சைன்னியங்களுக்குள் பிரவேசிப்பவர்களைக் கண்டு பிடித்துக் கொன்றார்கள்.

இவ்வாறாகவே பிரமதத்தராஜன் "நமது யுக்தி யொன்றும் பயன்பட வில்லை; உதயனனோ பெருத்த சேனைகளுடன் வருகிறான். அவனை நாம் வெல்ல முடியாது" என்றெண்ணி, உதயனன் தன் நகரருகே வருகிற வரையில் காத்திருந்து, வந்தவுடன் எதிர் கொண்டு சென்று அவனைவணங்கி அவனுக்குக் காணிக்கை கொடுத்தான். உதயனன் அவன் கொடுத்த காணிக்கைகளை அன்போடு பெற்றுக் கொண்டு அவனுக்குப் பிரதி சம்மானஞ் செய்தான். சூரர்கள் தங்களை வணங்கியவர்களிடம் அன்புடையவராவார்க ளல்லவா?

பிறகு அங்கிருந்து கீழ்த்திசை சென்று கருணையுடனிருக்கும் பகைவர்களைச் சந்தோஷப்படுத்திக் கருணையற்றவர்களை வாயுவான வன் மரங்களை முறிப்பது போல் அதமாக்கினான் உதயனன். பிறகு அங்கிருந்து கீழ்ச் சமுத்திரக் கரைக்குச் சென்று அங்கு ஜய ஸ்தம்பத்தை நாட்டினான். அது பாதாள லோகத்திலிருந்து அபயங் கேட்பதன் பொருட்டு நாகராஜன் மேலெழுந்ததுபோற் காணப்பட்டது. அங்கே களிங்க தேசத்தரசன் வந்து வணங்கிக் கப்பங் கட்

டினன். அப்பால் தென்றிசை சென்றான். அங்குள்ள பகைவர்களைச் சரத்காலத்தில் பர்வதங்களைச் சார்ந்திருக்கும் வெண்ணிற மேகங்களைப்போல் ஜயித்தான். பிறகு காவேரி நதியைக் கடந்து சென்றான். அந்நதியும் சோளராஜனுடைய கீர்த்தியும் ஒரே சமயத்தில் கலங்கிற்று. அங்கிருந்து முராளதேசம் போய் அங்குள்ள அரசரை ஜயித்து அப்பால் ரேவா நதியைக் கடந்து உச்சயினி நகரம் வந்தான் உதயனன். அங்கே சண்டமஹாஸேன ராஜன் உதயனனை எதிர் கொண்டழைத்துச் சென்றான்.

உதயனனை அவன் மாமனாகிய சண்ட மஹாஸேனன் மிகவும் பெருமைப் படுத்தினன். அங்கே தன் தேக சுகங்களையும் மறந்து சில நாள் வெகு சுகமாக வசித்தான் உதயனன். வாஸவதத்தையும் தன் தந்தை வீட்டில் தன் குழந்தைப் பருவங்களை நினைத்து மகிழ்ந்து கொண்டிருந்தாள். சண்ட மஹாஸேனன் தன் பெண்ணைப்போலவே பத்மாவதியையும் பாவித்துபசரித்தான். உதயனன் அங்கே சில நாளிருந்து சிரமபரிகாரஞ் செய்துகொண்டு பின் தன் மாமனுருடைய சேனைகளையுமழைத்துக் கொண்டு மேற்றிசை சென்றான். பின் அங்குள்ள அரசர்களை ஜயித்துக்கொண்டு மந்தரமலை சென்றான். அங்கே இவன் யானைகள் தன்னிச்சைப்படி சஞ்சரித்தன. அந்த மலையானது அப்பொழுது மிகுதியும் அசைந்தது. அது அப்படி யசைந்தது, அரசனே! சமுத்திர மதனம் செய்வதற்காக என்னை வேருடன் களையவேண்டாம்! வேண்டாமென்று கூறுவது போலிருந்தது. அப்பொழுது சூரியனைவிட மிகுந்த தேஜஸ்வாய்ந்த யாரோ ஒருவன் மேற்றிசையில் உதயமாயிருக்கிறான்! இது சத்தியம்!! என்று உதயனனைக் கண்ட யாவரும் பேசிக்கொண்டனர்.

அப்பால் உதயனன் அங்கிருந்து ஆடம்பரத்தோடு புறப்பட்டுக் குபேரனுகிய திலகமும், அளகாபுரியாகிய கூந்தலும் கைலாயமாகிய மந்தகாசமுமுடைய வடதிசை யென்னும் ஸ்திரீயை யடைந்தான். அங்கே ஸிந்து தேசத்தரசனை சுவாதீனப் படுத்திக்கொண்டு மிலேச்சர்களை நாசஞ் செய்தான். அது இராமச் சந்திர பிரபு இராக்ஷஸர்களை ஹதஞ்செய்தது போற் காணப்பட்டது. கலங்கிய கடலின் அலைகள் போன்றிருந்த துருக்கருடைய குதிரைகள் உதயனனுடைய யானையாகிய சமுத்திரக்கரையிலுள்ள வனங்களிற் கண்டங் கண்டமாகப் பிரிந்தோடின. புருஷ சிரேஷ்ட

னும் பகைவர்களிடம் கப்பம் வாங்குகிறவனுமாகிய உதயனன் பார்ஸீக தேசத்தரசனுடைய தலையைச் சேதித்தான். அது சக்ரபாணியும் லக்ஷ்மிகாந்தனும் புருஷோத்தமனுமாகிய விஷ்ணு, இராகுவின் சிரஸைக் கண்டித்தது போற் காணப்பட்டது. இமயகிரியில் ஹூணர்களை நாசஞ் செய்த உதயனனுடைய கீர்த்தியானது திசைகள் செவிடுபடும்படியான சத்தத்துடன் கூடி மற்றொரு கங்காநதி போற்பரவிற்று. உதயனன் சேனைகள் செய்யும் ஆரவாரத்தால் மலைகளிலுள்ள குகைகளிலிருந்து எதிரொலி யுண்டாயிற்று. அங்கே காமரூபேசுவரன் என்னும் அரசன் குடையில்லாமலே உதயனனை வணங்கி அநேகயானைகளையும் சேனைகளையும் கொடுத்தான். பிறகு உதயனன் அங்கிருந்து புறப்பட்டுப் பத்மாவதியின் தந்தை யிருந்தாசுபுரியும் மகத தேசத்திற்கு வந்தான். பத்மாவதியுடனும் வாசவதத்தையுடனும் உதயனன் வரக்கண்ட மகததேசாதிபதி, இராக்காலத்துத் தோன்றும் சந்திரனைக்கண்ட மன்மதன் மகிழ்ச்சியடைவது போல் மகிழ்வுற்றான். என்று மடையாத ஆநந்தமடைந்து தன் மருமகனை எதிர்கொண்டழைத்துத் தழுவிக்கொண்டு தன் அரண்மனைக் கழைத்து சென்றான். உதயனன் தன் மாமனார் செய்த உபசாரணைகளை அன்போடேற்று அங்குச் சில நாளிருந்து சிரமபரிகாரஞ் செய்துகொண்டு ஜயகோலத்துடனும் எல்லா சேனைகளுடனும் தன்னைச் சார்ந்த ஜனங்களெல்லோரும் பரமாநந்த மடையத் தன் சுவதேசமாகிய லாவாணகம் வந்து சேர்ந்தான்.

## ஆறாவது தரங்கம்.

லாவாணகத்திற்கு வந்த சில நாளைக்கெல்லாம் உதயனன் யௌகந்தராயணனைப் பார்த்து, "உனது யுக்தியால் பூமியிலுள்ள அரசர் யாவரையும் ஜயித்தேன். அவ்வரசர்கள் இனி யென் விஷயத்தில் தவறி நடக்கமாட்டார்கள். வாரணாசிக்குப் பதியாகிய பிரமதத்த ராஜனொருவனே கெட்ட எண்ணமுள்ளவன். இவன் நமக்கு என்றேனும் கெடுதி செய்வானென் றெண்ணுகிறேன். வக்ரசுபாவமுள்ளவர்களை யெப்படி நம்புவது?" என்றான். யௌகந்தராயணன் "அரசனே! பிரமதத்தபூபதி இனி நமக்குக் கெடுதி யெதுவும் செய்யான். அவ்வரசனைத் தாங்கள் ஆக்ரமித்தவுடன் அவன் தங்களை

வணங்கினுன். நல்ல நடத்தையுள்ளவர்களுக்கு யார் கெடுதி செய்வார்கள்? அப்படிக் கெடுதி செய்வானேயாகில், அவன் கெடுதியைத் தானே யடைவான். அதற்கொரு சரித்திர மிருக்கிறது கேளுங்கள்—

பூர்வம் பத்மதேசத்தில் அக்னிதத்தன் என்னுமொரு அந்தணனிருந்தான். அவன் மகா கீர்த்திமான். அந்த வேதியனுக்கு இரண்டு புத்திரர்களிருந்தார்கள். அவர்களுள் மூத்தவனுக்கு ஸோமதத்தனென்று பெயர். இளையவனுக்கு வைச்வானரதத்தன் என்று பெயர். ஸோமதத்தன் நல்ல ஆகிருதியுடையவன். மூர்க்கன். கெட்ட நடத்தையொடு கூடியவன். வைச்வானரன் நன்ருய்ப் படித்தவன். அத்தியயனஞ் செய்வதில் எப்போதும் பிரிய முடையவன். பெரியோரிடத்து வணக்கமுடையவன். இவ்விருவருக்கும் விவாகஞ் செய்வித்துத் தந்தை மரணமடைந்தான்.

பிறகு ஒரு சமயம் இளையவனுகிய வைச்வானரதத்தன் அரசனிடஞ் சென்று தன் கல்வியின் சாமர்த்தியங்காட்டித் தக்க சம்மானம் பெற்ருன். மூத்தவனுகிய ஸோமதத்தன் என்பவன் சாபல்யத்தை யடைந்து க்ஷத்திரியனைப் போல் நடந்து கொண்டிருந்தான். இப்படியிருக்கையில் இந்தஸோமதத்தன் சூத்ரகோஷ்டியில் சேர்ந்து தன் ஒழுக்கங்கெட்டுத் திரிவதை யறிந்த இவன் தந்தையின் நண்பனுகிய ஒரு அந்தணன் இவனைப் பார்த்து, "ஏ மூடா! நீ அக்னிதத்தனுக்குப் பிள்ளையாகப் பிறந்து இப்படியேன் சூத்ரனைப்போலலைகிருய்? உன்னுடன் பிறந்தவன் அரசனிடம் சம்மானம் பெற்றிருக்கிருனே, உனக்கு வெட்கமில்லையா?" என்று கேட்டான். இதைக் கேட்டதும் ஸோமதத்தன் சினமடைந்து விரைந்தோடி அவ்வந்தணனைக் காலாலுதைத்துக் காரியுமிழ்ந்தான். அவ்வந்தணன் அப்போது தன்னுடன் கூடவிருந்த மற்ற அந்தணர்களைச் சாட்சியாகக்கொண்டு ஸோமதத்தனைப்பற்றி அரசனிடம் தெரியப்படுத்திஞன். அரசன் விசாரித்து மிகுந்த கோபமடைந்து ஸோமதத்தனைப் பிடித்து வரும்படி தூதர்களை யனுப்பினுன். அரசனுடைய தூதர்கள் ஸோமதத்தனைப் பிடிக்க வந்ததும் அவனைச் சார்ந்தவர்கள் அவர்களை நையப் புடைத்துக் கொன்று விட்டார்கள். இதை யறிந்த அரசன் பெருங் கோபமடைந்து பலவீரர்களை யனுப்பி ஸோமதத்தனைப் பிடித்துவரும்படி செய்து அவனைக் கழுவிலேற்றும்படி கட்டளை யிட்டான். இராஜகிங்கரர்கள் உடனே அரசனதாக்ஞைப்படி ஸோமதத்தனை அழைத்

துச்சென்று கழுவிலேற்றினார்கள். ஏற்றிய அக்கணமே யாது காரணத்தாலோ அந்த ஸோமதத்தன் அதினின்றும் நழுவிக் கீழே விழுந்தான். இராஜகிங்கரர்கள் மறுபடியும் அவனைத் தூக்கிக் கழுவிலேற்ற யத்தனித்தார்கள். அப்பொழுது அவர்கள் எல்லோரும் குருடரானார்கள். இச்செய்தியறிந்த அரசன் ஸோமதத்தனைக் கழுவிலேற்றாது விட்டு விடும்படிக்கு உத்தரவிட்டான். மங்களமடையக் கூடியவனை அவனுடைய பாக்கியங்கள் எப்போதும் காப்பாற்றுகின்றன.

பிறகு ஸோமதத்தன் தான் மரணத்தினின்று தப்பியதற்குச் சந்தோஷமடைந்தானில்லை. ஆனால் அவமானம் பொறுக்கமாட்டாமல் மறுநாள் அந்நகரத்திலிருந்து தன்மனைவி மக்களோடுபுறப்பட்டுத் தேசாந்திரம் போக யத்தனித்தான். அவனுடைய சுற்றத்தாரும் மற்றவர்களும் அவனைத் தேசாந்தரம் போக வொட்டாமற் றடுத்தார்கள். பிறகு ஸோமதத்தன் தன்காலக்ஷேபத்திற்கு வேறு எந்த வழியுந் தெரியாமல் பயிர்த் தொழில்செய்ய விரும்பி அதற்குச் சரியான நிலத்தைச் சேகரிக்க அரண்யம் நோக்கிச் சென்றான்.

வனத்தில் சிறிது தூரம் சென்றதும் நல்லபலனை கொடுக்கத்தக்க பூமியைக் கண்டுபிடித்தான். அதன் நடுவில் ஓர் அரசமரமிருக்கக் கண்டு இது பயிரிடுவதற்குத் தக்க இடமென்று நினைத்து மகிழ்ந்தான். அந்த விருக்ஷத்திற்கு அதிஷ்டானமானவர் எவரோ அவரிடம் நான் பரமபக்தன் என்று சொல்லிக்கொண்டு அம்மரத்தை நாடோறும் பிரதக்ஷிணஞ்செய்து நமஸ்கரித்து வந்தான். பிறகு ஒரு நாள் நல்ல வேளையில் பயிருடுவதற்குத் தொடங்கினான். இரவும் பகலும் அம்மரத்தடியிலேயே வாசஞ் செய்து வந்தான். அவனுக்கு அவன் மனைவி நாடோறும் அவ்விடத்திற்குப் போஜனங் கொண்டு வந்து கொடுத்து வந்தாள். பின் தக்கசமயத்தில் பயிர்களெல்லாம் பக்குவமாயின. இச்சமயம் வேறொரு நகரத்து அரசனுடைய சைன்னியங்கள் அவ்வழியே வந்து அப்பயிர்களையழித்து விட்டன. அதுகண்ட ஸோமதத்தனும் அவன் மனைவியும் மிகவும் துக்கித்தார்கள். பிறகு சில நாளைக்கெல்லாம் இருவரும் தேறுத லடைந்தார்கள். ஸோமதத்தன் முன்போலவே அந்த அரசமரத்தை நாடோறும் வலம் வந்து பூசித்து வந்தது மன்றி அதனடியிலேயே வசித்து வந்தான். தைரிய முடையவர்களுக்கு ஆபத்துக் காலத்தில் திடத்தன்மை ஏற்படுவது சகஜந்தானே ?

இவ்வாறிருந்து வருகையில் ஒருநாள் இரவு ஸோமதத்தன் விழித்துக்கொண் டிருக்கும்போது அம்மரத்திலிருந்து, "ஸோமதத்த! உன்னிடம் நான் சந்தோஷமடைந்தேன். நீ ஸ்ரீகண்ட தேசத்திலிருக்கும் ஆதித்யப்ரபன் என்ற அரசனுடைய இராஜ்யத்திற்குச் சென்று அங்கே அரசனுடைய அரண்மனை வாயிலிலிருந்து ஸந்தியா வந்தனம் அக்னி ஹோத்ரமந்திரங்களைப் படித்து எப்போதும் நான் பலபூதி என்ற பெயருடைய பிராமணன். நான் சொல்வதைக் கேளுங்கள். "நன்மை செய்தவன் நன்மை பெறுவான், தீமை செய்தவன் தீமை யடைவான்" என்று சொல்லிக்கொண்டிரு; பிறகு பெரும் ஐசுவரியத்தை யடைவாய். ஸந்தியா வந்தன அக்னிஹோத்திர மந்திரங்களை என்னிடம் இப்போதே தெரிந்துகொள். நான் யக்ஷன்" என்ற இவ்வாறான வாக்குகள் கேட்கப்பட்டன. உடனே அந்த யக்ஷன் அவனுக்கு எதிர் தோன்றி அம்மந்திரங்களை யுபதேசித்து மறைந்தான். புண்ணியசாலியாகிய ஸோமதத்தன் அந்த யக்ஷனால் கொடுக்கப்பட்ட பலபூதி யென்ற பெயரைப் பெற்று மகிழ்வுற்று மறுநாள் தன் மனைவியுடன் அங்கிருந்து புறப்பட்டான். தனக்கு இதுவரையில் ஏற்பட்டிருந்த கெட்டகாலம் போன்ற அந்த அரண்யங்களைக் கடந்து ஸ்ரீகண்டதேசம் போய்ச் சேர்ந்தான். அங்கே சென்ற மறுநாளே ஆதித்யப்ரபராஜனுடைய அரண்மனை சென்று யக்ஷன் குறிப்பிட்டபடி தெருவாயிற்படியி லிருந்து மந்திரங்களை யுச்சரித்து நான் பலபூதி யென்ற பெபரையுடையவன்; "நன்மை செய்தவன் நன்மை யடைவான்; தீமை செய்தவன் தீமையடைவான்" என்றும் கூறி வந்தான். இவன் இவ்வாறு சொல்லிக்கொண்டிருப்பது அரசன் செவிக்கெட்டியது. அரசன் உடனே பலபூதியை உள்ளே யனுப்பும்படி சேவகர்களுக் குத்தரவிட்டான். அவ்வாறே சேவகர்கள் அவனை அரண்மனைக்குள் அரசனிடம் அனுப்பினார்கள். பலபூதி அரண்மனைக்குள்ளே சென்ற பின்பும் அவ்வாறே அடிக்கடி சொல்லிக்கொண்டிருந்தான். அதைக்கேட்ட அரசனும் அவனருகே யிருந்தவர்களும் நகைத்தார்கள். பிறகு அவன் மீது சந்தோஷமடைந்து விலையுயர்ந்த ஆபரணங்களையும் வஸ்திரங்களையும் கொடுத்தான் அரசன். மந்திரிமார்களும் அவரவர் விரும்பியபடி வஸ்திரங்களையும் திரவியங்களையும் கொடுத்தார்கள். பெருந் தன்மையுள்ளவர்களின் சந்தோஷம் வீணாகாதல்லவா?

பலபூதி இவ்வளவு சன்மானங்களைப்பெற்றும் தனக்கு யக்ஷன் உபதேசப்படி அடிக்கடி சொல்லிக்கொண்டே யிருந்தான். நிறுத்தினனில்லை. அதனால் அரசனுக்குப் பிரியனானான். பிரபுக்களின் மனம் விநோதத்தில் விருப்ப முடையதாயிருக்குமல்லவா? பிறகு பலபூதி இராஜ்யத்திலும் இராஜ கிருகத்திலும் மற்று மெவ்விடங்களிலும் அரசனுக்குப் பிரியன் என்ற பெருமையையும் சன்மானங்களையும் பெற்றான்.

இப்படி யிருக்கையில் ஒரு சமயம் அந்த ஆதித்யப்ரபராஜன் காட்டுக்கு வேட்டையாடச் சென்று அரண்மனைக்குத் திரும்பி வந்தான். வேந்தனைக் கண்டதும் வாயிற் காப்பவர்கள் பரபரப்புடன் இங்கும் அங்கும் சென்றார்கள். அதுகண்ட அரசன் இவர்களிப்படிப் பரபரப்புடனிருப்பதற்குக் காரண மென்னவோ தெரிய வில்லை யென்றெண்ணிக் கொண்டே அரண்மனைக்குள் சென்றான்.

அங்கே தன் மனைவி குவலயாவலி யென்பவள் நெற்றியிற் பெரிய குங்குமப் பொட்டுடன் வடமுகமாக உட்கார்ந்து கண்களை மூடிக்கொண்டு ஜபஞ் செய்து கொண்டிருக்கக் கண்டான். அவள் முன்பு இரத்தம், மது, மாம்ஸம் இவைகள் நைவேத்தியத்திற்காக வைத்திருக்கவுங் கண்டான். கண்டதும் ஆச்சரிய மடைந்தான். தன் அருகே அரசன் வந்திருப்பதை யறிந்த குவலயாவலி அரசனைப் பார்த்துக் கைகுவித்து வணங்கி "அபயந்தர வேண்டும்! பிரபுவே! உமது க்ஷேமத்திற்காகவே நான் பூஜை செய்தேன். முன் நான் என் தந்தை வீட்டிற் கன்னிகையா யிருக்கும் போது வசந்தோற்சவ காலத்தில் தோழிமார்களுடன் உத்தியான வனஞ் சென்றேன். அப்பொழுது தோழிகள், என்னைப் பார்த்து, "அம்மணீ! இந்த உத்தியான வனத்தில் விருக்ஷங்களுக்கு மத்தியில் மகிமை வாய்ந்தவரும் வரங் கொடுப்பவருமாகிய விநாயகக் கடவுள் இருக்கிறார். விரும்பியவற்றைக் கொடுக்கும் அந்த விநாயகரையடைந்து அவரைப் பக்தியுடன் பூசிப்பாயே யாகில், எந்த இடையூறும் நேராது. உனக்குத் தகுந்த நாயகனையடைவாய்" என்று கூறினார்கள். அதுகேட்ட நான் என் அறியாமையால் "ஸகிகளே! விநாயகரைப் பூசித்தால் கன்னிகை கணவனையடைவாளா?" என்று கேட்டேன். அவர்கள் "அம்மணீ! விநாயக பூஜையின் மகிமையை நீயறியாய். முன் காலத்தில் தேவேந்திரன் தாரகன் என்னுமொரு அசுரனால் மிகுதியுந் துன்ப

மடைந்தான். அந்தத்துன்பத்தைப் பொறுக்கமாட்டாமல் திரிபுர தகனனும் சிவபிரானிடத்து ஒரு புத்திரனையடைய விரும்பி மன்மதனை யனுப்பினான். மன்மதன் பரமசிவனுடைய நெற்றிக்கண்ணால் எரிக்கப்பட்டு அழிந்துபோனான். அப்பொழுது ஜிதேந்திரியரும், மிக உக்ரரும், நீண்ட காலமாக யோகத்திலிருப்பவருமாகிய பரமசிவனை நோக்கித் தவமிருந்த கௌரிதேவி அவரைக் கணவனாகப்பெற்றனள். பிறகு புத்திரப்பேறடையும் பொருட்டும் மன்மதன் உயிர்த்தெழும் பொருட்டும் விருப்பங்கொண்ட கௌரிதேவி, காரியசித்தியடைவதன் பொருட்டு விநாயகரை ஆராதிக்க நினைக்கவில்லை. அம்மையின் விருப்பமறிந்த பரமசிவன், "பிரியநாயகி! மன்மதன் முன் பிரஜாபதியின் மனத்தினின்றுண்டானான். அவன் பிறந்ததும் எவனைக்கொழுப்படையும்படி செய்வேன்; பிரமனையே கொழுப்படையும்படி செய்வேன்" என்று தீர்மானித்தான். அது கண்ட நான்முகக் கடவுள் அந்தப் புத்திரனுக்குக் கந்தர்ப்பன் என்று பெயரிட்டார். பின் ஒரு சமயம் அவனை நோக்கி, "குமார! நீ மிகுதியுங் கர்வங் கொண்டவனாயிருக்கின்றாய்; இருந்தபோதிலும் நீ எப்போதும் முக்கண்ணனாகிய பரமசிவனுக்கு மாத்திரம் தீங்கு செய்ய நினையாதே. அவரிடம் மரணத்தையடையாதே" என்று கூறினார். அவ்வாறு பிரஹ்மதேவர் கூறியிருந்தும், அதனை மறந்து அந்த வஞ்சகனாகிய கந்தர்ப்பன் என் யோகத்தைக் கலைப்பதற்கு வந்தான். நான் உடனே அவனை யெரித்தேன். எரிந்துபோன அவன் இப்போதுமீண்டும் எவ்வாறு சரீரத்துடன் எழுவான்? ஆகையால், என் சக்தியால் உனக்கு ஒரு புத்திரனை உற்பத்தி செய்கின்றேன்; பிராகிருத ஜனங்களுக்குப்போன்று புத்திரனை யுண்டு பண்ணுவது எனக்கு மன்மதோற்சவங் காரணமாகாது" என்று கூறிக்கொண்டிருக்கும்போது, பிர்ஹ்மதேவர் இந்திரனுடன் அங்கு வந்து சேர்ந்தார். அவர், பரமசிவனைத் தோத்திரஞ்செய்து தேவர்களை இம்சைசெய்யும் தாரகனைச் சங்கரிக்கவேண்டுமென்று பிரார்த்தித்தார். பரமசிவன் அவரது பிரார்த்தனைக்கிரங்கி உமாதேவியாரிடம் ஒரு புத்திரனை உற்பத்திசெய்வோமென்று வாக்களித்தார். அதன் பிறகு, நான்முகன் கேட்டுக்கொண்டபடி சிருஷ்டி, ஸ்திதி, ஸங்காரங்களின் பொருட்டு மானிடர்களின் மனத்தில் சொரூபமில்லாமலே மன்மதன் உண்டாகட்டுமென்று கூறினார். தம்முடைய

மனத்திலும் மன்மதனுக்கு அவகாசம் கொடுத்தார். அதனால் பிரஹ்மதேவர் மகிழ்வுற்றுத் தமதிருப்பிடம் சென்றார். பார்வதியம்மையாரும் மகிழ்வெய்தினர்.

பின்னர், சின்னாட் செல்லலும் ஒரு சமயம் பரமசிவனும் பார்வதிதேவியாரும் ஏகாந்தமாயிருந்து ஸுரதக்ரீடை புரிந்தனர். அவ்வாறே நூறு வருடம் வரையிலிருந்தனர். அதனால் மூவுலகமும் நடுங்கின. உலகம் நாசமுறுமோ என்றஞ்சித் தேவர்கள் பரமசிவனுடைய க்ரீடையைக் கெடுப்பதற்குப் பிரஹ்மதேவரது உத்தரவின்படி அக்னியை நினைத்தார்கள்; அந்த அக்னிதேவன் தேவர்கள் முன்தோன்றி, மன்மதனை நீறாக்கிய பரமசிவ மூர்த்தியிடம் என்னால் செல்லமுடியாதென்று கூறி அக்கணமே அங்கிருந்தோடி நீரின் நடுவே புகுந்து மறைந்தான். அதனால் நீரிலிருந்த தவளைகள் கொதிப்படைந்தன. பிறகு, தேவர்கள் அக்னியைத் தேடிக்கொண்டு வந்தனர். அதனைக் கண்ட தவளைகள் "அக்னிதேவன் நீரிலிருக்கின்றான்" என்று கூறின. அதனால் அக்னி கோபமடைந்து தவளைகளை நோக்கி, "உங்களுக்கு ஸ்பஷ்டமான உச்சரிப்பு உண்டாகக் கூடாது" என்று சாபந்தந்தான். அப்பால் அக்னி மந்தரமலை சென்று அங்கே ஒரு குகையினடுவே கிளிஞ்ச உருவத்தோடு மறைந்திருந்தான். அங்கிருந்த யானைகளும் கிளிகளும் அக்னிதேவன் அங்கிருப்பதை அங்கே தேடிக்கொண்டு சென்ற தேவர்கட்குத் தெரிவித்தன. பிறகு, அக்னிதேவன் தேவர்களின் கண்களுக்கெதிரே தோன்றினான்; தன்னைக் காட்டிக் கொடுத்த கிளிகளுக்கும் யானைகளுக்கும் நாவு மாறிப்போகும்படி சாபந்தந்தான். அதன் பின்னர், தேவர்களெல்லோருங் கூடி அக்னி தேவனைத் தோத்திரஞ் செய்து தங்களுடைய வேண்டுகோளுக்கிணங்க வேண்டுமென்று வேண்டிக்கொண்டனர். அக்னிதேவன் அவர்களுடைய வேண்டுகோளுக்கிசைந்து உடனே சிவபெருமானிடஞ் சென்று தன்னுடைய உஷ்ணத்தால் அவரை ஸுரதக்ரீடை செய்யாமலிருக்குமாறு தடுத்தான்; உடனே தனக்கு அந்தக் காமலாஸனன் சாபமிடுவாரோவென்று அஞ்சி, அவரை வணங்கித் தேவர்களின் பிரார்த்தனையைத் தெரிவித்தான். சிவபெருமான் விரைவில் தமது வீரியத்தை அக்னியினிடம் கொடுத்தார். அந்த வீரியத்தை ஏற்றுக்கொள்ள அக்னிக்கும் அம்பிகைக்கும் சக்தியில்லாமற்போயிற்று. உடனே அம்பிகை

பரமசிவனைப் பார்த்து, "தங்களிடமிருந்து நான் புத்திரனை யடைய வில்லையே" என்று கூறி வியசனத்தையும் கோபத்தையும் அடைந்தாள். அதுகண்ட பரமசிவன், "பிராண நாயகி, நீ முதலில் காரியசித்தியின் பொருட்டு விநாயகரைப் பூஜிக்கவில்லை; அதனால் அந்தக் காரியத்திற்கு இடையூறு நேரிட்டது. ஆகையால், நீ விநாயகரைப் பூஜிப்பாயானால் நம்மிருவருக்கும் அக்னியிடம் புத்திரனுண்டாவன்" என்றார்.

இவ்வாறு சந்திரசேகரப் பெருமான் தெரிவித்ததும், உமாதேவியார் உடனே விநாயகரைப் பூஜித்தார். பிறகு அக்னி அம்பிகா ஸஹாயனுடைய வீரியத்தால் கர்ப்பமடைந்தான். சம்புவின் தேஜஸை வகித்த அந்த அக்னி அச்சமயம் தனக்குள் சூரியனையுடையவன் போல் விளங்கினான். பிறகு அந்த வீரியத்தைத் தாங்கமாட்டாது கங்கைக்குச் சென்று அங்கே அந்த வீரியத்தைக் கக்கினான். அந்தக் கங்கை அந்தக் கடுமையான வீரியத்தைக் கங்காதரனுடைய கட்டளைப்படி மேருமலையின் கணுள்ள அக்னி குண்டத்திற் கொண்டுபோய்ச் சேர்த்தது. அங்கே சிவகணங்கள் அந்தக்கர்ப்பத்தைக் காப்பாற்றிக்கொண்டு வந்தார்கள். ஆயிரவருட காலங்கடந்த பின்னர், அந்தக் கர்ப்பமானது வெளிப்பட்டு ஆறுமுகமுடைய குமாரனுகத் தோன்றிற்று. அந்தக் குமாரனுக்கு பாலூட்டும்படி ஆறு கார்த்திகைப் பெண்களைக் கௌரீ தேவியார் அனுப்பினார். அந்தக் கார்த்திகைப் பெண்களிடம் அந்தக் குமாரன் ஆறு திருமுகங்களாலும் பாலுண்டு வளர்ந்து வந்தான்.

இச்சமயத்தில் இந்திரன் தாரகாசுரனால் அவமதிப்படைந்து யுத்தத்தினின்றும் பின்னிட்டு யாவராலும் அடைதற்கரிய மேருவின் சிகரத்தை யடைந்து அநேக தேவர்களுடனும் முனிவர்களுடனும் ஆறுமுகப் பெருமானைச் சரணமடைந்தனன். உடனே ஷண்முகப் பெருமான் தேவர்களைக் காக்கத் திருவுளங்கொண்டார். இதனை யுணர்ந்த தேவர்களனைவரும் குமாரக் கடவுளைச் சூழ்ந்துகொண்டு கைகுவித்தவா றிருந்தனர். இதைக் கவனித்த தேவேந்திரன், நமது லோகம் இந்தக் குமாரனால் அபகரிப்படுமென்றெண்ணி அவர் மீது மாற்சரியங் கொண்டு அவரோடு யுத்தஞ் செய்தான். இந்திரனது வஜ்ராயுதத்தால் அடிபட்ட குமாரக் கடவுளின் சரீரத்திலிருந்து நிகாற்ற தேஜஸுடன் கூடிய

சாகன், விசாகன் என்னும் இரண்டு குமாரர்கள் தோன்றினர். அவ்விரு சிறுவர்களுடனும் குமாரக்கடவுள் சேர்ந்துதேவராஜனை யெதிர்த்து அமர்புரிந்து அவனுடைய பராக்ரமத்தைக் குலைத் தார். அதுகண்ட பரமசிவமூர்த்தி குமாரக் கடவுளிடம் வந்து, யுத்தஞ் செய்தல் வேண்டாமெனத் தடுத்து, "ஓ புத்ர! நீ தாரகாசுர ஸம்ஹாரத்தின் பொருட்டுண்டானவன்; இந்திரனுடைய இராஜ்யத்தைக் கிரகிப்பதற்காக அவதரித்தவனன்று; ஆகையால், உனக்கு ஏற்படுத்தப்பட்ட காரியத்தைக் கவனி" என்று புத்திரனுக்குக் கட்டளையிட்டு மறைந்தனர். உடனே இந்திரன் பயந்து குமாரக்கடவுளை வணங்கிக் குமாரக் கடவுளுக்குச் சேனாபதி பட்டங்கட்டத் தீர்மானித்து, அபிஷேகஞ் செய்விப்பதற்காக ஜலம் நிறைந்த குடத்தைத் தானே கையில் எடுத்துக் கொண்டான். குடமெடுத்த கை அவ்வாறே ஸ்தம்பித்துவிட்டது. அதனால் இந்திரன் துக்கமடைந்து என்ன அபராதம் செய்தோம் என்று பிரமித்து நின்றான்.

இப்பொழுதுபரமசிவன் அங்குத் தோன்றிச் சொல்லுகிறார். இந்திர! இக்குமாரனுக்குச் சேனாபதிப் பட்டங்கட்ட விரும்பும் நீ கஜமுகனைப் பூஜிக்க வில்லை. அதனால் விக்னம் நேர்ந்தது; ஆகையால், கணேசரை யுடனே பூசிக்கக் கடவாய் என்று கூறினார். பிறகு இந்திரன் அவ்வாறே விநாயகரைப் பூஜித்தான். கையும் ஸ்வாதீனத்திற்கு வந்தது;பின்னர் மகிழ்ச்சியுடன்குமாரக்கடவுளுக்குச் சேனாபதி மகோற்சவத்தை நடத்தி தாரகாசுரனை வதை செய்ய வேண்டுமென்று வேண்டிக்கொண்டான். கந்தபிரான் அவ்வாறே விரைவில் தாரகாசுரனை யெதிர்த்து அமர்புரிந்து அவனை வதஞ் செய்தார். காரிய சித்தி பெற்ற தேவர்கள் பரமானந்தமடைந்தனர்.

ஆகையால் "தேவி" தேவர்களாயினும் விநாயகரைப்பூஜிக்காவிடின் காரிய சித்தி யுண்டாகாது! வரனை விரும்பிய நீ விநாயகரைப் பூஜிக்கக் கடவாய்" என்று தோழிமார் கூறினர். அது கேட்டு உத்தியான வனத்தில் ஓரிடத்திலிருக்கும் விநாயகரைமுதவிற் பூஜித்தேன்; பூஜை முடிந்ததும் என்னுடைய தோழிமார்கள் தங்களுடைய ஸித்தியால் திடீரென்று ஆகாயமார்க்கத்திற்கிளம்பி விளையாடினார்கள்; அவர்களைக் கண்ட நான் சந்தோஷமடைந்து அழைத்தேன். உடனே அவர்கள் கீழே வந்தார்கள். அவர்களைப்

பார்த்து "எனக்கு ஸித்தியின் ஸ்வரூபத்தைத் தெரிவிக்க வேண்டும்" என்று கேட்டேன் அவர்கள் "அம்மணி! இம்மந்திரங்கள் டாகினியைச் சேர்ந்தவை. இம்மந்திர ஸித்தி பெற வேண்டுமாயின் மனித மாமிசத்தைப் புசித்தல் வேண்டும். இந்த மந்திரம் காளராத்திரி என்னும் ஒரு பிராம்மண ஸ்திரீயால் எங்களுக்கு உபதேசிக்கப் பட்டது. அவ்வம்மையார் தாம் எங்களுக்குக் குரு என்றனர். இவ்வாறு அவர்கள் கூறலும் நான் அந்த மந்திர ஸித்தியடையப் பெற்று ஆகாயத்திற் பறக்க வேண்டு மென்னும் அவாக்கொண்டவளா யிருந்தும், மானிடமாமிசத்தைப் புசிக்க வேண்டு மென்னும் கவலைக்குள்ளாழ்ந்து சற்று நேரம் ஒன்றும் பேசாதிருந்தேன். அதன் பின் தோழிகளை நோக்கி நானும் அம்மந்திர உபதேசம் பெற விரும்புகின்றேன்" என்று எனது விருப்பத்தைத் தெரிவித்தேன். உடனே என் தோழிகள் என்னைக் காளராத்திரியிருக்கு மிடத்திற்கு அழைத்துச் சென்றனர். காளராத்திரி என்னும் அந்தவிப்பிரமாது, விகாரமான ஆகிருதியும், சேர்ந்த புருவமும், பயங்கொண்ட நேத்திரங்களும் பருத்த கன்னங்களும் வக்ரமான உதடுகளும் நீண்ட கழுத்தும் தொங்கிய கொங்கைகளும் பருத்த வயிறும், வியக்தமாகப் பிரகாசிக்கும் பாதுகைகளும் உடையவளையும் பிரஹ்ம தேவன் விகார ரூபத்தைப் படைப்பதில் தன் திறமையை இவளிடத்தில் தான் காட்டினனோ வென்று சந்தேகிக்கக் கூடியவளாயு மிருந்தாள்.

நான் ஸ்நானஞ்செய்து அந்தக் காளார்த்திரியின் பாதத்தில் வணங்கினேன்; விநாயகரைப் பூசித்தேன். அந்தக் குருவின் உபதேசத்தால் நான் நிர்வாணமாயிருந்து பயங்கரமான பைரவபூஜையைச் செய்தேன். காளராத்திரியும் ஸ்நானஞ் செய்து எனக்கு அதற்குரிய மந்திரங்களை உபதேசித்தாள்; தேவபூஜை செய்து அதற்குப் பலியாக ஏற்பட்ட மானிட மாமிசத்தையும் எனக்குப் புசிக்கக் கொடுத்தாள். இவ்வாறு நான் அநேக மந்திரோபதேசங்களைப் பெற்று மானிட மாமிசததையும் என் தோழிமார்களுடன் நிர்வாணமாய் ஆகாயத்திற் கிளம்பி அங்கே விளையாடி குருவின் ஆஞ்ஞையின் பிரகாரம் கீழே யிறக்கினேன். ஓ தேவ! மறுபடியும் அக்கன்னிகையின் அந்தப்புரஞ் சென்றேன். இவ்வாறு நான் சிறுவயதிலே டாகினியில் மண்டலத்திலிருந்து அப்போது அநேக மானிடர்களைப் புசித்திருக்கின்றேன். மகா ராஜாவே! இதனடு

வில் இன்னொரு விசேஷம் அதையுங் கேட்க வேண்டும் என்று கூறினன்.

அந்தக் காளராத்திரிக்கு விஷ்ணு ஸ்வாமி என்னும் அந்தணரொருவர் பர்த்தாவாக விருந்தார். அவ்வேதியர் வேதவித்தையிற் சிறந்தவர்; ஆகையால் அவர்தம்மை நாடிவரும் அநேகருக்கு வேதத்தைச் சொல்லிக்கொண் டிருந்தார். அவருடைய மாணுக்கர்களுக்குள் சுந்தரகன் என்பவனொருவன்; அவன் வயதிற் சிறியனுயிருந்தும் நல்ல குணமுடையவனுக விருந்தான். ஒரு சமயம் இந்த விஷ்ணு ஸ்வாமி வெளியே சென்றிருந்தார். அப்போது காள ராத்திரி காமவேதனை சகிக்க முடியாது சுந்தரகனை விரும்பினுள். மன்மதன் விகாரமான ரூபமுள்ளவர்களிடம் பரிகாசமாக விளையாடுகிறுன். இது வாஸ்தவம்! ஏனெனில் காளராத்திரி தன்னுருவத்தைப் பற்றிச் சிந்தியாது சுந்தரகன் என்னும் வாலிபனை விரும்பினுளல்லவா? காளாராத்திரி பலவிதமாகச் சுந்தரகனை வேண்டியும் அவன் அவளுக்கு இணங்கவில்லை. ஸாதுக்களின் மனம் அசைவற்றதன்றோ? அந்தக் காளராத்திரி சுந்தரகன் மீது சினங்கொண்டு தன்சரீரத்தைத் தானே பற்களாலும் நகங்களாலும் புண்ணுக்கிக் கொண்டு தலைவிரிகோலமா யிருந்து அழ ஆரம்பித்தாள். இச்சமயம் வெளியே சென்றிருந்த விஷ்ணு சுவாமி வீட்டிற்கு வந்தார். அவரைக் கண்டதும் காளராத்திரி "நாத! இதோ என் தேகத்தைப் பாரும், சுந்தரகன் என்னைப் பலாத்காரஞ் செய்து இவ்வாறு துன்பஞ் செய்தனன் என்று கூறிப் பிரலாபித்து அழுதாள். அதைக் கேட்ட விஷ்ணு சுவாமிக்கு அதிக கோபமுண்டானது; மாதர்களுடைய பிரேரணையானது தடாகங்களின் மடுவைச் சுழல்காற்று கலக்குவது போன்று குற்றமற்ற மனமுடையவர்களுடைய மனத்தைக் கலக்குகின்றது. என்குரு பெரியவராயும் வித்வானுயுமிருந்தும் தீர விசகரியாமல் கோபங்கொண்டு என்னிடத்து விரோத பாவங்க கொண்டனரல்லவா? சிருஷ்டிகாலமுதல் வித்வான்களாக விருப்பினும் வேதியர்களுக்குக் காமம், குரோதம் இரண்டும் மோக்ஷமார்க்கத்திற்குத் தடையாக ஏற்படுகின்றன வென்பது முன் கர்மத்தாலேயே சித்தமாயிருக்கின்றது. முன் இவ்வாறு தான் தாருகாவன முனிவர்கள் தங்கள் மனைவிமார்களின் கற்பிற்குப் பங்கம் வருமோவென்று சந்தேகித்து, பரமசிவனிடம் கோ

பங்கொண்டனர். பார்வதிதேவிக்கும் முனிவர்களுக்கும் உள்ள ஒழிவில்லாமையைக் காட்ட பரமசிவன் சமணவேடம் பூண்டனர் என்பதை அம்முனிவர் தெரிந்து கொண்டார்களில்லை. அதனால் சாபங்கொடுத்தார்கள். பின், மூவுலகங்களையும் சங்கரிக்க வல்வர் இவர் என்றறிந்து அந்தப் பரமசிவனையே சரணம் புகுந்தனர். காமம் கோபம் முதலிய அறுவகைப் பகைவர்களின் வஞ்சனையி லகப்பட்டு இவ்வாறு மோகமடைந்தவர்கள் முனிவர்களல்லவா? அங்ஙனமிருக்கக் கேவலம் வேதமுணர்ந்தவர்களைப் பற்றிக் கேட்கவேண்டுமா?—என்று சுந்தரகன் ஆலோசித்து இராவேளையானதால் திருடர்கள் மடக்கிக்கொள்வார்களோ வென்று அஞ்சி மார்க்கத்திலிருந்த ஒரு கோசாலையிற் புகுந்து அங்குத் தன்னை யாருமறியாதபடி ஓரிடத்திலிருந்தான். சுந்தரகன் அப்படிப்பட்ட இரகசியமான இடத்திலிருந்தும் அந்தவேளையில் காளராத்திரி அவனிருக்குமிடத்தை யறிந்து அவ்விடத்திற்குச் சென்று அவனைக் கண்டாள். அவள் கண்களிலிருந்தும் வாயிலிருந்தும் கொள்ளிக் கட்டைகளை ஜ்வாலையொடு கக்கிக்கொண் டிருக்கிறாள்; டாகினிகளுடன் வந்திருக்கின்றாள். என்ன செய்வான் சுந்தரன். கண்டதும் அஞ்சினானாயினும் இராக்கதர்களை இம்சிக்கும் மந்திரங்களை ஜபித்தான். அந்த மந்திரத்தினால் கட்டுண்ட காளராத்திரி சுந்தரகனைப் பார்க்கச் சக்தியற்றவளாயினள். சுந்தரகனும் மிகுந்த பயங்கொண்டு என்ன செய்வதென்பது தெரியாது நின்றான். காளராத்திரி உடனே உயரக்கிளம்பும் மந்திரத்தை உச்சரித்தாள்; அந்த மந்திரமகிமையால் காளராத்திரி, அவள் தோழிகள், சுந்தரகன் யாவரும் அந்தக் கோசாலைக் கட்டடத்துடன் ஆகாயத்திற் கிளம்பினார்கள். காளராத்திரி உச்சரித்த அம்மந்திரத்தைச் சுந்தரகன் சாவதானமாகக் கேட்டுக்கொண்டிருந்து தெரிந்துகொண்டான். பின்னர்க் காளராத்திரி எல்லோருடனும் உச்சயினி நகரம் சென்று அங்கிருந்த சாகசாலையில் கோசாலைக் கட்டடத்தை இறக்கிவிட்டுக் காளராத்திரி டாகினிகளுடன் மயானத்திற்குச் சென்று அங்கே விளையாடிக்கொண்டிருந்தாள். சுந்தரகன் அப்பொழுது பசியால் மிகுதியும் தொந்தரை யடைந்தமையின் அந்தச் சாகசாலையிலிருந்த காய்கனிகளைப் புசித்துத் தன் பசியைத் தீர்த்துக்கொண்டான். காளராத்திரி பிறகு பாதிராத்திரி வேளையில் மயானத்திலிருந்து சாகசாலைக்குவந்து முன்போல் மந்திரத்தை ஜபித்தாள்.

உடனே கோசாலைக் கட்டடத்துடனும் எல்லோருடனும் உயரக் கிளம்பித் தன் நகரம் வந்து சேர்ந்து கோசாலையை முன் அஃதிருந்த இடத்திலே வைத்துவிட்டுத் தோழிகளையும் அவரவர் வீட்டுக்கேபோக உத்தரவிட்டுத் தான் தன் படுக்கையறைக்குச் சென்றாள். சுந்தரகன் இவற்றையெல்லாம் பார்த்து, ஆச்சரியமடைந்து அன்றிரவை அந்தக் கோசாலையிலேயே கழித்துப் பொழுது புலர்ந்ததும் தன் நண்பர்களிடம் வந்தான். அவர்களிடம் நடந்த வரலாற்றினைத் தெரிவித்து "நண்பர்காள்! இனி நான் இங்கிருக்கப்போவதில்லை. தேசாந்திரம் போக நிச்சயித்திருக்கின்றேன் என்று கூறினான். மித்திரர்கள் சுந்தரகனைச் சமாதானஞ்செய்து அவனெண்ணத்தை மாற்றினார்கள்.

அப்பால் சுந்தரகன் குருவின் கிருகத்திலிருப்பதை யொழித்து சத்திரங்களிற் புசித்துக்கொண்டு தன் காலத்தைக் கழித்து வந்தான். அப்பொழுது ஒரு சமயம் காளராத்திரி தன் வீட்டுப் பதார்த்தங்கள் வாங்குவதன் பொருட்டுக் கடைவீதி சென்றாள். அங்கே சுந்தரகன் வந்திருந்தான். அவனைக் காளராத்திரி கண்டாள்; உடனேமீண்டும் மன்மதவெறியடைந்து அவனைப்பார்த்து, "சுந்தரகா! நான் உன்னிடம் என் உயிரைவைத்திருக்கின்றேனே, நீ என்னைக் கவனிக்காமலிருக்கின்றாயே, இப்போதாவது கிருபை வைக்கலாகாதா?" என்றாள். சுந்தரகன் மாதே! இவ்வாறு நீ பேசுவது சரியன்று, "நீ என் குருவின் மனைவியல்லவா? நீ எனக்குத் தாயாகிறாய், நீ இங்ஙனங்கூறுவது தர்மமல்ல" என்று கூறினான். இதைக்கேட்டதும் காளராத்திரி நீ தர்மத்தை யறிவாயேயாகில் எனக்கு இப்போது பிராணனைக் கொடு. ஒருவர்க்குப் பிராணபிச்சை தருவதினும் சிறந்த தர்மம் வேறில்லை என்றாள். சுந்தரகன் "அம்மா! இது சரியான பேச்சல்ல; மனதில் இவ்விஷயத்தை நினைக்கவேண்டாம்; குருவின் மனைவியைப் புணர்வது தர்மமென்று எங்குங் கூறியிருக்கக் கண்டிலன்" என்றான் சுந்தரகன். இவ்வாறு காளராத்திரியின் பேச்சிற் கிணங்காமற்போகவே அவள், அவன்மீது பெருஞ்சினங்கொண்டு அவனைத் திட்டிவெருட்டித் தன்மேலாடையைத் தன்கையால் கிழித்துக்கொண்டு தன் கிருகஞ்சென்று, "சுந்தரகன் ஓடிவந்து என்னுடையைக் கிழித்துவிட்டான்" என றுதன்கணவனிடம்முறையிட்டாள். காளராத்திரியின் கணவன் விஷ்ணுஸ்வாமி உடனே பெருங் கோபங்கொண்டு

சுந்தரகனுக்கு அன்று முதல் சத்திரங்களில் போஜனங்கிடைக்கா வாறு செய்துவிட்டான். அதனால் சுந்தரகன் மிகுதியும் வருத்த முற்று அத்தேசத்தை விட்டு வெளியே செல்லத் தீர்மானித்து, நாம் இருந்த இடத்திலிருந்து உயரக் கிளம்புவதற்குரிய மந்திரத்தைத் தெரிந்து கொண்டோம்; கீழே இறங்குவதற்குரியமந்திரத்தை புணர்தல் ஆவசியகமல்லவா? அதற்கு இன்றிரவு கோசாலை சென்றிருப்பின் ஒருவேளை அன்று ஏற்பட்டதுபோல் ஏற்படும், அப்போது தெரிந்துகொள்ளலாமென்று யோசித்து, இரவில் அதே கோசாலைக்குச் சென்றான். அன்றிரவும் காளராத்திரி முன் போல் கோசாலைக்கு வந்து, கோசாலையுடன் கிளம்பி ஆகாயவழியே உச்சயினி நகரம் சென்றாள். அங்கே சாகசாலையில் முன் போலவே கோசாலையை இறக்கிவிட்டு மயானம் சென்றாள். சுந்தரகன் இறங்குவதற்குரிய மந்திரத்தைக் காளராத்திரி உச்சரிக்க இப்போது கேட்டானாயினும் அதனை அவன் தெரிந்துகொள்ள முடியவில்லை. குருவுபதேசமின்றி மந்திரங்கள் ஸித்தி யாவதில்லை. பிறகு சுந்தரகன் அந்தச் சாகசாலையிலிருந்த முள்ளங்கி முதலிய கிழங்குகளையும் வேண்டியவளவு கிரகித்துக்கொண்டு கோசாலையிலேயே இருந்தான். காளராத்திரி முன்போலவே மயானத்திலிருந்து வந்து,கோசாலைக் கட்டடத்தை எல்லோருடனும் உயரக் கிளப்பிக்கொண்டு தன் நகரம் வந்து கோசாலை யிருந்த இடத்தில் அதை இறக்கிவிட்டுத் தன் வீடு சென்றாள். மறுநாள் சுந்தரகன் தன் போஜனத்திற்கு ஒரு வழியுங்காணாது வருத்த முற்றுத் தான் முதல் நாளிரவு சாகசாலையிலிருந்து கொண்டுவந்த முள்ளங்கி முதலிய கிழங்குகளை விற்பதற்காகக் கடைத்தெருவிற்குச் சென்று அங்கு அவற்றை விலை கூறிக்கொண்டிருந்தான்.

சுந்தரகன் இவ்வாறு கிழங்குகளை விற்றுக்கொண்டிருக்கும் போது மாளவ தேசத்தரசனுடைய சேவகர்களிற் சிலர் அங்கு எக்காரணங் கொண்டோ வந்து சேர்ந்தனர். நமது தேசத்துக் கிழங்குகளை இவன் எப்படி இங்கே கொண்டுவந்தான்? இவனுக்கு அவை எப்படிக் கிடைத்தனவென்று அவர் நினைத்து அவற்றைப் பொருள் கொடாமலே தலைக்குக் கொஞ்சமாக எடுத்துக்கொண்டனர். சுந்தரகன் அவர்களோடு கலகஞ் செய்தான். சேவகர்கள் அவனைக் கட்டித் தங்கள் தேசத்திற்குக் கொண்டுபோய் அரசன் முன்னிலையில் நிறுத்தி, "ஐயனே! இவன் நமது தேசத்து முள்ள

ங்கிகளை கன்யாகுப்ஜ தேசத்தில் விற்றுக்கொண்டிருந்தான். நாங்கள் இவனைக் கண்டதும் நீ யெப்படி மாளவ தேசத்துக் கிழங்குகளை இங்குக் கொண்டுவந்து விற்கின்றாய் என்று கேட்டோம். இவன் எங்களுக்குச் சரியான பதிற் சொல்லாமல் எங்கள் மீது கற்களை வாரி யெறிகின்றான்'' என்றனர். அரசன், இதைக் கேட்டதும், ''இஃதென்ன ஆச்சரியம்'' என்றான். அப்பொழுது சுந்தரகனோடு தொடர்ந்து வந்த அவன் நண்பர்கள், அரசனைப் பார்த்து, ''பிரபுவே! இவனை எங்களோடு இந்த உப்பரிகையின்மீது ஏற்றி விட்டீர்களானால் இதனுண்மை பிறகு விளங்கும்'' என்றார்கள். அரசன் அவ்வாறே சுந்தரகனை அவன் நண்பர்களோடு உப்பரிகையின்மீது ஏற்றிவிட்டான். அங்குச் சென்றதும் சுந்தரகன் மந்திரத்தை உச்சரித்தான். உடனே உப்பரிகையோடு ஆகாயத்திற் கிளம்பி பிரயாகை க்ஷேத்திரம் சென்றான். அந்தப் பிரயாகையில் ஸ்நானஞ் செய்து கொண்டிருந்த அரசனைக் கண்ட சுந்தரகன் அங்கே உப்பரிகையை யடக்கிக்கொண்டு திடீரென்று நதியில் விழுந்தான். அப்பால் சுந்தரகன் நதியினின்றும் நீந்தித் தன் நண்பர்களுடன் கரையை யடைந்து அரசனிடஞ்சென்று கைகுவித்து வணங்கி நின்றான். அங்கிருந்தாரனைவரும் அப்பொழுது 'இஃதென்ன அற்புதம்! அற்புதம்!! என்று கூறி ஆச்சரியமடைந்தனர். அரசன், சுந்தரகனைப் பார்த்து ''ஆகாயத்தினின்று இறங்கிய நீங்கள் யார்?'' என்று கேட்டான். சுந்தரகன், ''நாங்கள் பரமேசுவரனுடைய கணங்களைச் சேர்ந்தவர்கள். என் பெயர் முரஜகன். நான் மானிடர்களுக்குரிய சுகத்தை விரும்பி அந்தப் பரமசிவனுடைய ஆக்ஞையால் இங்கே வந்தேன்'' என்றான். அரசன் அதை யுண்மை என்று நம்பி அவனுக்கு ஒரு செழிப்பான நகரத்தைக் கொடுத்தான். சுந்தரகன் தன் நண்பர்களுடன் அந்நகரத்திற் பிரவேசித்து சுயேச்சையாக வாசஞ்செய்து வந்தான். ஸ்வர்ணலப்த சயனமும் சிறந்த ஸ்திரீகளின் உபசரணையும் அடைந்து மகிழ்ந்தான்.

இவ்வாறிருக்கையில் ஒரு சமயம் அந்நகரத்தில் ஆகாயவழியே போய்க்கொண்டிருந்த ஒரு சித்த புருஷன் சுந்தரகன் செய்த ஸ்தோத்திரத்திற் கிரங்கி, அவன் கிருகம் வந்து அவனுக்குஆகாயத்திலிருந்து கீழே யிறங்குவதற்குரிய மந்திரத்தை உபதேசஞ் செய்து சென்றனன். பின்னர்ச் சுந்தரகன் தன் நகரத்தோடு உய

ரக் கிளம்பித் தன் ஸ்வதேசமாகிய கன்யாகுப்ஜத்தில்இறங்கினன். அத்தேசத்து அரசன் அதுகண்டு ஆச்சரியமடைந்து சுந்தரக னிடம் வந்து இஃதென்ன அற்புதம் என்று கேட்டான். சுந்தர கன் இதுதான் சமயமென்று நினைத்து காளராத்திரியின் சேஷ் டைகளை நடந்தவாறு தெரிவித்தனன். உடனே அரசன் காளராத் திரியை வரவழைத்துக் கேட்டான். அவள் சிறிதும் அஞ்சாமல் தான் செய்த அநீதியை ஒப்புக்கொண்டாள். அரசன் சினமடை ந்து அவளுடைய செவிகளை யறுக்க உத்தரவிட்டான். சேவகர் கள் அவளைப்பிடித்துச் செவியை யறுக்க யத்தனிக்கையில்அவள் மாயமாய் மறைந்து விட்டாள். அரசன் இனி இந்தக் காளராத் திரி இந்த இராஜ்யத்திலேயே யிருக்கக்கூடாதென்று ஆக்ஞை செய்தான்; சுந்தரகனை மெச்சினன். அவன் அரசன் பார்த்துக் கொண்டிருக்கும்போதே ஆகாயமார்க்கத்திற் பிரவேசித்தான் என்று பட்டமகிஷியாகிய குவலயாவலி ஆதித்திய ராஜனை நோக் கித் தெரிவித்து மறுபடியும் சொல்லுகிறாள்.

தேவ! டாகினி மந்திரஸித்திகள் இவ்வாறிருக்கின்றன. இஃது என் தந்தையின் தேசத்தில் எங்கும் பிரஸித்தமாயுள்ள து. நான் முதலில் காளராத்திரிக்கு மாணவியென்று சொல்லி யிருக்கின்றேனல்லவா?நான் கற்பிற் சிறிதும்வழுவாதவளாதலால் எனக்கு அவளைவிட மந்திரஸித்தி மிகுதியும் ஏற்பட்டிருக்கின் றது. இப்போது நான் பூஜைசெய்தது உமது நன்மையைக் கருதி யேயாகும். பலிகொடுப்பதற்கு மந்திர முச்சரித்து ஒருபுருஷனை இழுக்க முயன்றேன். இச்சமயம் நீர் என்னைப்பார்த்து விட்டீர். ஆகையால் நீரும் என்னுடைய கொள்கையிற் பிரவேசிக்க வேண் டும். பிறகு உமது பாதம் எந்த ஸித்தியடைந்த அரசர்களின் சிர மீதுமிருக்கும் என்று கூறினள். இதைக்கேட்டதும் அரசன்,இந்த டாகினி வித்தைக்காக நான் நரமாமிச போஜன மன்றோ செய்தல் வேண்டும்? சீ! கூடாதென்று தடுத்துரைத்தான். அதைக்கேட்ட தும் குவலயாவலி நான் பிராணனை விட்டுவிடுகின்றேன் என்று சொன்னள். அரசன், பிறகு அவள் கருத்திற்கிசைந்தான். விஷ யாசக்தியுடைய மனமுடையவர்கள் எவ்வாறு நல்லமார்க்கத்திற் பிரவேசிப்பார்கள்?

பின்னர்,குவலயாவலி அரசனைத் தான் முன்னிருந்த மண்ட பத்துட் பிரவேசிக்கச்செய்து, "தேவ! எனக்கு ஒரு பிரதிக்ஞை

செய்து தரவேண்டும்" என்று கூறி, "பிரபுவே! உமதருகிலிருந்து வரும் பலபூதி யென்னும் பெயருடைய அந்தணனை நான் பலிகொடுப்பதாகத் தீர்மானித்திருக்கின்றேன். அவனை மந்திரவலுவால் வரவழைப்பது மிகுதியும் சிரமமாகும். ஆகையால் அவனை ஒரு சமையற்காரன் கொன்று சமையல் செய்வானேயாயின் அது சிரமமின்றி முடியும். தாங்கள் இது விஷயமாய் மறுத்துப் பேசக்கூடாது. எந்த மாமிசத்தைப் பலி கொடுப்பதால் பூர்ணசித்தியுண்டாமோ அதுதான் சிறந்தது என்றாள். அரசன் பாபத்திற்குப் பயந்தவனாயினும் இச்சமயம் மறுக்க முடியாது ஒப்புக்கொண்டான். பிறகு ஸாகஸிகன் என்னும் சமையற்காரனையழைத்து அவனுக்குத் தன்னிடம் நம்பிக்கை யுண்டாகும்படி செய்துகொண்டு அந்த டாகினி பூஜையில் அவனுக்குத் தீக்ஷையை யேற்படுத்தினான். பிறகு இருவரும் அவனை நோக்கி, "ஸாகஸிக! எவன் உன்னிடம்வந்து "அரசன் தேவியுடன் இப்போது புசிக்கப்போகின்றான்; நீ சீக்கிரத்தில் போஜனந் தயார்செய்" என்று கூறுகின்றானோ அவனைத் தடையின்றிக் கொன்றுவிடு. அவனுடைய மாமிசத்தைச் சமைத்து எங்களுக்கு ஆகாரமாகத் தயார் செய்" என்று கூறினர். அவன் "அவ்வாறே செய்கின்றேன்" என்று ஒப்புக்கொண்டு சமையலறை சென்றான். மறுநாட் காலையில் பலபூதி வந்தான். அரசன் அவனைப்பார்த்து, "அரசன் தேவியுடன் இப்போது போஜனம் செய்யப்போகின்றான். ஆகையால் உத்தமமான ஆகாரத்தைச் சீக்கிரமாகத் தயார் செய்" என்று ஸாகஸிகனிடம்தெரிவியும் என்றுகூறினான். பலபூதி அவ்விதமே செய்கின்றேன் என்று சொல்லி அரசனிடமிருந்து வெளிப்பட்டான். அப்பொழுது சந்திரப்பிரபன் என்னும் பெயருடைய ஆதித்திய ப்ரபராஜனுடைய குமாரன் அவனைச்சந்தித்து அவன், "பலபூதி! என் தந்தைக்கு முன்செய்து கொடுத்தது போல் எனக்கு இரண்டு சொர்ணக்குண்டலங்கள் செய்து தரவேண்டும்." என்றான். பலபூதி "அவ்வாறே செய்கின்றேன்." என்று ஒப்புக்கொண்டு தான் மேற்கொண்டுவந்த இராஜாக்ஞையை அவனிடம் தெரிவித்து விட்டுக் குண்டலங்கள் தயாரித்துவரச் சென்றுவிட்டான். இராஜகுமாரன் சமையலறைக்குச் சென்றுஸாஹஸிகனிடம்அரசனுத்தரவைத்தெரிவித்தான். ஸாஹஸிகன் உடனேகத்தியையெடுத்துவந்து அரசிளங்குமாரனை வெட்டிக்கொன்று, அவன் மாம்சத்தினால் போஜனமும் விரைவில்தயார்

செய்தான். அரசனும் அரசியும் இந்த உண்மையை யறியார்களல்லவா? அவர்கள் அந்த மாமிசபோஜனத்தை டாகினிகட்கு நிவேதித்து மகிழ்ச்சியுடன் புசித்தார்கள். அரசனுக்கு அன்றிராத்திரி முழுதும் பலபூதியைக் கொன்றோமே யென்னும் அநுதாபம் மனத்திற்குடிகொண்டு மிகுதியும் பாதித்தது. மறுநாள் பொழுது புலர்ந்தது. அப்பொழுது பலபூதி கையிற் குண்டலங்களுடன் அரசனெதிரில் வந்து நின்றான். அரசன் அவனைக் கண்டதும் ஆச்சரியமடைந்து, "குண்டலங்கள் யார் கொண்டு வரச் சொன்னது" என்று கேட்க, பலபூதி விவரந் தெரிவித்தான். அதனை அரசன் கேட்டதும் ஆ! ஆ!! என் அருமை மகனே! என்றலறிக்கொண்டு தரையில் விழுந்தான்; மார்பில் புடைத்துக்கொண்டு கதறினான்; மனைவியையுந் தன்னையும்நிந்தித்துக்கொண்டான். இச்செய்தி மந்திரிகளுக் கெட்டியது. அவர்கள் அரசனிடம் வந்து விசனமுறக் காரண மென்னவென்று வினவ, அரசன் நடந்ததைத் தெரிவித்து, "அமைச்சர்காள்! பலபூதி நாடோறும் "நன்மை செய்தவன் நன்மை யடைவான், தீமை செய்தவன் தீமையை யடைவான்" என்று கூறிவருகிறானல்லவா? பந்தைச் சுவற்றிலறையின் அது மீண்டும் அடித்தவனிடமே வந்து சேருவதுபோல், பிறருக்கெண்ணிய தீமை எண்ணியவனையே அடைகிறது. கெட்ட நடத்தையுள்ள நாங்கள், பிரம்மஹத்தியைச் செய்ய விரும்பினோம். அதனால் பெற்ற பிள்ளையையேகொன்று அவன்மாமிசத்தைப் புசிக்கலானோம்" என்று கூறிக் கதறினான். மந்திரிகள், ஐயோ! ஐயோ! வென்று கூறி விசனமுற்றுத் தலைதொங்கியவா றிருந்தனர். பிறகு அரசன், மந்திரிகளைப் பார்த்து "நடந்தது பற்றி வருந்துவதில் யாது பயன்?" என்று தேற்றித் தன் அரசுரிமையைப் பலபூதியிடமே ஒப்புவித்து அவனுக்கு முடி சூட்டுவித்து அநேக தானங்களைச் செய்தான். பின் தன் பாபந் தொலைவது கருதி தன் மனைவியுடன் அக்னிப் பிரவேசஞ் செய்தான். பலபூதி ராஜ்ய சம்பத்தை யடைந்தது முதல் நடுநிலைமை தவறாது அரசுபுரிந்து வந்தனன். இவ்வாறு நன்மையையோ தீமையையோ செய்பவன் அதை மீண்டும் அடைகிறான் என்று யௌகந்தராயணன் உதயனனுக்கு இக்கதையைக் கூறி, "பிரபுவே! தாங்கள் பிரமதத்தனை வென்று அவனுக்கு நன்மை செய்திருக்கிறீர்கள். அவன் தமக்குத் தீங்கு செய்வானாயின் அது அவனையே தொடர்ந்து துன்பமுண்

டாக்கும்'' என்றான். உதயனன் மிகவு மகிழ்வுற்று யௌகந்தராயணனைக் கொண்டாடினான்; பிறகு எழுந்து நித்திய கர்மங்களை முடித்துக் கொண்டனன்.

அடுத்த நாள் தன்னுடைய நகரமாகிய கௌசாம்பிக்கு லாவாணகத்தி லிருந்து புறப்பட்டுப் பரிவாரங்களுடன் நகரத்தை யடைந்தான். அப்பொழுது அந்நகரம் பதாகையாகிய கைகளால் அரசனை வரவேற்பது போற் காணப்பட்டது. சாரணர்கள் பாடினார்கள்.

அப்பால் குறு மன்னர்கள் வணங்கவும் அந்தணர்கள் ஆசி கூறவும் அரண்மனை சென்று குலத்திற் கேற்ற சிங்காதனத் தமர்ந்தான். அச்சமயம் பற்பல மங்கள வாத்தியங்கள் முழங்கின. அந்த முழக்கமானது லோகபாலகர்களால் தகும்! தகும்!! நல்லது! நல்லது!! என்று சொல்லப்படுவது போலிருந்தது. பிறகு உதயனன்தான் லோபகுண மில்லாது புவி முழுதும் தன்குடைக் கீழாக்கி அதனால் பெற்ற பொருள்களை வேதியர்களுக்கு வழங்கி அரசர்களையும் மந்திரிகளையும் கிருதார்த்தர்களாக்கினான். ஸத்பாத்திரங்களுக்கு மிகுதியும் தானம் வழங்கினான். ஜனங்களெல்லோரும் நாம் இனிக்குறைவற்றவர்களானோம்; வெகுதானியங்களையும் பயனையும் பெறலாம் என்று சந்தோஷித்தார்கள். எல்லோரும் உற்சவங் கொண்டாடினார்கள்.

இவ்வாறு உதயனராஜன் பூமி முழுவதையும் ஜயித்து, ருமண்வான், யௌகந்தராயணன் என்னும் இவர்கள் வசம் இராஜ்ய பாரத்தை யொப்புவித்து தன் இருமனைவிமார்களுடனும் சுகமாக வாழ்ந்துவந்தான். கீர்த்தியும் ஸ்ரீ தேவியும் உருவெடுத்ததற்கொப்ப விளங்கும் வாசவதத்தை பத்மாவதி என்னும் இவர்களுடன் சாரணர்கள் கானஞ் செய்யத் தன் கீர்த்தியாகிய சந்திரோதயத்தை யனுபவித்துக்கொண்டு நிகரற்றவனாக விருந்தான்.

6-வது தரங்கம் முற்றிற்று.

3-வதாகிய லாவணகலம்பகம் முற்றிற்று

...ENT ORIENTAL MANUSCRIPT...

